# வல்லிக்கண்ணன்



# நினைவுச்சரம்

# நினைவுச்சரம்

வல்லிக்கண்ணன்

பூம்புகார் பிரசுரம்
15, மன்னார்சாமி கோவில் தெரு
சென்னை - 600 013

விலை ரூ. 7-90

பூம்புகார் வெளியீடு எண் : 108

முதல் பதிப்பு : ஜூன், 1979

உரிமை : ஆசிரியர்க்கே.

---

அச்சிட்டவர்கள் : காக்ஸ்டன் அச்சகம், சென்னை-600 001.

# முன்னுரை

காலவேகம் எவ்வளவோ மாறுதல்களை நிகழ்த்துகிறது. மனித வாழ்க்கையில், குடும்பங்களில், ஊர்களில், நாடு நெடுகிலுமே மாறுதல்கள் ஏற்பட்டுக்கொண்டே இருக்கின்றன.

ஒவ்வொருவருடைய சூழ்நிலையிலும் தினம் தினம் எத்தனையோ மாறுதல்கள் நிகழ்கின்றன.

நகரங்களில் மாற்றங்கள் பளிச்செனப் புலனாகக்கூடிய விதத்தில் அமைகின்றன. வேகமாகவும் நடைபெறுகின்றன.

கிராமங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவற்றில் சில வேகமாக ஏற்பட்டிருக்கலாம். பல மெது மெதுவாக நிகழ்கின்றன.

காலவெள்ளத்தாலும் அசைக்கமுடியாத கற்பாறைகள் போல, 'அன்று கண்ட மேனி அழியாது', இன்றும் சில மாறுதல்களால் பாதிக்கப்படாது சிலசில ஊர்கள் காணப்படுவதும் இயல்பு.

புறத்தில் பலப்பல மாற்றங்கள் ஏற்பட்டு விட்டபோதிலும், மனிதர் வாழ்க்கையில் எண்ணற்ற மாறுதல்கள் சேர்ந்திருப்பினும், அகத்தில்—உளப் பண்புகளிலும் உணர்ச்சிகளிலும்—ஆழமான, நிலையான, மாற்றங்களை மனிதர்கள் பெற்றுள்ளனரா ?

சிந்தனைக்கு உரிய விஷயம் இது.

பொதுவாக, முப்பது வருடங்கள் ஒரு தலைமுறைக்காலம் என்று கருதப்படுகிறது. தலைமுறைக்குத் தலைமுறை மனித வாழ்க்கையில், உறவுகளில், எத்தனையோ மாற்றங்கள்—

நோக்குகளில், போக்குகளில் எல்லாம் மாற்றமே பெருத அடிப்படைத் தன்மைகளும் இருக்கின்றன.

நாற்பது வருடகாலம் ஒருவன் ஒரு ஊரைவிட்டு விலகியிருந்தபின்னர், அந்த ஊருக்கு அவன் திரும்பிவர நேர்ந்தால் அவனது அனுபவங்கள் எவ்வாறு இருக்கும்? அந்த ஊரைப் பற்றிய, அவனுக்கு முன்பு பழக்கமாகியிருந்த வீடு வாசல், தெரு, சுற்றுப்புறங்கள் பற்றிய நினைப்புகள் எவ்வாறு இருக்கும்? அவன் நன்கு அறிந்திருந்த மனிதர்களைப் பற்றிய எண்ணங்கள் எவ்வாறு இருக்கும்? வாழ்க்கையில் அடிபட்டு, பெருத்த மாறுதல்களைப் பெற்றிருக்கக்கூடிய அவனுடைய சிந்தனைகள் எப்படி இருக்கும்?

இவை எல்லாம் எண்ணிப் பார்ப்பதற்கு ரசமான விஷயங்கள். இத்தகைய எண்ண ஓட்டத்தின் விளைவாகத்தான் 'நினைவுச்சரம்' நாவல் பிறந்தது.

சொந்த ஊரைவிட்டு இருட்டோடு வெளியேற நேர்ந்த ஒருவன், நாற்பது வருடங்கள் அந்த ஊர்ப்பக்கமே எட்டிப் பாராது இருந்தான். இடைக்காலத்தில் பணமும் அதனுல் அந்தஸ்தும் சேர, 'பெரிய மனிதர்' ஆகி ஊர் திரும்பிய போது, அந்த நபருக்கு எதிர்ப்பட்ட காட்சிகளும் மனிதர்களும், அவையும் அவர்களும் அவர் உள்ளத்தில் எழுப்புகிற நினைவுகளும் 'நினைவுச்சரம்' ஆக அமைந்துள்ளது.

ஊர்க்காரர்களின் போக்கினுல் சொந்த ஊரைவிட்டே வெளியேறினுன் மயிலேறு. அப்போது அவன் தவறு எதுவும் செய்திருக்கவில்லை. என்ருலும், ஊர்க்காரர்களை எதிர்த்து நிற்கக்கூடிய வலு அன்று அவனுக்கு இருக்கவில்லை.

நாற்பது வருடங்களுக்குப் பிறகு அந்தஸ்தோடு ஊர் திரும்பிய மயிலேறும் பெருமாள்பிள்ளை, மறுபடியும் அதே மாதிரியான குற்றச்சாட்டைச்சந்திக்க நேரிடுகிறது. ஊர்காரர்களின் சிறுமைப்போக்கு, காலவேகத்தினுலும் மாற்றப்படவில்லை என்பதை உணருகிருர்.

காலங்கள் மாறினாலும், சுற்றுப்புறங்களில் குறிப்பிடத் தகுந்த மாற்றங்கள் ஏற்பட்டிருந்தாலும், சமூக மனிதரின் அடிப்படையான சில தன்மைகள் மாறுவதில்லை. மனித குணங்கள் பெருத்த மாறுதல்களை அடைந்து விடுவதில்லை.

வளர்ச்சி பெற்றிருந்த மயிலேறும் பெருமாள் இப்போது சமூகத்தை, ஊர்க்காரர்களை எதிர்த்து நின்று, தான் நினைத்ததைச் செய்து முடிக்கும் வலிமையைப் பெற்றிருந்தார். பணமும், அது பெற்றுத் தந்திருந்த அந்தஸ்தும் அவருக்கு அந்த பலத்தைக் கொடுத்தன.

நல்லனவற்றை செய்வதற்கு துணிச்சல் வேண்டும். தீய காரியங்களை செய்து முடிப்பதற்கும் துணிவு வேண்டும். பணம் இரண்டுக்குமே துணையாக அமைகிறது. பண பலம் இல்லாததனால், பல நல்ல காரியங்கள் செயலுருப் பெறுமலே போகின்றன.

மயிலேறும் பெருமாளிடம் துணிவு இருந்தது. அதற்குத் துணையாகப் பணமும் சேர்ந்திருந்தது. அதனால், ஊராரையும் உறவினரையும் எதிர்த்து நின்று, தான் நினைத்தவாறே நல்ல செயலைச் சாதிக்க முடிந்தது.

இந்த உண்மையை 'நினைவுச்சரம்' சுவையாக எடுத்துச் சொல்கிறது.

அது ஒரு தனி மனிதனின் கதை மட்டுமல்ல. ஒரு ஊரின் சமுதாயச் சித்திரம். அத்துடன் ஒரு வட்டாரத்தின் வரலாற்றுச் சித்திரமும் கூட. நாவலைப் படிக்கிறபோதே இதை உணரமுடியும்.

இந்த நாவலை அழகான முறையில் புத்தகமாக்கியுள்ள பூம்புகார் பிரசுரத்துக்கு என் நன்றி உரியது.

சென்னை,<br>மார்ச், 1979

**வல்லிக்கண்ணன்**

# நினைவுச் சரம்

## 1

மறுபடியும் சிவபுரம் வந்து சேர்ந்துவிட்டதில் மயிலேறும் பெருமாள் பிள்ளைக்கு ரொம்பவும் சந்தோஷம்.

இருப்பது இயல்பு தானே ! எப்பேர்ப்பட்ட வருகை இது !

அதன் மதிப்பு அவருக்குத் தான் நன்ருகத் தெரியும். அதிலும் இந்த ஊரை விட்டு அவர் வெளியேறிய சந்தர்ப்பத்தையும், அப்படி வெளியேறும்படி நேரிட்ட அவசியத்தையும், நாற்பது வருடங்களுக்குப் பிறகு, இன்று அவர் அதே ஊருக்குத் திரும்பி வந்து விட்டதையும், இப்போதைய அவருடைய நிலைமையையும் ஒன்ருக எண்ணிப்பார்க்கிற போது அதனுடைய உண்மையான மதிப்பு புலப்படும்.

' அட ' நாற்பது வருஷங்கள் போன இடம் தெரியாம ஓடி மறைஞ்சிருக்கு பாருமேன் !'

பிள்ளை அவர்களின் மனம் வியந்து கொண்டது.

—ஊம்வ். நாற்பது என்ன! நானூறு வருஷம் கழிச்சு வந்து பார்த்தாலும் இந்த ஊரு அன்னைக்கி இருந்த மாதிரியே தான் இருக்கும். மனுசங்களும் அதே மாதிரித்தான், கொஞ்சம் கூட மாருமல் பழைய பெருமாள்களாகவே தான் இருப்பாங்க...

அவர் ஈஸிச்சேரில் சுகமாகச் சாய்ந்துகொண்டு, வீட்டின் சுவர்களை பார்த்தார். மேல்முகட்டிலே, விட்டத்தில், கட்டைகளில் எல்லாம் கண்களை மேயவிட்டார். கதவுகளை, நிலைகளைக், கவனித்தார்.

—அப்பா கட்டிப்போட்டது. அப்பா மட்டும் இந்த ஊரிலே ஒரு வீட்டைக்கட்டிவச்சு, இரண்டு மூணு வயல்களையும் வாங்கிப் போடாமல் இருந்திருந்தால், இது நம்ம ஊரு என்கிற பிடிப்பு எனக்கு எங்கேயிருந்து வரும்? நம்ம சொந்த ஊரு என்கிற எண்ணம் மனுஷனுக்கு ஒரு பிடிப்பை உண்டாக்கத்தான் செய்யுது. என்ன சொந்தம்? எது சொந்தம்? சொந்த ஊரு என்கிறதிலே ஏதாவது அர்த்தம் இருக்குதா? ஆனாலும், இந்த வார்த்தையிலே, அது உணர்த்தும் இடத்திலே, ஒரு ஈர்ப்பு சக்தி இருக்கத்தான் செய்யுது. உங்களுக்கு எந்த ஊரு என்று கேட்கிறவங்ககிட்டே, திருநெல்வேலியின்னு சொல்ரோம். அது எல்லாருக்கும் தெரிஞ்ச ஊரு; சுலபமாத் தெரிஞ்சுக்கிடும் என்பதுனாலே. ஆனா கேக்கிறவங்களிலே சிலபேரு கிண்டலா எண்ணுவதும் இயல்பாயிருக்கு.

—ஒரு சமயம் ரெண்டு பேரு பேசிக்கொண்டது என் காதிலும் விழுந்துது. தெக்கேயிருந்து வாறவங்ககிட்டே எந்த ஊருன்னு கேட்டுப்பாரு. திருநெவேலின்னு மதிப்பாச் சொல்லுவாங்க. அவங்களுக்கு உண்மையிலே திருநெவேலிப் பக்கம் ஏதாவது பட்டிக்காடாக இருக்கும். இருந்தாலும் ஜம்பமா நமக்குச் சொந்த ஊரு திருநெவேலி என்பாங்க. அல்லது திருநெவேலி ஸைடு—திருநெவேலிப்பக்கம்—என்று சொல்லுவாங்க யின்னு பரிகாசத்தொனிலே பேசிக்கிட்டாங்க.

—ஏய், ஏன் அப்படிச் சொல்லவேண்டியிருக்கு என்கிறதை நீ கொஞ்சம் யோசிக்கணும். உனக்கு எந்த ஊருன்னு கேட்கிறே. சிவபுரம்னு சொல்றேன்னு வையி. உனக்கு என்ன விளங்கிடப்போவுது? திருதிருன்னு முழிப்பே. அல்லது, சிவபுரமா! அது எங்கேயிருக்குன்னு கேட்கப்போறே. திருநெவேலிப் பக்கம்னு தானே சொல்லனும். சரி, கொஞ்சம்

விசயம் தெரிஞ்சது மாதிரி காட்டிக்கொள்ள விரும்புறவங்க, ஓகோ, சிவபுரமா? திருநெவேலிப் பக்கமா? திருநெவேலிக்கு 'கிழக்கேயா மேற்கேயா' என்னு விசாரிப்பாங்க. திருநெவேலியி லிருந்து கிழக்கே சில மைல்கள் தள்ளி இருக்குதுங்கிறேன். வேறே சிலபேரு, அந்த ஊருக்குப் பக்கத்திலே இருக்கா? இங்கே போற ரூட்மேலே இருக்குதா? என்றெல்லாம் தூண்டித் தொளைப்பாங்க. இந்த அக்கப் போர்லாம் என்னத்துக்கு, சும்மா சிம்ப்பிளா திருநெல்வேலின்னு சொல்லிட்டுப் போவோமே என்று தான் அப்படிச் சொல்றது. திருநெல் வேலியிலேயே குடியிருக்கிறவன் என்பதனாலே எவனுக்கும் தலையிலே கிரீடம் ஏறிடப்போறதில்லே; பக்கத்து கிராமத் திலேயோ, அதைவிடத் தூரமான அருதப் பட்டிக் காட்டிலேயோ பிறந்து வளர்ந்தவன்னு தெரிஞ்சுபோறதினாலே எவனுக்கும் மதிப்பு குறைந்துவிடப் போறதுமில்லே. மனுச னுக்கு மதிப்பு என்கிறது...

'அண்ணாச்சி என்ன தூக்கமா?' என்று கேட்டபடி, படி ஏறி வந்தார் ஒருவர். செருப்புகளைத் திண்ணையில் ஒரு ஓரத்தில் விட்டுவிட்டு, உள்ளே வந்தார்.

வயது அதிகமானவர்தான். ஆனால் மயிலேறும்பெருமாள் பிள்ளையை விட வயது குறைந்தவர். இருவரையும் சேர்த்துப் பார்க்கிறபோது, வந்தவர் தான் மூத்தவர் போலும் என்று எண்ணத் தூண்டுகிற அளவுக்கு, உடல் வாடித் தளர்ந்து முதுமைத் தோற்றம் பெற்றிருந்தது. வாழ்க்கை வறட்சி அவர் மீது தன் கைவண்ணத்தைத் தாராளமாகவே காட்டி யிருந்தது.

தண்ணீரில் தினசரி தோய்த்து, வெயிலில் உலர்த்தி, ஓயாது உபயோகித்து வந்ததால் பழுப்பேறித் தோன்றிய நாலு முழ வேட்டியும்—கறுப்புக் கரை போட்டது—நீளமும் அகலமும் கொண்ட 'சிட்டித் துண்டு'ம் அவரை அணி செய்தன. தலையில் பெரும் பகுதி வழுக்கையால் மினு மினுத்தது. எஞ்சிய இடங்களில் வெள்ளை மயிர் குச்சி குச்சியாய்

காட்சி அளித்தது. சமீபத்தில்தான் அம்பட்டனின் கை அங்கு விளையாடியிருக்கும் என்று அது விளம்பரப்படுத்தியது. அந்தச் சமயத்திலே கத்தி பட்டது தான், அதற்குப் பிறகு பார்பரின் பணியோ, சுயத்திருப்பணியோ இங்கு நிகழ்ந்து விடவில்லை என்று அம்பலப்படுத்தியது கன்னங்களில், மேலு தட்டில், தாடையில் தொண்டை மேல் பகுதியில் எல்லாம் அடர்த்தியாய் வளர்ந்திருந்த ரோமக்காடு.

கன்னங்களையும் தாடையையும் தடவித் தடவி அதில் தனியானதொரு சுகம் அனுபவித்தவராய், அக் காட்டினூடே சிரிப்பு வெடித்து முகமே சிரிப்பாய் விளங்க, அவர் உள்ளே வந்தார்.

'அண்ணாச்சி, சௌக்கியம் எல்லாம் எப்படி? ராத்திரி வந்ததாக் கேள்விப்பட்டேன்...'

—ஆமா. ராவோடு ராவா இந்த ஊரை விட்டுப் போனேன்; ராத்திரி நேரத்திலேதான் திரும்பி வந்திருக்கேன் என்று மனம் எண்ணிக்கொண்டார்.

'அண்ணாச்சியை பார்க்கணுமின்னு அப்பவே புடிச்சு நெனப்புதான். ஆனா உடனடியா எங்கே வரமுடியுது? இப்ப தான் ஒழிஞ்சுது. வந்தேன்...கெக்கெக்...நான் பாட்டுக்கு பேசிக்கிட்டே போறேனே! அண்ணாச்சிக்கு என்னைத் தெரியுதுல்லா? இல்லே, இனம் தெரியுதான்னு கேட்டேன்...'

மயிலேறும் பெருமாள் பிள்ளைக்கு சந்தேகமாகத் தான் இருந்தது. எனினும், மதிப்பை விட்டு விடாமல், 'தம்பியா புள்ளெயைத் தெரியாமலா! நல்லாக் கேட்டிங்க போங்க!' என்றார்.

—இவன் யாரு? 'மானம் பாத்தான்' சொக்கலிங்கமா? 'அப்பளம் அமுக்கி' ஆறுமுகமா? இல்லே...எழவு சட்னு ஞாபகம் வரமாட்டேன்குது.

'தம்பியாபுள்ளை'யோ தன்னிறைவோடு மேல் துண்டை எடுத்து, இரண்டாக மடித்து, தரையை தூசுபோகத் தட்டி

விட்டு, அந்தத் துண்டை மடித்தபடியே அதே இடத்தில் போட்டு, அதன் மேல்ல உட்கார்ந்தார். அதே நேரத்தில் அவர் வாய் 'அப்பனே முருகா!' என்று பலக்கக் கூவியது. அவர் தலையைச் சுகமாகத் தடவியவாறே பேசினர்:

'அது தானே கேட்கேன். லேசிலே மறந்திட முடியுமா? நாற்பது வருசமாறு என்ன, இல்லே, நாப்பத்திமூனே முக்கலே அரைக்கால் வருசம் ஆனுத்தான் என்ன? சுகவாசி சூரியன் பிள்ளையை அண்ணுச்சி மறந்து போவாங்களா?' இதைத் தொடர்ந்தது 'கெக்கெக்கே' என்கிற விசித்திரமான சிரிப்பு.

—ஓகோ, சுகவாசி சூரியமா? சரிசரி. ஆளு எப்படி மாறிப் போயிட்டான்! என்னமா இருந்தான் அந்தக் காலத்திலே. அப்போ இவனுக்கு இருபத்தாறு இருபத்தேழு வயசு. கைகொண்டு புடிக்க முடியுமா பிள்ளையாண்டானை! சவத்துப் பய, அப்பவே ஆரம்பிச்சிருந்தானில்லே திருவிளையாட்டுக்களை. உடம்பிலே புடிச்சு, சொத்திலே புடிச்சு, சுகத்தையும் மண்ணுக்கியிருக்கும்!

'ஹஹ, தம்பியாபுள்ளை இப்பவும் சுகவாசிதானே?' என்ருர் நிமிர்ந்து உட்கார்ந்த மஹ. பெஞ.

'என்ன சுகவாசம் அண்ணுச்சி. பார்க்கப் போனு, வாழ்க்கையிலே ஒரு மயிருமே இல்லே. புறக்கோம். நாமா பொறக்கணுமின்னு ஆசைப்பட்டோம்? இல்லை. எப்படியோ, ஏனே, பொறந்திடுறேம். அப்புறம் என்னைக்கோ செத்துப் போறேம். இந்த ரெண்டும் தான் உண்மை. சத்தியம். மத்ததெல்லாம் ... அடச் சீ! என் புத்தியை செருப்பாலடிக்க! ஊரிலேயிருந்து ரொம்ப காலம் கழிச்சு சொந்த ஊருக்குத் திரும்பி வந்திருக்கிற அண்ணுச்சியை பார்க்க வந்து போட்டு, வந்த இடத்திலே சுயப்புரவோலங்களை அப்படி சும்மா அவுத்து உதற ஆரம்பிச்சிட்டேனே!...கெக்கெக்கெக்கே...அண்ணுச்சி மதுரையிலேயிருந்து வாருப்லே யாக்கும்? மதுரை, தாயழி எப்படியாப்

பட்ட ஊரு? அது காலுலே கட்டி அடிக்க முடியுமா மத்த ஊருகளை? ஆமா. மதினியை கூட்டிக்கிட்டு வரலியா?'

சூரியன்பிள்ளையின் பார்வை சுற்றிச் சுழன்றது.

'இல்லே. நான் மட்டும் தான் வந்திருக்கேன்'.

'ஏன் அண்ணாச்சி அப்படி? அப்போ இங்கேயே தங்குற உத்தேசம் இல்லையா?'

'இன்னும் ஒண்ணும் தீர்மானம் ஆகலே. அவளுக்கு மதுரை புடிச்சுப் போச்சு. எனக்கு என்னவோ மனசு போட்டு அடிச்சுக்கிட்டேயிருந்தது. சொந்த ஊரு, வீடு வாசல், சின்ன வயசிலே பழகின ஜனங்கள், சொந்தக்காரங்க—இப்படிப் பல ரகப்பட்ட இதுகளையும், சாகிறதுக்கு முன்னாடி ஒரு தரமாவது பாத்துப் போடணும்கிற ஆசை. அந்த நெனைப்பே ராவும் பகலும் மனசிலே கிடந்து குடையுது. சரி, போயி, பார்த்திட வேண்டியது தான்னு கிளம்பி வந்துட்டேன். அவளுக்கா நெனைப்பு வந்து மீளுட்சி இங்கே வந்தா வாரு; இல்லே, மகனோடு மதுரையிலேயே இருக்கிறதா இருந்தா இருந்துட்டுப் போரு. அப்பா கட்டி வச்ச வீடு இது. நான் உசிரோடு இருக்கிற வரைக்கும் இதை விற்க விலைச் சாட்டப்படாதுங்கிற வைராக்கியம் எனக்கு. நம்மாலே ஒரு சின்ன வீடு கூடக் கட்ட முடியாது; ஒரு துண்டு நிலம் கூட வாங்க முடியாது. அப்பா வாங்கி வச்ச மூணு வயல்களையும் விற்கவேபடாதுன்னு ஒரு அடம். எவ்வளவோ சிரமங்கள் வந்தது. சோதனைகள் குறுக்கிட்டுது. கண்டப்பிடி, குலைப்பிடியா எவ்வளவு நெருக்கடிகள்! வீட்டை மட்டும் வச்சுக்கிட்டு, வயல்களை கைமாறிப் போடலாமான்னு கூட யோசிச்சதுண்டு. ஒரு தடவையா, ரெண்டு தடவையா! அடம். ஊகுங். அப்புறம் என்னடா யிருக்கு, ஊர்க்காரனுக அடத்தம்பி, அடத்தம்பின்னு குறிப்பிடுவானுகளே, அந்தப் பேரை கடைசிவரை நிலைநாட்டிர வேண்டாமான்னு ஒரு மனஉறுதியோடு தாக்குப் புடிச்சேன். வைராக்கியமா உழைச்சேன். ஒரு மாதிரியா சமாளிச்சு தலை நிமிர்ந்திட்டேன். தலை நிமிர்ந்தாச்சுவே தம்பியாபுள்ளே.

இனிமே எனக்கு யாரைப் பத்தியும் கவலேயில்லே. இந்த ஊர்க்காரனுக என்ன வேணும்னுலும் பேசட்டும், எனக்குக் கவலே கிடையாது. ஆமா.'

பெரிய பிள்ளை இதை அழுத்தம் திருத்தமாகக் கூறி முடித்து விட்டு, வெற்றிமிடுக்கோடு தலை நிமிர்ந்து பார்த்தார்.

'இந்த ஊரும் ஒரு ஊரா அண்ணுச்சி! வாழுதவனே வாழவும் விடாது; தாழுதவனே தாழவும் விடாது என்கிற கதையிலே இருக்கு இந்த ஊரு. வேணும்கிற ஒருத்தனே தலைக்கு மேலே தூக்கி வச்சுக் கூத்தாடும். அவனே வேண்டா தவன் ஆயிட்டான்கிற போது, பொத்துனு அவனைக் கீழே போட்டு மிதிமிதின்னு மிதிச்சுத் துவையல் பண்ணிப்போடும். இந்த ஊருக்குன்னு ஆளுகளும் வந்து வாய்ச்சிருக்காங்க. ஆம்பிளைகளும் பொம்பிளைகளும் ஒரே மாதிரி. காரம், குணம், மணம் எல்லாத்திலேயும் ஒரே ரகம். அவங்க பெத்தெடுக்கிற புத்திரபாக்கியங்கள் மட்டும் மாறிப்போகுமா என்ன? அதுகளும் தலைமுறை தத்துவமா இருக்கிற எல்லாத்துக்குமே வாரிசு களாகத் தான் இருக்கு. பின்னே எப்படி ஊரு உருப்படும்? ஒரு நாளைக்கு ஒரு நாள் இந்த ஊரு உள்ளாறவே போயிக்கிட்டு இருக்குதுன்னு சொன்னு, ஏன் போகாதுங்கேன்?'

ரொம்பவும் பேசிவிட்டதில் அலுப்புற்றவர்போல, சூரியன் பிள்ளை தலையைத் தடவிக்கொண்டு, 'அப்பனே முருகா!' என்று உரக்கக் கூவினர். மௌனத்தமர்ந்தார்.

'தம்பியாபுள்ளெ, இந்த ஊருமட்டுமில்லே, எல்லா ஊர் களுமே இப்படித்தான் இருக்கு. நான் பல ஊர்களையும் பார்த்து, பலப்பல பேரோடவும் பழகியிருக்கிறதுனலேதான் ஓங்கிப் பேசுறேன். சிவபுரம் மட்டும் தனி வார்ப்பு இல்லே. பார்க்கப்போனு, இந்த நாட்டிலே உள்ள எல்லா ஊர்களும் சிவபுரம்களாகத்தான் இருக்கு. அதுனலேதான் ஐயா, உலகத்திலே எந்தெந்த நாடெல்லாமோ எப்படி எப்படியோ உருப்படியா வளர்ந்து உயர்வடைஞ்சுக்கிட்டே இருக்கிற

போது, நம்ம நாடு தேய்ஞ்சு, டிம் அடிச்சுக்கிட்டே போகுது!' என்று மயிலேறும் பெருமாள்பிள்ளை திடமாக அறிவித்தார்.

'முருகா உண்டு' என்று முணுமுணுத்தார் சூரியன்பிள்ளை. 'அண்ணாச்சி இன்னிக்கு நம்ம வீட்டிலே சாப்பிடுங்களேன்' என்றார்.

'சாப்பாட்டுக்கென்ன! இன்னொரு நாள் சாப்பிட்டாப் போச்சு. இன்னைக்கு பிறவிப் பெருமாள்பிள்ளை வீட்டிலே சாப்பிடச் சொல்லியிருக்காங்க...'

'யாரு, நம்ம நெல்லையாபிள்ளைவாள் வீட்டிலா?' என்று இழுத்தார் மற்றவர்.

'ஆமா.'

—இந்த ஊரிலே இது ஒரு விசேஷம். அல்லது, சங்கடம். ஒவ்வொருவனுக்கும் அநேக பெயர்கள். அவன் பிறந்ததும் 'காப்பிட்டு' வைத்த பெயர் நீளமாப் பெரிசா ஒண்ணு. அம்மா அந்தப் பெயரை சொல்ல மாட்டா. அது மாமனார் அல்லது மாமியார் அல்லது மச்சினர் அல்லது நாத்தனார் அல்லது இப்படி மரியாதைக்குரிய ஒரு 'னர்' அல்லது 'ஆர்' எவரோடு பெயராகவாவது இருந்து விடும். அதனாலே அவள் ஒரு பெயரை வைப்பாள். இப்போ நான் தான் இருக்கேன் மயிலேறும் பெருமாள்னு. எங்க அம்மா என்னை வேலாயுதம்னு கூப்பிடுவா. சின்னம்மை ஒருத்தி இருந்தா. அவள் சரவணன்னு தான் அழைப்பா. சின்னப்பயலுகளோ மயிலுப்பய, மொட்டை, கிண்டன்னு சொல்லுவாங்க. வீட்டுக்கும் பேரு வச்சு அதைச் சொல்லிப் பேசுவாங்க. வேப்பமரத்தடி வீடு என்பாங்க எங்க வீட்டை. வேப்பமரத்து வீட்டு நல்லகண்ணுப்பிள்ளை மகன் என்பாங்க. அப்பாவை ஐயாப்பிள்ளைன்னு ஊரிலே குறிப்பிடுவாங்க. அதுனாலே ஐயாப்பிள்ளை வீட்டு மயிலேறு என்பாங்க. இப்படி ஒவ்வொரு வீட்டுக்கும், ஒவ்வொரு குடும்பத்துக்கும், குடும்பத்தின் பெரியவருக்கும் சின்னவங்களுக்கும், ஆம்பிளைகளுக்கும் பொம்பிளைகளுக்கும்

தினுசு தினுசான பேர்கள். அவனவனுடைய பூர்வப்பெயர்—அதாவது, காப்பிட்டு வைத்தபேரு—பள்ளிக்கூட ரிஜிஸ்டர்லே பதியப்படும்; நிலத்துக்குரிய பட்டாவிலே பத்திரங்களிலே பதியப்படும்; கல்யாணக் காயிதத்திலே அச்சிடப்படும். மற்றப்படி வழக்கத்திலே அடிபடுகிற பெயருக்கும் அதுக்கும் சம்பந்தமே இருக்காது...

'என்ன அண்ணுச்சி, தூக்கக் கிறக்கமா? ராத்திரி சரியான தூக்கம் இல்லையாக்கும்?' என்ற சூரியன்பிள்ளையின் தொணதொணப்பைக் கேட்டு விழிப்புற்று எண்ண ஓட்டத்துக்கு 'பிரேக் போட்டார்' பெரியவர். 'ஊம்ங்?' என்ருர்.

'நெல்லையாப்பிள்ளையை பற்றிச் சொன்னேன். அவருதானே உங்க நிலத்தை எல்லாம் மேல்பார்த்துக்கிட்டு இருக்காரு?'

'ஆமா.'

'பூவுக்குப் பூ நெல்லை வித்து பணத்தை ஒழுங்கா அனுப்ப மாட்டாரே அவரு. மானேஜு பண்ணுதேன்னு அசலூரிலே இருக்கிற மூணு நாலு புள்ளிகளின் நிலத்தை எல்லாம் இவரு தான் கவனிக்கிருரு. நல்லா சாப்பிடுருரு. இவரு பிழைப்பே அப்படித்தான் நடக்குது...'

—ஆசாமி தன் குணத்தை காட்ட ஆரம்பிச்சிட்டான். சரியான நாரதன் தான்.

மறு. பெறு. பெரும் போக்காக அபிப்பிராயம் தெரிவித்தார். 'இதெல்லாம் சகஜம்தான். அதில்லாமலா நம்ம பெரியவங்க சொல்லி வச்சாங்க—சூடு அடிக்கிற மாட்டை வாயைக் கட்ட முடியுமா? தேன் எடுக்கிறவன் புறங்கையை நக்காம இருப்பானுயின்னு. இதை எல்லாம் தூண்டிச்துளேச்சு கவனிக்கப் போனு, அப்புறம் காரியம் ஒண்ணும் நடக்காது.'

'ஆமாமா' என்ருர் சுகவாசி.

பெரியவரைக் கண்டு போக வேறு இரண்டு பேர் வந்துவிட்டதால், சூரியன் பிள்ளை வாயைத் திறக்கவில்லை. சிறிது

நேரம் சும்மா இருந்துவிட்டு, 'நான் வாறேன் அண்ணச்சி, அப்புறமாப் பார்க்கலாம்' என்று விடைபெற்றுக் கொண்டு வெளியேறினர்.

## 2

'ஆஹங்? இந்த வீடு கட்டி எழுபது வருசம் ஆகுதா?'

ரொம்பவும் ஆச்சர்யப்படுகிறவர் போல் கேட்டார் பிறவிப் பெருமாள் பிள்ளை.

மயிலேறும் பெருமாள் பிள்ளையை மத்தியானச் சாப்பாட்டுக்காகத் தன் வீட்டுக்கு அழைத்துப் போவதற்கு வந்திருந்தார் அவர்.

'சரியாச் சொன்ன, எழுபத்தொண்ணுன்னு சொல்லனும். எனக்கு எழுபது வயசு முடிஞ்சிட்டுது. நான் பிறக்கிறதுக்கு முந்தி, அம்மா என்னை உண்டாகியிருந்த வருசத்திலே, அப்பா இந்த வீட்டைக் கட்டின. ஒரு வைராக்கியத்திலே அவசரம் அவசரமாக் கட்டப்பட்ட வீடு. அம்மா இருந்த வரை, அடிக்கடி கதை கதையாச் சொல்லுவா.

அம்மா கல்யாணமாகி வந்த புதுசிலே சொந்த வீடு கிடையாது. மாமனர் பங்கு வச்சுக் கொடுத்த காலி மனை தான் இருந்திருக்கு.

தம்பியாபுள்ளே, அந்த நாளையிலே பெரியவங்க நல்ல திட்டத்தோடு காரியங்களை கவனிச்சிருக்காங்க. சொந்தமாக் குடியிருக்க வீடு வேணும்னு, எப்பாடு பட்டாவது ஒரு வீட்டைக் கட்டிப்போட்டுருவாங்க. பையன் பிறந்தாச்சுன்ன, அவனுக்கு பிற்காலத்திலே வீடு கட்ட வேணும்கிறதுக்காக, விலை சௌகரியமா வார மனையை வாங்கிப் போட்டு

வைப்பாங்க. அல்லது விலைக்கு வாற வீட்டை வாங்கிடுவாங்க ஒவ்வொரு மகன் பிறக்கப் பிறக்க, ஒவ்வொரு வீடாக அல்லது மனையாக கூடிக்கிட்டே போகும். சொத்தை பங்கு வைக்கிற போது, ஒவ்வொரு மகனுக்கும் தனித்தனி வீடு, அல்லது வீடு கட்டுவதற்கு வேண்டிய மனையும் கொஞ்சம் பணமும் கிடைத்துவிடும். நம்ம பெரியவங்க தங்களைப் பற்றி மட்டுமே கவலைப் பட்டுக்கிட்டு இருக்கலே. நாம நல்லா இருந்தாப் போதும், இருக்கிற வரைக்கும் போடு-போடுன்னு போடு வோம்; வாறவங்க அவங்க பாட்டை பார்த்துக்கிடட்டு மேன்னு வாழலே. நாமும் நல்லாயிருக்கணும், நம்ம பிள்ளை குட்டிகளும் நம்ம பெயரை சொல்லிக்கிட்டு ரொம்ப நல்ல படியா வாழணும்னு ஆசைப்பட்டாங்க. அதனாலே அவங்க செயம் செயமின்னு வாழவும் முடிஞ்சுது.

ஆமா. நான் இந்த வீட்டைப் பத்தியில்லா சொல்ல வந்தேன். அம்மாவுக்கும் அப்பாவுக்கும் கல்யாணமான புதுசிலே சொந்த வீடு இல்லையேங்கிறது ஒரு குறையாத் தோணலே. அதனாலே வீடு கட்டுறதைப் பத்தி அவங்க யோசிக்கவேயில்லை. ஆனால் மத்தவங்க அதை ஒரு குறையா நினைச்சு இழப்பமாப் பேச ஆரம்பிச்சிட்டாங்க. பெரியப்பாமார் களுக்கு பூர்வீக வீடு கிடைச்சிருந்தது. சித்தப்பா சொந்த வீடு கட்டிக்கிட்டாரு. எங்க அப்பா, சொந்த வீடுன்னு என்ன, வாடகை வீடுன்னு என்ன; எல்லாம் ஒரு எழவு வீடு தான்; நாம சாகிறப்போ வீட்டை தலையிலேயா தூக்கிட்டுப் போகப் போறோம்னு எடுத்தெறிஞ்சு பேசுவது வழக்கம். கல்யாண மாகிப் பல வருஷங்கள் ஆகியும் பிள்ளையே பிறக்கலே. அதுனாலே வேறே ஒரு அசிரத்தை; ஒரு அலட்சியம். இருக்கிற வரைக்கும் நல்லா உண்டு உடுத்தி வாழவேண்டியது; நமக்குப் பிறகு யாருக்காகன்னு வீடு கட்டி வைக்கணும்கிற ஒரு நெனைப்பு.

அம்மாவும் அதே மனோ பாவத்திலே தான் இருந்திருக்கா. ஆனா, பொம்பிளைக அப்படி இருக்க விடலே. அத்தைமாரு களும் பெரியம்மைகளும் சின்னம்மையும் அம்மாவை கேவல

மாப் பேசுறது, ஜாடை மாடையாய்ப் பேசுறது, அங்கே குத்தி இங்கே வாங்குற மாதிரிப்பேசுறது, கண்டு ஒண்ணும் காணுதபோது ஒண்ணுமாப் பேசுறது, இப்படி இல்லையா பொம்பிளைக சுபாவம், அதுகளை காட்டியிருக்கிருங்க.

இந்த வெள்ளூரா மாப்பிள்ளை செத்துப் போனு, கிடத்தி அழுறதுக்கும், அவ தாலி அறுத்துக் கிடக்கிறதுக்கும் வீடுன்னு ஒண்ணு இருக்குதா அவளுக்கு? இல்லே, அவளே செத்துக் கிடந்தாலும், அவளை கிடத்தி அழவும் எழவு கொண் டாடவும் சொந்த வீடு இருக்குதா?—அப்டீன்னு அத்தைகளும் பெரியம்மைமாருகளும் பேசியிருக்காங்க. வெள்ளூரா, நாதி யத்தவ, வீடத்தவன்னுல்லாம் இழிவாப் பேசியிருக்காங்க.

எங்க அம்மா பிறந்து வளர்ந்தது வெள்ளூரு.

தம்பியா பிள்ளே, இங்கே ஒரு முக்கியமான பாயின்ட். நம்ம ஜில்லாவிலே மட்டும் தான் இப்படி ஒரு வழக்கம் இருக் கிறதா எனக்குப்படுது. ஒவ்வொரு ஊரிலும் கல்யாணமாகி வாழ வருகிற பொம்பிளைகளை மற்றப் பொம்பிளைகள் அவளவள் அப்பா அம்மா ஊரை வச்சுத்தான்—அதாவது அவள் எங்கிருந்து வந்தாளோ அந்த ஊர்ப் பேராலேதான் — சுட்டிச் சுட்டிப் பேசுருங்க. வெள்ளூரிலிருந்து வந்தவ வெள் ளூரா, கார்சேரியிலே பிறந்து வளர்ந்தவ கார்சேரியா, பெருங் குளத்திலேயிருந்து பெண் எடுக்கப்பட்டு இங்கே வந்திருப்பவ பெருங்குளத்தா; இப்படி காடு வெட்டியா, ஏரலா, செவந்தி பட்டியா, திருநெவேலியா, பாளையங்கோட்டையா, சிந்து பூந்துறையான்னு ஊர்கள் பேராலே தான் அறியப்படுருங்க; பேசப்படுருக. இந்த ஊரிலேயே வசித்து, பிள்ளைகள் பெத்து, பேரன் பேத்தி எடுத்துவிட்ட பிறகும்கூட அவளுக வெள்ளூரா, ஏரலா, குறும்பூரா, மூளிக்கருப்பட்டியா, முக்காணி யாளுளாகவே தான் கருதப்படுவாளுகளே தவிர, சிவபுரத் தாள் ஆகிவிட்டாள் என்று மதிக்கப்படுகிறதேயில்லை. இது ஒரு வேடிக்கையாகத்தான் எனக்கு இப்பவும் படுது. இவள்

களோட மகள்கதான் கல்யாணமாகிப் புருசன் வீட்டுக்குப் போனதும் 'சிவபுரத்தாள்'க ஆவாங்க. அ ஹ ஹ ...'

ரசித்துச் சிரித்தார் பெரிய பிள்ளை.

'ஆமண்ணுச்சி. நீங்க சொல்றது கரெக்டு தான். நீங்க சொன்னப்புறம் தான் இது என் மூளையிலே படுது' என்று பிறவிப் பெருமாள் ஒத்து ஊதினுர்.

மனு. பெனு. ஆரம்பித்தார் மறுபடியும் :

'ஒவ்வொரு பொம்பிளைக்கும் தன் பிறந்த ஊர் மேலே, தான் பிறந்த வீட்டு பேரிலே, தான் விட்டு வந்த குடும்பத்து மேலே அலாதியான ஒரு பிடிப்பு—ஒரு பந்தம்—ஒரு பற்றுதல்—ஒரு பாசம் சாகிற வரைக்கும் இருந்துக்கிட்டே யிருக்கும். என்னதான் கல்யாணமாகி வந்து சேர்ந்து வாழ்கிற இடத்து மேலே, குடும்பத்து பேரிலே ஒரு ஒட்டுதல் ஏற்பட்டிருந்தாலும்—அல்லது ஏற்பட்டுவிட்டது போல் காட்டிக்கிட்டாலும்—அவளுக மனசு பிறந்த வீட்டுப் பெருமைகளை, பிறந்த குடும்பத்தைச் சேர்ந்த ஆளுகளை, அவங்க புரவோலங்களையேதான் பெரிசா நினைச்சுக்கிட்டிருக்கும். பொம்பிளைகளின் மனத் தராசிலே பிறந்த இடத்துக்குத்தான் வெயிட் அதிகம். புகுந்த இடத்தைப்பத்தி அவங்களுக்கு அவ்வளவா உயர்வான அபிப் பிராயம் ஏற்படுவது இல்லே. எங்க அம்மாவும் அப்படித்தான். வெள்ளூரும், மச்சு வீட்டுப் பிள்ளை குடும்பப் பெருமையும்தான் அவளுக்கு. அந்த ஊரிலே அவங்க குடும்பத்திலே தான் முதன் முதல்லே மச்சு வீடு கட்டி, கிரகப் பிரவேசம் பண்ணிக் குடிபுகுந்தாங்களாம். அதுக்குப் பிறகு பல மாடி வீடுகள் ஏற்பட்டுவிட்ட போதிலும் அவங்க குடும்பத்துக்கு வாய்த்த 'மச்சு வீட்டுப் பிள்ளை வீடு'ங்கிற பேரு மாறவேயில்லே. ஒவ்வொரு ஊரிலும் இது மாதிரி விசித்திரங்கள் இருந்துக்கிட்டே தான் இருக்கு. என்ன நான் சொல்றது?' என்று கேட்டு, சிரிப்பு என்னும் பெயரால் ஒரு கனைப்பை உதிர்த்தார் அவர்.

பிறவியாப் பிள்ளையும் கூடச் சேர்ந்து சிரித்தார்.

'இங்கே பொம்பிளைக அம்மா பிறந்த வீட்டைப் பத்தி மதிப்புக் குறைவாப் பேசவும் அம்மாவுக்கு ஆங்காரம் வந்திட்டுது. ஓகோ, வெள்ளூரான்னு கேவலமாப் போச்சோ, மச்சு வீட்டுப் பிள்ளை மகள் சொந்த வீடு கட்டாமல் இருந்து விடுவாளா பார்ப்போம்னு சவால் விட்டாள். அப்பாவுக்கு ஸ்குரு குடுத்து, முறுக்கேற்றி, காரியத்தை சாதிச்சுப் போட்டான்னுசொல்லுங்க. காசு மாலையையும் கல்லட்டியலையும், சப்புச் சவருன்னு கிடந்த நகைகளையும் கழத்திக் கொடுத்து, நீங்க என்ன செய்வேளோ எனக்குத் தெரியாது, எப்படிக் கட்டி முடிப்பீகளோ அதுவும் தெரியாது. ஒரு மாசத்திலே நமக்குன்னு ஒரு வீடு கட்டியாகணும், அருமையான வீடாக அது இருக்கணுமின்னுசொல்லிவிட்டா. என்ன காமாட்சி இது என் கிட்டே விக்கிரமாதித்த வேதாளமா வேலைக்கு இருக்கு, நீ நினைச்சதை நினைச்ச உடனே செய்து முடிக்க இன்னு அப்பா சும்மா கேலியாச் சொல்லவும், அம்மா அழ ஆரம்பிச்சிட்டா. இந்த ஊரிலே என்னை எல்லலாரும் வீடத்தவ—வாசலத்தவன்னு கேவலமாப் பேசுறுங்க; நானும் உசிரை வச்சுக்கிட்டு இருக்கணுமா? அரளிக்கிழங்கு இல்லாமலா போச்சு, அரைச்சுக் கலக்கிக் குடிச்சிருவேன்னு சண்டித்தனம் பண்ண, அப்பா அவளை சமாதானப்படுத்துறதுக்குள்ளே போதும் போதும்னு ஆயிட்டுது. அப்புறம் வீடு கட்ட வேண்டியதுதானே! பெரிய பெரிய மருத மரங்களை வெட்டி, உத்திரம், கட்டைகள்னு தயார் பண்ணினுங்க. வேப்ப மரங்களை வெட்டி சன்னல்கள் செஞ்சாங்க. மாமரங்களை வெட்டி, பலகைகளா அறுத்து, கதவுகள் சேர்த்தாங்க. பாருங்களேன், ஒவ்வொண்ணும் எப்படி தடிதடியாயிருக்குன்னு! இந்தக் காலத்திலே வீட்டுக் கதவுகள் இப்படி கோயில் கதவு மாதிரியா இருக்கு? அந்தக் காலத்திலே எதையுமே ஸ்ட்ராங்காச் செஞ்சாங்க. ரொம்ப காலம் நீடிச்சு இருக்கணும்னு உறுதியாச் செஞ்சாங்க.

இப்பவும் வீடு கட்டுறுங்களே! கட்டின மறு மாசமே சுவரிலே வெடிப்பு விழுது. தட்டட்டியிலே கீறல் விழுது. பெரிய மழை பெஞ்சா முக்குகளிலும் அங்கும் இங்குமா ஒழுக

ஆரம்பிக்குது. இந்த வீடு கட்டி எழுபத்தோரு வருசம் ஆகுதே. ஒரு வெடிப்பு விழுந்திருக்குதா? எந்த இடத்திலாவது மழைத் தண்ணி ஒழுகுமா? பேசப்படும்? ஹூங், எப்படியாப்பட்ட வீடு!

தம்பியாபுள்ளே, காங்கிரீட்டு, சிமின்டு என்கிற தெல்லாம் சமீப காலத்தில் அல்லவா வந்துது? அந்தக் காலத்திலே எல்லாக் கட்டிடங்களையும் சுண்ணும்பும் செங்கல்லும் கொண்டு தான் கட்டினுங்க. சுண்ணும்பை அதுக்குன்னு உள்ள அம்மியிலே வச்சு அரை அரைன்னு அரைச்சு, 'காரை'ன்னு குழைச்சு வைப்பாங்க. அப்படி அரைக்கிறபோது பதினியை ஊத்தி அரைப்பாங்க, கருப்பட்டியை சேர்த்துப் போட்டும், முட்டைகளை உடைச்சு ஊத்தியும் சாந்து அரைப்பாங்க. அது கப்னு புடிச்சுக்கிடும். பேயாப் புடிச்சுக்கிடும். லேசிலே இடிபடாது.

தாமிரபர்ணி ஆத்திலே கொக்கிர குளத்துக்கிட்டே பாலம் கட்டியிருக்காங்களே அது இப்படித்தான் கட்டப்பட்டிருக்கு தெரியுமா? கிழக்கிந்தியக் கம்பெனியான் காலத்திலேயே கட்டப்பட்டது. கம்பேனியிலே துபாஷ் வேலை பாாத்த சுலோசன முதலியார் கட்டி வச்சாரு. அதுனலேதான் அதுக்கு சுலோசன முதலியார் பாலம்னு பேரு. எவ்வளவு பெரிய பெரிய வெள்ளங்களை எல்லாம் அது பார்த்திருக்கு. அசைஞ்சு கொடுக்குதா? எப்பவோ ஒரு வெள்ளத்திலே மரமோ என்னமோ இசைகேடா வந்ததிலே, ரெண்டு கமானு பழுதாகிப் போச்சு. அதையும் பழைய மாதிரியே கட்டிட்டாங்க. பாலத்தைப் பழுது பார்க்கனும்னு இடிச்சுக் கொத்த முன் வந்த போது லேசாகவா இடிக்க முடிஞ்சுது? பெயர்க்க முடியலியே! எல்லாம் கருப்பட்டியும் பதினியும் முட்டையும் கலந்து தயாரிக்கப்பட்ட சுண்ணும்பின் சக்தி. இதுக்குப் பிறகு காங்கிரீட்டினுலும் கர்டர்கள் வச்சும் கட்டப்பட்ட பாலங்களிலே எத்தனையோ இடிஞ்சு நொறுங்கிப் போயிருக்கு! மேலும், இப்போ இஞ்சினீரு சுக்குனீருன்னு மெத்தப் படிச்ச மேதாவிகள் எவ்வளவோ பிளான் பண்ணிப் பாலம் கட்டுறுங்களே,

சுலோசன முதலியார் பாலம் மாதிரி கமான் கமானு, ஆர்ச் வச்சுக் கட்ட முடியுதா அவர்களாலே? இப்போ ஏது ஆர்ச்சும் கமான் வளைவும்? சச்சவுக்கமா, டப்பாக்கள் மேலே டப்பாக்களை அடுக்கி வச்ச மாதிரி, ஒரு எடுப்போ மிடுக்கோ அழகோ கம்பீரமோ இல்லாமல் தானே கட்டிடங்களை கட்டுறுங்க? அந்தக் காலத்து வேலைகளுக்கே மவுசு தனிதான். மதிப்பும் தனிதான்.

இது அந்தக் காலத்திலே கட்டப்பட்ட வீடு. இதுக்கு மச்சு இல்லே. அது ஒரு குறை. மச்சை நான் கட்டிப்போடு வேன்னு அப்பாவுக்கு நம்பிக்கை. நான் கட்டி முடிச்சிரனும்னு அப்பாவுக்கு ஆசை. முடியாமலே போயிட்டுதே அந்த ஆசை!'

ரொம்பவும் பேசிவிட்டதில் அலுப்புற்றோ, அல்லது நிறைவேறுதுபோன ஆசையை எண்ணியோ, திடீரெனப் பேச்சை நிறுத்திவிட்டு, கண்களை மூடிக்கொண்டு உட்கார்ந்திருந்தார் பெரிய பிள்ளை.

'போன மாசம் கூட அழகுப்பேரி முதலியாரு கேட்டாரு. விலைக்குக் கேட்டுக்கிட்டே இருந்தாரு. அண்ணச்சி வீட்டை விக்கிறதாயில்லேன்னு ஒரே அடியாச் சொன்ன பிறகும் கேட்டாரு. போன மாசம், விற்கட்டா இருக்கட்டும், வாடகைக்கு விடலாமில்லா? வீட்டை சும்மா அடைச்சுப்போட்டு வச்சிருப்பானேன்? யாருக்காவது குடியிருக்க வாடகைக்குக் கொடுத்தா மெழுகி சுத்தம் பண்ணி விளக்கேற்றி, வீட்டை இலச்சுமிகரமா வச்சிருப்பாங்களா இல்லையான்னுரு. அவருக்கே வாடகைக்குத் தரும்படி கேட்டாரு' என்று பிறவியாப் பிள்ளை சொன்னர்.

'அவருக்கு எதுக்கு இந்த ஊரிலே ஒரு வீடு? அழகுப்பேரிலே பெரிய வீடு இருக்கு. வீராவரத்திலே சத்திரம் மாதிரி ஒரு வீடு கிடக்கு. குத்தாலத்திலே ஒரு பங்களா இருக்கு. சிவபுரத்திலே எதுக்காம் வீடு? எந்த வைப்பாட்டியையாவது

கொண்டாந்து வைக்கப் போறாராமா? சவத்துப் பயலுக்குப் பிறந்த பய! நான் வீட்டை அடைச்சுப் போட்டிருக்கேன் அல்லது தொறந்து போட்டிருக்கேன். லெச்சுமீகரமா வச்சிருக்கேன், இல்லே, மூதேவி அடையப்போடுதேன். உனக்கென்ன, அதைப்பத்தி? வீட்டை விலைக்குக் கேட்க வந்திட்டேயே பெரிய மயிராண்டிட்டம்! சும்மா போட்டிருக்கேன் உனக்கென்னலே? சும்மா கிடக்கிறதினலே உனக்கு வாடகைக்குக் கொடுத்திரனுமோ? திமிரு அய்யா திமிரு. பணம் இருக்கு என்கிற மமதை...'

மயிலேறும் பெருமாள், கடா ஏறிய எமன் மாதிரி, கண்கள் சிவக்கக் கடமுடா என்று சத்தம் போடலானர்.

'இவர் கிட்டே இப்போ இதை ஏன்டா சொன்னேம்?' என்ருகிவிட்டது பிறவியா பிள்ளைக்கு.

'அதெல்லாம் சொல்லிவிட்டேன் அண்ணச்சி. என்கிட்டே கேட்ட மாதிரி அண்ணச்சிகிட்டே பேச்சு விட்ருதீங்க. அவாள் லேசிலே விட்டிறமாட்டா. இந்த வீடு அவாளுக்கு உசிரு மாதிரி. அவாளே இங்கே வந்து தங்கப் போருகன்னு சொல்லிட்டேன்...'

'ஊம்ம்' என்று உறுமினர் பெரியபிள்ளை. 'பின்னே என்னங்கேன்?' என்ருர். 'நான் இந்த வீட்டிலே தான் பிறந்தேன். நான் பிறக்கிறதுக்காக—அம்மா என்னை பெத்து எடுக்கிறதுக்காகவே—கட்டப்பட்ட வீடு இது. அம்மா எவ்வளவு பெருமையோடு சொல்லிப் பூரிச்சுப்போவா தெரியுமா? வேலாயுதம், ஒரு வைராக்கியத்திலே இந்த வீட்டை கட்டி முடிச்சோம். வீடு கட்டின முகூர்த்தம், என் வயித்திலே நீ உதிச்சே. சொந்த வீடு கட்டின பிறகு தான் நீ பிறக்கணும்னு இருந்திருக்குது பாரேன் என்பா. இந்த வீட்டிலே எனக்கு கல்யாணம் முடிச்சுப் பார்க்கணுமின்னு அம்மாவுக்கு ஆசை. அது நடக்காமலே போயிட்டுது. இந்த வீட்டிலே தான் நான் சாகணும்னு எனக்கு ஆசை. அது நிச்சயம் நிறைவேறும். அதுக்காகத் தான் நான் இப்போ இங்கே வந்திருக்கேன்' என்று கூறினர்.

'அப்படிச் சொல்லாதீங்க அண்ணுச்சி. இந்த வீட்டி லேயே இருங்க. ரொம்ப காலம் இருங்க. நூறு வயசு, ஏன், நூறு தாண்டியும் நீங்க இந்த வீட்டிலே இருக்கத்தான் போறீங்க' என்று பிறவியாபிள்ளை பன்னிப் பன்னிப் பேசினுர்.

பெரிய பிள்ளை பதில் சொல்லவில்லை.

அவர் யோசித்து முடித்துப் பேசுவதற்குள், 'பெரியப் போ, பெரியம்மை கூட்டியாரச் சொன்னு. சாப்பாட்டுக்கு நேரமாயிட்டுதாம். நீங்க ரெண்டு பேரும் வருவீங்க வருவீங் கன்னு பெரியம்மை ரொம்ப நேரமாக் காத்திருக்காளாம்' என மடமட வென்று பொரிந்து தள்ளியபடி வந்து நின்ருன் பத்து வயதுப் பையன் ஒருவன்.

'அடடே, நேரமானதே தெரியாம நான் அண்ணுச்சி பச்சிலே மூழ்கியிருந்துட்டேன். வாங்க அண்ணுச்சி. அப்ப வ்தயே சிவகாமி சொல்லி அனுப்பினு. எல்லாம் ரெடி ஆயிட்டுது, அப்பளம் மட்டும் தான் பொரிக்கணும். அரை மணி நேரத்திலே அவளை கூட்டிக்கிட்டு வந்திருங்கன்னு. நான் தான்...' எஅறு பிறவியாபிள்ளை அங்கலாய்த்தார்.

'நேரம் ஒண்ணும் அதிகம் ஆயிரலே வே. இப்ப தான் ஒரு மணி ஆகுது. நான் தினசரி ஒரு மணிக்குத் தான் சாப்பிடுற வழக்கம்' என்று கூறிக்கொண்டே கிளம்பினுர் மனு. பெனு.

# 3

மயிலேறும் பெருமாள் பிள்ளைக்கு எழுபது வயது முடிந்து விட்ட போதிலும், உடம்பிலோ உள்ளத்திலோ முதுமை எனும் நோய் பற்றிப்படரவில்லை. அதனுல் அவர் முறுக்காகத் தென் பட்டார்.

நல்ல உயரம். ஐந்தே முக்காலடி இருக்கலாம். அந்த உயரத்தை அகத்திக்கம்பாகவோ நெட்டிலிங்கமரமாகவோ தோன்றும்படி செய்யாத உடல்வாகு. உடம்பை, கண்ட கண்ட சாமான்களை தாறுமாறுகத் திணித்துக் கட்டிய சாக்கு மூட்டை மாதிரி, அல்லது மத்திய பாகத்தின் முன்பக்கமும் பின்பக்கமும் அசிங்கமாய், அளவுக்கதிகமான சதைப் பிதுக்கங்களோடு வீங்கி, கவனத்தோடும் கலைநயத்தோடும் உருவாக்கப்படாத பிள்ளையார் சிலை மாதிரி எடுத்துக்காட்டாமல், ஒரு உருவ அமைப்புக்குள் கச்சிதமாக அடங்கிய தோற்றம். ரத்த ஓட்டம் நல்லபடியாகவும் ஆரோக்கியமாகவும் உள்ளது என்பதைக் கூறும், சுருக்கங்கள் மடிப்புகள் வாட்டங்கள் வடிதல்கள் இல்லாத — சிறு மினுமினுப்போடு கூடிய— திட சரீரம்; தவிட்டு நிறம். ஒட்டவெட்டி விடப்பட்ட தலைமுடி வெண்மையாய் மண்டை பூராவும், கரம்பை மீது புல் வளர்வது போல், சிறிதாய் நெருக்கமாய் வளர்ந்து நிற்கும். பெரியமனுஷத்தனமாய் மயிரைக்குறுக வெட்டிக் கொள்ளாமல் 'கிராப்' ஆகவளர விட்டிருந்தால், அது வெள்ளைவெளேரென நீண்டு படிந்து அவர் முகத்துக்கு ஒரு அறிஞத்தனம் அல்லது சிந்தனையாளர்களை பூசிக்கொண்டிருக்கக் கூடும். அதை பிள்ளை விரும்புவதில்லை. மீசையும் தாடியும் உறவு கொள்ளும் களமாகத் தனது முகத்தை விட்டுவைக்கவும் அவர் ஆசைப்படுவதில்லை. அது சதா மழுமழுவென மினிர வேண்டும் என்பதில் அவருக்கு ரொம்ப அக்கறை உண்டு.

உடம்பை மூடி மறைக்கும் எண்ணம் கொள்ளாதவர் பிள்ளை. மேலே துண்டு கூடக் கிடக்காது. அழுக்கேறுத துண்டு எப்பவும் அவர் அருகில் தான் கிடக்கும் — அவர் உட்கார்ந்திருக்கும் போது, வெளியே போகிற போது, அழுத்தமான ஒரு கோடு மாதிரி, இடது தோளிலிருந்து கீழே நீண்டு தொங்கிக் கிடக்கும். அணிய வேண்டிய அவசியம் ஏற்படுகிற போது, காலர் இல்லாத, வெள்ளைத்துணி (மெல்லிசு) 'கமிசு' தான் போட்டுக் கொள்வார். நான்கு பித்தான்கள். வெள்ளியாலானவை. சிறு பிள்ளைகளுக்குத் தலைபின்னப்

பயன்படுத்தப்பட்ட, சிவப்பு அல்லது பச்சை நிற, உல்லன் நூலினல் அவை, தகுந்த இடைவெளி விடப்பட்டு, சேர்த்துக் கட்டப்பட்டிருக்கும். அந்த நூல் கிடைப்பது சிரமம் என்ற நிலை வந்ததும், 'அறுநாக்கயிறு' (அரைநாண்கயிறு) க்கு உதவும் கறுப்புக் கயிற்றையே அவர் பயன்படுத்தலானர். சட்டையின் கைகள் தொளதொளவென்று முழு நீளத்துக்கு வரும்.

இடுப்பில் எப்போதும் மென்மையான தும்பைப்பூ நிற மல்வேட்டிதான்.

நெற்றியில் திருநீறு இலங்கும். நெற்றி பூராவும் அள்ளிப் பூசிக்கொள்ள மாட்டார். குழைத்து விரல்களால் பட்டை பூசிக் கொள்வதுமில்லை. நெற்றி நடுவில் பட்டும் படாமலும் வெள்ளையாய் தெரியும்.

இப்போதும் அப்படித்தான் கிளம்பினர். கதவை இழுத்துப் பூட்டிவிட்டு, நிதானமாகப் படியிறங்கி, அவசரமின்றி நடந்த பெரியபிள்ளையின் அருகில் வந்த நாற்பத்து மூன்று வயதுப் பிறவிப் பெருமாள் பிள்ளைதான் கிழடு தட்டியவராய் காட்சி அளித்தார். ஐந்தடி ஒரு அங்குலம் உயரம் வளர்ந்த சோனி உருவம். அவருக்கு இயல்பாக அமைந்த தாழ்வு உணர்ச்சி, உயர்ந்த—மிடுக்கான, யாருக்கும் எதற்கும் கவலைப்படாத நோக்கு கொண்ட பெரியபிள்ளை அருகில் மேலும் அவரை குறுகவைத்தது.

—எப்படி இருக்காரு பாரேன். எழுபது வயசுன்னு சொல்ல முடியுமா? உடம்பு எப்படி இருக்கு பாரு. கரளாக் கட்டை மாதிரி மினுமினுன்னு. எனக்குத் தான் கூன் விழுந்திருக்கு. இவரு நிமிர்ந்து தான் நடக்காரு. நிமிர்ந்தே தான் உட்கார்ந்திருக்காரு. மனுசனுக்குக் கவலை கிடையாது. கவலை தானே ஆளை அரிச்சு அரிச்சுத் தின்னுருது. அது மட்டுமில்லே. நல்ல தீவனம். சரியான ஊட்டம். பாலுன்னும் தயிருன்னும் நெய்யின்னும். பாதாம் பருப்பை அரைச்சு பாலிலே கலக்கிச் சாப்பிடுதாரு. தினம் அல்வா, ஆரஞ்சு. மாம்பழ ஸீசன்லே டஜன் கணக்கிலே மாம்பழம். நான்

தான் அடிக்கடி மதுரைக்குப் போய் பார்த்திருக்கேனே. சனிக்கிழமை தவறினாலும் ஐயாவுக்கு எண்ணெய் முழுக்கு தவறாது. எண்ணெய் தேய்ச்சுக் குளிச்ச அன்னைக்கு உளுந்தங்களி கண்டிப்பா உண்டு. ஒரு தேங்கா பருமன் எண்ணெய் மினுமினுக்க, கருப்பட்டியும் உண்டெனப் போட்டு — இப்ப நெனச்சாலே நாக்கிலே தண்ணி ஊறுது. மீனாட்சி மதினியை சும்மா சொல்லப்படாது. எது செய்தாலும் ரொம்ப ருசியாயிருக்கும். அவ கைக்கே தனி ருசி வந்து சேர்ந்திடும். உளுந்தம் வடை செய்வாளே—ஹா! ரொம்ப மெதுவா, பூ மாதிரி, நம்ம வீட்டிலேயும் எருமை மாடு இருக்குதே, மெதுவா வடை சுடத் தெரியுமா இவளுக்கு? என்னைக் காவது இவ கையிலே வடை மெத்துமெத்துனு பஞ்சு மாதிரி வாய்ச்சிருக்கா? வடையைப் புட்டு வாயிலே போட்டு அரைடா அரைன்னு அரைக்கணும்...

'வாங்க'

பிறவிப்பெருமாள்பிள்ளை வீட்டு 'எருமை மாடு' தான் கைத்தறிப் புடவையை கட்டிக்கொண்டு, பொம்பிளையாக நின்று வரவேற்றது. ஆளுக்கு முந்திக் கொண்டு அவள் பல்வரிசை பளீரென வரவேற்றது. வாய்க்கு வெளியே வந்து, என்ன சவுக்கியமா என்று விசாரிப்பது போல் பெரிதாக நீண்டிருக்கும் பற்கள். நம்ம பல்லு இப்படி அசிங்கமா இருக்கே என்ற உணர்ச்சி அவளுக்கே சில சமயங்களில் ஏற்பட்டுவிடும். மதிப்புக்கு உரியவர்களையும், மரியாதை செய்யப்பட வேண்டிய அந்நியர்களையும் காண நேரிடுகிற போது. அச்சமயங்களில் அவள் ரொம்பவும் சங்கடப்படுவாள். மேலுதட்டை இழுத்து பற்களை மூட முயன்று, தோல்வியுற்று, குழப்பமும் வெட்கமும் கொண்டு, வந்தவரை நேருக்கு நேர் பார்த்துப் பேசவும், அவர் கேட்கிற கேள்விகளுக்கு பதில் சொல்லவும் முடியாமல் திணறித்தவிப்பாள். அது மாதிரிச் சமயங்களில் அவள் தன்னையே திருப்பிக் கொண்டு முதுகு தரிசனமே அளிக்கத் துணிவாள். அப்போது, குட்டை உருவினளான அவளது ஆட்டுரல் போன்ற பின்பகுதி

விகாரமாகவே தென்படும். அவள் கொஞ்சம் 'பருமபட்ட மனுஷி' தான். சரிந்து சாய்ந்து அவள் நடக்கிறபோது அவளது பின்பக்கத் தோற்றம் தாராவாத்தின் பின்பகுதி அசைவுகளை நினைவுக்குக் கொண்டுவரக் கூடும். ஆள் 'கண்ணுக்கு லெச்சணமாக' இல்லையே தவிர, மாடாக உழைப்பதிலே அவளுக்கு ஈடு அவளேதான். ஓய்ந்திருக்க மாட்டாள். எப்பவும் எதையாவது செய்து கொண்டிருக்கும் சுபாவம்.

'வாங்க' என்று மறுபடியும் வரவேற்புக் குரல் கொடுத்தாள் சிவகாமி.

'ஆமா' என்றார் பெரியபிள்ளை.

யாராவது 'வாங்க' என்று வரவேற்புரைத்து அவர் 'ஆமா' என்று பதில் சொல்லும் போதெல்லாம்—இவ்வளவு வயசுக்குப் பிறகும் கூட—மயிலேறும் பெருமாள்பிள்ளை மனசில் ஒரு அரிப்பு ஏற்படவே செய்யும். 'வாங்க' என்றால் 'ஆமா' என்பதுதான் சரியா; இல்லை 'வாறேன்' என்று கூற வேண்டியது முறையா? இப்படி ஒரு பிரச்னை வாலடிக்கும்.

அவர் பிறந்து வளர்ந்த சூழலில் 'வாங்க' என்பதும் 'ஆமா' என்பதும் சகஜமாகவே நிலவியது. அதையே பழக்கமாக்கிக் கொண்டவர் அவர். முதல் தடவையாக அவர் மதுரை போயிருந்தபோது, 'வாங்க' என்று அவரை வரவேற்ற இடங்களில் 'ஆமா' என அவர் பதிலுரைத்து அமர்கையில் அநேகர் அவரை விசித்திரமாகப் பார்த்தார்கள். 'வாங்க' என்றால் 'வாறேன்' என்னாமல் 'ஆமா' என்கிறாரே இவர் என்று ஒரு நண்பர் குறிப்பிட்டபோதுதான், அந்தப் பார்வையில் பொதிந்திருந்த பொருள் அவருக்குப் புரிந்தது. அதிலிருந்து அவர் மனம் குழம்புவதும் இயல்பாயிற்று. சில சமயம் 'வாங்க' என்றால் மறுமொழி தராது 'ஊம்' போட்டும், 'இஹிஹி' சிந்தியும் சமாளித்துக் கொள்வார். நெருக்கமான இடங்களில் 'வந்துக்கிட்டே இருக்கேன்!' என்று தமாஷ் பண்ணக் கற்றுக்கொண்டார் பிற்காலத்தில்.

சும்மா தலை ஆட்டவும் செய்வார், கௌரவப் பெரிய மனித தோரணையில். என்றாலும், 'வாங்க' என்ற குரல், சிறு பிராயப் பழக்கமான 'ஆமா' எனும் எதிரொலியை தன்னிச்சையாய் அவரிடம் எழுப்பிவிடுவதே இயல்பாகிவிட்டது.

இப்பவும் அந்தச் சொல் உதிர்ந்து விட்டதைத் தொடர்ந்து, 'வாறேன்னு சொல்லியிருக்கணுமோ?' என்ற அரிப்பும் அவர் நினைவுத் தடத்தில் ஊரத்தான் செய்தது.

அவர்கள் இருவரும் கால்களை கழுவிக் கொள்ளட்டும் என்று பெரிய செம்பில் நீர் கொண்டு வைத்து விட்டு, சிவகாமி முகம் காட்டாமல் உள்ளே போனாள். இலைகளில் பறிமாறுவதில் ஈடுபட்டாள்.

இரண்டு பேரும் கால்களைக் கழுவி விட்டு 'தார்சா'வில் ஏறி நின்றார்கள். அப்புறம், கால் ஈரம் சற்றே உலர்ந்ததும் 'பட்டாசல்' பக்கம் போனார்கள். பிறவியாபிள்ளை, அங்கே கண்ணாடிக்குப் பக்கத்திலிருந்த திருநீற்று மரவையிலிருந்து திருநீறு எடுத்துப் பூசிக்கொண்டார். 'அண்ணாச்சி, வேணுமா?' என்று கேட்டார். பெரியபிள்ளை தலையாட்டி மறுத்து விட்டார்.

'வாங்க. இலையிலே உட்காருங்க' என்று சிவகாமி உபசரிக்கவும், இருவரும் அடுத்த அறைக்குப் போய், இலைகளின் முன் அமர்ந்தார்கள்.

'பாவிமட்டை ஊரிலே இலைக்கு வந்திருக்கிற கிராக்கி! ஊம்ங், சொல்ல வேண்டாம். ரெண்டு இலை பத்துப் பைசா. அது கூட நினைச்சபோது கிடைக்கிறதில்லே' என்று சிவகாமி அலுத்துக்கொண்டாள்.

'நம்ம ஊரும் டவுண்சைடு மாதிரி ஆயிட்டுதாக்கும்?' என்று மனா. பெனா. கேட்டுவைத்தார்.

'டவுண் பரவால்லே, அங்கே ஒரு பூட்டு இலை பத்துக் காசுக்குக் கிடைக்குது. அமாவாசை, பௌர்ணமி மாதிரி விரத நாட்களிலே இந்த ஊர் அநியாயத்தை கேட்கவே வேண்டாம். ஒண்ணு, இலையே கடையிலே இல்லே என்றிருக்

கும்; அல்லது, ஒரு இலை ஏழு காசு எட்டுக் காசுன்னு கொள்ளை விலை சொல்லுவான்' என்று பிறவிப்பெருமாள் புலம்பினார்.

'ஏன், இப்போ இங்கே வாழைத்தோட்டமே கிடையாதா? யாரும் வயல்களில் வாழை போடலியா?'

'ரெண்டு மூணு பெரிய புள்ளிகள் வாழை பயிரிடிருச்காங்க. அவங்க அதை குத்தகைக்கு விட்டுட்டாங்க. குத்தகைக்காரங்க இலைகளை அவ்வப்போது வெளியூருக்கு அனுப்பிவிடுறாங்க. வாழைக்காய் குலைகுலையா லாரிகளிலே ஏற்றப்பட்டுப் போகத்தான் செய்யுது. பெங்களூருக்குப் போறதாப் பேசிக்கிடுறாங்க. எந்த ஊருக்குப் போகுதோ! நம்ம ஊரிலே வாழைக்கா, வாழை இலைக்கு எப்பவும் பஞ்சமும் தட்டுப்பாடும் தான்' என்று புலப்பத்தை தொடர்ந்து வளர்த்தார் பிறவியாபிள்ளை.

'நான் இந்த ஊரிலேயே இருந்தபோது அப்படி இல்லை. வாழை பயிரிட்டிருந்தவங்க, முதல்லே இந்த ஊர் தேவைகளைத்தான் கவனிப்பாங்க. இலை, வாழைப்பூ, வாழைக்கா எல்லாம் தினசரி தெருக்காட்டிலே விற்பனைக்கு வரும். அடுத்த வீடு, பக்கத்து வீடுகளுக்கு பூ, இலை எல்லாம் சும்மாவே கொடுப்பாங்க. மரம் சாய்ஞ்சிட்டா, அல்லது வெட்டுற ஸீசன்லே, வாழைத் தண்டை அக்கம் பக்கத்து வீடுகளுக்கும் சொந்தக் காரங்களுக்கும் தாராளமாக் கொடுத்து அனுப்புவாங்க. காசு கொடுத்தால் கூட வாங்கிக்கிட மாட்டாங்க. அவங்க காசு, பணமின்னு ஆலாப் பறக்கலே. நாமும் நல்லாருக்கணும், நம்மை சேர்ந்தவங்களும் நல்லாயிருக்கணும்னு விரும்பினாங்க. அப்போல்லாம் காலணா, அரையணா, கால் துட்டு, முக்காத்துட்டு என்கிற கணக்குத் தானே. காலணாவுக்கு ஒரு பூட்டு இலை—அஞ்சு இலை, கிடைச்சுது. சில சமயம் ரெண்டு பூட்டுகூடக் கிடைக்கும். காலணாங்கிறது முக்கால் துட்டு. மூணு கால் துட்டு. அதாவது, மூணு தம்பிடி...ஊம்ம். அந்தக் காலம் மலை ஏறிப் போச்சு!' என்று பெருமூச்சு விட்டார் பெரியவர்.

'சாப்பிடுங்க, நீங்க பாட்டுக்குப் பேசிக்கிட்டே இருக்கீகளே?' என்று சிவகாமி குறைகூறினாள்.

'பேச்சு பேச்சு தான், சாப்பாடு சாப்பாடு தான். ரெண்டும் அதது பாட்டுக்கு நடந்துக்கிட்டேயிருக்கு!' என்ற பெரியவர் சிறிது நேரம் சாப்பிடும் கருமத்தில் கண்ணாக இருந்தார். 'நீயும் விட்டே இல்லியே! உருளைக் கிழங்குப் புட்டு, அவியல், தயிர்ப்பச்சடி, கீரை...பேஷ் பேஷ். அவியல் நல்லாருக்கம்மா. சாம்பாரும் ருசியாயிருக்கு' என்று தாராளப் பாராட்டுரைகள் வழங்கினார்.

அதனால் சந்தோஷம் அதிகரிக்கப் பெற்ற சிவகாமி அவர் இலையில் அவியலை நிறையவே அள்ளிப்போட்டாள்.

'என்ன இது! அவியல் நல்லாயிருக்குன்னு சொன்னதுக்காகவா இவ்வளவு போடுதே? எனக்கு இன்னும் வேணும்கிறதுக்காகவா நான் பாராட்டினேன்? உள்ளதை சொன்னேன்' என்று பெரியபிள்ளை முணமுணத்தார்.

'சாப்பிடுங்க, சாப்பிடுங்க' என்று உபசரித்தாள் அம்மாள்.

'கயத்தாத்துக்காரன் இன்னிக்கும் கீரை கொண்டாந்தானா?' என்று பிறவியாபிள்ளை கேட்டார்.

'ஆமா, அவன் தான் ரெண்டு நாளைக் கொருக்க கீரை கொண்டு வாருனே' என்று சிவகாமி தெரிவித்தாள்.

பெரியபிள்ளைக்கு இந்த விஷயம் ஆச்சர்யமாகப்பட்டது. "என்னது, கயத்தாத்திலேயிருந்து நம்மூருக்குக் கீரை வருதா? ஏன், இந்த ஊரிலே யாரும் கீரை போடுறதில்லே?' என்று விசாரித்தார்.

'இங்கே யாரு கீரை போடுதா? தோட்டமெல்லாம் சும்மா தான் கிடக்குது' என்றாள் சிவகாமி.

'நம்மூருக்கு கயத்தாறிலேயிருந்துதான் கீரை வருது. ஒருத்தன் வழக்கமாக் கொண்டு வாருன். ஒரு சாக்கு நிறைய, சைக்கிள் பின்னாலே வச்சுக் கட்டிக்கொண்டு வருவான். காலையிலே ஆறு, ஆறரை மணிக்கு வந்தால், ஏழரைக்குள்ளே

வித்து முடிச்சிருவான். காசுக்குத்தான் விற்பான். அரிசிக்குத் தரமாட்டான். கீரை நல்ல ருசியாயிருக்கும். ஆதனாலே கயத்தாத்துக்காரன் எப்ப வருவான், எப்ப வருவான்னு எல்லாரும் காத்துக் கிட்டிருப்பாங்க' என்று பிறவிப்பெருமாள் விளக்கினார்.

'கயத்தாறு ஊரு இங்கிருந்து பத்து மைல் இருக்காது?'

'எட்டு மைல் இருக்கும்.'

'அங்கே கீரை பயிரிட்டு இங்கே கொண்டாந்து விக்கிறான் ஒருத்தன்! சைக்கிள்லெயே வந்து!'

'பக்கத்து ஊருகளிலும் விற்கத்தான் செய்வான். நிறைய கீரை பயிரிட்டிருப்பான். உதவிக்கு வேறே ஆள்களும் இருக்கும். ஒவ்வொரு ஆளு ஒவ்வொரு ஊரை கவனிச்சுக்கிடுவாங்க. இது அவங்களுக்கு நல்ல பிசினஸ். லாபகரமாகத் தானிருக்கும்.'

'இருக்கும் இருக்கும். இல்லாமலா இவ்வளவு சிரமப்படுவான்?' என்றார் மனு. பெனு.

'ரெண்டு வருஷத்துக்கு முன்னாடி, கோட்டூரிலிருந்து நம்மூருக்குக் கீரை வந்துக்கிட்டிருந்தது' என்று சிவகாமி சொன்னாள்.

'பாளையங்கோட்டை பக்கம் இருக்கே கோட்டூரு, அங்கேயிருந்தா?' என்று பெரியவர் கேட்டார்.

'ஆமா. அங்கே வயல்லேயே கீரையை பயிரிட்டிருந்தாங்க. ஆம்பிளையும் பொம்பிளையும் தலைச்சுமையா சுமந்து, ஊர் ஊராக் கொண்டுபோய் வித்தாங்க. அரிசிக்கும் காசுக்கும் கொடுத்தாங்க. அப்புறம் அங்கே வயலிலே பெரும் அளவிலே கீரை பயிர் பண்ணுவதை விட்டுட்டாங்க' என்று பிறவியா பிள்ளை சொன்னார்.

மோர் சாதத்துக்காக இலை நடுவே சாதத்தை இழுத்து வைத்த பெரிய பிள்ளையிடம், 'சோத்தை ஒதுக்கிக்கிடுங்க. பாயசம் இருக்கு' என்று சிவகாமி அறிவிக்கவே, அவர் 'போடு

சக்கை! பாயசம்கூட வச்சிட்டியா? பெரிய விருந்துதான்னு சொல்லு!' என்றார்.

'அபூர்வமா வந்திருக்கீக. இதுகூடச் செய்யப்படாதா?' என்று சிவகாமி பாயசம் பரிமாறினாள். பிள்ளை அதை ருசித்துச் சாப்பிட்டார்.

'ஆமா. நம்ம ஊரிலே ஏன் யாரும் கீரை பயிரிடுறதில்லே? முன்னாலே நான் இந்த ஊரிலே இருந்தபோது, கீரைத் தோட்டங்கள் செழிப்பாக இருந்துதே? மதுப்பொங்கல் சந்தி அருகே ரெண்டு தோட்டம், தெற்கே தேரடித்தோட்டம், வாய்க்கால் ஓரமா அஞ்சாறு தோட்டங்க — இப்படி நெடுக கீரை போட்டிருப்பாங்க. காலையிலும் மாலையிலும் துலா கட்டி தண்ணி இறைப்பாங்க. எப்பவும் தோட்டங்கள் பச்சுபச்சுனு பார்க்கவே குளுமையா யிருக்கும். சிறுகீரை, அரைக்கீரை, முளைக்கீரை, தண்டுன்னு வகைவகையா வளரும். நம்ம ஊருக்கு வேண்டிய கீரை இங்கேயே பயிராகி வளர்ந்தது. அவங்களும் லாபகரமாகத்தான் பயிரிட்டு வாழ்ந்தாங்க. இப்போ ஏன் அதுமாதிரில்லாம் நடக்கிறதில்லே?' என்று, உண்மையைப் புரிந்துகொள்ள வேண்டும் எனும் அவாவோடு, மயிலேறும் பெருமாள் விசாரித்தார்.

'ஏன்னு என்ன காரணத்தை திட்டமாச் சொல்லமுடியுது? ஏனோ அந்தப் பழக்கம் கொஞ்சம் கொஞ்சமா நின்னு போயிட்டுது! கஷ்டப்பட்டு உழைக்க ஆள் இல்லாமல் இருக்கலாம். அப்படிக் கஷ்டப்பட்டு உழைச்சவங்களுக்கு போதுமான ஆதாயம் இல்லாமல் போயி, அவங்க உற்சாகம் இழந்து அந்தத் தொழிலை விட்டுவிட்டிருக்கலாம். அந்தப் பாதையிலே துணிந்து போக மற்றவர்களுககு மனம் இல்லாமல் இருந்திருக்கலாம். வயசானவங்க, பெரியவங்க கீரைத் தோட்டம் போட்டுக் கஷ்டப்பட்டு பிழைப்பு நடத்தினாங்க. அவங்க மக்கமாரு அப்படி உழைக்கத் தயாராக இல்லை. ஜவுளிக்கடை, மளிகைக்கடை இதுமாதிரி எங்காவது மாசச் சம்பளத்துக்கு வேலை பார்ப்பதே சவுகரியமான பிழைப்பு என்ற எண்ணம் அவங்களுக்கு ஏற்பட்டுட்டுது. ஒன்றிரண்டு பேரு போலீஸ்

வேலைக்குப் போயிட்டாங்க. பக்கத்து ஊர்களிலே — தாளை யூத்திலும், திருநெல்வேலி ஜங்ஷன் போகிற வழியிலும் சிமின்ட் ஆபீசு, மில்லுகள்னு வரவும், இளையவர்களுக்கு வேலை சுலபமாக் கிடைக்க வழி பிறந்தது. கைநிறையச் சம்ப ளமும் கிடைக்கும். பின்னே ஏன் கீரைத் தோட்டத்திலே அல்லாடப் போறாங்க?' என்று பிறவியா பிள்ளை பேசினார்.

இந்த ஊரும் மாறலே, இங்கே உள்ள ஆட்களும் மாற லேன்னு நான் நெனச்சேனே, அது பூராவும் சரியாக இராது போலிருக்கே! ஊரிலும் ஆட்களிடமும் மாற்றங்கள் புகுந்து விளையாடாமல் இல்லேன்னு தோணுதே என்று பெரியபிள்ளை எண்ணிக்கொண்டார்.

சாப்பாடு முடிந்தது.

'நீங்க இங்கே இருக்கிறவரைக்கும் நம்ம வீட்டிலேயே சாப்பிடுங்க' என்றாள் சிவகாமி.

'அது சரிப்படாதம்மா. நான் இங்கேயே தங்கி விடுற துன்னு வந்திருக்கேன்...'

'நல்லா இருங்க. வீட்டையும் வாசலையும் போட்டிட்டு எங்கேயோ போயி இருக்கேளே, இந்த ஊரை எட்டிக்கூடப் பாக்கிறதில்லேயேன்னு எனக்கு எவ்வளவு வருத்தம் தெரியுமா? இவொகிட்டேக்கூட அடிக்கடி சொல்லுவேன். இப்ப நீங்க வீட்டோடு வந்திட்டது நல்லதுதான். மதுரையிலேருந்து அக்கா வாற வரைக்கும், இங்கேயே சாப்பிடுங்க. உங்களுக்கு இங்கே வந்து சாப்பிட்டுப் போகப் பிரியம் இல்லேன்னு சொன்னா, நானே சாப்பாட்டை உங்க வீட்டுக்கு எடுத்து வந்து பரிமாறுதேன். உங்களுக்குன்னு தனியாகவா சமைக் கப்போறேன்?' என்று சிவகாமி அன்போடு சொன்னாள்.

'சிவகாமி, நீ வருத்தப்படக்கூடாது. நீயும் தம்பியும் சொன்னதுக்காக இந்த வேளைக்கு உங்க வீட்டிலே விருந்து சாப்பிட்டாச்சு. மீனாட்சி இங்கே வாருளோ வரலையோ, ஒண் ணும் சொல்றதுக்கில்லே. நானே சமையல் பண்ணி சாப் பிட்டு எனக்குப் பழக்கம்தான். எனக்கு நன்றாக சமையல்

பண்ணத் தெரியும் என்பது உங்களுக்குத் தெரியாமல் இருக்கலாம். அந்த அனுபவம் எனக்கு நிறையவே உண்டு. அதுக்கான ஏற்பாடுகள், தேவைகளோடுதான் நான் வந்திருக்கேன். அதனுலே, சாப்பாடு விஷயமா இனிமே நீயும் தம்பியா பிள்ளையும் என்னை உபசரிக்கவேண்டாம். உங்க வீட்டிலே சாப்பிடலியேன்னு வருத்தப்படவும் வேண்டாம்' என்று பெரிய பிள்ளை கண்டிப்பாக அறிவித்துவிட்டார்.

'உம். உங்க இஷ்டம்' என்று இழுத்து சிவகாமி தன் வேலையில் ஈடுபட்டாள்.

'நான் வாறேன்' என்று கூறி, மயிலேறும் பெருமாள் பிள்ளை தன் வீட்டுக்கு நடந்தார்.

வாசல் நடை வரை வந்து அவரை வழியனுப்பிய பிறவிப் பெருமாள், அவர் கூடவே அவரது வீடுவரை போகலாமா என்று எண்ணி, பிறகு வேண்டாம் என்று முடிவு செய்து, காலை தேய்த்துக்கொண்டு அந்த இடத்திலேயே நின்றுவிட்டார்.

## 4

'நம்ம ஊருக்கு வேண்டிய கீரைகூட பக்கத்து ஊரிலிருந்துதான் வரவேண்டியிருக்கிறது' என்ற உண்மை மயிலேறும் பெருமாள் பிள்ளையை ரொம்பவும் சங்கடப்படுத்தியது.

இந்த ஊரில் இலை கிடைப்பதில்லை; காய்கறி வேண்டுமானுல் டவுனுக்கு ஓடவேண்டும்; நாலைந்து நாட்களுக்குத் தேவையான காய்கறி வகைகளை வாங்கி வைத்துக்கொள்ள வேண்டும்; 'திடீர் விருந்தாளி வந்தா, வாய்க்கு ருசியா, வகைக்கறியோடு ஆக்கிப்போட முடியாது; இருக்கதை வச்சு

ஒப்பேத்த வேண்டியதுதான்'னு சிவகாமி சொன்னது அவருள் குறுகுறுத்துக் கொண்டேயிருந்தது.

தச்சநல்லூரிலே கூடத் தனியா ஒரு பெரிய மார்க்கெட் ஏற்பட்டுட்டுது. திருநெல்வேலி டவுண் மார்க்கெட் மொத்த வியாபாரிகள் பிணங்கிப் பிரிந்து தனி மார்க்கெட் அமைத்துக் கொண்டதினுலே, டவுண் மார்க்கெட் படுத்துத் தலைதூக்க முடியாமல் போய்விடவில்லை; நடுவாந்தரச் சிற்றூருக்கு ஒரு பெரிய மார்க்கெட் கிடைத்தது லாபம்...தாழையூத்திலே கூட தினசரி காலை நேரங்களில் காய்கறிகள் குவியல் குவியலா வந்து விற்பனை ஆகுது; அந்த இடமே ஒரு சந்தைமாதிரித் தோணுது; இப்படியிருந்து அதுவே ஒரு மார்க்கெட்டாக நிலைபெற்ருலும் பெற்றுவிடும் என்று பிறவியாபிள்ளை சொன்ஞர்.

'ஏன், சீவலப்பேரி நம்ம ஊரைவிடச் சின்ன ஊரு தானே? அங்கே காய்கறி முதல் பட்டு ஜவுளிவரை சகலமும் கிடைக்கும். எப்பவும் கிடைக்கும். இப்போ பொண்ணு பார்த்துப் பேசிமுடிச்சு, உடனேயே கல்யாண வீட்டுச் சாமான் களை வாங்கி, உடனடியாக் கல்யாணத்தை நடத்திமுடிச்சிட லாம் அங்கே; சீவலப்பேரியிலே அவ்வளவு வசதிகளும் இருக்கு' என்று சிவகாமி சொன்ஞள். அவள் 'சீவலப்பேரியா' என்பதை பெரியபிள்ளை நினைத்துக்கொண்டார்.

இதுவும் ஒரு ஊரா சவம்! ஒரே ஒரு கடைதான் இருக்கு. அவன் சொன்ன விலையை கொடுத்துத்தான் எல்லாச் சாமான் களையும் வாங்கியாகணும். டவுணிலே மூணும்தரச் சாமான் 'வாங்கியாந்து', டவுண் கடையின் முதல்தரச் சாமான்களின் விலைமேல் லாபத்தையும் சேர்த்துவச்சுக் கிரயம் சொல்லி விக்கிருன். அந்த விலையைச் கொடுக்க மனம் இல்லாதவர்கள் டவுனுக்கோ ஜங்ஷனுக்கோ போகிறபோது, தேவைக்குரிய பல சரக்குகளையும் வாங்கி வந்துவிடுவார்கள். அடிக்கடிதான் பஸ் போய் வந்துகொண்டிருக்கிறதே !

பிறவிப்பெருமாள் பேச்சோடு பேச்சாகச் சொன்ன இந்த விவரமும் மனு. பெனு. மனசில் கனத்துக் கிடந்தது.

மயிலேறும் பெருமாள் உள்ளத்தில் கோயில் கொண்டிருந்த' சிவபுரம் சொர்க்கப் பசுமையோடு ஜிலுஜிலுத்தது. அவர் நாற்பது வருஷங்களுக்கு முன்பு விட்டுச் சென்றிருந்த கிராமத்தை — தன்னிறைவு பெற்றிருந்த, வளங்களும் வசதிகளும் கொண்டிருந்த, இதம் தரும் இனிய சூழ்நிலையை — இப்போதும் அப்படியே தரிசித்து மகிழமுடியும் என்று எண்ணியவர் அல்லர். ஆயினும் இன்று எதிர்ப்படும் ஏமாற்றங்களும் மோசமான சீர்குலைவுகளும் அங்கு மண்டி வளர்ந்திருக்கும் என்று அவர் ஒருநாள் ஒரு பொழுதேனும் எண்ணியதுகூட இல்லை.

அவர் நினைவில் நித்தியப் பசுமையோடு நிரந்தர இளமை இனிமைகளோடு குடியிருந்த சிவபுரத் தோற்றம் அடியோடு ஆட்டம் கொடுத்துவிடும்படியாக அதன் இன்றைய எல்லைக் காட்சிகள் வெறிச்சென உணர்த்துவதை மனு. பெனு. ரயிலில் வந்து இறங்கியபோதே பூரணமாகப் புரிந்து கொள்ள இயலவில்லை—அவர் இரவு பத்து மணி வண்டியில் வந்து இறங்கியதால், இருட்டில் இரண்டு மைல் தூரம் ஊருக்கு நடந்து தான் போக வேண்டும் என்று எண்ணியவாறு ரயிலை விட்டு இறங்கியவருக்கு, ரோட்டிலே 'டவுன் பஸ்' வந்து அருள் புரிந்தது மகிழ்ச்சியையே கொடுத்தது. இருட்டில் பஸ் வேகமாக ஓடிய போது, பஸ்ஸினுள் மத்தியில் ஒரு இடத்தில் உட்கார்ந்திருந்த பிள்ளைக்கு பாதை நெடுக மாறுதல் ஏற்பட்டிருக்கு என்ற உணர்வு படர்ந்ததே தவிர, அது எத்தகைய இடித் தாக்குதல் என்பது மறுநாள் காலை வரை புலனுகவேயில்லை.

அதிகாலையில் ஐந்து மணிக்கே எழுந்து அவர் ஆற்றுக்குப் போய்விட்டார். கிருஷ்ண பட்சத்து நிலவு, வைகறைப் போதில், மனோகரமாக எங்கும் வெள்ளிமுலாம் பூசியிருந்தது. “நிலா பட்டப்பகல் போலே அடிக்குது. இந்த அழகை ரசிக்கதுக்கு யாரு இருக்கிருங்க?' என்று பிள்ளையின் மனம் கூறிக் கொண்டது.

ஊருக்கும் ஆற்றுக்கும் ஒரு மைல் தூரம். இருபுறமும் விரிந்து கிடக்கும் பசிய வயல்களின் மத்தியில் கோணல் மாணலாக நாடா வைத்தது போல் ரோடு நெளிந்து நீண்டு கிடந்தது. 'போக ஒரு மைல்; வர ஒரு மைல். ரெண்டு மைல் நடக்கணுமே!' என்கிற மலைப்பு, நடக்கப் பயந்த—சோம்பேறித் தனத்தை இயற்கையான சுபாவமாகக் கொண்டிருந்த—ஊர்காரர்களை ஆற்றுக் குளிப்பின் சுகத்தை அனுபவிக்க விடாமல் செய்து வந்தது. ஊரின் வடபக்க எல்லையாக அமைந்திருந்த பெரிய குளமும், அங்கிருந்து கிளம்பி மேற்கு எல்லையெனவும் வயல் வெளியின் விளிம்பு போலவும் நெளிந்து ஓடிக்கொண்டிருந்த வாய்க்காலும், ஆண்கள் பெண்கள் குழந்தைகளின் குளிப்புத் தேவைக்கு வசதி செய்து கொடுத்தாலும், குளிப்பதற்காக ஆற்றுக்குப் போய்த்தான் ஆகவேண்டும் என்பது அவசியமற்ற விஷயம் ஆகிவிட்டது. வாய்க்காலிலும் குளத்திலும் தண்ணீர் இல்லாது போய் விடுகிற கோடை மாதங்களில்தான் இந்த ஊரார் ஆற்றின் பக்கம் தலைகாட்டுவார்கள்.

இதர மாதங்களில்—வருஷம் பூராவும்—'வேலை மெனக்கெட்ட' இரண்டு மூன்று பேர் தினசரி ஆற்றில் போய் குளித்து வருவதை நித்திய நியதியாக அனுஷ்டித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் ஊராரின் அனுதாபத்துக்கும், எதிரே வருகிற வயல் உழைப்பாளரின் வேடிக்கைக்கும் 'விண்ணுணப் பேச்சு'க்கும் இலக்காவதைத் தவிர்க்க முடியாப் பராபரங்களாக நடமாடினுர்கள்.

மயிலேறும் பெருமாள் சிவபுரத்தில் இருந்த வரையில் தினந்தோறும் காலையிலும் மாலையிலும் ஆற்றுக்குப் போவதை ஒரு கடமையாக நிறைவேற்றி வந்தார். 'காலை நடை காலுக்கு பலம்; மாலை நடை மனசுக்கு நலம்' என்றும் சொல்லிக் கொள்வார். அநேகருக்கு, அவர் இப்படி நடந்து கொண்டிருப்பது, 'வேலைமற்ற மாமியார் கழுதையைப் போட்டுச் சிரைத்த' கணக்குத் தான் என்றே தோன்றும். 'ஆறு பக்கத்திலே இருந்தால் பரவாயில்லை; ஊரிலேயிருந்து

ஒரு மைல் தள்ளி இருக்குதே!' என்பது அவர்களுக்கு ஒரு குறையாக இருந்தது.

வெளியூரிலிருந்து வருகிறவர்கள் கூட இப்படி எண்ணுவதுதான் இயல்பாக இருந்தது. ஒரு சமயம் மனு. பெனு.வை பார்க்க வந்து, அவரோடு ஆறு வரை நடந்து, நடந்த களைப்பினால் மணலில் ஓய்வு எடுக்க வேண்டும் என்று நீட்டி நிமிர்ந்துவிட்ட நண்பர் ஒருவர் சொன்னார்—

'எல்லாம் சரிதான். ஊரும் நல்லாத் தானிருக்கு. ஆறும் நல்லாயிருக்கு. இந்தச் சூழ்நிலையும் ஜோராகத் தானிருக்கு. ஆனால் நீங்க ஒரு தப்பு செய்துட்டீங்க. ஊரை கொண்டு போயி ஆத்துக்கு ஒரு மைலுக்கு அப்பாலே வச்சிருக்கீங்க. அது சரியில்லே. ஆற்றோரமாகவே, கரை மேலே, அல்லது கொஞ்சம் தள்ளி ஊரை அமைச்சிருக்கணும்!'

ஏதோ மயிலேறும் பெருமாள் பிள்ளைதான் கூட இருந்து பிளான் பண்ணி, ஊரை 'ஆத்திலேயிருந்து' தள்ளிக் கொண்டு போய் அமைத்துவிட்டது போல—அப்படிச் செய்து விட்டதற்காக அவரை குற்றம் சாட்டுகிற தொனியில்—அந்த நண்பர் பேசினார்.

அதை மனு. பெனு. மறக்க முடிந்ததேயில்லை. இப்போது கூட அவருக்கு அந்த நினைவு எழுந்தது. மனம் சிரித்துக் கொண்டது.

'மனுசங்களோட மனம்தான் எப்படி எப்படி எல்லாம் வேலை செய்யுது பாரேன்!' என்றொரு எண்ணமும் வாலடித்தது.

ஊரின் வடபுறம் குளம். அதை ஒட்டி உயர்ந்து செம்மையாய் தெரியும் பரம்புப் பகுதி. அதற்கும் அப்பால் பனை மண்டைகள். மேலே கவிந்து விதானம் அமைத்திருக்கும் வானம். அதைப் பார்த்து விட்டு மேற்குப் பக்கம் திரும்பி, பார்வையை தென்திசையில் ஓட்டி, கீழ்பக்கம் பாய்ச்சினால், எங்கும் பச்சைப் பசும் கடல். நெல்பயிரின் காடு. மரகதப் பச்சையாய் எல்லையற்று விரிந்து பரந்து விளங்கும் அது

கண்ணுக்குக் குளுமையான, மனசுக்கு இதமான—இயற்கை யின் சக்தியையும் மனித உழைப்பின் மாண்பையும் தெளிவு படுத்தும்—திருச்சன்னிதியாக அவருக்குத் தோன்றும்.

ஆனால் ஒரு அம்மையார்—சமூக சேவை என்று நாமம் பூண்டு, சம்பளத்துக்காக ஊர் ஊராகச் சென்று ஏதோ சேவை பண்ணுவதாகப் பெயர் பண்ணித் திரிந்த ஒரு அம்மணி—ஒரு பஸ் நிலையத்தில் அவரை சந்திக்க நேர்ந்த போது, சிவபுரம் பற்றி அவர் பெருமையாய் குறிப்பிட்ட போது, அவரையே குறை கூறுகிற மாதிரிப் பேசினாள்.

'சிவபுரமா? நல்ல ஊர்தான். ஆனாலும் ஊரை கொண்டு போயி இப்படியா வயலுகளை ஒட்டிவைப்பது? வயலுகளும் வீடு களும் ஒட்டிச் சேர்த்துவச்ச மாதிரி! வீடுகளுக்கு அடுத்தாப் லேயே வயல்கள். ஊரை விட்டு வயலுக விலகித் தள்ளி இருக்கவேணும்? வயல் ஓரத்திலேயே வீடுகளும் முளைச்சிருக் கிறமாதிரி ஊரை வச்சிருக்கிறதுனாலேதான் எப்பவும் கொசு உபத்திரவம் அதிகமாயிருக்கு' என்றாள்.

அட எஞ்சிவனே என்று பெருமூச்செறிந்தது அவர் உள்ளம். அவள் கிட்டே என்ன பேச்சு வேண்டிக்கிடக்கு என்று சும்மா இருந்துவிட்டார்.

வயல்களில் பச்சைப் பசுமை கொலு இருக்காத கோடை யின் வறண்ட மாதங்களில் ஊரே விதவை வேஷம் போட்டுக் கொண்டிருப்பதுபோல் அவருக்குப்படும். அந்த வெறுமை அவர் நெஞ்சை உறுத்தும்.

அப்படி நெஞ்சைப் பெரிதாக உறுத்தக்கூடிய மகா வெறுமை வடக்கே பல்லிளித்து எதிர்கொண்டு, 'வா ராசா வா, சொந்த ஊரை நெனச்சுக்கிட்டு வந்து சேர்ந்தியாக்கும்!' என்று எக்காளமிடுவதுபோல், மயிலேறும் பெருமாளைத் தாக்கு வதாகப்பட்டது, அவர் ஆற்றிலிருந்து திரும்பி நடந்துவந்த போது.

இனம் புரியாத வேதனை ஒன்று அவர் நெஞ்சைப் பற்றிப் பிருண்டுவதுபோல் வலி எடுத்தது. 'பாவிகளா! அட படு

பாவிப் பயகளா! இப்படியா பண்ணுவது?' என்று வயிற் றெரிச்சலை வாய்விட்டே புலம்பினர். 'சே, என்னமா இருந்த இடம்! எப்படிப் போயிட்டுது!' என்ற அங்கலாய்ப்பு அவர் மனசுள் திரும்பத் திரும்ப ஒலித்தது.

சிவபுரத்தினுள் கொண்டுவிடும் ரஸ்தாவை இப்போது புதுசாகப் பார்க்கிறவர்களுக்கு—அல்லது, பத்துப் பன்னி ரண்டு வருஷங்களாக மட்டுமே பார்த்து வந்திருப்பவர்களுக்கு — மூளியான அதன் தோற்றம் எந்தவிதமான உளக்கிளர்ச் சியையோ, உணர்வுச் சுழலையோ எழுப்பிவிடாது. பதினைந்து வருஷங்களுக்கு முந்தி, அதற்கும் முன்பிருந்தே, அந்த ரஸ் தாவை கண்டு பழகியவர்களுக்கு தற்போதைய அதன் வெறுமை இனிய பழைய நினைவுகளைக் கிளருமல் இருப்ப தில்லை. முன்பு அவர்கள் கண்டு அனுபவித்தது குளுகுளு பசும்சோலை; இப்போது அங்கே காணக்கிடப்பது வெறும் பாலை.

மயிலேறும் பெருமாள்; நாற்பது வருஷங்களுக்கு முன்பு, ஒரு விரக்தியில், வேதனையில், வைராக்கியத்தில் ஊரைவிட்டு வெளியேறியவர், சொந்த ஊரின் நினைவாகவே இருந்த போதிலும், இடையில் ஒருமுறைகூட தென்திசைப் பக்கம் காலடி எடுத்து வைக்கவில்லை. அவ்விதம் அவர் அடம் பிடிக் காது அவ்வப்போது, இடைக்கிடை, இந்த ஊரின்பக்கம் வந்து போயிருந்தால், சிவபுரம் ரஸ்தாவின் தோற்ற மாறுதல் அவருக்கு இவ்வளவு பெரிய அதிர்ச்சியாக இருந்திருக்காது.

சிவபுரத்துக்கும் ரயிலடிக்கும் இரண்டு மைல் தூரம். ரயிலடியிலிருந்து கிளம்பியவர்கள் முதல் ஒரு மைல் வறண்ட சூழ்நிலையைத்தான் அனுபவித்தார்கள் அந்தக் காலத்தில். காடாக வறண்டுகிடந்த பகுதியில் முன்பு உடைமரங்கள் மட்டுமே அங்குமிங்குமாக நின்றன. சிலசில பனைகள் தலை தூக்கியும், தரையோடு தரையாக ஆவாரை, ஆதாளை போன்ற குத்துச் செடிகள் புதர்புதராகவும், காட்சிதரும். வெண்புழுதி படிந்த அந்த ஒரு மைலைக் கடந்ததும், ரோடு வளைந்து திரும்பும் இடத்திலிருந்து இனிமையும் குளுமையும்

பந்தலமைத்துக் கவிந்து தொங்கும், இருபுறமும் நன்கு வளர்ந்து நின்ற பெரிய பெரிய ஆலமரங்களினூடே.

ஆலமரங்கள்னு எப்படியாப்பட்ட ஆலமரங்கள் என்று எண்ணினார் மனு. பெனு. ஒரு ஆளு ரெண்டு கையையும் பரப்பி அதை ஆவிச் சேர்த்துக் கட்டமுடியாது. ஒவ்வொரு மரமும் அத்தனை பருமன். சில மரங்களை, ரெண்டு மூணுபேர் கைகளைக் கோர்த்து வளையமிட்டுத்தான் கட்டிப்பிடிக்கமுடியும். ஒவ்வொரு மரத்திலிருந்தும் விழுதுகள் பாம்புகள் மாதிரிப் பின்னிப் பிணைந்து கீழ்நோக்கித் தொங்கும். சில விழுதுகள் மலம்பாம்புகள் தண்டி இருக்குமே! அதுகளை புடிச்சிக்கிட்டு நானும் மற்றப் பையன்களும் எவ்வளவுதரம் ஊஞ்சல் ஆடியிருக்கோம்! 'ஆலும் வேலும் பல்லுக்குறுதி'. அதிகாலையிலே குளத்தங்கரைக்குப் போயி, நல்ல விழுதாப் பார்த்து, இதவானதாத்தேடி நறுக்கிக்கிட்டு, பல்லிலே வச்சு சவைச்சு பிரஷ்மாதிரி ஆக்கி, வெளிக்கி இருந்தபடியே பல்லை சுத்தம் செய்றது அப்போ ஊர்காரங்க வழக்கமா இருந்தது. அப்ப அவங்க பல்லும் ஆரோக்கியமா, பார்க்க சகிக்கக்கூடியதா இருந்தது. உம்ம நாகரிகப் பல்பொடியும் பசையும் பிரஷும் எதுக்கு ஆகும்? நாகரிகம்னுதான் பேரு. பிரஷ்ஷை சுத்தமானதுன்னு சொல்லமுடியுமா? ஆலம் விழுது பிரஷ் தினசரி ஒண்ணு புதுசுபுதுசாக் கிடைக்குமே! அதை பல்லால் கடிச்சு மத்துமெத்தென்றுகித் தேய்க்கிறபோது ஏற்படுகிற சுகம், உண்டாகிற ஒரு சுவை—ஆகா ஆகா! இந்தக்காலத்து பிள்ளையாண்டான்களுக்கு அது எங்கே தெரியப்போகுது? எப்படித் தெரிஞ்சுக்கிட முடியும்?

— ரோடிலே ரெண்டு பக்கமும் ஓங்கிவளர்ந்த மரங்கள். மேலே தடித்தும் நீண்டும் கிளைத்தும் வளர்ந்த கிளைகள். நெடுகப் பந்தல் போட்டமாதிரி பச்சை பசேல்னு இலைகள். இலை ஒவ்வொண்ணும் எவ்வளவு அகலம்! பெருங்குடி ஆச்சி இட்டிலி வச்சுக் கொடுத்ததெல்லாம் ஆல இலையிலேதான். கொம்பங்குளத்துப் பிள்ளை வடை, பக்கடா கேட்கிறவங்களுக்கு, ஆல இலையிலே வச்சுத்தான் கொடுப்பாரு. அகலமா,

இளசா, மினுமினுப்போடு இருக்கும் இலைக. பெருங்குடி ஆச்சி மத்தியான சாப்பாட்டைக்கூட வாடிக்கைக்காரங்களுக்கு ஆல இலைகளை வட்டமாத் தச்சு வச்சிருக்கதிலேதானே பரி மாறுவா? வீடுகளிலேகூட திடீர்னு இலை வேணுமின்னாலும் — காசு கொடுத்து இலை வாங்கமுடியாத சமயங்களிலும் — ஆல இலைகளை பறிச்சுவந்து, வட்டமா அஞ்சாறு இலைகளை சேர்த்து வைத்து, வாரியலிலிருந்து எடுத்த ஈர்க்குச்சியை நகத்தாலே ரெண்டாக வகிர்ந்து, சிறுசுசிறுசாக் கிள்ளி எடுத்து, அந்தத் துண்டுகளைக்கொண்டு இலைகளை சேர்த்துத் தைப்பாங்க. அந்த வெள்ளை குச்சிகளின் தையலும், இலைகளின் பச்சை மினு மினுப்பும், வட்டமாக அமைந்த வடிவமும், பார்க்கதுக்கே ஒரு அழகாயிருக்கும்.

— இப்ப நினைக்கிறபோது, அந்தக் காலத்திலும் வாழை இலைப் பற்றாக்குறையும் தட்டுப்பாடும் இருந்திருக்கலாம்னு தோணுது. ஆனாலும், ஆல இலைகள் இலைப்பஞ்சம் இல்லாத படி தவிர்த்திருக்கணும்னு தோணுது. பூவரசமர இலைகளையும் சாப்பாட்டு இலையாக உபயோகிச்சிருக்காங்களே! நம்ம வீட்டுக்கு எதிரே ரெண்டு பூவரச மரம் நின்னுதே? பெரிய, அகல, இலைகளாயிருக்குமே? எத்தனை தடவை வண்டிக்காரனுக்கும் இதர ஆள்களுக்கும், பூவரச இலைகளை தண்ணியிலே நனைச்சுப் பரப்பிவைத்து அதிலே அம்மை சோறுபோட்டிருக்கா! வாதாங்கொட்டை மர இலைகள்கூட சாப்பிடதுக்கு ஏற்ற இலைகளாப் பயன்பட்டிருக்கு. இந்த ஊரிலே நாலைஞ்சு வாதா மரம் அங்கும் இங்குமா நின்னுது. இப்ப அதுகளும் வெட்டுண்டு, விறகா எரிஞ்சு போயிருக்கும்.

— வே, ஒத்தை செத்தையா, அங்கையும் இங்கையும் நிக்கிற மரங்களை வெட்டி எரிக்கிறதைப்பத்தி வயிறெரியதுக்கு ஒண்ணும் இல்லே. ஆனா, இப்படியா, ரோடு பூரா, ஒரு மைல் தூரத்துக்கு, அடுக்கடுக்கா, தூணமைச்சுப் பந்தல் போட்டது மாதிரி வளர்த்துவிட்டிருந்த பெரிய பெரிய மரங்களை...எந்தக் காலத்திலே எந்தப் புண்ணியவாங்க நட்டு வச்சுப் பாதுகாத்து, பத்திரமா வளர்த்துப் பேணினாங்களோ!

எவ்வளவு காலமா வளர்ந்து நின்னுதோ? அதுகளை அடியோடு அழிச்சுப்போட்டானுகளே ஐயா!

— இந்தக் காலமே அழிக்கிற காலமாத்தானிருக்கு. பெரிய டவுண்களிலே, ஸிட்டிகளிலே, ஸிட்டி இம்ப்ரூவ்மென்ட் யின்னும், டவுண் பிளானிங்னும் சொல்லி பெரிசு பெரிசா வளர்ந்து நிற்கிற மரங்களை ஒவ்வொரு வருசமும் வெட்டிச் சாய்ச்சுக்கிட்டே இருக்காங்க. அந்தக் காலத்திலே ஒரு மரத்தை வெட்டினா, ரெண்டு மூணு மரம் வளர்ந்து வரும்படியா நட்டுவச்சுப் பாதுகாப்பு பண்ணுவாங்க. இப்போ 'மரம் நடு விழா'யின்னு பேரு பண்ணுறதுதான் மிச்சம். பணம் செலவாகிறதுதான் கண்ட பலன். பச்சையா நிக்கிற மரங்கள் மொட்டையாக்கப்படுது. அடிமரத்தை கரம்பிக்கரம்பி, தோலுரிக்கிற வேலை வேறே நடக்குது. அப்புறம் அது பட்டுப்போகும். பட்டுப்போச்சுன்னு சொல்லி, வெட்டி, ஏலத்துக்குக் கொண்டுவர வேண்டியது. விறகு ஆக்கவேண்டியது. எங்கும் இதுதான் நடக்கு. இந்த ஊரிலும் அதுதான் நடந்திருக்கும். இப்ப ரோடே மூளியாப்போயி, கண்றாவியா இருக்கே. தார்ரோடு ஆயிட்டுது, அதுமேலே பஸ்கள் அடிக்கடி ஓடுது. இது வளர்ச்சி இல்லையா என்பாங்க. என்ன வளர்ச்சி போ! நாற்பது வருஷங்களுக்கு முன்னாலே, ரோடு எவ்வளவு அழகாக் கலகலப்பா இருக்கும்! அதுலே நடந்துபோவதே ஒரு இதமான அனுபவமா இருக்குமே. ஒவ்வொரு ஸீசன்லே ஒவ்வொரு அழகுத் தோற்றம்...

இலை உதிர் காலத்தில் மரங்களில் இலை பழுத்து, மஞ்சளாகி, உதிர்ந்து, ரோடு நெடுகிலும் பள்ளங்களிலும் இலைகள் மெத்தையாய் படிந்து, அப்புறம் அவை சருகாகி, காற்றிலே சுழன்று கலகலத்து, நடப்பவர் காலடியில் சரசரத்து—அது ஒரு தனி இனிமை.

மொட்டையானவை போல் தோன்றும் மரங்களின் கிளைகளில், குச்சிகளில், இலை மொட்டுகள் துளிர்த்து, பெரிதாகி, தாமிரத்தகடுகள் போலவும் கண்ணாடிகள் போலவும் விரிந்து, பெருசாகி, இளம் பச்சைக்குளு குளுப்பாய் மலர்ச்சி பெற்று,

நாளுக்குநாள் பச்சையில் பல நிலைகள் காட்டி, கனமேற்று, மினுமினுத்து, வெயிலில் பளீரிடுவது — அது ஒரு இனிமை.

பிறகு காய்கள் தோன்றும். பழங்கள் மிகும். மைனுக்கள் கூட்டம் கூட்டமாய் வந்து பழங்களைத் தின்று பாடிக்களிக்கும்' காக்கைகள் வந்து விருந்துண்ணும். பறவைகளின் களி வெறிக் கூச்சலும் பறந்து திரிதலும் தனித்தனி இனிமைகள்.

—எல்லாம் போச்சு! எல்லாம் போச்சு! பொட்டல் தோற்றமும் சுடுகாட்டு அமைதியும் குடிகொண்டிருக்கு. இப்போ வெயில் வேளையில் நடந்து போகவே முடியாது...ஏன் நடக்கணும்? நாகரிகம்தான் 'நடப்பது கேவலம்' என்கிற நினைப்பை மனுசங்ககிட்டே உண்டாக்கிட்டுதே. அரை மைல் தூரம் போக வேண்டியிருக்கும். பத்து நிமிசத்திலே நடந்துபோயிரலாம். ஆனால், பஸ் வரட்டும் பஸ் வரட்டுமேயின்னு அரைமணிக்கும் அதிகமாகவே காத்து நிற்பாங்க. பஸ் வந்ததும், முட்டி மோதி ஏறி, இடிச்சு நெருக்கி நின்னுக்கிட்டே போவாங்க. இது நாகரிகமாம். முன்காலத்திலே நடந்து நடந்து போறதிலே சுகம் கண்டாங்க. இந்த ஊரிலேயிருந்து தூத்துக்குடிக்கும் திருச்செந்தூருக்கும், சேரகுளம் கார்சேரி மாதிரி தூரத்து ஊர்களுக்கும் நடந்து போவதையே வழக்கமாக் கொண்டிருந்தவங்களை எனக்குத் தெரியும். பாளையங்கோட்டைக்கு ஆற்றைக் கடந்து நடந்து போயிடலாம். மூணே மூணு மைல் தான். திருநெல்வேலிக்குப் போக எத்தனையோ பாதைகள். ஜங்ஷனுக்கு ஆற்றங்கரை ஓரமாக நடந்து போவது தான் சுலபவழி. இப்போ அப்படி யாருமே நடந்து போவதில்லை. அட, நடந்து போய்த்தான் பாப்பமே என்று எண்ணி ஜாலியா க் கிளம்புகிறவனை, 'பைசா செலவு பண்ணப் பயந்த பய! கஞ்சம்பட்டி' யின்னு கேவலமாக் கருதுகிற, பேசுகிற, மனோபாவம் ஜனங்களிடம் ஏற்பட்டுபட்டுது!

— ஹேஹ, மனுசங்க மாறலேன்னு நான் நெனச்சது சரியில்லேன்னு ஒவ்வொரு பாயின்ட்டிலும் தோண ஆரம்பிக்குதே வேய்!

மயிலேறும் பெருமாள் பிள்ளையின் மனக்குறளி திடீர்ச் சிலிர்ப்பு பெற்றுக் கனைத்துக் கொண்டது.

'உம், நடக்கது நடக்கட்டும்!' என்று முனகினார் பிள்ளை. 'எது எது எப்படி எப்படி நடக்க வேண்டுமோ, அது அது அப்படி அப்படி நடந்தே தீரும். காலத்தின் நியதி அது' என்றது அவர் மனம்.

## 5

மயிலேறும்பெருமாள் பிள்ளைக்கு, 'சொந்த ஊர்' என்பதனால் சிவபுரத்தின் மீதிருந்த பற்றுதலையும் அபிமானத்தையும்விட அதிகமான பந்தமும் பாசமும் அவ்வூரிலிருந்த வீட்டின்மேல் இருந்தது.

அவருடைய அப்பா, அம்மாவின் தூண்டுதல்மேல், கட்டிப்போட்ட வீடு. அம்மா ஆசையோடு அதைப் போற்றிப் பேசி வந்ததனால், அவருக்கு அந்த வீட்டின்மீது சகோதர பாசத்துக்கு இணையான ஒரு பிரியம் ஏற்பட்டு வளர்ந்து வந்தது.

மயிலேறும்பெருமாள் அதை வெறும் வீடாகக் கருதியதே இல்லை. தன்னுடைய 'உடன்பிறப்பு' என்றே மதித்தார். அதன் ஒவ்வொரு பகுதிமீதும் அவருக்கு அன்பும் பிடிப்பும் வளர்ந்துகொண்டே இருந்தன.

அந்த வீட்டின்பேரில் இருந்த பற்றுதலுக்கு இணையான ஈடுபாடு, அவருக்கு அப்பா வாங்கி வைத்திருந்த வயல்கள்மீது ஏற்பட்டதில்லை. வயல்களை உழவன் ஒருவனிடம் 'கட்டுக் குத்தகைக்கு' விட்டிருந்தார். 'பூவுக்கு இத்தனை கோட்டை நெல்' என்று ஆறு மாதங்களுக்கு ஒருதடவை நெல் ஒழுங்காக வந்துகொண்டிருந்தது. அதனால் அவர் வயல்கள்மீது அதிக அக்கறை கொள்ளவேண்டிய அவசியம் இல்லாமலலே போய்விட்டது.

ஆனல், வீட்டு விஷயம் அப்படி இல்லையே! அதன் கூடவே அவர் இருந்தார். அவருடைய ஒரு அங்கம்போலவே அது இருந்தது. அவரது முப்பதாவது வயது வரையில்.

மயிலேறுவின் அப்பா, ஐயாப்பிள்ளை என்கிற நல்லகண்ணுப்பிள்ளை, மத்தியதர வர்க்கத்துப் பிரமுகர்கள் பலரையும் போலவே, எதுவும் செய்யாமலே நாளோட்டி, உடம்பிலே பிடிக்காமல் வாழ்ந்து, ஒருநாள் மண்டையைப் போட்டார். அப்போது மயிலேறுவுக்குப் பதினைந்து வயது. 'வீராவரம் பள்ளிக்கூடத்தில்' படித்துக்கொண்டிருந்தான்.

'தாலியறுத்தால் பொம்பிளைக்கு தாசில் உத்தியோகம் வந்தமாதிரி' என்ற அந்த வட்டாரத்துப் பெண்கள் அந்தக் காலத்தில் பேசுவது உண்டு. புருஷனுக்கு அடங்கி, கஷ்டப்பட்டு, இருந்ததுபோய், சுதந்திரமாய் காரியங்கள் செய்யும் உரிமை அவளுக்கு வந்துவிடுகிறது என்பதனுலும் இருக்கலாம். புருஷன் செத்தபிறகு, தான் நினைத்த மூப்பாக 'ஸர்க்கோடு போகலாம்'—ஊர்சுற்றி, கோயில் குளம், உற்ருர் உறவினர் வீடு என்று அலையலாம்—என்பதாலும் இருக்கலாம்.

அது எப்படி இருந்தாலும், வேப்பமரத்து வீட்டுக் காமாட்சி அம்மாள் அந்த உரிமைகளை பயன்படுத்திக்கொள்ளும் ஆசை அற்றவளாகவே காணப்பட்டாள். வீடு—வீடு என்றே 'உயிரைக் கொடுத்தாள்'.

'ஏளா காமாச்சி! இன்னமே இவ்வளவு பெரிய வீடு உனக்கு என்னத்துக்கு? நீயும் உன் மகனும்தானே? ரெண்டு பேருக்கு ஒரு அடுப்படியும் அதை ஒட்டினுப்லே இருக்கிற கட்டும்தான் போதுமே. மீதி இடத்தை வாடகைக்கு விடேன். மாசாமாசம் ரூபா கிடைக்கும்லா' என்று அவளுக்கு வேண்டிய 'பர்வதத் தக்கா' (பர்வதம் + அக்கா) பன்னிப் பன்னிப் பேசினுள்.

உங் கண்ணிலே கொள்ளி வய்க்கோ; உந்நாக்கைச் சுட்டுப் பொசுக்கோ என்று 'காமாட்சி' மனசுக்குள் கருவிக் கொண்டபோதே, தேன் கசியும் நாவினுல் அன்பாகச்

சொன்னுள் : 'அது சரிப்படாதக்கா. வாடகையின்னு அஞ்சு, பத்து வந்து என்ன நெறையப்போகுது ! என்னைத்தான் உனக்குத் தெரியுமே. யாரு நாத்தமும் எனக்கு ஆகாது.. அவொ கட்டிப்போட்ட வீட்டை, பெருக்கி மொழுகி சுத்தமா வச்சிருக்கதைவிட எனக்கு வேற வேலை என்ன இருக்கு? இதுவும் இல்லேன்னு தின்னுட்டுத் தின்னுட்டு கிடபூதம் மாதிரிக் கிடந்து தூங்குவேன். அது எதுக்கு'.

உம் பவிசு குலையோ ! வெள்ளூரிலே நீ கிடந்த கெடப்பு எனக்குத் தெரியாதாக்கும் என்று பர்வதத்தக்கா எண்ணிக் கொண்டபோதே, 'அது சரிதான். இல்லே, வாடகைக்குக் கண்டா விடுவையோன்னு கேட்டேன். நல்ல ஆளாப்பார்த்து வைக்குனுமில்லா. நம்ம காடுவெட்டியா தம்பி பொண்டாட்டி மாருந்தைக்காரி இருக்காள்ளா, அவ தனக்கு ஒரு வீடு வேணும், இருந்தா பார்த்துச் சொல்லக்காண்ணு; அவ வந்தா உனக்கும் துணையா இருக்கும்லா. நீ பகல்லே தனியா இருக்கே. வாயுக்குத்துச்சு, வயித்தை வலிச்சுது, மண்டையிடி காய்ச்சல்னு வந்துதுன்னு சொன்ன, கூடவே ஒருத்தி இருந்தா உதவிதானேன்னு நெனைச்சேன்' என்று நீட்டி நீட்டிப் பேசினுள்.

நீ பொட்டுப் பொடுக்குன்னு போக ! உனக்கு வாந்தி பேதி வர ! நீ நாசமாப் போக ! என்று மற்றவள் மனசார வசைபாடியபோதே, ஊம். 'ஊருக்கெல்லாம் துணை இருக்கிற உலகம்மா எனக்கும் துணையிருப்பாள்' என்று தேவி பராசக்தி மீது பாரத்தைப் போட்டு, பேச்சை முடித்துவிட்டாள்.

அப்புறம் மகனிடம் இதை விரிவாகவே சொன்னுள்—தன் மன ஓட்டங்களுக்கும் ஒலிவடிவம் கொடுத்து.

மயிலேறும்பெருமாள் சிறுவயது முதலே தன் அம்மையை 'கொண்டிருந்தான்'. அவளுடைய ஆசாபாசங்களும் உணர்ச்சிகளும் அவனுள்ளும் பிரதிபலித்து வளர்ந்தன. தனது அம்மாவுக்காக அப்பா கட்டிமுடித்த அந்த வீடு, தனக்காகவே உருவானது என்ற நினைப்பு, அதனிடம் அளவுக்கு அதிகமான ஈடுபாடு கொள்ளும்படிச் செய்தது அவனை.

அவன் அம்மா சாகும்வரை அந்த வீட்டைவிட்டு வெளிக் கிளம்பவில்லை. இந்த வீட்டுக்கு அதைச் செய்யணும் இதைச் செய்யணும் என்று ஏதாவது சீர்திருத்தம் செப்பனிடுதல், மேல்பூச்சு, போனது வந்ததை சரிப்படுத்தல் போன்றவற்றை சுட்டிக்காட்டியவாறு இருப்பாள். அதை செய்து முடித்தால் தான் அவளுக்கு உறக்கம் வரும்.

அவள் மகன் மயிலேறு பத்தாவது பாஸ்பண்ணி முடித் ததும் வீட்டோடு இருந்துவிட்டான். அது அவளுக்கு ஒரு குறையாகத் தோன்றவில்லை. 'அவன் எதுக்குங்கேன் இன் னொருத்தன்கிட்டே கைகட்டிச் சேவகம் பண்ணணும்? அவொ கட்டிப் போட்டிருக்கிற வீட்டைப் பேணி, நிலத்தை யும் கவனிச்சுக்கிட்டிருந்தா எங்க வேலாயுதம் சோத்தை நாயும் தின்னு பேயும் விளையாடுமே! அவன் ஒண்ணும் வேலை தேடி அலையவேண்டாம். வீட்டையும் நிலத்தையும் கவனிக் கவும் ஆளு வேணுமில்லா!' என்றே சொல்லிவந்தாள். மகனி டம் மட்டற்ற பெருமை அவளுக்கு.

அவனுக்குப் பதினேழு வயசானதுமே, ஒரு கல்யாணத் தைப் பண்ணி வைத்துவிடவேண்டும் என்று அவள் ஆசைப்பட்டாள். 'ஒத்தை ஒருத்தன். நாத்தனாருக பிச்சுப் பிடுங்கல் இல்லை, வீடு இருக்கு. போதுமான நிலமும் இருக்கு- வேலை பார்க்கட்டா என்ன? நம்ம பொண்ணு போற அதிர்ஷ் டம், நல்லா விளைஞ்சு, இன்னும் வயலுக வாங்கினா, செயம் செயமின்னு போட்டடிச்சிட்டுப்போறு' என்று நினைத்து, பெண்ணைப் பெற்ற மகராசிகள் அவளை அணுகியபோது, அவள் பேசிய ரேட்டுகள் அவர்களை பின்வாங்க வைத்தன. இத்தனை ஆயிரத்துக்கு நகை போடணும்; இத்தனை ஆயிரம் ரொக்கமாக் கையிலே தரணும்; கல்யாணத்தை உங்க செல விலே முடிச்சுவிடணும்; கல்யாணத்தின்போது செய்ய வேண்டிய சீர்செனத்திகள், 'நாலாம் நிர். சடங்கு' போது தரவேண்டிய வெள்ளி வெண்கலப் பாத்திரங்கள், அப்புறம் 'தலைப்பொங்கல்படி'க்கு என்றெல்லாம் காமாட்சி 'கறார் கண் டிப்பாக' பட்டியல் போடவும், வெள்ளுரா பேராசைக்காரி

என்ற மதிப்பீடு பெண்ணைப் பெற்று கல்யாணம் பண்ணிக் கொடுக்கத் தவிக்கும் புண்ணியவாட்டிகள் மத்தியிலே பரவி யது. போகப்போக, 'வெள்ளுரா பொல்லாதவ, அவ மகன் ஒரு அம்மாப்பிள்ளை. அவ சொல்படிதான் ஆடுவான். நாளைக்கு நம்ம பொண்ணு அங்கே போய் கண்ணை கசக்கிக் கிட்டு நிக்கப்படாது' என்று திருமகள்களைப் பெற்ற பெரு மகளிர் பேச்சுகளைப் பரவவிட்டனர்.

அதனால் என்ன ஆயிற்று? 'காமாட்சி அம்மாளை' தேடி வருவோர் எண்ணிக்கை குறைந்து குறைந்து, ஒருவருமிலர் என்ற நிலை வந்தது. 'பையனுக்கென்ன வயசா ஆயிட்டுது? அவனுக்கு இனிமேலா பொண்ணு பொறக்கப்போரு? எங்கே யாவது ஒருத்தி பொறந்துதானே இருப்பா? வியாழநோக்கு வந்தா, தானு பொண்ணு வீட்டுக்காரங்க தேடிவந்து கல்யா ணத்தை முடிச்சு வைப்பாங்க' என்று பேசிப்பேசி மகிழ்ந்து போனுள் அவள்.

பையனுக்கு இருபத்திரண்டு வயது ஆனதும் அவளுக்குக் கவலை பிடித்துவிட்டது. இவனுக்கு எப்ப கல்யாணம் நடக்கும்? இந்த வீட்டிலே இவனுக்குக் கல்யாணத்தை நடத்தி நம்ம கண்ணுலே பார்க்கமுடியாமப் போயிருமோ? இந்த வீட்டிலே பேரன் பேத்திக விளையாடுற நாளுக வராமலே போயிருமோ? இப்படி பல உளைச்சல்கள்.

அதனால் சோதிடர்களுக்கும், குறிகாரர்களுக்கும், கோடாங் கிகளுக்கும் அந்த வீட்டில் நல்ல வரவேற்பு கிடைக்கலாயிற்று. அந்த இனத்தினர் என்ன உளறினுலும் அது வேதவாக்கு ஆக மதிக்கப்பட்டது.

காமாட்சி அம்மாள் ஏகப்பட்ட கோயில்களுக்குத் தாராள மாகச் செய்தாள். குறிகாரி, மந்திரவாதி என்று சொல்லிக் கொண்டு வந்த வீணிகளும் வீணன்களும் 'சாந்தி கழிக் கணும், தோஷம் போக்கணும்' எனக்கூறி, துணிந்து கேட் டதை எல்லாம்—துணிகள், அரிசி, பணம் எல்லாம்—தாராள மாகக் கொடுத்தாள்.

அப்படியும் மனம்போல் மங்கள காரியம் நடக்க வழியில்லை என்றானதும், அதே கவலையாக நோய்வாய்ப்பட்டாள் காமாட்சி. தனது உறவினர், தனக்குத் தெரிந்தவர்—அவரையும் இவரையும் கண்டு, நல்ல சொல் கூறி, மகனுக்குப் பெண் பார்த்துக் கல்யாணத்தை முடித்து வைக்கும்படி அவள் கேட்டுக் கொண்டாள். அவர்களுடைய முயற்சியும் பலிக்காமலே போய்விட்டது.

'எனக்கு ஒண்ணே ஒண்ணு, கண்ணே கண்ணுன்னு ஒரு மகன் இருந்தும், அவனுக்கு கல்யாண பாக்கியம் கண்டு, பிள்ளைகுட்டி எடுத்து, இந்த வீடு கலகலப்பா இருக்கிறதைக் காணக் கொடுத்து வைக்கலியே. எவள் எவளோ என்னை பழிச்சுப் பேசினதெல்லாம் சரியாயிட்டுதே!' என்ற ஏக்கம் சாகும்வரை அவளைவிட்டு விலகவில்லை.

அவள் செத்தபோது மயிலேறுவுக்கு இருபத்தைந்து வயது முடிந்திருந்தது.

அந்தப் பெரிய வீடும் அவனும் தனித்தவர் ஆயினர். அவனுக்குத் துணை அந்த வீடு; அந்த வீட்டுக்குத் துணை அவன் என்ற நிலைமை.

அவன் நிலைக்கு இரங்கி அனுதாபம் காட்டிப் பேசியவர்களின் அன்பும் பரிவும் ஒருசில நாட்களே உலவின. அதெல்லாம் வெளிப்படையான—மேம்போக்கான—அன்பும் தயையுமேயாகும்; அவர்கள் உள்ளத்தில் நாயும், பேயும், பூனையுமே குடிகொண்டிருக்கும்; அவனை மட்டுமல்லாது, தங்களையும் தங்கள் மனைவி மக்களையும் தவிர்த்த இதரர்களை எல்லாம், முக்கியமாக அந்த ஊர்காரர்களை, கடித்துக் குதறிக் கவ்வி உதறிச் சின்னபின்னப்படுத்தவே அவர்களது உணர்வுகள் எப்பவும் தயாராக இருக்கும் என்பது அவனுக்கும் தெரிந்த விஷயம்தான். ஒரேநாளின் பெரும்பகுதிப் பொழுதுகளிலும் முச்சந்தியிலும் கோயில் வாசலிலும், ஒரு பெரிய வீட்டுத் திண்ணையிலும் ஆலமரத்தடியிலும், அமர்ந்து ஊர்க்கதை, நாட்டுக்கதை என்ற பேரில் எல்லோரையும் பற்றி வம்பு பேசி—

உள்ளது இல்லாதது, நல்லது பொல்லாதது பலவற்றையும் சூடாகவும் சுவையாகவும் கதைத்து—நாளோட்டுவதையே வாழ்க்கையாகக் கொண்டுவிட்டவர்களில் அவனும் ஒருவனாகக் கலந்து பழகியவன்தானே!

ஆகவே, அவன் 'தான் உண்டு, தன் வீடு உண்டு, அது சம்பந்தமான வேலைகள் உண்டு' என்று ஒதுங்கிப் பிழைக்க ஆசைப்பட்டான். அவனுடைய கூச்ச சுபாவமும், நாலு பேரோடு சரிநிகர் சமானமாக வாயடி அடித்துப் போட்டி போட்டு முண்டி முரண்டி முன்னேற ஆசைப்படாத போக்கும், நத்தைக்கு கூடு அமைந்த மாதிரி, அவனுக்கு ஏற்ற கவசமாகிவிட்டன. ஒத்த வயசுப் பிள்ளையாண்டான்கள்—உல்லாச 'மைனர்'கள்—ஒண்டிக்கட்டைகள் பலரையும் போல் அவன் 'பொம்பிளை ஏக்கம்' கொண்டு திரியவும் இல்லை.

அவன் சில சமயங்களில் பொழுது போக்குவதற்காகக் கூடிய நண்பர்கள் குழாத்தில், திருநெல்வேலி 'மாடத்தெரு', கனகராய முடுக்குத் தெரு, சொக்கலிங்க முடுக்குத் தெரு போன்ற, காசுக்குப் பெண் இன்பம் கிடைக்கக்கூடிய வட்டாரங்கள் பற்றிய சுவாரஸ்யப் பேச்சுகள் அடிபடும். அங்குள்ள 'சரக்கு'கள் பற்றியும், 'அது'கள் தந்த ரசானுபவம் குறித்தும் மனநாக்கு சப்புக் கொட்டும்படியான வர்ணிப்புகளைச் சுவையாக உலுப்பும் நபர்களும் இருந்தார்கள். அங்கே விவரம் தெரியாமல் போய் மாட்டிக்கொண்டவர்கள், சிலர் பெற்ற சீக்குகள் பற்றியும் கதைகதையாய் சொல்வார்கள். 'மஞ்சு தோய் மாடவீதி' என்று கவி அழகாகச் சொன்னானே, அது இந்த மாடவீதிக்கும் பொருந்தும். மேகங்கள் தொட்டுத் தவழும்படியான உயர் கட்டிடங்களைக் கொண்ட மாடவீதி என்பது கவிவாக்கு! இங்கோ? மேகநோய் படிந்த விலைமகளிரைக் கொண்ட மாடவீதி என்றுகும். ஆகா, இந்த சிலேடை நயம் எவ்வாறு அமைந்துள்ளது என்று பாருங்கள்!—இப்படி ஒரு ரசிகர் தமது தமிழறிவையும் அனுபவ ஞானத்தையும் வெளிப்படுத்திக் கலகலப்பு ஏற்படுத்தினர் ஒரு சமயம்.

வாலிப மயிலேறு இதை எல்லாம் ரசிக்கத்தான் செய்தான் என்ருலும், காசுக்குப் பெண் இன்பம் தர அந்தி வேளையிலே பூத்து நின்று சைகைகள் செய்யும் மோகினிகளை நாடிப் போக அவன் துணிந்ததில்லை. அவனுக்கு உள்ளூற இருந்த ஒருவித பயமே காரணம்.

உள்ளூரிலேயே தங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளக்கூடிய திறமையாளர்களும், அவர்களது அரிப்புக்கு ஈடு கொடுக்கக்கூடிய பொம்பிளைகளும் இருக்கத்தான் செய்தார்கள். வீட்டோடு இருக்கும் குல மகளிரை மட்டுமல்லாது, வயல்களில் வேலை செய்யும் உழத்தியரை, தோட்டக்காடுகளில் ஏதாவது அலுவல் புரிந்து திரியும் 'சில்லரை சாதிப் பெண்'களை, வாசல் பெருக்கி வீட்டு வேலைகள் செய்யவரும் வேலைக்காரிகளை எல்லாம் தாஜா செய்து 'தரும காரியங்களை' தந்திரமாக முடித்துக்கொண்டு நல்லவர்போல் வாழும் சாமர்த்தியசாலிகளும் இருந்தார்கள். அவர்களைப் பற்றிய பேச்சுக்கள் உள்ளூர் பிரமுகர்களின் மகாசபையில் அடிபடாமலுமில்லை.

'ஊர் உலகத்தின் போக்கு' இவ்வாறெல்லாம் இருந்த போதிலும் கூட, இளவயது மயிலேறு 'உலகத்தோடு ஒட்ட ஒழுகல்' கல்லாதவனுகவே வளர்ந்தான். அவனுடைய உள்ளுறை பண்புகளும் பயங்களுமே அவனுக்குப் போதிய பாதுகாப்புகளாக அமைந்திருந்தன.

ஆகவே, தனித்து ஒதுங்கி வாழ அவனுக்கு அந்த வீடுதான் எல்லாமாக இருந்தது. அவனுடைய அன்பு, ஆசை, அபிமானம் அனைத்துக்கும் ஈடு கொடுக்கக்கூடிய பிரியப் பொருளாகவும் இருந்துவிட்டது அது.

வீட்டை சுத்தமாக வைத்திருப்பதில் அவனது பொழுதில் கணிசமான பகுதி கழியும். அடிக்கடி, அந்த அறையில் இருப்பதை எடுத்து இந்த அறையில் அடுக்குவது, இந்த அறையில் கிடந்ததை எடுத்து இன்னெரு அறையில் போடுவது என்ற தன்மையில் அவன் தனது தனிமைச் சலிப்பைப் போக்கடிக்க ஏதேனும் வேலை ஏற்படுத்திக்கொள்வான்.

வீட்டுக்கு வெள்ளை அடிக்கும் ஸீசனில் அவனுக்கு ஏக குஷிதான்.

அவனே வீடு பூராவும் வெள்ளை அடித்து முடிப்பான். திருநெல்வேலிக்குப் போய் சுண்ணும்பு வாங்கிவருவது, வெள்ளை அடிக்கும் மட்டைகளை வருஷா வருஷம் புதுசாக வாங்கிவருவது, சுண்ணும்பு 'காய்ச்சி' பெரிய பானையில் வைப்பது—இதில் எல்லாம் மிகுந்த ஆர்வம் காட்டுவான். பிறகு, ஒவ்வொரு சுவராகப் பார்த்துப் பார்த்து, நிதானமாக வெள்ளை அடித்து, அறைகள் புதுச்சுண்ணும்பினுல் பளீரிட்டதும், ரசித்து மகிழ்வான். 'வீட்டுக்கு சுண்ணும்பு அடித்த பிறகு அதன் அழகு கூடத்தான் செய்யுது. பார்க்க லெச்சணமாக இருக்கு!' என்று வாய்விட்டுச் சொல்லிக் களிப்படைவான்.

அந்த ஊரில் சில வீடுகளில், சில அறைகளில் சிவப்புக் காவி அடித்திருந்தார்கள். சிலர் சுவர்களுக்கு நீலம் பூசியிருந்தார்கள். அதனுல் மயிலேறுவும் ஒரு வருஷம் தன் வீட்டின் அறையின் சுவர்களுக்குக் காவிப் பூசிப்பார்த்தான். அது எடுப்பாக இல்லை. அடுத்த தடவை நீலம் அடித்தான். அதுவும் அவனுக்குப் பிடிக்கவில்லை. எனவே மீண்டும் 'கொழுக்கக் கொழுக்க' சுண்ணும்புத் தண்ணீரை அடித்து சுவர்களை வெள்ளை வெளேராக்கினுன். ஆகா, வீட்டுச் சுவர்களுக்கு எடுத்தது வெள்ளைதான் என்று அகம் மகிழ்ந்தான்.

இரண்டு வருஷங்களுக்கு ஒருதடவை, மோட்டுக் கட்டைகளுக்கெல்லாம் பெயின்ட், அல்லது வெறும் வார்னிஷ் வாங்கித் தடவுவதில் அவன் உற்சாகம் கண்டான். சன்னல்களுக்கும் பச்சை அல்லது நீலம் என்று மாற்றி மாற்றி வர்ணம் பூசுவதில் அவனுக்கு ஒரு சந்தோஷமும் பெருமையும் ஏற்பட்டது.

வீட்டை இவ்வளவு கருத்தாகப் பேணிப் பாதுகாத்த மயிலேறுவுக்கு, ஒரு பெண்ணை கல்யாணம் பண்ணிக்கொண்டு

இந்த வீட்டில் குடியும் குடித்தனமுமாக வாழவேண்டும் என்ற ஆசை ஏனோ எழவில்லை.

சிலர் 'என்னடே, உனக்கு எப்ப கல்யாணம்?' என்றோ, 'எங்களுக்கெல்லாம் எப்ப சோறு போடப்போறே?' என்றோ கேட்பது உண்டு. அவர்களிடம் 'என்ன கல்யாணம் வேண்டிக்கிடக்கு!' என்றும், 'கல்யாணம் பண்ணிக்கிட்டவங்க எல்லாம் என்ன சிறப்பெடுத்திட்டாங்க; கல்யாணம் பண்ணுமல் இருக்கிற நான் என்ன குறைஞ்சு போனேன்?' என்றும் அலுப்பாகவும், சுரத்தில்லாமலும் பேசிவிடுவான்.

ஆணையும் பெண்ணையும் கல்யாணம் என்று சேர்த்து வைப்பதை சுயலாபம் தரக்கூடிய ஒரு தரகு வியாபாரமாக எண்ணி, வெற்றிகரமாக முடித்து வைப்பதை பிசினஸாக நடத்தி வாழ்ந்த சமூகப் பெரியார்கள் சிலபேர்கள், மயிலேறுவையும் நச்சரிக்காமல் விடவில்லை. 'என்னப்பா மயிலேறு, எப்படிப்பட்ட பொண்ணு வேணும், சொல்லு. உனக்குத் தேவையான பொண்ணை நாங்க பார்த்துக் கொண்டாரோம்' என்று முற்றுகையிட்டார்கள்.

'எனக்கு எந்தப் பெண்ணும் வேண்டாம். எந்தமாதிரிப் பெண்ணோடவும் என்னுலே ஒத்துப்போக முடியும்னு எனக்குத் தோண லே. ஒவ்வொரு குடும்பத்திலேயும் நடக்கிறதைத்தான் நான் பார்க்கேனே. கல்யாணம்னு ஆசைப்பட்டு எவளை யாவது தாலியைக்கட்டி அழைத்துக்கொண்டு வர, அவ வாழ்நாள் பூராவும் நம்மை கழுத்தறுத்து வதைபண்ண — அதுல்லாம் என்னத்துக்கு? இப்படியே நிம்மதியா இருக்கிறதை விட்டுப்போட்டு! என்னவோ சொல்லுவாகளே, வெளியிலே இருக்கிற ஓணானை எடுத்து மடியிலே வச்சுக் கட்டுவானேன்? அப்புறம் அது குத்துது, குடையுது, கடிக்குதுஇன்னு சங்கடப்படுவானேன்? வெறும் சீண்ட்ரம் புடிச்ச எழவு! அந்தப் பேச்சையே என்கிட்டே எடுக்காதீங்க' என்று சொல்லி முறித்துவிட்டான்.

'இவன் என்னடா இவன்! கல்யாணப் பேச்சை எடுத்தால் எழவை இழுத்துவச்சு அழுதான்! இவனுக்கு புத்தி சரி

யில்லேன்னு தான் சொல்லணும். சவம் எக்கேடும் கெடட்டும்' என்று சமூகப் பெரியவர்களும் ஒதுங்கி விட்டார்கள்.

'சேலை கட்டிய மரப்பாச்சி'யை கொண்டுவந்து வீட்டுக் காரி ஆக்கி, வீட்டின் அமைதியையும் தனது வாழ்நாளையும் சீர்குலைத்துக்கொள்ள ஆசைப்படாத மயிலேறும் பெருமாள் தனக்குத் தேவையான உணவுகளைத் தானே தயாரிக்கக் கற்றுத்தேர்ந்தான். தண்ணீர் எடுத்துவர, வீடு பெருக்க மெழுக, தோசைக்கு அரைக்க, பாத்திரங்கள் கழுவ என்று 'அரையேரைக்கால் கிழவியான' ஒரு அம்மாளை ஏற்பாடு செய்திருந்தான்.

முப்பது வயது வரை சிவபுரத்தில் அவன் வாழ்க்கை நிம்மதியாக நடந்துகொண்டு தானிருந்தது. அவனே எதிர் பாராத ஒரு திடீர் நிகழ்ச்சி அவனது வாழ்க்கையை அடியோடு மாற்றி அமைக்கும் அஸ்திவாரம் ஆயிற்று. அவன் அந்த ஊரை விட்டே வெளியேற நேர்ந்தது.

அப்படிப் போவதற்கு முன்னால், அவனுடைய அம்மா 'நாரம்பு மாமா—நாரம்பு மாமா' என்று அவனுக்கு அறிமுகப் படுத்தி, ஓரளவு அன்புகாட்டும்படி பழக்கியிருந்த நாறும்பூநாத பிள்ளையிடம் வீட்டை கவனித்துக் கொள்ளுமாறும், வயல்களை 'மேல்பார்த்து' ஆவன செய்யும்படி அவன் கேட்டுக்கொண் டான். 'என்ன செய்யப்போறே? எங்கே போகப் போறே? யாரை பார்ப்பே? உனக்கு யாரை தெரியும்?' என்று தூண்டித் துருவி விசாரித்த அவர்தான், அவனுக்கு ஒரு வழியும் காட்டினார்.

'மதுரைக்குப் போ. அங்கே எனக்கு வேண்டியவர் ஒருத்தர் வெள்ளிக்கடை வச்சிருக்காரு. நல்ல வியாபாரம். நான் சொன்னால் தட்டமாட்டாரு. நீ அவரிடம் போய் சேரு. உனக்கு ஒரு வேலை போட்டுக் கொடுக்கும்படி நான் காயிதம் எழுதித் தாறேன்' என்றார். அப்படியே செய்தார்.

பையனைப் பற்றியும், பையனின் குடும்ப உயர்வுபற்றியும், அவனது குண நலன்கள் பற்றியும் விவரமாக எழுதி, 'தாய்

தந்தை இல்லாத இவனை முன்னுக்குக் கொண்டுவர வேண்டியது உங்கள் பொறுப்பு. உங்கள் கடையிலேயே இவனுக்கு ஒரு வேலை போட்டுக் கொடுத்து, இவனை ஆளாக்கி விடும்படி கேட்டுக்கொள்கிறேன். முருகப் பெருமான் உங்களுக்கு நல்லதே செய்வான்' என்று கோரியிருந்தார்.

மயிலேறும் பெருமாள் இரவோடு இரவாக ஊரை விட்டு வெளியேறினான். அந்நாட்களில் 'தாழையூத்து கெடி'க்கு ராத்திரி பன்னிரண்டரை மணிக்கு 'வடக்கே போற வண்டி' வந்து கொண்டிருந்தது. அது அவனுக்குச் சௌகரியமாக இருந்தது.

அந்த ஊரையும் அங்கு 'கிணற்றுத் தவளை'களாகவும் 'கடுகு உள்ளத்தவர்'களாகவும் காலம் கழித்துக்கொண்டிருந் தவர்களையும் விட்டுப் போவதில் அவன் மனம் கலங்கவில்லை. 'அருமையான வீட்டைவிட்டுப் போறமே!' என்ற ஏக்கம் தான் அவன் இதயத்தில் கனத்தது; வலி உண்டாக்கியது; தொண்டையை அடைத்துத் துயரப்படுத்தியது; கண்ணீர் சிந்தச் செய்தது.

சிவபுரத்தின் 'மயிலுப்பய' மயிலேறும் பெருமாள் பிள்ளை ஆகி, மீனாட்சியின் மாப்பிள்ளை ஆகி, சொக்கலிங்கம் என்ற புத்திர பாக்கியத்தின் தந்தை ஆகி, பெரிய மனிதத்தோரணை கள் பெறுவதற்கு மதுரை வகை செய்தது. நாறும் பூநாத பிள்ளை கைகாட்டிவிட, அவன்போய் சேரவும் அவனுக்குக் கைகொடுத்து உதவிய கணபதியா பிள்ளை மயிலேறுவை வாழ வைத்தார்.

அவரது 'வேல்முருக விலாசம் வெள்ளி பாத்திரக் கடை' யில் முதலில் அவனுக்கு சிறு வேலை ஒன்று போட்டுக்கொடுத் தார். பிறகு, பையனின் சுறுசுறுப்பையும் அறிவையும் கவனித்து, கணக்கெழுதும் வேலை தந்தார். நாளடைவில் 'கடைக் கணக்குப் பிள்ளை' என்ற மதிப்பு மயிலேறுவுக்குக் கிடைத்தது. நல்ல சம்பளமும் வந்தது.

'மதுரை மாதிரிப் பெரிய டவுணிலே இப்படி தனியா வாழ்றது ஆபத்து' என்று சொல்லி, கணபதியா பிள்ளையே அவருக்கு தூரத்து உறவான—வசதி இல்லாமல் சிரமப்பட்டுக் கொண்டிருந்த—ஒரு அம்மாளின் மகள் மீனாட்சியை மயிலேறுக்குக் கல்யாணம் முடித்து, தனக்குச் சொந்தமான ஒரு சிறு வீட்டில் குடியிருக்கச் செய்தார். அவனுடைய கல்யாணத்துக்கு சிவபுரத்திலிருந்து நாறும்பூநாத பிள்ளையும் வந்திருந்தார்..

'உன் வீடு பத்திரமாயிருக்கு. வருசம் தோறும் வெள்ளையடிப்புக்குக் குறைவில்லை. நெல்லு வித்த பணத்தை பாங்கியிலே போட்டு வச்சிருக்கேன். உனக்கு வருங்காலத்திலே நல்லபடியா அது உதவும்' என்று அவர் சொன்னார்.

அவனை வாழ்த்திவிட்டு, கணபதியாபிள்ளையிடம் 'இவனை இன்னும் நல்ல நிலைமைக்குக் கொண்டுவர வேண்டியது உங்க பொறுப்பு' என்று சொல்லி, விடை பெற்று வந்தார்.

பணம் கொஞ்சம் கணிசமாகச் சேர்ந்ததும் அதை 'வெள்ளிக்கடையிலே முடக்கும்படி' நாரம்பு மாமா கணபதியா பிள்ளைக்கு அனுப்பிவைத்தார். இப்படி சிறுகச் சிறுகப் பணம் போட்டு, மயிலேறும் பெருமாள்பிள்ளை 'வேல்முருக விலாசம் வெள்ளிபாத்திரக் கடை'யில் ஒரு பங்குதாரராகிவிடக் காலம் துணைபுரிந்தது.

கால ஓட்டம் எவ்வளவோ மாறுதல்களை கொண்டு சேர்த்தது. கணபதியாபிள்ளை பக்கவாத நோயினால் படுத்த படுக்கையானார். கடையை கவனிக்க அவரிடம் மகன்கள் இல்லை. அவருக்கு இரண்டு மகள்கள்தான். இரண்டும் சிறுசுகள். 'கடையை நீரே எடுத்து நடத்த முடியும்னா நடத்தும். இல்லேன்னாக்க, வித்துபோடுவோம். நீரு நடத்துறதாயிருந்தா, எனக்கு இவ்வளவு ரூபா தந்தால் போதும்' என்று கணபதியா பிள்ளை மனா. பெனா.விடம் சொன்னார்.

கணக்குப்பிள்ளை ஆனதுமே மயிலேறு 'மனா. பெனா.' ஆகியிருந்தார்.

கணபதியா பிள்ளை குறிப்பிட்டது மறு, பெறு.வுக்கு 'பெரிய தொகை'யாகத்தான் இருந்தது. சிறிது மலைத்தார். எனினும் எப்படியாவது பணம் புரட்டி, 'வேல்முருக விலாசம்' எனப் பெயர் பொருத்தம் மிகுதியாக உடைய கடையை தனக்கு சொந்தமாக்கிவிட வேண்டியதுதான் என்று அவர் மனம் தீர்மானித்தது.

மீனுட்சியிடம் இதை சொல்லி, அவள் கழுத்திலே கிடந்த நகைகளை அவர் கேட்டபோது அவள் தயங்கினுள். 'ஊரிலே பெரிய வீடு கிடக்குதுங்கிறீகளே. அதை வித்துப் பணம் அனுப்பும்படி எழுதுங்களேன்' என்ருள். அப்போதே அவள் மீது மயிலேறும் பெருமாளுக்கு ஒரு கசப்பு பிறந்துவிட்டது. பிறகு அவள் நகைகளை கழட்டிக் கொடுத்தாலும்கூட, 'அப்படி ஒரு வார்த்தை சொன்னதுக்காக' அவர் மனம் தன் மனை வியை மன்னிக்கவே இல்லை.

நாரம்பு மாமாவுக்கு எழுதி, 'வயல்மீது பணம் புரட்டி', நிலைமையை சமாளித்துவிட்டார் மறு. பெறு. 'வேல்முருக விலாசம் வெள்ளி பாத்திரக்கடை. புரொப்ரைட்டர்: மயி லேறும் பெருமாள்பிள்ளை' என்ற புதிய போர்டு கடையில் மாட்டப்பெற்ற அன்று அவர் அடைந்த பெருமைக்கு அளவே கிடையாது.

நாறும்பூநாத பிள்ளை 'சிவலோக பதவி' அடைய நேரிட் டது. அதற்கு முன்னதாகவே அவர் தன்மகன் நெல்லையா என்கிற பிறவிப் பெருமாளை, 'மற்றவர் நிலங்களை மேல் பார்வை பார்க்க'வும், அதன்மூலம் தனது வாழ்க்கை வசதி களை தேடிக்கொள்ளும் திறமையை வளர்க்கவும் தயார்படுத்தி விட்டிருந்தார். ஆகவே, மறு. பெறு.வின் நிலங்கள், வீடு பற்றிய கவலை தலைதூக்குவதற்கு இடமே இல்லாது போயிற்று.

பிறவிப் பெருமாள் அப்பாவைவிடச் சாமர்த்தியமாகவே 'மேல் பார்க்கும்' பிசினஸை நடத்திவந்தான். அவனுக்கும் கொஞ்சம் நிலமும் வீடும் இருந்தது. சிவகாமி மனைவியாக வாய்த்திருந்தாள். காலப்போக்கில் 'அவன்' 'அவர்' ஆகி, ஊரில் பெரிய மனிதத்தன்மையும் பெறமுடிந்தது.

மயிலேறும் பெருமாள் பிள்ளை நிலங்களைப்பற்றி ஏதோ தானோ என்று எழுதினாலும், ஒவ்வொரு கடிதத்திலும் வீட்டைப் பற்றி அதிக அக்கறையோடு குறிப்பிடத் தவறமாட்டார். 'வீட்டை கவனித்து வரவும். தினசரி ஒருதடவையாவது பெருக்கி சுத்தம் செய்யவும். பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை மெழுக ஏற்பாடு செய்யவும். வெள்ளி செவ்வாயில் அந்திவேளையில் கதவுகளை திறந்துவைத்து, கொஞ்ச நேர மாவது விளக்கு எரியும்படி கவனித்துக் கொள்ளவும்'. இது பிறவிப்பெருமாளுக்கு அவர் விடுத்திருந்த 'ஸ்டாண்டிங் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ்'. அடிக்கடி இவற்றை அவர் நினைவுபடுத் தவும் கூசுவதில்லை. இதற்கான செலவுகளை எல்லாம் வயல் வருமானத்திலிருந்து எடுத்துக்கொள்ளும்படி ம௵. பெ௵. கை காட்டியிருந்தார்.

பிறவியா பிள்ளையும் கணக்கு எழுதிவிட்டு, தயங்காமல் எடுத்துக்கொண்டிருந்தார்.

சிவபுரத்துக்கு எலெக்டிரிக் லைட் வந்தது. முதலில் சில பெரிய வீடுகளில் எலெக்ட்ரிக் விளக்குகள் எரியலாயின. இதை பிறவியாபிள்ளை ம௵. பெ௵.வுக்கு எழுதவும், தனது வீட் டிலும் வயரிங்பண்ணி, கனெக்ஷனுக்கு ஏற்பாடு செய்யும்படி அவர் தெரிவித்து, தன்னால் ஆகவேண்டியதையும் கவனித்து முடித்தார். ஒரு மாதத்திற்குள் அந்த வீட்டிலும் எலெக்ட்ரிக் லைட்டுகள் எரியலாயின.

'தினசரி மாலையில் வீட்டை திறந்துவைத்து, கால் மணி நேரமாவது எல்லா விளக்குகளையும் எரியவிடுங்கள். வெள்ளிக்கிழமை, கார்த்திகை—இதுமாதிரி நல்ல நாட்களில் பட்டாசலிலும் திண்ணையிலும் ஒருமணி நேரமாவது விளக்கு எரியட்டும். சார்ஜ் என்ன ஆயிரப்போவுது! எப்படியும் மாதாமாதம் மினிமம் சார்ஜ் கட்டத்தானே போறோம்!' என்று ம௵. பெ௵. மதுரையிலிருந்து அறிவித்தார்.

சிவபுரத்திலிருந்த பிறவிப்பெருமாள் அவர் விருப்பத்தை நிறைவேற்றி வந்தார். தானாகவே நினைத்து, சுகந்த வாசனை

உள்ள ஊதுவத்தி வாங்கி வெள்ளிக்கிழமைகளிலும், கிருத்திகை பௌர்ணமி அமாவாசை நாட்களிலும் ஏற்றிவைத்து, அந்தப் பெரிய வீட்டில் வாசம் நிலவும்படிச் செய்தார். இதை மயிலேறும் பெருமாளுக்குக் கடிதத்தில் அறிவித்தபோது அவர் மிகுந்த சந்தோஷம் அடைந்தார். பிறவியா பிள்ளையை வெகுவாகப் பாராட்டத் தவறவில்லை.

## 6

மயிலேறும் பெருமாள்பிள்ளை சிவபுரம் வீட்டுக்குத் திரும்பி வந்த முதல் இரவில் அந்த வீட்டில் உள்ள எல்லா விளக்குகளையும் விடிய விடிய எரியவிட்டார்.

அறை அறையாக இருந்த அந்தப் பெரிய வீட்டில் எலெக்ட்ரிக் விளக்குகள் எரிந்துகொண்டிருந்தது ஒளிமயமாக, அதுவே ஒரு 'தனிக் களையாக', இலங்கியது.

அவர் ஊருக்கு வரப்போவதை அறிவித்து பிறவியா பிள்ளைக்குக் கடிதம் எழுதியிருந்ததால், முன்கூட்டியே வீட்டைப் பெருக்கி மெழுகி, தூலாம்படை அடித்து, துப்புரவாக வைப்பதற்கு சௌகரியமாக இருந்தது.

மனு. பெனு.வின் ருசிகளையும் ஈடுபாடுகளையும் ஓரளவுக்கு அறிந்து வைத்திருந்ததால், பிறவியாபிள்ளை முன்யோசனையோடு ஒரு மண்பானை நிறையக் குடிதண்ணீரும் கொண்டு வைத்திருந்தார். 'வடக்கேயிருந்து வாற வண்டி பத்துமணிக்கு டேசனுக்கு வரும். அதிலே வந்து இறங்கினல், நம்ம ஊருக்கு பத்தேகால்—பத்தரை மணி சுமாருக்கு வாற காரை புடிச்சு வந்திரலாம். அந்தக் காரு வந்திட்டுப் போறவரை காத்திருக்கலாமே' என்று அவர் பெரிய வீட்டின் திண்ணையிலேயே படுத்துக்கிடந்தார்.

அது சித்திரை மாதம் ஆகையால் காற்றுட வெளித் திண்ணையில் படுத்திருப்பதே சுகமாகத்தான் இருந்தது.

அண்ணாச்சி வந்ததும், 'நீங்க ஏன் வீணுக் காத்துக்கிட்டிருக்கீங்க?' என்று உபசாரத்துக்காகச் சொன்னபோதிலும், 'கார் சத்தம்' கேட்டதுமே பிறவியாபிள்ளை கதவைத் திறந்து, திண்ணை லைட்டையும் பட்டாசல் லைட்டையும் எரியவிட்டபடி, அவர் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தது மனு. பெனு. வுக்குமன மகிழ்ச்சியே தந்தது. அதனால் 'தம்பியாபுள்ளை' பற்றிய நல்லெண்ணம் அவர் உள்ளத்தில் மேலும் கொஞ்சம் வளர்ந்தது.

சிறிது நேரத்திலேயே அவரை அவருடைய வீட்டுக்கு அனுப்பிவிட்டு, தன் வீடும் தானும் இரவும் தனிமையும் ஆயினர் மனு. பெனு. எல்லா விளக்குகளையும் எரியவிட்டும், அறை அறையாக நடந்தும், எல்லா விளக்குகளையும் அணைத்தும், பிறகு ஒவ்வொரு அறையில் மட்டும் விளக்கேற்றியும், தனது வீட்டின் தனித்தன்மையை ரசித்து அனுபவித்தார். அவர் மனம் அளவிடமுடியாத உவகைப் பெருக்கில் நீந்திக் களித்தது.

—என்னதான் சொல்லு. எங்கேதான் போ. வசதிகள் மிகுந்த பெரிய வீடுகள், பங்களாக்கள், லாட்ஜுகள் எதிலே வேணுமின்னாலும் தங்கியிருந்து பாரு. அது என்னவோ, சொந்த வீட்டிலே தனியான ஒரு சுகம் இருக்கத்தான் செய்யுது. ஒரு இதம், ஒரு மனநலம், 'சொந்த வீடு' என்று சொல்லப்படுகிற, நாம ரொம்ப காலம் இருந்து பழகிவிட்ட, வீட்டிலே கிடைக்குது. அங்கே காலடி வைத்தவுடனேயே தனி ரகமான நிம்மதியும், பாதுகாப்பு உணர்ச்சியும், ஒரு ஆனந்தமும் நமக்கு ஏற்படுது.

விடிய விடிய விளக்குகளை எரியவிட்டுக்கொண்டு தூங்காமல் அங்குமிங்கும் நடப்பதிலும், சாமான்களைப் பார்ப்பதிலும், ஹாலில் கிடந்த கட்டிலில் சும்மா உருண்டு புரளுவதிலும், 'ரெண்டாங் கட்'டில் இருந்த பெரிய—மரத்தாலான—

சாய்வு நாற்காலியில் சரிந்து கிடப்பதிலும் அவருக்கு சந்தோஷம் கிட்டியது.

— இவ்வளவு பெரிய வீட்டுக்கு எலெக்ட்ரிக் லைட்டுதான் அம்சமா, நிறைவா இருக்கு. எத்தனை அரிக்கன் லாந்தர்கள் ஏத்தி வச்சாலும் இவ்வளவு வெளிச்சம் கிடைக்குமா? அந்தக் காலத்திலே அரிக்கன் லாந்தலும், அம்மை 'குருவி விளக்கு'ன்னு சொல்லுவாளே' அப்படிப்பட்ட பெட்ரூம் லைட்டுகளும்தானே வச்சு ஒப்பேத்திறோம்? அப்போ அவைதான் சௌகரியமாத் தோணிச்சு. நிறைய வெளிச்சம் தந்த மாதிரியும் திருப்தி இருந்துது. அதுகளும் இல்லாம, குத்துவிளக்கும் கைவிளக்குகளும் வச்சு, திருப்தியாக் கழிச்ச காலமும் இருக்கத் தானே செய்தது? கடலெண்ணெய் (கடலை எண்ணெய்) அல்லது பின்னைக்கெண்ணை (புன்னைக்காய் எண்ணெய்) ஊற்றி குத்து விளக்கையும் கைவிளக்குகளையும் எரிச்சதிலே ஒரு அழகும் குளுமையும் இருக்கத்தான் செய்தது. சனங்க கண்ணும் இவ்வளவு கெடாமலிருந்தது. இப்போ சின்ன சின்ன வயசிலேயே சோடாபாட்டில் தண்டிக்குக் கண்ணாடியை மாட்டிக்கிட்டில்லா முழிக்குதுக எல்லாம்! நாப்பது வயசுக்குள்ளே கண்ணு குருடாகி, பார்வை தெரியாமலே போவுது. கண்ணாடி என்ன கண்ணாடி!...இப்ப பின்னைக்கெண்ணைக்கு என்ன, அது எப்படி இருக்கும்னு எண்ணைக் கடைக்காரனுகளே நம்மகிட்டே கேப்பான்—நாம கடைக்குப் போயி பின்னைக்கெண்ணை இருக்குதான்னு கேட்டா!

பின்னைக்கெண்ணை கிடைக்காவிட்டாலும்கூட, கடலை எண்ணெய் அல்லது நல்லெண்ணெயை ஊற்றி தினந்தோறும் குத்துவிளக்கைப் பொருத்தி வைக்கவேண்டும் என்று, பெரிய பிள்ளை அந்த இரவிலேயே தீர்மானித்து விட்டார்.

மறுநாள் முதல் வேலையாக, 'வெங்கலாத்திரப் பெட்டி' (வெண்கலப் பாத்திரப் பெட்டி)யை திறந்து பெரிய குத்து விளக்கை வெளியே எடுத்தார்.

— எவ்வளவு பெரிய பெட்டி! என்ன கனம் கனக்கு. செக்குமாதிரி. வெறும் பெட்டியே ரொம்ப கனம் கனக்கும்.

வெறும் பெட்டியைத் தூக்கி நகர்த்தி வைக்கவே மூணு ஆளு வேணும். எதுக்குத்தான் முந்திக் காலத்திலே எல்லாச் சாமான்களையும் இப்படி தடிதடியாச் செய்தாங்களோ? எந்தச் சாமானைப்பாரு. எல்லாம் செக்குமாதிரியும், குந்தாணி மாதிரியும், தண்டிதண்டியா. சாமான்கள் செய்யக்கூடிய மூலப் பொருள்கள் நிறைய, தாராளமா, மலிவாக் கிடைச்சுது என்பதனாலும் இருக்கலாம். ரொம்ப காலத்துக்கு ஈடு கொடுக்கணும், நல்லா உறுதியாய் செய்து வைப்போம் என்ற நினைப்பாலும் இருக்கலாம். எதையும் சின்ன அளவிலே, நைஸா— நகாசாச் செய்யத் தெரியாத காரணத்தாலும் இருக்கலாமே!....

வெண்கல பாத்திரங்களும் பழங்காலத்தவை. எல்லாம் பெரிசு பெரிசா, தடிதடியா. வெண்கலப்பானை, சோடுச்சட்டி, கும்பா—இப்படி எல்லாமே கல்லுக் கல்லா. இந்தக் காலத்துப் பொம்பிளைகளுக்கும் புள்ளைகளுக்கும் இதை எல்லாம் தூக்கி எடுத்துப் பொழங்குறதுக்கே உடம்பிலே சீத்துவம் கிடையாது. அந்தக் காலத்திலே மனுசங்களும் ஸ்ட்ராங்க இருந்தாங்க. அதையும் சொல்லணுமில்லே!

அவருக்கு தானுகவே சிரிப்பு பொங்கியது.

இப்படி தானுகவே ரசித்துச் சிரிக்கவேண்டிய அவசியம் —அவ்வாறு சிரிக்கும்படி தூண்டுகிற உந்துதல்—அடிக்கடி தலைகாட்டியது.

லோட்டா பெரியதாக இருந்தது. தம்ளரும் (—லெச்சணமில்லாம, சொள்ளமாடன்மாதிரி) உயரமா, பெரிசாக, விளிம்பே இல்லாமல் இருந்தது.

— கால்படி புடிக்கும். அப்போல்லாம் வீட்டுக்கு வாறவங்க இந்தத் தம்ளர் நிறைய 'நீத்தண்ணி'யை ('நீராகாரம்'— சோற்றுப் பானையில் உள்ள தண்ணீர்) மடக்மடக்குன்னு குடிச்சுப்போடுவாங்க. வாறவங்களுக்கு இது நெறைய மோரு கொடுப்பாங்க. குடிக்கத்தான். அப்போ, காபி ஏது? இப்ப இதுமாதிரித் தம்ளர்களும் இல்லே. விருந்தாளிகளினுலும் வீட்டாள்களாலும் இந்தப் பெரிய தம்ளர் முட்ட எதையும்

குடிக்கவும் இயலாது. வே, அப்படிக் குடிக்கிற சக்தி இருக்கு துன்னே வச்சுக்கிடுவோம். வாறவன் போறவனுக்கெல்லாம் இவ்வளவு பெரிய தம்ளர் முட்ட காப்பி கொடுத்துக் கட்டுப்படி யாகுமா? வீடு விட்டுப்போயிருமே வேய்! இப்போ நம்மள வங்களுக்கு கொடுக்கிற சக்தியும் குறைஞ்சு போச்சு. அதை யும் மறந்திரப்படாதுல்லே! தாராள மனசும் குறைஞ்சுக் கிட்டே வருது. இதையும் சொல்லத்தான் வேணும்.

பெரிய குத்துவிளக்கை எடுத்து—அதாவது, பூட்டு பூட் டாகக் கழற்றி வைக்கப்பட்டிருந்த விளக்குப் பகுதிகளை எடுத்து, ஒன்றுக இணைத்து—நிறுத்திவைத்து அழகுபார்த் தார்.

— ரொம்ப லெட்சணமான விளக்கு, இதே ஒரு குமரிப் பொண்ணுமாதிரி இருக்கு. பதிமூணு, பதினாலு வயசுப்புள்ளெ உசரத்துக்கு. அதாவது, நல்ல வளர்ந்த புள்ளை. இப்ப புள்ளைகள் நறுங்கிப்போயி, உயரமா வளராமல், தேவாங்கும் தெல்லாங்குஞ்சுகளுமாக அல்லவா இருக்கு! இப்போ பதி மூணு வயசுப் புள்ளைகளிலே அநேகம் இந்த விளக்கு 'வெயிட்' இருக்கவே இருக்காது...

அவருடைய அம்மா அந்த விளக்கை துடைத்துக் குளிப் பாட்டுகிற காட்சி அவர் நினைவில் எழுந்தது.

ஒரு சொளகு நிறைய உமி எடுத்துக்கொள்வாள். காலை நீட்டிக்கொண்டு உட்கார்ந்து, உமியைக் கொஞ்சம் கொஞ்ச மாக எடுத்து, விளக்கின் ஒவ்வொரு பூட்டையும் (பகுதியை யும்) தனித்தனியாக உமிக் குவியல்மீது வைத்து, தேய் தேயென்று தேய்ப்பாள். உமி நொறுங்கித் தூளாகிக் கறுப் பாகிவிடும். விளக்குப்பகுதி பளபளவென்று மிளிரும். இப்படி விளக்குப் பூராவையும் மினுமினுக்கப் பண்ணியதும், சொளகு முட்ட இருந்த உமி எதுக்கும் பயனற்ற தூசியாய், பொடி யாய், கறுப்புக் குவியலாகிப் போகும். அதை உரக்குழியில் கொட்டவேண்டியதுதான்.

விளக்கை அப்புறம் தண்ணீரில் அலம்புவாள். தண்ணீர் வடியட்டும் என்று அனைத்தையும் தனித்தனியே சுவர் ஓரத்தில் வைப்பாள். விளக்கை சாம்பல் வைத்தோ, புளி தேய்த்தோ கழுவக்கூடாது; கெட்டுப்போகும் என்று அவள் சொல்லுவாள். ரொம்ப நேரத்துக்குப்பிறகு, நல்ல துணி கொண்டு விளக்கைத் துடைத்து, பூட்டு பூட்டாக எடுத்து மாட்டி நிறுத்துவாள். குளித்து முடித்த சின்னப்பொண்ணு மாதிரி அது கண்ணுக்குக் குளுமையாக விளங்கும்.

பஞ்சை எடுத்துத் திரிதிரிப்பாள். அம்மா திரிதிரிப்பதே கலையாக இருக்கும்.

திரிகளை விளக்கில் போட்டு, எண்ணெய் ஊற்றினால், புதுப்பொலிவோடு விளங்கும் அது.

நன்றாக இருட்டுவதற்கு முன்னாடியே—'மூந்திக் கருக் கல்லே'—குத்துவிளக்கு ஏற்றப்படும். விளக்குக்கு அழகாகக் குங்குமப் பொட்டு இடப்படும். விளக்குச்சரம் அணியப்படும்.

எரிகிற குத்துவிளக்கு ஒரு புனிதத் தோற்றம். இனிய, குளுமைக்காட்சி.

—எலெக்ட்ரிக் லைட்டும் நாகரிகமும் வந்துவிட்ட பிறகு பெண்கள் குத்துவிளக்கை பொருத்திவைப்பது வீண் வேலை என்று விட்டுவிட்டாங்க. இருந்தாலும் பல குடும்பங்களில் இப்பவும் குத்துவிளக்கு ஏற்றிக் கும்பிடும் வழக்கத்தை விடாமல் அனுஷ்டிக்கிறாங்க. அந்தக் காட்சி கண்ணுக்கு நிறைவா, மனசுக்கு இதமா இருக்கு. அநேக வீடுகளிலே தினசரி பூ சாற்றுவதில்லை. பல வீடுகளிலே பேருக்கு விளக் குச்சரம் அணிவிக்கிறாங்க. இம்புட்டுப்போலே. அல்லது, அலக் அலக்கா, பூவு, இலை, பூவு என்று வச்சுக்கட்டின சரம். அதெல்லாம் அவ்வளவு நிறைவாயில்லைன்னே சொல் லணும்.

—ஒருசமயம் ஒரு வீட்டிலே பார்த்தேன். பெரிய விளக்கு தான். அதாவது சராசரி உயரமுள்ள குத்துவிளக்கு. முடியிலேயிருந்து பாதம்வரை மல்லிகைப் பூச்சரம். குண்டு

குண்டா, நெருக்கமா வச்சுக் கட்டப்பட்ட சரம், போட்டிருந்துது. பொட்டிட்டு, அப்படி பூச்சூடி, குளுமையா எரிந்து கொண்டிருந்த விளக்கை பார்க்கையிலே சிங்காரமா நிக்கிற சிறு பெண்ணை பார்க்கிற மாதிரியே இருந்துது. குளுகுளுன்னு, சந்தோஷமா இருந்துது. அந்த வீட்டிலே சாமி படங்கள் எல்லாத்துக்கும் அப்படியே சரம் சாத்தியிருந்தாங்க. இது ஒருநாள் வேலை இல்லே; தினசரிப் பழக்கமேதான் என்று தெரிஞ்சுகிட்டேன். அந்தக் குடும்பத் தலைவியும், வீட்டுப் பெண்களும் தினசரி தலைக்கு நிறையப் பூவச்சு, ஸ்டைலாகத் தொங்கப் போட்டு மினுக்கிக் கொள்ளலே. அந்த ஆசை அவங்களுக்கு இருந்ததாகத் தெரியலே. ஆனா, குத்து விளக்குக்கு தினந்தோறும், அடுக்கு அடுக்காக் கட்டப்பட்ட மல்லிகைப்பூச்சரம் அணிவித்து அழகு பார்த்தாங்க. அந்தத் திருக்கோலம் எனக்கு ரொம்பவும் புடிச்சிருந்தது. இப்பகூட அது என் கண்ணிலே நிக்குது.

அதே மாதிரி தன் வீட்டுக் குத்துவிளக்குக்கும் தினம் பூ அணிவிக்க வேண்டும் என்று மனு. பெனு. ஆசைப்பட்டார். அதற்கான ஏற்பாடுகளையும் செய்தார்.

சிவபுரத்திலிருந்து நாள்தோறும் ஜங்ஷனுக்குப்போய், பூக்கூடத்தில் பூ ஏலம் விடப்படுகிற சமயத்தில் பலவிதமான பூக்களையும் வாங்கி வந்து சரங்களாகவும் ஆரங்களாகவும் கட்டி, கோயிலுக்கும் சில பிரமுகர்கள் வீடுகளுக்கும் விநியோகித்து, பணம்பெற்றுப் பிழைப்பு நடத்திக்கொண்டிருந்த ஓதுவார் ஒருவரிடம் சொல்லிவைத்தார். தினம் தனக்கென ஒரு விலைக்கு நல்ல மல்லிகைப் பூவை ஏலம்கேட்டு வாங்கி வந்து, அடுக்கடுக்காக அமைத்து நீளமான சரமாகக் கட்டித் தரவேண்டும்; பூ விலைக்கான பணத்தையும் சரம் கட்டித் தருவதற்கான கூலியையும் மொத்தமாகவோ, அல்லது அவ்வப்போது தேவைப்படுகிறபோது சில்லறையாகவோ வாங்கிக்கொள்ளலாம் என்று சொல்லி, முன்பணமாக ஐந்து ரூபாயும் கொடுத்தார். அவனும் மகிழ்ச்சியோடு இந்த ஏற்பாட்டுக்கு இணங்கினான்.

மறுநாள் முதல் நேர்த்தியான மல்லிகைப் பூச்சரம் சாயங் காலம் நான்கு மணிக்கே கிடைக்கலாயிற்று.

நல்ல நாளாக ஒரு வெள்ளிக்கிழமையன்று மனு. பெனு. தன் வீட்டில், ரொம்ப காலத்துக்குப் பிறகு, மீண்டும் குத்து விளக்கு ஏற்றினர். அதை ஒரு விசேஷமாகவே கொண் டாடினர்.

கடலைப்பருப்பை வேகவைத்து, சிறிது உப்புச் சேர்த்து, தேங்காயை துருவிப் பூப்பூவாக எடுத்து மிக நிறையவே கலந்து, தாளித்துப் பக்குவம் பண்ணினர். 'பூம்பருப்பு' கமகமவென்று வாசனையோடு ஜோராக இருந்தது. அருமை யான காப்பியும் தயாரித்திருந்தார்.

குத்துவிளக்கை, அவர் அம்மா செய்ததுபோல உமி போட்டுத் தேய்த்து மினுமினுப்பாக்கவில்லை. பித்தளைப் பாத்திரங்களை பளபளப்பாக்குவதற்கென்று வந்துள்ள நவ யுகத் தயாரிப்புகளில் ஒன்றையே அவரும் பயன்படுத்தினர்.

முன்யோசனையோடு திட்டமிட்டு எந்தக் காரியத்தையும் செய்து பழகியிருந்த மயிலேறும் பெருமாள் பிள்ளை சிவபுரம் முகாமுக்கு வேண்டிய ஏற்பாடுகளையும் யோசித்து யோசித்துச் செய்து முடித்திருந்தார். சமையலுக்குத் தேவைப்படக் கூடிய பொருள்கள்—சாம்பார் பொடி, புளியிட்ட கறிக்கான தயாரிப்பு, ரசப்பொடி, 'முளவொடி' (மிளகுபொடி— அதாவது, தோசை இட்லி சாப்பிடுவதற்குத் துணை ஆகும் மிளகாய்ப் பொடித் தயாரிப்பு) போன்றவற்றையும், பிராஸோ —விம்போன்ற சுத்தப்படுத்தும் சாதனங்களையும், டெட்— ஸர்ஃப் போன்ற சோப்புத் தூள்களையும், இன்னும் இதர தேவைப் பொருள்களையும் சேகரித்து, நன்ருக 'பேக் செய்து', லாரி பார்சலாகத் தன் பெயருக்கு மதுரையிலிருந்து அனுப்பி வைத்தார். சிவபுரத்துக்கு வந்த மறுநாள் அதை 'டெலிவரி' எடுத்துக் கொண்டார். மண் எண்ணை ஸ்டவ்வும் வந் திருந்தது.

குத்துவிளக்கு ஏற்றிவைத்த தினத்தன்று, வீட்டுக்கு வந்தவர்களுக்கெல்லாம், பூம்பருப்பும் காப்பியும் வழங்கினர். வழக்கமாக வருகிறவர்களை முன்னிரவில் அவசியம் வருமாறு அழைத்திருந்தார்.

'அண்ணச்சி' வீட்டோடு வந்துவிட்டதும், அவரை கண்டு பேசிப்போக வெவ்வேறு வேளைகளில் சிலசில பேர் வந்து அரைமணி—ஒரு மணி என்று தங்கிச் செல்வதை வழக்கமாகிக் கொண்டார்கள். சுகவாசி சூரியன் பிள்ளை முற்பகலில் ஒன்பதரை—பத்துக்கு வந்தால், பன்னிரண்டு மணிக்கு மேல்தான் போவார். பிறவியா பிள்ளை ஒரு நாளைக்கு இரண்டு மூன்று தரம் எட்டிப் பார்த்துவிட்டுச் செல்வார். பால்வண்ணம் பிள்ளை என்றொருவர் மத்தியானச் சாப்பாட்டுக்கு மேல் வருவார். அமைதியாகப் படுத்துத் தூங்குவதற்கு அண்ணச்சி வீடு அருமையான இடம் என்று அவர் கண்டு கொண்டார். அண்ணச்சிகூடப் பேச்சு கொடுத்தபடி—அண்ணச்சியின் பேச்சை 'ஊம்...உம்' என்று கேட்டபடியே—தூக்கத்தில் ஆழ்ந்து விடுவார். அப்புறம் நாலு மணிக்குப் பிறகுதான் விழிப்பு வரும்.

இப்படி ஒவ்வொரு நோக்கத்தோடு வீடு தேடிவரும் நபர்கள், அவர்கள் தன்னை கண்டுபோக வருகிறவர்கள், தன்னை கௌரவிக்கிறார்கள் என்பதோடு, தனது புரவோலங்களை, தான் உலுப்புகிறபோது பொறுமையாய் கேட்டிருப்பதன் மூலம் தனக்குப் பெருமை தருகிறார்கள்; அத்துடன் அவரவருக்குத் தெரிந்த ஊர் விவகாரங்கள், மனித அக்கப்போர்களை எல்லாம் சொல்லி சிவபுரம்பற்றிய தனது அனுபவ ஞானம் விசாலிக்கும்படி செய்வதன் மூலம் தனக்கு சந்தோஷமும் அளிக்கிறார்கள் என்பது மனு. பெறு.வின் ஆனந்தக் களிப்பு. பேச வருகிறவர்களுக்கு மட்டுமா பொழுதுபோகிறது? தனியனாய் இருக்கும் தனக்கும் பொழுதுபோக அவர்கள் உதவுகிறார்கள் தானே! வேளை கெட்ட வேளைகளில் 'அண்ணச்சியோவ்! என்ன பண்ணுதீக?' என்று கேட்டபடி எட்டிப்பார்க்கும் 'தம்பியா புள்ளை'களைக் கண்டதும், 'சவத்

துப்பயலுக்குப் பொறந்த பய! சாகமாட்டாம அலையுதான். பொழுது போகலேன்னு இங்கே வந்திரதுதான் சோலி' என்று பெரிய பிள்ளை மனம் சில சமயம் அலுத்துக்கொள்வதும் உண்டு. என்றாலும் கூட, பொதுவாக அனைவரையும் சந்தோஷமாக வரவேற்றுப்பேசி மகிழ்வதுதான் அவரது சுபாவமாக அமைந்திருந்தது.

அன்றும் பலரையும் வரவேற்று உபசரித்தார். எல்லாரும் காப்பி சாப்பிட்ட பிறகு 'விட்டாத்தியா' உட்கார்ந்து பேசிக் களித்தார்கள்.

'அழகான விளக்கண்ணைச்சி. இவ்வளவு உசரமான குத்துவிளக்கை நான் வீடுகளிலே பார்த்ததில்லை. கோயிலில் தான் பார்த்திருக்கேன்' என்று சுகவாசி குறிப்பிட்டார்.

'கோயில்களிலே விளக்குகள் பெரிசு பெரிசா இருக்கு. ஆனா இவ்வளவு லெச்சணமா இருப்பதில்லை. இதிலே தலை, மூக்குகள், தண்டு—அந்தத் தண்டைப் பாருங்க, நெளிவு நெளிவா, அழகா—ஆகா, விளக்கையே பார்த்துக்கிட்டிருக்கணும் போலே இருக்குதே' என்று பிறவியா பிள்ளை பரவசமுற்றார்.

'இது எந்த ஊரு விளக்கு அண்ணைச்சி?' என்று விசாரித்தார் ஒரு 'தம்பிச்சி'.

'ஏரல்லே ஒரு ஆசாரி செய்து கொடுத்தது. ஸ்பெஷலாச் சொல்லிச் செய்தது. ஐம்பது வருஷங்களுக்கு முன்னாலே. இருபத்தஞ்சு ரூபாதான் ஆச்சு. அப்போ அந்தக் காலத்திலே ஒரு விளக்குக்கு இருபத்தஞ்சு ரூபாங்கிறது அதிகம் தான். அப்படித்தான் அப்போ ரொம்பப் பேரு சொன்னாங்க' என்றார் மா. பெ.

'ஆங்? இருபத்தஞ்சு?...வெறும் இருபத்தஞ்சு?...இருபத்தஞ்சே இருபத்தஞ்சு தானா, ஹேங்!' என்று குரல்களில் வியப்பு வெடித்தது.

'ஹேண்டிகிராப்ட்ஸ் எம்போரியம்னு பெரிய ஊர்களிலே இருக்குதே, அதுகளுக்கு உள்ளேபோய் நான் பாக்கிறது உண்டு. சும்மாதான். வாங்கவா, மாத்தவா! அங்கே பெரிய பெரிய குத்து விளக்குகளை வச்சிருக்காங்க. விலை இருநூற் தம்பது, முந்நூறு, நானூறுன்னு எழுதித் தொங்கவிட்டிருக் காங்க. ஒரு விளக்குகூட லட்சுமிகரமா, எடுப்பா, இந்த விலைக்குத் தகும் என்று சொல்லும்படியாக இல்லே. ஆனா, வெறும் இருபத்தஞ்சு ரூபாய்க்கு வாங்கியதாகச் சொல்லப் படுகிற இந்த விளக்கு இருக்கே, இதிலே விலை ஐநூறு ரூபாய்னு இப்போ எழுதித் தொங்கவிட்டு, ஹேண்டிகிராப்ட்ஸ் எம்போரியம் எதிலாவது சும்மனுச்சியும் வச்சால், ஆகா, இந்த விளக்குக்கு இவ்வளவு ரூபாய் தகும் என்றுதான் இதை பார்க்கிறவங்க சொல்லுவாங்க. இது வெறும் ஹேண்டிகிராப்ட் இல்லே, அண்ணாச்சி, கலை வேலைப்பாடு. ஆர்ட் ஒர்க். இதை செய்திருக்கிற ஆசாரியின் கைவேலையோடு அவனுடை ஆத்ம திருப்தியும் இதிலே இணைஞ்சிருக்கு. அதனாலேதான் இது இவ்வளவு அற்புதமா, எடுப்பா விளங்குது. நீங்க சொன்னது சரி அண்ணாச்சி. குளுமையான ஒளியோடு, குங்குமப் பொட் டோடு, குண்டுமல்லிச் சரத்தோடு நிக்கிற இந்த விளக்கு கண் நிறைஞ்ச கட்டழகுக் குமரி மாதிரியேதான் காட்சி தருது' என்று ரசித்து வியந்து அளந்தார் 'பட்டு லேஞ்சி' பால் வண்ணம் பிள்ளை.

இவர் சிவபுரத்தார்களில் ஒரு தனி டைப். எப்பவும் பட்டு லேஞ்சியை (வெண்பட்டு) வல்லாட்டாகப் போட்டுத் திரிவார். அதனால் இவருக்கு 'பட்டுலேஞ்சி' என்ற பெயர் நிலைபெற்று விட்டது. ஊர் ஊராகச் சுற்றித் திரிவதில் ஒரு ஆர்வம். அரசியல், பொருளாதாரம், இலக்கியம், கலை என்று பல விஷயங்களிலும், பத்திரிகைகள் புத்தகங்கள் மூலமும் பிரசங்கி கள் வாயிலாகவும் வெவ்வேறு நபர்களிடம் பேசிப் பழகியும், கொஞ்சம் கொஞ்சம் தெரிந்து வைத்திருந்தார். அவை சம்பந்தமான சொற்களை, எண்ணங்களை அடிக்கடி பேச்சிலே கலந்து, 'எல்லாம் தெரிந்தவர்' என்று காட்டிக்கொள்வதில் அவருக்கு ஒரு திருப்தி; தனிப் பெருமை.

‘ஏரல்லே கூட இப்போ இதுமாதிரி வேலைப்பாடு இருக்குமாங்கிறது சந்தேகம்தான்’ என்று ஒருவர் சொன்னார்.

‘ஏரல் இப்ப எப்படி இருக்கோ தெரியலே’ என்றார் மனு. பெனு.

‘அது முக்கியமான ஒரு ஊர்தான் போலிருக்கு. ஏரல் சம்பந்தமான செய்தி தினசரி பேப்பர்லே வந்துக்கிட்டே இருக்கு. ஒவ்வொரு நா, ரெண்டு மூனு நியூஸ் வருது. நியூஸ் பேப்பர்லே ஏரல் பேரு வராத நாளே கிடையாதுன்னுதான் எனக்குத் தோணுது’ என்றார் தினசரி ‘தினமலர்’ ‘தினத்தந்தி’ பத்திரிகைகளை விடாது படிக்கிறவர்.

‘பட்டுலேஞ்சி’ ஆணித்தரமாக அறிவித்தார்: ‘ரெண்டு மாசத்துக்கு முன்னாலே நான் ஒரு சோலியா ஏரலுக்குப் போயிருந்தேன். அது ஒரு டவுன். நல்ல பெரிய ஊராத்தான் இருக்கு. கடைத்தெருவும் பரபரப்புமா...’

‘நான் ஐம்பதுவருசங்களுக்கு முன்பு பார்த்தது. அப்பவே ஏரல் பெரிசாத்தான் இருந்தது. காலப்போக்கிலே நல்லா வளர்ந்திருக்கும். சின்னப்போ பார்த்த ஊர்களை எல்லாம் பிறகு திரும்பப்போய் பார்க்கணும்னு எனக்கு ஒரு ஆசை உண்டு. அது காரியத்திலே நடக்கவேயில்லை’ என்று மனு. பெனு. வருத்தப்பட்டார்.

பேச்சு சுற்றி வளைந்து ஊர்ந்தது.

‘அண்ணாச்சி, நம்ம ஊருக் குளத்தங்கரை ஆலமரங்களை எல்லாம் அழிச்சுப் போட்டாங்களே; அதனாலே அழகே கெட்டுப் போச்சுதுன்னு சொன்னீங்களே. பெரிசா, வட்டமிட்டு வளர்ந்து, விழுதுகள் பாய்ச்சி வளரக்கூடியது ஆலமரம்கிறது, இந்த ஊர் பையன்களுக்கு இப்போ தெரியவே தெரியாது; உதாரணத்துக்குக் காட்டக்கூட இந்தச் சுற்று வட்டாரத்திலேயே ஆலமரம் இல்லைன்னு சொன்னீகளே. அது சம்பந்தமா நான் சிந்திச்சபோது, எனக்கு ஒரு ஐடியா வந்தது. என்னன்னா, பள்ளிக்கூடப் பாடத்திலே வருதுல்லா—திண்ணிய ஆலின் சிறுபழத்தொரு விதை, தெண்

ணீர்க் குளத்தின் சிறுமீன் சினையினும் நுண்ணிதே ஆயினும்,
...உம்..உம்...அப்புறம்...வந்து...அணிதேர்ப்புரவி ஆட்பெரும் படையோடு மன்னருக்கிருக்க நிழலாகுமேன்னு வரும். பாட்டு எப்படியும் போகட்டும். நான் சொல்ல வந்தது, ஆலமரம் மன்னருக்குப் பெரும் படையோடு இருக்க நிழலாகும். அப்படி அதன் நிழலை அனுபவிக்க, அணிதேர்ப்புரவி ஆட்பெரும் படையோடு அதன் கீழ் தங்குவதற்கு இப்போ மன்னர்கள் இல்லை என்பதனுலே, இந்நாட்டு மன்னர்கள் ஆகிவிட்ட ஏழை எளிய மக்கள், ஆடு எரி படர்ந்த தங்கள் வீட்டுக் கோடுயர் அடுப்பு எரியவேண்டுமே என்பதற்காக ஆலமரங் களை வெட்டி விறகாக்கிப் போட்டார்கள். ஆகவே, ஆலமரம் எப்போதும் மன்னருக்கு உதவும் பெரிய மரமே ஆகும்னு எனக்குப் பட்டுது. எப்படி அண்ணுச்சி!' என்று 'ப. லே.' பால்வண்ணம் பெரியதனம் பண்ணினுர்.

அந்தக் கூட்டத்தில் அவரது மூளையின் மின்வெட்டு பிரகா சிக்கவில்லை.

'சாலை அழகு போயிட்டாலும் அண்ணுச்சி, வேறொரு அழகு சேர்ந்திருக்கே, அதை நீங்க கவனிக்கலே?' என்று சூரியன் பிள்ளை வாய்திறந்தார். 'இருட்டினதும் மேற்கே பார்த்தால் என்னமாயிருக்கு! இரவு பூரா எப்படி ஜோதி மயமா இருக்கு! அதிகாலையிலே கூட கண்கொள்ளாக் காட்சி யாயிருக்கே!'

'சிமெண்ட் ஆபீஸ் விளக்கு வெளிச்சத்தைச் சொல்றேளா? ஆமா ஆமா. வடக்கே கார்பைட் பாக்டரி முடிய ஒரே லைட்டு மயம்தான். எவ்வளவு தூரம், எவ்வளவு லைட்டு அடுக்குகள். எப்படிக்கிடந்த தாழையூத்து! சங்கர் நகர்னு மாறி, டவுண் கணக்கா வளர்ந்துட்டுதே!' என்று பிறவியா பிள்ளை அதிசயித்தார்.

'ஊம். நானும் பார்த்தேன். இப்போ சுற்றிவர எங்கே பார்வையை திருப்பினுலும் எலெக்ட்ரிக் விளக்குகள் பிரகா சமா எரியறதை காணமுடியுது. தாழையூத்து விளக்குகள்,

சிமிண்ட் கம்பெனியின் ஏகப்பட்ட லைட்டுகள், தொடர்ந்து விதம் விதமான வெளிச்சம். மறுபடியும், கார்பைட் பாக்டரி யின் அதிகமான விளக்குகள். நம்ம ஊரின் தெரு விளக்குகள். கிழக்கேயும் வரிசையா விளக்குகள். அப்புறம், பாலாமடை லைட்டுகள். தென்கரையிலே தெரியிற வெளிச்சம். அங்கே யும் இங்கேயுமா மினுக்குற லைட்டுகள்—ஒரே வெளிச்ச மயமாத் தானிருக்கு. நீங்க சொன்னது போல இதிலேயும் ஒரு அழகு இருக்கத்தான் செய்யுது. நான் இல்லேன்னு சொல்லலே. ஆனால் இழந்துபோன இனிமை இழக்கப்பட்டதேதான். அதுக்கு ஈடு சோடு கிடையவே கிடையாது' என்று பெரிய பிள்ளை அழுத்தமாக அபிப்பிராயப்பட்டார்.

சிவபுரத்துக்கு எலெக்ட்ரிக் லைட் வந்தது பற்றி பேச்சு நீண்டது.

'இப்போ கிராமங்களுக்கும் எலெக்ட்ரிக் லைட்டுகள் போடுவதுங்கிறது அரசின் வேலைத்திட்டம் ஆகிவிட்டது. அப்போ அப்படி இல்லை. நம்ம ஊருக்கு லைட் வாறதுக்குள்ளே எவ்வளவு யோசனைகள், எத்தனை சிபாரிசுகள். பிரைவேட் கம்பெனிக்காரன்தானே அந்த வேலையை மேற்கொள்ள வேண்டியிருந்தது? அவன் லாபத்திலேதான் குறியா இருந் தான். இந்த ஊருக்கு வயர் இழுத்து, கரண்ட் கொண்டாற துக்கு ஏகப்பட்ட செலவாகுமே; அப்படிக் கொண்டாந்தால் அதுக்குத் தக்க வருமானம் இருக்குமா? எத்தனை வீடுகளிலே வயரிங்பண்ணி, கனெக்ஷன் வாங்கி, லைட் எரிக்கத் தயாரா யிருப்பாங்க'ன்னெல்லாம் விசாரிச்சு யோசனை பண்ணினான். யார் யார் வீட்டிலே எலெக்ட்ரிக் லைட் போடுவாங்கன்னு கேட்டு எழுதிக்கிட்டு போனான். அப்படியும் அந்த வருசம் குழிதோண்டி, கம்பங்கள் நட்டு வயர் இழுக்கலே நம்ம ஊருக்கு, ஒரு வருசத்துக்கும் மேலேயே ஆனப்புறம்தான் வந்துது' என்று சுகவாசி சொன்னார்.

'அப்போ அவனுக்கு தெரு விளக்குகள் முக்கியமாப் படலே அண்ணாச்சி. கம்பெனிக்கு வரும்படி அதிகரிக்கும்படி

வீட்டு விளக்குகள் எண்ணிக்கை அதிகமாகனும்தான் நினைச்சான். அதனுலே, யார் யாரு வீட்டிலே லைட் கனெக்ஷன் கொடுக்க வேண்டியிருக்குமோ அந்த அந்த வீடுகளுக்கு சமீபமா போஸ்ட் நிற்கும்படி கவனிச்சுத்தான் குழிகள் வெட்டினுன்' என்று ஒருவர் அறிவித்தார்.

'ஆமா ஆமா' என்று ஒத்து ஊதினுர் பிறவியாபிள்ளை. 'அந்தா எதுத்த வீடு இருளடைஞ்சு கிடக்கே, அந்த வீட்டுக்காரரு அப்போ உயிரோடு இருந்தாரு. அவரு தன் வீட்டுக்கும் கட்டாயம் லைட் போடுவதாப் பேரு கொடுத்தாரு. அண்ணுச்சி வீட்டிலே போடமாட்டாங்களா ; போட்டா சவுகரியமா இருக்குமேன்னு கம்பெனி ஆளு விசாரிச்சான். அண்ணுச்சி இங்கே குடியிருக்கலே ; மதுரையிலே இருக்காகன்னு சொன்னேன். இருக்கட்டுமே ; இப்பவே வயரிங் பண்ணி லைட் இழுத்துக்கொண்டால் எவ்வளவோ சலுகைகள் உண்டு ; செலவும் குறையும் ; போகப் போகச் செலவுகள் அதிகமாகும்னு கம்பெனிக்காரன் ஆசை காட்டினுன். அண்ணுச்சி அபிப்பிராயத்தை தெரிந்து கொள்ளாமே நான் எப்படி சம்மதம் சொல்றது ? அப்பேர் நான் ஈரெட்டா பதில் சொல்லி வச்சேன். எதிர்வீட்டுக்காரர் உறுதியா இருந்ததுனுலேதான் இந்த இடத்திலே ஒரு போஸ்ட் வந்துது. நம்மூருக்கு லைட் வந்து அஞ்சாறு வருசம்வரை அவர் உயிரோடுதான் இருந்தார். ஆனுலும் எதுத்த வீட்டுக்கு எலெக்ட்ரிக் லைட் போடவே முடியாமப் போயிட்டுது. இங்கே ஏற்கனவே ஒரு போஸ்ட் நடப்பட்டிருந்ததுனுலே நம்ம வீட்டுக்குக் கனெக்ஷன் இழுப்பதுக்கு வசதியாயிட்டுது. இல்லேன்னு சொன்னு, மேலத் தெருவிலே யிருந்துல்லா இங்கே வயர் இழுக்கணும்? நடுவிலே ஒரு துணை போஸ்ட் நடவேண்டியிருக்கும். அதுக்காகும் செலவையும் நம்ம தலையிலேதான் கட்டுவான். கம்பெனி ஆளே சொன்னுன்' என்றும் விவரித்தார்.

'பாருங்கண்ணுச்சி, நம்ம ஊர்க்காரங்க மனுேபாவத்தை! ஏ, வீட்டிலே நல்லா வெளிச்சம் இருக்கணும் ; எலெக்ட்ரிக் லைட் எரிக்கணும்னுட்டுதானே நீ சிரமப்பட்டு, செலவு

பண்ணி, லைட்டு போடுதே? எரிக்க வேண்டியதுதானே? லைட் எரிக்கதுக்கு மனம் வாறதுல்லே. அடுத்த வீட்டிலே விளக்கெரிய ஆத்துமா பொறுக்காதுன்னு சொல்வாங்க. இங்கே அநேகம் பேருக்கு தன் வீட்டிலே நல்லா விளக்கெரியவே பொறுக்கிறதில்லே. அணைச்சு அணைச்சு வைப்பாங்க. இருட்டிலே உக்காந்து பேசிக்கிட்டிருப்பாங்க. ஏழரை எட்டுக்குள்ளாற எல்லா விளக்குகளையும் அணைச்சிருவாங்க. ஒரே ஒரு லைட்டாவது எரியட்டுமே! ஊகுங், கரன்ட் சார்ஜு ஏறிப்போகும்னு பயப்படுவாங்க. அநேக வீடுகள்லே மாசம் தோறும் யூனிட்டு 3 யூனிட்டுதான் பில் கணக்காகும். பில் வசூலிக்கிறவனே ஒருசமயம் கேட்டான், என்னய்யா உங்க ஊரிலே வீடுகளிலே விளக்கே எரிக்க மாட்டீங்களோ? ரெண்டு யூனிட்டும் மூணு யூனிட்டும்னு வருதேயின்னான். இருட்டிலேயே வாழ்ந்து பழக்கம்லா; வெளிச்சம் இன்னும் பழக்கமாகலே; அதுதான் கூசுதுன்னு சொன்னேன். வே, மினிமம் சார்ஜு— இப்ப மூணரை. சில வருசத்துக்கு முன்னாலே ரெண்டா ரூபா தான் (ரெண்டரை)—எப்படியும் கட்டித்தான் ஆகணும். நீரு ஆறு யூனிட் எரிச்சாலும் அதே ரூபாதான்; ரெண்டு யூனிட் எரிச்சாலும் அதுதான்; எரிக்காமலே இருந்தாலும் அதைக் கட்டியாகணும். ரெண்டு யூனிட்டும், ரெண்டரை யூனிட்டும் எரிச்சிட்டு அந்தப் பணத்தை கட்டி நஷ்டப்படுவானேன்? ஆறு யூனிட், ஏழு யூனிட் வாறவரை தாராளமா எரியேன். அதே மினிமம் சார்ஜுதானே கட்டப்போறே! இது நம்மளவங்க மனசிலே உறைக்கிறதே இல்லே. நானும் எத்தனையோ தடவை சொல்லிப் பார்த்தாச்சு. லைட்டை ஆஃப் பண்ணு, லைட்டை ஆஃப் பண்ணுன்னுதான் துடிக்கிறாங்க. விளக்குகள் எரிஞ்சு, வெளிச்சமா இருந்தா எப்படி இருக்கு? இருட்டாக் கிடந்தா எப்படி இருக்கு?' என்று பால்வண்ணம் பிள்ளை தன்னை வெளிச்சப்படுத்திக் கொண்டார்.

'விளக்கெரிஞ்சு கெட்டவனும் இல்லே, வாழ (வாழை) வச்சு கெட்டவனுமில்லே'ன்னு பெரியவங்க சொல்லியிருக்காங்க' என்றார் சூரியன்பிள்ளை.

'இதுக்கு ரெண்டு பொருள் இருக்கும்னு தோணுது. வாழை வச்சால், பல வகைகளில் வருமானம் கிடைக்கும். இலே, பூ, காய், பழம், கடைசியிலே தண்டு—இப்படி எல்லாத்தையும் பணம் பண்ணிப்போடலாம். அதனுலே நஷ்டப்பட்டுக் கெடமாட்டான். விளக்கு எரிக்கிறதுனுலேயும் வெளிச்சம் ஏற்படும். லட்சுமிகரமா இருக்கும். கேடு உண்டாகாது. இது ஒரு அர்த்தம் ஆச்சா? விளக்கு எரிக்கிறதுனுலே இருட்டு இருக்காது; திருட்டுப்பயல் வரமாட்டான். வாழவச்சு—அதாவது, இன்னெருவனுக்கு அல்லது பிற பலருக்கு வாழ்வு அளித்து—வேலே வாங்கிக் கொடுத்தோ, எவ்வகையிலாவது உதவி பண்ணியோ குடியும் குடித்தனமுமா வாழும்படிச் செய்து உபகாரம் பண்ணுகிறவனும் கெட்டுப் போவதில்லே' என்று பால்வண்ணர் தன் அறிவுத்திறனே காட்டினுர்.

'இருக்கலாம். அது எப்படியும் இருந்துட்டுப் போகுது. எலெக்ட்ரிக் லேட் வெளிச்சம் இல்லாத காலத்திலே நம்ம ஊரு எப்படி இருந்துது? அந்தக் காட்சியை உங்களாலே நெனச்சுப்பார்க்க முடியுதா?' என்று மனு. பெனு. கேட்டார்.

'அதை மறந்திடாதீங்க சாமிகளேன்னு கம்பெனிக்காரனே அடிக்கடி நினேவுபடுத்துறுனே! மாசத்திலே ஒரு நாள் ரெண்டு நாள் திடீர்னு எல்லா லேட்டும் இல்லாமலே போயிரும். வீட்டு விளக்கு, தெரு விளக்கு எல்லாமே அணேஞ்சுபோம். மணிக்கணக்கிலே கரண்ட் வராது. அந்தச் சமயத்திலே ஊரின் பூர்வ நிலேயை—இருட்டின் ஆளுகையை—ரசிக்க முடியுதே! நிலாக்காலத்திலே அப்படி ஆயிட்டா, செயற்கை வெளிச்சங்கள் இல்லாத இரவில், பாலுபோல நிலா அடிக்கையில், தெருக்களும் வீடுகளும் சுற்றுப்புறங்களும் எவ்வளவு ஜோரா அற்புதமா இருக்கு என்பதையும் கண்டு சந்தோஷப்படலாமே' என்று 'பட்டுலேஞ்சி' லெக்சரடித்தார்.

'ஊம்ம்' என்று இழுத்தார் மயிலேறும் பெருமாள். 'நம்மை அறியாமலே மாறுதல்கள் ஏற்பட்டுக்கிட்டேதான் இருக்கு.

இல்லே, மாறுதல்கள் சதா ஏற்பட்டபடியேதான் இருக்கு, அதுகளை நாம் கருத்தில் கொள்றதில்லேன்னு சொல்லனும். இந்த ஊருக்கு எலெக்ட்ரிக் லைட், குடிதண்ணீர் பைப் வசதியும் ஏற்பட்டிருப்பது பெரிய மாறுதல் அல்லது வளர்ச்சிதான். முன்னுலே லைட்டே கிடையாது. தெருவெல்லாம் இருட்டுதான். வீடுகளிலும் இருட்டுதான். விளக்குகள் எரிக்க வசதி இருக்காது. அல்லது, பால்வண்ணம் சொன்னது மாதிரி, விளக்குகளை எரியவிட்டு வெளிச்சம் பரப்புவதற்கு மனம் இருக்காது. ரொம்ப காலத்துக்கு முன்னுடி, தெருச்சந்திகளிலே, முக்குகளிலே தெரு விளக்குகள் எரியும். லாந்தக் கம்பங்கள்—கல்தூண்கள்—நிற்கும். அதிலே மேலே, இரும்புச் சட்டங்கள், அதுக்குள்ளே பாதுகாப்பா, தனிவடிவில் உள்ள கண்ணுடிக்கூண்டு. திறக்க, மூட, வசதியோடு. அதை திறந்து உள்ளாற விளக்கு வைப்பாங்க. தகர விளக்கு. கண்ணுடி சிம்னி. கிராமப் பஞ்சாயத்து ஏற்பாடு இது. டவுண்களிலே, முனிசிபாலிடி வேலை. இதுக்குன்னு ஒரு ஆளு உண்டு. ஏணியை தோளிலே மாட்டிகிட்டு, விளக்குகளின் தகரப்பகுதிகளை—மண் எண்ணை அடைக்க உதவுவது—ஒரு கூடையிலே சுமந்து வருவான். சிமினி, லாந்தல் கம்பத்தில், கண்ணுடிக் கூண்டுக்குள் ஒரு மூலையில் இருக்கும். எண்ணை அடைக்கனும்கிறதுக்காகத்தான் தினம் காலையில் வந்து தகரப்பகுதியை—பார்க்கப்போனுல், அதுதானே விளக்கு'ங்கிறது!—ஆபீசுக்கு எடுத்துக்கிட்டுப் போவான். இந்த ஊரிலே அப்படிப்பட்ட லைட்டுகள் எரிந்து கொண்டிருந்ததையும் நான் பார்த்திருக்கேன்...'

'ஒரு விஷயம் அண்ணுச்சி' என்று குறுக்குச் சால் ஓட்டிஞர் பால் வண்ணம். 'தெரு விளக்குகள் கிராமங்களில் பத்திரமா, யாராலும் எவ்விதமான சேட்டையும் செய்யப்படாமல், இருந்திருக்கும். டவுன்களில் தெரு விளக்குகள், தெருவுக்கு அழுது வழியிற வெளிச்சம் தருகிற காரியத்தை மட்டுமே செய்து கொண்டிருந்ததில்லை. அப்படி கருமமே கண்ணுக இருக்கும்படி அவைகளை விட்டு வைப்பதில்லை சில

பேர். நான் பாளையங்கோட்டையிலே படிச்சுக்கிட்டிருந்த போது கவனிச்சிருக்கேன் அண்ணைச்சி. ராத்திரி பூராவும் முழிச்சிருந்து சீட்டாடுற கோஷ்டி, தெரு விளக்கை எடுத்துக் கிட்டுப் போயி தங்கள் வேலைக்கு உபயோகிச்சு வந்தது. சில பேர் தெரு விளக்கிலே உள்ள மண் எண்ணெய்யை தங்கள் விளக்குக்கு மாற்றிக்கிட்டாங்க. அப்படி சுலபமாத் திறந்து எண்ணெய்யை ஊத்திக்கிட முடியாதபடி விளக்கிலேயே ஏதோ டிரிக்ஸ் பண்ணிப் பார்த்துது முனிசிபாலிட்டி. அதுக்கும் பொறகு தான் விளக்கையே எடுத்துக்கிட்டுப் போகிற வேலையை ஆரம்பிச்சாங்க புண்ணியவான்க. ஒன்பதரை மணிக்கு மேலே லைட்டை எடுத்திட்டுப் போயி, சீட்டு விளையாடுவாங்க. வடுவூர் துரைசாமி அய்யங்கார் நாவல், ரங்கராஜு நாவல், ஆரணி குப்புசாமி முதலியார் எழுதின நாவல்னு எதையாவது லைப்ரரியிலேயிருந்து எடுத்து வந்து வாசிப்பாங்க. கூட்டமா, வட்டமிட்டு உட்கார்ந்து—ஒரு ரூமுக்குள்ளே தான்—நடுவிலே இந்த விளக்கை வச்சு, அந்த வெளிச்சத்திலே சத்தம் போட்டு வாசிப்பாங்க. ஒருத்தர் மாத்தி ஒருத்தர்னு டர்ன் வச்சு வாசிப்பாங்க. அலுத்துப் போயிரப்படாதுல்லே! இதைவிட ஒரு விசேஷம் என்னன்னா, ஒரு காலேஜ் ஸ்டூடன்ட் இருந்தான். தினம் தெருவிளக்கை ரூமுக்கு எடுத்துட்டு வந்துதான் தன் படிப்பை நடத்துவான். ஐயா, முன் காலத்திலே முத்துசாமி அய்யர்னு ஒருத்தர் தெரு விளக்கிலே உட்கார்ந்து படிச்சுப் பாஸ் பண்ணி, பெரிய வராகி, ஜட்ஜ் ஆக உயர்ந்து விட்டார். அவர் அடிச்சுவட்டிலே நான் செயல் புரிகிறேன். நானும் தெரு விளக்கிலே படிக் கிறேன். அவர் தெருவில் லாந்தக் கம்பத்தின் அடியில் அமர்ந்து படித்தார். நான் காலத்துக்கு ஏற்றபடி, தெரு விளக்கை ரூமுக்குள் கொண்டு வந்து மேஜைமீது வைத்து, நாற்காலியில் உட்கார்ந்து படிக்கிறேன். அதனால் என்ன? தெரு விளக்கு தரக்கூடிய வெளிச்சம் எல்லாக் காலத்திலும் ஒரே மாதிரித்தான் இருக்கும் என்று லெக்சரடிப்பான்' என்று விவரித்தார்.

இதை அனைவரும் ரசித்துச் சிரித்தார்கள். 'எலெக்ட்ரிக் லைட்டிலேயே பழகிப் போட்டு, திடீர்னு அது இல்லாமல் போகிறபோது பெட்ரூம் லைட்டுகளையும் அரிக்கன் லாந்தரையும் மெழுகுவத்திகளையும் வச்சு ஒப்பேத்த நேரிடுகிறபோது, ரொம்பவும் சிரமமாகத் தான் இருக்கு. எலெக்ட்ரிக் லைட்டுக இல்லாமல் இருந்த காலத்தில் வாழ்க்கை எவ்வளவு கஷ்டமாக இருந்திருக்கும்னு நினைக்கத் தோணுது' என்று ஒருவர் குறிப்பிட்டார். வயது குறைந்த நபர் அவர்.

'நீங்க நினைக்கிறபடி ஒண்ணுமில்லே. அப்பவும் வசதிகளுக்குக் குறைச்சல் இல்லே. அழகும் அலங்காரமும் ஜாம் ஜாம்னு நடைபெற்றுக் கொண்டு தான் இருந்தன. தீவட்டிகள், தீப்பந்தங்கள், கிளை விளக்குகள், பலபல கிளைகளைக் கொண்ட லஸ்தர் விளக்குகள், சர விளக்குகள்—அடுக்கு அடுக்கான விளக்குகள் எவ்வளவு அழகா, அலங்காரமா, குளுகுளுன்னு பிரகாசிக்க முடியும்கிறதை பார்க்கணும்னு, கன்யாகுமரி கோயிலுக்குள்ளே போய் நின்னு பாரும்' என்றார் பால்வண்ணர்.

'ஏன், திருக்கார்த்திகை தினத்து இரவிலே எந்த ஊரிலும் பார்க்க முடியுமே. அதிலும் அக்கிரகாரங்களில் கண்கொள்ளாக் காட்சியாக ஜொலிக்கும்' என்று ஒருவர் தெரிவித்தார்.

'எந்தக் காலத்திலுமே மனிதர்கள் இருக்கிறதை வச்சு அமர்க்களம் பண்ணிப் போடுவாங்கண்ணு தான் தோணுது. இப்போ எலெக்ட்ரிக் பல்புகளைப் போட்டு, கட்டிடங்களையும் கோபுரங்களையும் மரங்களையும் ஒளி மயமாக்கி விடுறுங்க. அந்நாளையிலும் வெளிச்சம் போடுறதுக்கு மனுசங்க அஞ்சினதுமில்லே தயங்கியதுமில்லே' என்று பால்வண்ணம் பிள்ளை ஓங்கியடித்தார்.

'அறுபது அறுபத்திரண்டு வருஷங்களுக்கு முந்தி திருநெல்வேலியிலே ஒரு கல்யாணம் நடந்தது. பிள்ளையன் வீட்டுக் கல்யாணம். பிள்ளையன் குடும்பம் அப்போ ரொம்ப

வும் செயலாயிருந்துது. கல்யாணம்னு சொன்ன அந்தக் காலத்திலே நடந்ததுகதான் கல்யாணம். இப்ப நடக்கிற தெல்லாம் சும்மா கண் துடைப்பு நாடகம் மாதிரித்தான். பணக்காரரான பிள்ளையன் வீட்டிலே கல்யாணம். சொல்லணுமா? பட்டணப் பிரவேசத்துக்காக—பட்டணப் பிரவேசம் என்கிற அயிட்டமே இப்ப அடிபட்டுப் போச்சே!—நாலு ரத வீதியிலும் வெளிச்சம் திகுதிகுன்னு இருக்கிறதுக்காக ஒரு வேலை பண்ணியிருந்தாங்க பாருங்க, சே!, பிரமாதம். அது மாதிரி அப்புறம் எங்கும் நடந்ததா நான் பார்த்தது மில்லே; கேள்விப்பட்டதும் இல்லே. வாழை மரங்களை பெரிசா தடிதடியா வளர்ந்ததுகளைத்தான், வெட்டி அடி மரங்களை, நம்ம இடுப்பு உசரத்துக்கு வரும்னு வையுமேன், ரதவீதிகளிலே நெடுக நட்டுவச்சாங்க. ரெண்டு பக்கமும். அதுக்கு மேலே தீச் சட்டிகள். எண்ணெ நிறைய ஊத்தி, பந்தம் கட்டிப்போட்டு, எரியவிட்டிருந்தாங்க. கவனிச்சு எண்ணெ ஊத்திக்கிட்டே இருக்கிறதுக்கு ஆளுக. ஏகப்பட்ட வாழை அடிமரங்கள் மேலே, தீச்சட்டிகளிலே, தீ குதிச்சுக் குதிச்சு விளையாடி வெளிச்சம் தந்துக்கிட்டிருக்கு. பட்டணப் பிரவேசம்—அருமையான குதிரைகள் பூட்டின சாரட்டிலே, ஏகப்பட்ட புஷ்ப அலங்காரங்களோட, பொண்ணும் மாப்பிள்ளையும் ஜம்னு இருக்க, பிள்ளையனும் மற்றப் பெரிய மனுஷங்களும் சொந்தக்காரங்களுமா அசைஞ்சு நகர்ந்து வருது. அப்போ, அதோட கலந்துக்கிடணுமின்னு சொல்லி, கொட்டாரம் குருக்களையாவும் அவரை சேர்ந்தவங்களும் எதிரே வந்தாங்க. பிள்ளையன் சேவரத்துக்கு குருக்களையா தான் குரு. அதிலும், கொட்டாரம் குருக்கள் தான். ஐயர் எல்லாம் கிடையாது. குருக்களையா வாறதை பார்த்ததும், குலகுரு இல்லையா, பெரிய பிள்ளையன் தோளிலே கிடந்த பட்டை எடுத்து இடுப்பிலே கட்டிக்கிட்டு, அங்கேயே சாஷ்டாங்கமா விழுந்து கும்பிட்டாரு. அவர் குடும்பத்தாரும் சொந்தக்காரங்களும் அவரை பின்பற்றி, கீழே விழுந்து நமஸ்காரம் பண்ணினங்க. அப்ப நடந்தது பாருங்க ஒரு அதிசயம். வேடிக்கைன்னும் சொல்லலாம். அதிசயமா வாழை மரங்

களிலே தீச்சட்டி வச்சு, கோலாகலமா வாற பட்டணப் பிரவேசத்தை பார்க்க ரதவீதியின் ரெண்டு பக்கங்களிலும் எக்கச்சக்கமாகக் கூட்டம் கூடி நிக்குது. ஆம்பிளைகளும் பொம்பிளைகளும் குஞ்சுகுளுவான்களுமா ஒரே கும்பல். பெரிய பிள்ளையனும், இதரப் பணக்காரப் பெரியவங்களும் ரோட்டி லேயே விழுந்து கும்பிட்டதை பார்த்தாங்களோ இல்லையோ, ஓகோ, இவர் யாரோ பெரிய மகானுகத்தான் இருக்கணும்— இல்லேன்னு, இவ்வளவு பெரிய பெரிய பணக்காரங்க, மதிப் புக்கும் மரியாதைக்கும் உரியவங்க அத்தனை பேரும் இப்படி கீழே விழுந்து கும்பிடுவாங்களான்னு சனங்க நெனச்சு, அப்படி அப்படியே அந்த அந்த இடத்திலேயே எல்லோரும், 'சாமீ சாமீ'ன்னு கத்திக்கிட்டு விழுந்து கும்பிட ஆரம்பிச்சிட் டாங்க. எல்லாரும்னு, எல்லா ஆம்பிளைகளும் பொம்பிளை களும் குஞ்சுகுளுவான்களும் தான்...அஹஹ, நல்ல தமா ஷான காட்சியா இருந்தது அது.'

மயிலேறும் பெருமாள் பிள்ளை இதைச் சொல்லிவிட்டு, அந்த தமாஷை இப்போது கண்முன் காண்பது போல், குலுங்கிக்குலுங்கிச் சிரித்தார். பெரியவர் சிரிக்கிருரே என்ப தற்காக மற்றவர்களும் சேர்ந்து சிரித்தார்கள்.

குத்துவிளக்கு சுடரொளி சிந்தி அழகாக எரிந்து கொண்டி ருந்தது.

அந்த அழகை ரசித்தும் வியந்தும் சிலாகித்தும் ஒவ்வொருவர் ஒவ்வொன்றைக் கூறிவிட்டு, 'நேரமாயிட்டுது, அண்ணுச்சி. வாரேும். நாளைக்குப் பார்க்கலாம்' என்று விடைபெற்றுப் பிரிந்தார்கள்.

# 7

கொஞ்ச நேரம் பேச்சும் சிரிப்பும் கலகலப்புமாக இருந்த அந்தப் பெரிய வீட்டில், மற்றவர்கள் போன பிறகு கவிந்து கொண்ட மவுனம் பயங்கரமாக இருந்தது.

விளக்குகளை அணைத்துவிட்டு கட்டிலில் உட்கார்ந்திருந்த மயிலேறும் பெருமாள் பிள்ளையைச் சுற்றிலும், அவர்மீதும், கனத்துக் கவிந்து இருளோடு இருளாக மவுனம் மண்டிக் கிடப்பதுபோல் தோன்றியது. பகலைவிட இரவில் அதன் சுமை அதிகரித்துவிட்டது போலிருந்தது. மவுனமே ஒரு உருவம் பெற்று நிற்பது போலவும், 'ஏய்!' என்று கூப்பிட்டால் 'ஊம்வ்?' என்றோ, 'என்ன?' என்றோ அது இடத்திலிருந்தாவது பதில் குரல் கொடுக்கக்கூடும் என்றுகூட அவர் மனசுக்குப்பட்டது.

அந்த நேரத்தில் அவர் மனம் மனைவி மீனாட்சியை நினைத்தது. அவள் இங்கே வந்து இவ்வீட்டில் தன்னுடன் இருந்தால் இப்பெரிய வீடு இவ்வளவு தனித்ததாக, மவுனம் மண்டிய குகையாகத் தோற்றாது என்று அவர் எண்ணிக் கொண்டார்.

— அவ வரமாட்டா. இங்கே வரவேமாட்டா. அந்தப் பட்டிக்காட்டுப்பய ஊரிலே வீடு என்னத்துக்கு; தண்ணியை கோதி ஊத்துங்க; வித்துத் தலைமுழுகித் தொலையுங்கோன்னு அடிக்கடி புழுபுழுத்த பாதகத்தி யில்லா அவ. இந்த வீட்டை எப்படி நான் வெறும் வீடாக மதிக்கலையோ, அதேமாதிரித் தான் அவளும். இதைத் தனக்கு இயல்பாக வாய்த்துவிட்ட சக்களத்தின்னு நெனச்சுப்போட்டா.

மயிலேறும் பெருமாள் பெருமூச்செறிந்தார். அவருக்கு இராச்சாப்பாடு வேண்டியிருக்கவில்லை. மிச்சம் இருந்த பூம்பருப்பை தின்று காப்பியை குடித்தார். இன்னும்கூட காப்பி மீந்திருந்தது. ஒரு டம்ளர் இருக்கும். இன்னைக்கு தூக்கமா வரப்போவுது! அப்புறமாக் குடிக்கலாம் என்று மூடிவைத்தார்.

'காப்பியை காப்பியை நெறையக் குடிச்சதனுலே' மட்டும்தான் அவரது தூக்கம் கெட்டது என்று சொல்வதற் கில்லை. இன்று அவருக்கு 'மைண்டே சரியில்லை'.

வசதிகள் நிறைந்த பெரிய வீடு வெறிச்சோடிக் கிடப் பதையே அதன் ஆரம்ப காலத்திலிருந்து ஒரு நியதியாகப் பெற்றுவிட்டதே என்ற நினைப்பு அவர் மனசில் உறுத்தலா யிற்று.

'நீங்க குத்துவிளக்கு பொருத்திவச்சு, அறைகள்தோறும லைட்டு எரியவிட்டு, வீட்டை ஒளிமயமாக்க முயன்று என்ன பிரயோசனம் அண்ணச்சி? நீறில்லா நெற்றி பாழ்—நெய் யில்லா உண்டி பாழ்—ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்—பாழே மணக்கொடி இல்லா மனையின்னு பழம்பாட்டு ஒண்ணு சொல் லுதே, அது ரொம்பச் சரியான வார்த்தை அண்ணச்சி. வீட்டிலே விளக்கு ஏற்றிவைக்க வேண்டியவ ஏற்றிவச்சு, பூசை பண்ணிக் கும்பிட்டால், அது லெச்சுமியே வீட்டிலே வந்து குடியேறின மாதிரி இருக்கும். நீங்க குத்துவிளக்கு பொருத்திவச்சு, நாங்களும் சேர்ந்து நின்னு கும்பிட்டோம்னு பேர் பண்றதிலே அழகு எங்கே இருக்கு அண்ணச்சி? ஒரு லலிதம், ஒரு மென்மை, ஒரு கலர் எபெக்ட், ஒரு 'கிரேஸ்', ஒரு தெய்வீகக்களை இருப்பதாத் தெரியலியே' என்று பால் வண்ணம்பிள்ளை, அவர் பண்பாட்டின்படி 'சலம்பினர்'. அது பெரியபிள்ளையின் உள்ளத்திலே எங்கோ ஒரு ஆழத்தில் விழுந்துகிடந்து, பின்னர் உறுத்தல் அலைகளை எழுப்பிவிடலா யிற்று. அவன் சளசளன்னு பேசினுன்னு சொன்னுலும், அவன் பேச்சிலே உண்மை இல்லாமல் இல்லை என்று அவர் மனம் கீச்சுக்குரல் கொடுத்தது.

— இந்த வீட்டிலே எந்த நாளிலுமே பசுமையான, குத்து விளக்குப் போன்ற, மணக்கொடிகள் நடமாடியதே இல்லை. எப்பவுமே சத்திரம் மாதிரி, கோயில் மாதிரி, அதன் தனிமை யிலே அது பெரிதாய் மவுனித்து, அந்தத் தனிமையும் மவுன முமே ஒருவிதமான அச்சம் உண்டாக்கக்கூடிய சூழலாகி... எப்படியோ இருக்கு! வர்ணமயமான சீலைகள், பாவாடைகள்

கட்டிக் கலகலத்துச் சிரித்துச் சத்தம் போட்டு ஓடிவிளையாடும் குமரிப் பொண்ணுகள், சின்னஞ் சிறுசுகள், பெரிய பொம்பிளை கள் இந்த வீட்டுக்கு உயிரும் ஒளியும் ஊட்டியதேயில்லை. அதுக்கு இந்த வீடு 'கொடுத்து வைத்திருக்க'வில்லை...எதுக் கும் கொடுத்துவச்சிருக்கணும்னு சொல்லுவாங்களே, அது சரிதான் போலிருக்கு! முதல்லே அப்பாவும் அம்மாவும் மட்டும்...சொந்தக்காரங்க குழந்தையும் குட்டியுமா வந்து இறங்கி வீட்டை கலகலப்பாக்கியிருப்பாங்கன்னு சொல்றதுக் கில்லே. நான் பிறந்த பிறகு, ஒத்தைக்காட்டு ஓரியா இருந் தேன். அப்பா செத்துப்போன பிறகு அம்மையும் நானும் மட்டும்தான். வீட்டுக்கு லெச்சணமா ஒரு மருமக வந்து விளக்கேத்தி வைக்கணுமின்னுதான் அம்மா ஆசைப்பட்டா. அது எங்கே நடந்தது? அம்மை மண்டையை போட்ட பிறகு நான் மட்டுமே இருந்தேன். நாலைஞ்சு வருஷம். அப்புறம் வீட்டை பூட்டிட்டு மதுரையைப் பார்க்க ஓடிப்போனேன். இந்த வீடு நாற்பது வருஷகாலம் பூட்டப்பட்டே கிடந்திருக்கு. பிறவியாபிள்ளை தினம் திறந்துவச்சாரு, அறுப்புக் காலத் திலே நெல்லு கொண்டுவந்து போட்டாங்க, அப்புறம் நெல்லை விலைக்கு வாங்க வியாபாரிகள் வந்து போனுங்க இன் னுலும், இது மொத்தத்திலே அடைச்சுக்கிடந்த வீடேதான். இப்போ நான் வந்து தங்கியிருக்கேன். அதனுலே மட்டும் வீடு கலகலப்பு பெற்றுவிட முடியுமா? இந்த வீட்டிலே ஜீவ ஓட்டம் துடிப்பாயில்லை. அதுதான் இங்கே முக்கியம்.

சில வீடுகள் அப்படி அமைஞ்சுபோகுது. இந்த ஊரி லேயே இப்படி நாலஞ்சு வீடுகள் கிடக்கு. பெரிசு பெரிசாக் கட்டிப்போட்டிருக்காங்க. ஆனு, அதிலே வாழ்ந்து புழங்குற துக்கு ஆட்கள் இல்லே. வீட்டுச் சொந்தக்காரர்க வீட்டை வாடகைக்கு விட விரும்புறதுமில்லே. என்னை மாதிரித்தான்னு வையேன். அதே சமயத்திலே, சில வீடுகளிலே குஞ்சும் குளுவானுமா, பொம்பிளைகளும் ஆம்பிளைகளுமா, இருக்கிற இடம் பத்தாம, ஒரு நெருக்கடி நிலைமை நீடிக்குது. அநேக குடும்பங்களில் நபர்கள் ஜாஸ்தி இருக்கு. குடி இருக்க குச்சு வீடு அல்லது சின்ன வீடுதான் கிடைச்சிருக்கு. டவுண்

ஸைடுகளிலே இந்த நெருக்கடி நிலைமை அதிகம். வாழ்க்கை விசித்திரங்களிலே இதுவும் ஒண்ணு. வாழ்க்கைக் கொடுமையின்னு சிலபேரு சொல்லுவாங்க. ஏதோ ஒண்ணு!

மனு. செனு. மறுபடியும் நெடுமூச்சுயிர்த்தார். எழுந்து இருட்டிலேயே அப்படியும் இப்படியும் மெதுநடை போடலானார். அவர் மனமும் ஊர்ந்து கொண்டிருந்தது.

—ஏ, நீ லேசாச் சொல்லிப்போட்டே, நெய்யில்லா உண்டி பாழ்னு!

எந்தக் காலத்திலோ பாட்டிலே புலம்பி வைத்துவிட்டுப் போன ஆத்மாவை நேரே கூண்டில் ஏற்றிக் குறைகூறுவது போல் அவர் மனம் கனன்றது.

— இந்த ஊர்லே இப்ப எத்தனை வீட்டிலே நெய்யோடு சாப்பாடு நடக்கு? வசதியான குடும்பங்கள் ரெண்டு அல்லது மூணுலேதான் இருக்கும். ஏ, அன்றாடச் சாப்பாட்டுக்கே அல்லாடுதாங்களே, ஒவ்வொரு வீட்டிலேயும்; நெய் ஊத்திச் சாப்பிடுறதுக்கு எங்கே போவாங்க? அப்ப உன் கணக்குப்படி, சிவபுரத்திலே முக்கால்வாசி வீடுகளிலே சாப்பிடப்படுகிறதே உண்டி, அது பாழ்! இல்லையா? டே, இன்னொண்ணுல்லா. மத்தியதரவர்க்கத்துக் குடும்பங்கள் நிலைமை எந்தக் காலத்திலும் ஓகோன்னு இருந்தது இல்லே. எனக்குத் தெரியும்— அநேக வீடுகளிலே விரதநாள், விசேஷம், விருந்துகள்ளுத்தான் நெய் சேர்த்துக்கிடுவாங்க. அவங்க பொருளாதாரம் அதுக்குத்தான் இடம் கொடுத்துது. அவங்க மேற்படி நாள்கள் அல்லாத இதர நாள்களிலே சாப்பிட்ட உண்டி எல்லாம் பாழ்!' அப்படித்தானே? நீறு இல்லா நெற்றி பாழ்ஆம்! சொல்லிட்டான்யா. ஏ, இப்போ சிவசமயத்தை சேர்ந்தவங்களே நெத்தியிலே திருநாறு பூசிக்கிடுறது நாகரிகமாயில்லே, அது தேவையில்லேன்னு விட்டுட்டாங்களே. அவங்க நெற்றி எல்லாம் பாழ்னு சொல்லவேண்டியதுதான். உன் கணக்குப்படி, திருநீறு பூசுவதை மதக் கொள்கையாகக் கொண்டிராத இதர பல சமயங்களைச் சேர்ந்த கோடானுகோடி மக்களுடைய நெற்றி பூராவும் பாழ், பாழ், பாழ்தான்! இல்லையா? போடா

கூறுகெட்டவனே! பெரிசா நீட்டி முழக்கிட்டான், பாழே மனைக்கொடி இல்லா மனையின்னு.

—ஏ, மனைக்கொடி அல்லது குலக்கொடி வந்து தலையெடுத்து, தான் தான்னு திமிருபுடிச்சு ஆடுறதுனுலே எத்தனை மனைகள், எத்தனை குடும்பங்கள், எத்தனை எத்தனை வீடுகள் பாழ்பட்டுப் போயிருக்கு தெரியுமா? இந்தச் சிவபுரம் என்ன, ஒவ்வொரு ஊரிலுமே இதக்கு பிரத்தியட்சப் பிரமாணம் நிறைய உண்டு ... ... போ போ, எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான், படிச்சவன் பாட்டைக் கெடுத்தான்கிற கதை தான்.

மயிலேறும் பெருமாள்பிள்ளை தன் திருப்திக்காக இப்படி எண்ணக் காற்றுடியை ஓடவிட்டபோதிலும், அவருடைய மனப்புழுக்கம் தணியவில்லை.

—மனுசங்க பயத்தின் காரணமாத்தான் கல்யாணம் பண்ணிக்கிடுருங்க, குடும்பம் அமைக்கிருங்க, பிள்ளைகுட்டிகளை பெறுதாங்கன்னு ஒரு அறிவாளி சொன்னுன். அது சரியின்னுதான் சொல்லவேண்டியிருக்கு. தனியா இருக்கிறதுக்கு பயந்துபோய்தான் ஒரு வாழ்க்கைத்துணையை தேடிக்கிடுதான். பேசுறதுக்கு, வேலைகள் செய்றதுக்கு, கூடப்படுத்துக்குறதுக்கு, யோசனைகள் சொல்றதுக்கு, புலப்பங்களையும் பெருமை பேசல்களையும் கேட்டுக்கொண்டிருப்பதுக்கு எப்பவும் வசதியா ஆள் கிடைக்காமல் போருயிம்கிற உள் பயத்திலுலே தான், துணைக்குத் துணையாகவும், வேலைக்காரிக்கு வேலைக்காரியாகவும், தேவடியாளுக்குத் தேவடியாளாகவும், ஆலோசகருக்கு ஆலோசகராகவும், எல்லாமாகவும், ரொம்ப மலிவாகவும் இருக்கும் என்பதனுலேதான் ஒரு பொம்பிளையை தேடிப் புடிச்சு கல்யாணம் பண்ணிக்கிடுருனுக. அவளுக என்ன செய்ருளுக? ஆளை எடை போட்டப்புறம் தலைக்கு மேலே ஏறி உட்கார்ந்து சர்வாதிகாரம் பண்ணத் துணிகிருளுக. ஏமாத்துருளுக. புருசனுக்குத் தெரியாம அரிசியை விக்கிறது, 'சிறுவாடு சேக்கிறேன்'னு திருட்டுத்தனமாப் பணம் சேக்கிறது; அந்தச் செலவு இந்தச் செலவுன்னு கேட்டு வாங்கி

அந்த ரூபாயிலே 'சுங்கம் வைக்கிறது'—ஏ, இந்தப் பொம் பிளைக எமப்பயபுள்ளைக. ஒவ்வொரு குடும்பத்திலும், எல்லாக் காலத்திலேயும், இப்படித்தான்—இன்னும் எமகாதக வேலை கள் எத்தனையோ—பொம்பிளைக பண்ணிக்கிட்டிருக்காளுக.

மீனாட்சி தன் 'மனைக்கொடி'யாக வந்திருக்காமல் இருந் திருந்தால், எவளாவது ஒரு விசாலாட்சி வந்திருப்பாள்; அல்லது ஒரு காமாட்சி வந்திருப்பாள். எவ வந்திருந்தாலும், செக்கு மாட்டுச்சுழற்சி மாதிரிதான் வாழ்க்கை அமைந்திருக் கும் என்று அவர் எண்ணினார்.

— நான் இந்த ஊரைவிட்டே போகாமல் இருந்திருந் தால்?

இருந்திருந்தா வெள்ளிக்கடை முதலாளி ஆகியிருக்க மாட்டேன். ஒரு வெறும் பயலாகவோ வீணனாகவோ ஆகி யிருக்கலாம். எவளாவது ஒருத்தி மனைக்கொடி ஆகியிருப்பா. பிள்ளைகளைப் பெத்திருப்பா. புழுபுழுன்னு அரிச்சுப் புடுங்கி, அமைதியை கெடுத்திருப்பா. கடன் கடன்னு வாங்கி வண் டியை ஓட்டியிருப்பேன். வயலை ஒத்தி வையி—அடமானம் வையி—பிறகு வித்துத் தலைமுழுகு. வாழ்க்கை நடக்கணும்லா வேய்! செலவுகள் ஓட்டணுமே. பணத்துக்கு எங்கே போறது? சரி, வீடு இருக்கா? அதுமேலே கடன் வாங்கு. ஒத்திவச்சு இன்னும் வாங்கிச் செலவு பண்ணு. பிறகு வீட்டையும் வில்லு. மனைக்கொடி ஏசிக்கிட்டே இருப்பா. என்னை எங்க அப்பா பாங்கிணத்துலே 'புடிச்சுத் தள்ளிட்டோளேன்னு புலம்புவா. புருசன் செத்துப்போன பிறகுகூட மனைக்கொடிகள் சும்மா விட்டுவிடுவதில்லை. அடங்க ஒடங்க அடிச்சிக்கிடுவாளுக. அவன்—இவன்னு கூடச் சொல்லி ஏசுவாளுக. பாவிமட்டை, இருக்கையிலேயும் கெடுத்தான்—செத்தபிறகும் திண்டாடும் படி பண்ணிப் போட்டானேங்கிற ரீதியிலே, ஏய், பொம்பிளை களுக்கு மன திருப்திங்கிறது வரவே வராது. ஆம்பிளைகளுக்கும் மன திருப்திங்கிறது லேசிலே வராதுதான், இது பொது மனுஷ சுபாவம். இருந்தாலும், அபூர்வமா சிலபேரு சந்தோ ஷமா, மன நிறைவோடு, இருக்கிறதைக் கொண்டு திருப்

தியா வாழக் கத்துக்கிடுருங்க. ஆனு மனேக்கொடிகளுக்கு அந்த மனப்பான்மை வரவே வராது.

சிவபுரத்திலே மத்தியதர வர்க்கத்துக் குடும்பங்கள் இப்படித்தான் வாழ்க்கை நடத்துது. ஏதோ பெண்டாண்டியும் பிள்ளையுமா, வீடும் வாசலுமா, விசேஷம் கொண்டாட்டம், நல்ல நாள் தீயநாள்னு சொல்லிக்கிட்டு, மற்றவங்க மெச்சனும் கிறதுக்காக, வாழ்றோம்னு பேர் பண்ணிக்கிட்டிருக்கிறுங்களே தவிர, ஒரு குடும்பத்திலாவது அமைதி கிடையாது; நிம்மதி கிடையாது; சந்தோஷம் கிடையாது. கடனும் கவலையும் இல்லாத வாழ்வு கிடையாது. நானும் இந்த வீட்டோடு இந்த ஊரிலேயே இருந்திருந்தா, அதே குட்டையில் ஊறிய அதே ரகமான மட்டையாகத்தான் இருந்திருக்கமுடியும். நாற்பது வருஷங்களுக்கு முந்தி, அபாண்டமான ஒரு பழியைச் சுமத்தி என்னைக் கேவலப்படுத்தணும்னு ஆசைப்பட்டதன் மூலம் இந்த ஊர்க்காரனுக எனக்கு நன்மையைத்தான் செய்தாங்க. அதுக்காகவாவது இந்த ஊரையும் ஊர்க்காரனுகளையும் நான் மறக்காமல் இருக்கணும்...

மஹு. பெரு. உஷ்ணப் பெருமூச்செறிந்தார்.

'வெறும் பயலுக. வெறும் காஞ்சமுர்தாருக' என்று கொதிப்போடு முனகிக்கொண்டார். இருட்டும் மௌனமுமே அதைக் கேட்டிருந்தன.

## 8

தூக்கம் வராமல் சும்மா உருண்டு புரண்டு கொண்டிருப்பதைவிட, விளக்கைப் போட்டுக்கொண்டு பீரோவையாவது ஒழுங்குபடுத்தலாமே என்ற எண்ணம் மயிலேறும் பெருமாள் பிள்ளைக்கு ஏற்பட்டது.

'அதுதாஞ்சரி. ஒரு வேலை முடிந்தமாதிரியும் இருக்கும்' என்று தானாகவே சொல்லியபடி எழுந்து லைட்டை எரியச் செய்தார். மீதம் இருந்த காப்பியை குடித்துவிட்டு, உடனடியாக தம்ளரை அலம்பி வைத்தார்.

அவருக்கு எல்லாமே சுத்தமாக இருக்கவேண்டும். காலையிலே கழுவிக்கிடலாமேன்னு நெனச்சு இதை இப்படியே வச்சிட்டா, எறும்பு வந்து மொய்க்கும்; பாச்சா விழுந்து அசிங்கப்படுத்தும் என்ற நினைப்பு அவர் மனசில் ஓடியது.

பீரோ பட்டாசலில் சுவரோடு சுவராக பதித்துக் கட்டப்பட்டிருந்தது. 'பெரிய அலமாரி'. அதில் 'சப்புச் சவரு லொட்டு லொசுக்கு' எல்லாம்—பத்திரப்படுத்தப்பட வேண்டியனவும் வேண்டாதனவும் ஆக என்னென்னவோ அடைந்து கிடந்தன.

பழைய நோட்டுகள், தபாலில் வந்த கடிதங்கள், புத்தகங்கள், சிறு டப்பாக்கள்...எந்தக் காலத்திலோ வந்த கடிதங்கள்—கல்யாணக் கடிதங்கள், 'பூப்பு நீராட்டு விழா' அழைப்புகள், வெறும் கடிதங்கள்...அவற்றை ஒவ்வொன்றாக மேலோட்டமாகப் பார்த்துவிட்டுக் கிழித்தெறிந்தார்.

— இந்த மாப்பிள்ளைகளும் பொண்ணுகளும் இப்ப எப்படி எப்படி இருக்கிறாங்களோ! பிள்ளைகுட்டி பெத்து, பேரன் பேத்தி எடுத்து, கிழவன் கிழவிகள் ஆகி...எத்தனையோ பேர் செத்தும் போயிருக்கலாம். அவங்க பேருகளை, அவங்களுக்குக் கல்யாணம் என்கிற எந்தக் காலத்திலோ நடந்த ஒரு நிகழ்ச்சிக்கான அழைப்பை, இப்படி நடுச்சாமத்திலே முழிச்சபடி உட்கார்ந்து ஒருவன் வேலை மெனக்கெட்டு, தூக்கத்தையும் கெடுத்துக்கிட்டு, கர்மசிரத்தையாய் படித்துக்கொண்டிருப்பான் என்று சம்பந்தப்பட்டவங்களிலே எவனுமே எவளுமே நினைக்கக்கூட முடியாது. நான்கூட நினைத்ததில்லை. ஆனால், உலகத்திலே இப்படிப்பட்ட காரியங்களும்—அர்த்தம் உள்ளனவும் அர்த்தம் இல்லாதனவும், பயன் உள்ளனவும் பயனில்லாதனவும் ஆன காரியங்கள்—நடந்துகொண்டுதான் இருக்கின்றன!

கைகள் வேலை செய்யும்போது, கண்கள் இஷ்டம்போல் மேயும்போது, மனசும் தன் தொழிலை ஒழுங்காகச் செய்து கொண்டிருந்தது.

பழைய காலண்டர்கள் சில உருட்டிச் சுருட்டி பத்திரமாக வைக்கப்பட்டிருந்தன. விஞேலியா ' ஒபிட்ரோஸ் சோப், ஸன்லைட் சோப் போன்ற கம்பெனிகள் பெரிது பெரிதாக, அழகு அழகாக அச்சிட்டு விநியோகித்திருந்தவை. பெரிது பெரிதாக, வருஷந்தோறும் ஒவ்வொரு வசீகர ஓவியத்தை, குளுமையான நிறங்களில் மினுமினுவென்று அச்சிட்டுக் கொடுத்திருந்தார்கள். ரவிவர்மா ஓவியங்கள்—லக்ஷ்மி, சரஸ்வதி, கருடன்மீது உட்கார்ந்திருக்கும் திருமால், சீதேவி பூதேவியோடு; ஊஞ்சல் மோகினி, புல் தரைமீது ஒயிலாகச் சாய்ந்து தாமரை இலைமேல் ஆசையோடு அன்புக்கடிதம் எழுதும் சகுந்தலை, ஸ்ரீ கிருஷ்ணன்—இப்படி விதம் விதமான படங்கள். ஜெர்மனியில் அச்சாகி வந்தவை.

—இப்ப பார்க்கையிலேகூட அழகாக, அருமையா இருக்கு. மினுமினுன்னு. இதுக்கெல்லாம் கண்ணாடியும் சட்டமும் போட்டு சுவரில் மாட்டி வைக்கணுமின்னு ஆசைப்பட்டேன். போட முடியாமலே போயிட்டுது. இந்த ஊரிலேயே இருந்திருந்தால், அது நிறைவேறி யிருந்திருக்கும்...உம். ஒவ்வொரு மனுசனுக்கும் நிறைவேறாத ஆசைகள் எத்தனை எத்தனையோ.

கனத்த அட்டைகளில் வசீகர வர்ணங்களில் அச்சாகி யிருந்த துருக்கி சுந்தரி, பேபி, சிறு பையனும் பெண்ணும் ஓடை அருகில் உள்ள காற்றாடியால் இயங்கும் மில். இப்படி சில காலண்டர்கள். இவற்றில் சில மேடு பள்ளங்கள் தெரியும்படி அழுத்தமாக அச்சு பதிக்கப்பட்டிருந்தன. ஒன்றில் 'Good Luck' என்ற எழுத்துக்கள், மின்னும் ஜிகினுப்பொடி தூவப்பெற்று, தனிரகமாக இருந்தன.

— கொழும்புக் காலண்டர். இங்கிலாந்திலே பிரின்ட் ஆகிவந்தது. இதுமாதிரிக் காலண்டர் எல்லாம் சமீப காலத்திலே வந்ததே இல்லை. இதெல்லாம் நாற்பது நாற்பத்தைஞ்சு

வருஷத்துக்கு முந்திய சரக்குகள்! இப்பல்லாம் என்ன காலண்டர் தயாரிக்காணுக! பளீர்னு சாயத்தை மெழுகிவச்சு, இயற்கையிலே இல்லாத மாதிரிக் கலர்களைப் பூசி...இந்த லக்ஷ்மியையும் சரஸ்வதியையும் பாரு. என்ன இயல்பான, இதமான வர்ணச் சேர்க்கைகள்! உயிரோடு இருக்கிறமாதிரி, நம்மைப் பார்த்து சிரிச்சுக்கிட்டு, எந்த நிமிஷத்திலும் பேச வாய் திறந்திடுவோம்னு அன்போடு, அருளோடு, குளுமை யாப் பார்த்துக்கிட்டு...தெய்வீகம்கிறுகளே, அந்த லட்சணம், அந்த அம்சம் இந்தப் படங்களிலே இருக்கு...ரவிவர்மா படங் களையே காப்பி அடிச்சு, சொந்தமா லக்ஷ்மி சரஸ்வதிகளை வரைந்துவிட்டது மாதிரி ஜம்பமாப் பெயரையும் எழுதி அச் சிட்டு அனுப்பிடுறுனுக இப்போ. அதுக முகத்திலே ஆழாக்கு அரிசி அருள் கிடையாது. அதுக மூஞ்சியிலேயும் மேலேயும் சுத்தியும் சகட்டு மேனிக்கு வர்ணக்கலவைகள். என்ன ஆர்ட்டோ, எழவோ! வரவர ஜனங்களின் டேஸ்ட்டே கெட்டுப்போச்சு!

மேலும் பல தாள்களை எடுத்துப் பார்த்துக் கிழித்துப் போட்டார். அலமாரியின் ஒரு தட்டில், ஒரு ஓரத்தில், சுருண்டு மடங்கிக்கிடந்த ஒரு ‘அலங்காரப் பொருள்’ அவர் கவனத்தைக் கவர்ந்தது.

சீனுவிலிருந்தோ, ஜப்பானிலிருந்தோ வந்துகொண் டிருந்தன அவை, அந்தக் காலத்தில். மூங்கிலை சன்னமாக, காகிதம்மாதிரி லேசாக, இழைத்து, மிகச் சிறிய துணுக்குகள் ஆக்கி, அவற்றைப் பாய்மாதிரி சேர்த்துத் தைத்து, மூன்றடி நாலடி நீளப்பாய்கள் ஆக்கி, ஆரஞ்சு மஞ்சள் வெளிர் நீலம் போன்ற வசீகர வர்ணங்களில் தோய்த்து எடுத்து, ஒவ் வொன்றிலும் அழகான கலைச்சித்திரங்கள் தீட்டி, விற்பனைக் காக வந்து சேரும். மான்கள், மரங்கள், குடிசை, மலைக் காட்சிகள், பறவைகள்—இப்படி இயற்கையை சித்திரிக்கும் வர்ண ஓவியங்கள். விலை மலிவுதான். அதனால் மத்தியதரக் குடும்பங்களில், இரண்டு மூன்றென வாங்கி சுவர்களில் தொங்கவிட்டிருப்பார்கள்.

மஞ. பெஞ. கையில் வைத்திருந்தது ஆரஞ்ச நிறப்பாய். அதில் கபில நிறத்தில் இரண்டு புள்ளி மான்கள். ஒன்று குனிந்து புல்லை கடித்துக்கொண்டிருந்தது. அதை ஒட்டி நின்ற மற்றது தலைநிமிர்ந்து எங்கோ பார்த்துக்கொண்டிருந்தது. இரண்டும் உயிர்த்துடிப்போடு காணப்பட்டன.

— இதுமாதிரி மூங்கில்பாய் வேலைப்பாடு இப்போதெல்லாம் காணப்படுவதேயில்லை. அந்நாடுகளிலாவது இக்கைத்தொழில்கள் இருக்குமோ; நசித்து மறைந்து போயிருக்குமோ? லேசுலேசான தாள்களை எப்படி எப்படியோ வெட்டி ஒட்டி, கியாஸ் லைட்டு, விசிறின்னெல்லாம் செய்து கொண்டாருவாங்க. பளிச்னு ரோஸ் சிவப்பு, இளநீலம், இடையிடையே தாளின் வெண்மையும் கலந்து அவை ஜோராக இருக்கும். சுருக்கி மடக்கி வச்சிருப்பாங்க. விரிச்சதும் விளக்கு விசிறின்னு உருவாகும். சீனுக்காரனுகளே கொண்டாந்து விற்பாங்க. சில்க், சீனு சில்க்குன்னு மூட்டை மூட்டை மூட்டையாகச் சுமந்துவந்தும் விற்பானுக. வெறும் அசிங்கம் புடிச்ச பயலுக. தவளையைப் புடிச்சு ஆமவடை திங்கிறது மாதிரி கடிச்சுக் கடிச்சுத் தின்பாங்க. பள்ளிக்கூடத்துப் பையனுக தண்ணிப் பாம்புகளை புடிச்சுக் கொடுப்பாங்க. அவனுக துட்டு கொடுப்பானுக. பாம்பின் தலையை நறுக்குன்னு கடிச்சு, தூன்னு துப்பிப்போட்டு, ரசிச்சுத் தின்பாங்க; உடலைத்தான். வேடிக்கை பார்க்க ஒரு கூட்டமே கூடிரும். இதெல்லாம் இரண்டாவது உலக யுத்தம் தலைகாட்டுறதுக்கு முன்னடி. அப்புறம்தான் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டுட்டுதே!

பெரியபிள்ளையின் கையில் ஒரு பட அட்டை கிடைத்தது. நாற்பது வருஷங்களுக்கு முன்னல், தமிழ்நாட்டு மத்தியதர, மேல் நடுத்தர, குடும்பங்களின் கல்யாணமான பெண்களும், கல்யாணத்துக்குக் காத்திருந்த கன்னிகைகளும் கர்மசிரத்தையாகச் செய்துவந்த வேலைகளில் அதுவும் ஒன்று.

வெள்ளை அட்டை. துவாரங்கள் நிறைந்தது. அட்டை எந்த அளவிலும்—பெரிசாக, சிறிதாக, நடுத்தரம் என்று தேவைக்குத் தகுத்தபடி—கிடைக்கும். அட்டைகளை வாங்கி, அவற்றில் மயில், ரயில் என்ஜின், ஸ்டேஷன், மேஜை நாற்காலிகள் கடியாரம் எல்லாம் உள்ள வரவேற்பு அறை; பேபி, கிளி, நாய் என்று படங்களை பென்சிலால் வரைந்து கொள்வார்கள். விதம்விதமான கலர் உல்லன் நூல்களை வைத்து, ஓட்டைகள் வழியாகக் கொடுத்தும் இழுத்தும், சித்திரங்களுக்கு வர்ண உருவம் கொடுப்பார்கள். பேபி, நாய் முதலியவைகளின் தலை, உடல்பகுதி எல்லாம் சதுர, நீண்ட சதுர மூலைகள்—அதாவது, வளைவு நெளிவுகள், கரவு சரிவுகள் இல்லாத—உருவ அமைப்புகளாகத்தான் இப்படங்களில் தென்படும். சில பெண்கள் பெரிய அளவில் சரஸ்வதி, லக்ஷ்மி படங்களைக்கூட வர்ண நூல்களால் ஆக்கி, அந்த அட்டைகளுக்கு கண்ணாடி சட்டமிட்டு எடுப்பான இடங்களில் மாட்டிவைப்பது வழக்கமாக இருந்தது. சிலர் படத்தில் தங்கள் பெயரையும் எழுதிப் பின்னுவதை நாகரிகம் எனக் கருதி, இங்கிலீஷ் எழுத்துக்களில் நூல் வேலை செய்திருப்பார்கள். அவர்கள் படிப்பும் நாகரிகமும் ரொம்ப முற்றிவிடவில்லை. அந்தக்காலத்திலே என்பதை 'விஜயாம்பாள் அம்மாள்' 'வள்ளியம்மை அம்மாள்' 'நீலாவதி' 'மீனும்பிகை' என்று பொறிக்கப்பட்ட எழுத்துக்கள் விளம்பரப்படுத்திக் கொண்டிருந்தன.

— நாகரிகம் முற்றமுற்ற பெண்களது உடைகள்தான் சுருங்கலாயின என்றில்லை. அவர்களது பெயர்களிலும் சில அம்சங்கள் உதிர்ந்தன; சுருக்கம் பெற்றன. விஜயாம்பாள் அம்மாள் விஜயாம்பாள் ஆகி விஜயா ஆகிவிட்டாள். நீலாவதி நீலா ஆனுள். மீனும்பிகை மீனு ஆகிப்போனுள். அம்மை, அம்மாள் என்கிற அடைமொழிகள் உதிர்ந்தது நாகரிக ஓட்டத்தினுலேதான்.

அவர் கையில் இருந்த அட்டையில், குதிரை உருவம் பிரவுன் நூலினுல் பின்னப்பட்டிருந்தது. ஒரு மூலையில்

HORSE என்றும், எதிர்மூலையில் 'குதிரை' என்றும் பின்னி தனது படிப்பறிவை காட்டியிருந்தாள் நூல்வேலை கற்றவள். அவள் யார் என்று தெரியாமல் போய்விடக்கூடாதே! ஆகவே, அடியில் 'பிரமாயி அம்மாள்' என்று ஆங்கிலத்தில் பொறித்து, பச்சை சிவப்பு ஊதா என்று வர்ண நூல்கள் பொதிந்து பெயருக்கு வானவில் பகட்டு கொடுத்திருந்தாள்.

— பிரமு போட்டதா! இம்புட்டுப் போலே கிடந்த காலத்திலேயே, அவளுக்கு அப்போ வயசு என்ன பதிமூணு இருந்திருக்கும், பிரமாயி அம்மாள் ஆகிவிட்ளா அவ! ஹஹஹ... இப்போன்னு தன் பெயரை 'பிரேமா'ன்னு ஆக்கியிருப்பா. அவளை ஆரும் கிளாசிலே சேர்க்கப் போனபோது, பேரு என்னமோ மாதிரி இருக்குதே, பிரமாயி இன்னு! வேறு நல்ல பேரா வேணும்னு மாத்திக்கிடுவோம். ரிஜிஸ்டர்லே பதிஞ்சாச்சன்னு சொன்னு அப்புறம் மாத்த முடியாதுன்னு ஹெட் மாஸ்டர் சொன்னுரு. இந்தப் புள்ளெ என்ன சொல்லிச்சு தெரியுமா? இந்தப் பேருக்கு என்ன? பிரமாயி—பி-ர-மா-யி! இதே நல்லாத்தானிருக்கு. எங்க ஆச்சி பேரு. இதை ஒண்ணும் மாத்தவேண்டாம்னுட்டுது. பெரிய வாயாடியா இருந்துது. பாவம் கல்யாணம் முன்னடியே, பதினெட்டாவது வயசிலே செத்துப்போச்சு. ஊம். மனுசங்க வாழ்வு எப்படி எப்படியோ அமையுது! ஏன் இப்படி இருக்கு? ஏன் இது மாதிரி இருக்கக் கூடாதுன்னு யாரைப்போயி கண்டிச்சுக் கேட்க.

— அம்மை வழியிலே எப்படியோ ஒரு உறவில் அக்காள் ஆன சங்கம்மாளின், அவள் முழுப் பேரு என்ன? வந்து... ஊம்...ஆமா. சங்கரவடிவு அம்மாள், மகள்தான் பிரமு. படு சுட்டி. அது சின்ன வசாயிருந்தபோது அதை எனக்குக் கட்டிவச்சிரலாம்னு ஏகமனசாத் தீர்மானம் பண்ணியிருந்தாங்க. பிரமுவின் பன்னிரண்டு பதிமூணுவது வயசுவரை கூட அந்தத் தீர்மானம் அப்படியேதான் இருந்தது. அப்தச் சமயத்திலே அந்தப் புள்ளெ பின்னிய அட்டைப்படத்தில்

ஒண்ணுதான் இது. கண்ணாடி போட்டு சுவரிலே மாட்டி வைக்கணும்னு கொடுத்தா சங்கமக்கா. அதுக்குக் கண்ணாடி சட்டம் போட வேளை வராமலே போயிட்டுது. பிரமு 'பெரிய மனுஷி' ஆயிட்ட பிறகு, அவ குடும்பத்துக்கும் அம்மைக்கும் ஏதோ தகராறு ஏற்பட்டு பேச்சு வார்த்தையே இல்லாமல் போயி, பிறகு அந்தப் புள்ளைக்குக் கல்யாண ஏற்பாடுகள் பண்ண முயன்று, மாப்பிள்ளை தேடி முடிக்கிறதுக்குள்ளேயே பொண்ணு ஐயா இடத்துக்குப் போய்ச் சேர்ந்துட்டுது! அது செத்துப்போச்சேன்னு அம்மை வருத்தப்படுறதுக்குப் பதில் சந்தோஷம்தான் பட்டா! இப்படிப் பொட்டுப் பொடுக்குன்னு போற புள்ளெயை ரெண்டு வருசத்துக்கு முந்தி என் மகனுக்குக் கட்டிவச்சிருந்தா, அவன் இப்போ பெண்டாட்டியை பறி கொடுத்திட்டு நிற்க நேர்ந்திருக்குமே; அந்த மூதி இந்த வீட்டு மருமகளா வந்து சேராததும் நல்லதாப் போச்சு என்று ரொம்பவும் திருப்திப்பட்டுக் கொண்டாள். உம். மனுஷப் பிறவிகளுக்கு மனம்னு ஒண்ணு இருக்குதே, அதனுடை போக்குகளும் இயல்புகளும் விசித்திரமானவைதான்.

மயிலேறும் பெருமாள் பிள்ளையின் மனசில் பிரமுவின் சின்ன உருவம் நிழலாடியது. கடைசியாக அவளை பார்த்த பாவாடை-தாவணி நிலையும் நிழலிட்டது.

— பதிமூணு வயசிலே பார்த்தது. அப்ப அழகாத்தான் இருந்தா. இப்போ அவள் உயிரோடு இருந்தால், அவளுக்கு அம்பத்துமூணு அம்பத்துநாலு வயசாகணும். அழகா இருப்பாள்னு சொல்ல முடியாது. 'அவளோடு ஒட்டை'யான காந்திமதி, அகிலாண்டம், சுந்தரம் எல்லாம் இப்ப இருக்கிற லெச்சணத்திலேதான் அவளும் இருந்திருப்பா. கன்னம் ஒட்டி, தலைமுடியிலே நரைவிழுந்து, வயதுக்கு மீறிய முதுமை படிந்து, குடும்ப வாழ்வின் சுமைகளும் மத்தியதர வர்க்கத்துப் பற்றுக்குறைப் பொருளாதாரச் சிக்கல்களும் அழுத்தியதாலே எலும்பும் தோலுமாகி, சாயம் போனது களையும் கிழிந்ததுகளையும் கட்டிக்கொண்டு சோளத் தோட்

டத்து வெருளி பொம்மை மாதிரி வளைய வந்துகிட்டிருப்பா அல்லது, வசதியான இடத்திலே வாழ்க்கைப்பட்டிருந்தால் உடல் பெருத்து, மூஞ்சி மொந்தைமாதிரி தடியாகி, வயிற்றுப் பக்கமும் பின்பக்கமும் சதைகள் உருண்டு, விகாரமாப் பருத்து —இருக்காளுகளே எத்தனையோ பொம்பிளைகள், அப்படித் தான் இவளும்—சொள்ளமாடி கணக்கா நிற்பா. நம்ம சமூகத் திலே, பன்னிரண்டு பதின்மூன்ருவது வயசிலே குத்துவிளக் கின் முத்துச் சுடர்போலே பளிச்சிட்ட பெண்களின் பிற்கால வளர்ச்சி எல்லாம் இந்த ரீதியில்தான் இருக்கு. 'அட, அவளா இவ!'ன்னு அதிசயித்து அனுதாபப்படவேண்டிய அளவுக்கு உடலும் உருவமும் மாறிப்போகுது. பிரமுவும் அப்படித்தான் ஆகியிருப்பா. ரெண்டு மூணு குட்டிப் பிரமாயி களையும் பிரமன்களையும் உண்டாக்கி விட்டிருப்பா. அதிலே ஒண்ணும் குறைச்சல் இருக்காது...ஐயோ பாவம்! பதினெட் டாவது வயசிலேயே சிவபதவி அடைந்துவிட்டாள். ஏதோ மனக்குறையினுல் உருகி மெலிந்து கரைந்தே போனுள்!

இல்லாது போன ஒருத்திக்கு விரிவாக ஜாதகம் கணித்த அலுப்பில் பெரியபிள்ளை நெடுமூச்செறிந்தார். மனமாடு நினைவு வெளியில் இஷ்டம்போல் நகர்ந்து மேய்வதில் ஈடுபட்டிருந்த தால், அவருடைய கைகள் வேலை செய்யாமல் நின்றிருந்தன. குதிரைப்படம் பின்னப்பெற்ற அட்டை கையிலேயே இருந் தது. அதை ஒரு இடத்தில் வைத்தார்.

— இப்படி அட்டையிலே நூல்களைக் கொண்டு படங்கள் பின்னி பொழுதுபோக்குவதை தமிழ்நாட்டுப் பெண்கள் மறந்து எத்தனையோ வருஷங்கள் ஆச்சு. பிறகு வந்த பெண் கள் 'சமைஞ்சு வீட்டுக்குள்ளே இருக்கையிலே' பொழுது போறதுக்காக, துணியிலே பூவேலை—எம்பிராய்டரி—பண் ணக் கத்துக்கிட்டாங்க. அப்போ எதிலே பார்த்தாலும் பச்சை நூல் கொடிகளும் சிவப்புப் பூக்களும், வளைவு நெளிவுகளும், கிளிகளும் வண்ணுத்திப் பூச்சிகளுமாப் பின்னிவச்சாங்க. அப் புறம் வந்ததய்யா பிளாஸ்டிக் வயர்களும் பாசி மணிகளும். பாசிமணிகளை கொண்டு 'மணிப்பர்ஸ்' தயாரிக்கிறது, சிறு

சிறு பொருள்கள் உருவாக்குவது; பிளாஸ்டிக் வயரினலே பை, கூடை, அது இதுன்னு விதம்விதமான வடிவங்களில் உருவாக்குவது என்று கிளம்பிவிட்டாங்க. எங்கும் இதே ஒரு வெறி வேகத்திலே நடந்துது. வீட்டோடு இருக்கிற பொம்பிளைகளுக்கும் பொழுது போகணுமில்லா?...வேலே வேணுமில்லா? எதாகுல் என்ன! ஆம்பிளைகளுக்கு, எதன் பேராலாவது, எப்பவும் செலவு வச்சுக்கிட்டிருப்பதே பொம்பிளைகளின் முக்கிய வேலை. எல்லாக் காலத்திலும் இதுதான் நியதி.

அலமாரியை சுத்தப்படுத்தும் வேலை ஒரு மாதிரியாக முடிந்தது.

— பரவால்லே. ஒரு வேலை முடிஞ்சுது. இப்ப ஸ்ட்ராங்கா கடுங்காப்பி குடிச்சா அருமையா இருக்கும்! போடலாமா?

மணி ஒன்று இருபது ஆகியிருந்தது. காப்பி தயாரித்து, பால் இல்லாக் காப்பியை குடித்து இன்புறலாமா வேண்டாமா என்று யோசிப்பதில் சில நிமிஷங்கள் கரியாகின.

— ஸேரி, வேண்டாம். சும்மா படுக்கையிலே விழுந்து கிடப்போம். தூக்கம் தான வந்திரும். வரட்டாலும் உருண்டு புரண்டாலே சுகமாகத்தானிருக்கும். ரெஸ்ட் எடுத்த மாதிரியும் ஆச்சு.

மீண்டும் இருட்டில் ஐக்கியமானர் பிள்ளை. சிறிது நேரத்தில் தூங்கியும் போனர்.

# 9

'ஏ செதம்பரம், பீக்காக்-ரைடர் (PEACOCK-RIDER) இந்த ஊரிலேயே பலமா டேரா போட்டு விட்டாப் போ லிருக்கே!'

'இனிமே அவரு இந்த ஊரிலேயே தான் இருக்கப்போறு ராம்டா.'

'ஏனும்?'

'அவர் கிட்டேப் போய் கேளு! பிறந்த ஊரு, சொந்த வீடு, கடைசி காலத்திலே நிம்மதியா இருக்கலாமேன்னு வந்திருப்பாரு.'

'ஆமா, ஏன்டே அவரு இந்த ஊரைவிட்டுப் போனாராம்? ஏன் இந்த ஊரை எட்டிப் பார்க்காமல் இருந்தாராம்?'

'இவை எல்லாம் பீக்காக் ரைடரிடம் கேட்கப்பட வேண்டிய கேள்விகள். என்கிட்டே கேட்டால்?'

தெருவோடுபோன இரண்டு பையன்கள்பேசிக்கொண்டே நடந்தார்கள். மயிலேறும் பெருமாள் பிள்ளை வீட்டுக்குள் இருப்பார்; தூங்கிக் கிடப்பார்; அவர் காதில் விழாது என்ற தைரியத்தில் சத்தம் போட்டுப் பேசியபடி நடந்த அவர்கள் எட்டச்சென்று விட்டதால், மேற்கொண்டு அவர்கள் பேசி யிருக்கக் கூடியது எதுவும், வீட்டின் முன் அறையில் கட்டிலில் தூங்காமல் படுத்திருந்த பெரிய பிள்ளையின் காதுகளைத் தொட வில்லை.

அப்போது பிற்பகல் மூன்று மணி. பள்ளிக்கூடம் விட்டிருக்கக்கூடிய நேரம் இல்லை. என்றாலும், பள்ளிக்கூடம் போன பயல்களில் இரண்டு பேர்தான் திரும்பி வந்திருந் தார்கள். யார் வீட்டுப் பையன்கள் என்பது அவருக்குத் தெரியாது. 'மூத்தவனுக' யாரு என்று அறியும் அவாவோடு அவர் வெளியே வந்து எட்டிப் பார்க்கையில், அவ்விருவரும் கீழ்த்தெருவுக்குப் பக்கம் போவது தெரிந்தது.

—நான் இந்த ஊர்காரன்னுதான் பேரு. எனக்கு இப்போ இந்த ஊரிலே முக்கால்வாசிப் பேரை தெரியாது. பெரியவன்களையே அடையாளம் கண்டுக்கிடுறது சிரமமாயிருக்கு. இது யாரு, எந்த வீடு, என்ன வேலை பார்க்காரு என்கிற விவரம் எதுவும் எனக்குத் தெரியாது. பொம்பிளைகளை தெரியவே தெரியலே. எல்லாம் புதுசு புதுசாத் தோணுது. இப்படி இருக்கையிலே பையன்களையும் பொம்பிளைப் புள்ளைகளையும் என்னாலே எப்படி இனம் கண்டு கொள்ளமுடியும்?

'என்ன அண்ணாச்சி, வெளியிலே நிக்கிறீக? வெயில் என்னமாக் கொளுத்துது!' என்று பேசியபடி பால்வண்ணம் பிள்ளை வந்து சேரவும், இருவரும் வெறிச்சிட்ட தெருவை பார்த்தபடி நின்றனர்.

'ரெண்டு பையன்க போறாங்க. யாருன்னு பார்க்க வந்தேன்.'

'ஏன், என்னமும் சேட்டை பண்ணினானுகளா?'

'சல்லிப் பயலுக சலம்பிக்கிட்டுப் போறானுக. இவரு ஏன் ஊரைவிட்டுப் போனாரு; இப்ப ஏன் திரும்பி வந்திருக்காருன்னு பெரிசாக் கவலைப்பட்டுக்கிட்டுப் போறானுக. இவனுகளுக்கு ஏன் இந்தக் கவலையோ தெரியலே!'

'கிழக்கே போனப்புறம் திரும்பிப் பார்த்ததும் செதம்பரம் பய, டேய் பீக்காக் ரைடர் நம்மையே பார்த்துக்கிட்டு நிக்காருடான்னான். இந்தப் பயலுக ஏதோ பண்ணியிருக்கானுகன்னு என் மனசிலே பட்டுது.'

'யாரு அவன் செதம்பரம் ?'

'மானம் பார்த்தான்சொக்கலிங்கம் மகன். இன்னொருத்தன் அப்பளம் அமுக்கி ஆறுமுகம் பிள்ளை பேரன். ரத்தினம்னு பேரு.'

பெரிய பிள்ளை பிரமாதமாகச் சிரித்தார்.

அவர் இவ்வளவுக்குச் சிரிக்கும்படியா நாம ஒண்ணும் சொல்லிப் போடலியே என்று திகைத்து, அவர் முகத்தையே

பார்த்து விழித்தபடி இருந்தார் மற்றவர். என்ன 'அண்ணாச்சி என்ன?' என்றார்.

மனை. பெண. சிரிப்பை அடக்கிக்கொண்டு சொன்னார்: 'நம்ம ஊர்காரனுக எப்பவுமே பேரு வைக்கிறதிலே எமப் பளுவனுகதான். ஆளுக குணத்தை அறிஞ்சு, அல்லது உருவம் சுபாவம்களுக்குத் தக்கபடி, பொருத்தமான பேரா வச்சுப்போடுருங்க. அவங்க அவங்க சொந்தப் பேரு, வீட்டுப் பேரு, வழங்கும் பேரு இதுகளை எல்லாம் தூக்கி முழுங்கிட்டு இந்தப் பட்டப் பேரு அடிபடுவதும் சகஜமாயிடுது. அப்பளம் அமுக்கின்னதும் அவரு ஞாபகம் வந்திட்டுது. ஆறுமுகம் பிள்ளைக்கு ஏன் அந்தப் பேரு வந்தது, உமக்குத் தெரியுமா?'

'சரியான காரணம் எனக்குத் தெரியாது. எப்பவோ ஒரு சமயத்திலே எங்காவது ஒரு கடையிலோ, அல்லது அப்பளம் போட்டு விக்கிறவ வீட்டிலேயோ அப்பளத்தை அமுக்கி, அகப்பட்டுக்கிட்டு முழிச்சிருந்திருப்பாரு; அதிலேயிருந்து அவருக்கு அந்தப் பேரு வந்திருக்கும்னு நானு நெனச்சுக்கிட்டேன்' என்று பால்வண்ணர் தெரிவித்தார்.

'அப்படியில்லை விசயம், உள்ளே வாரும் சொல்லுதேன்' என்று அண்ணாச்சி முன்னே நடக்க, தம்பியாபிள்ளை பின் தொடர்ந்தார். அவரவருக்கு உரிய இடத்தில் வசதியாக அமர்ந்ததும் மனை. பெண. ஆரம்பித்தார்:

'அப்போ ஆறுமுகம் பிள்ளைக்கு பன்னிரண்டு பதிமூணு வயசுதான் இருக்கும். வீட்டிலே நல்ல சாப்பாடு, எண்ணையிலே பொறிச்ச அப்பளம்ரொம் கிடைக்காது. அநேகநாள் வெறும் புளித்தண்ணியும் சோறும்தான். அப்பளம் இருந்தால் அடுப்புக் கங்குலே சுட்டு எடுத்துவைப்பா அம்மாக்காரி. ரொம்பவும் கஷ்டப்பட்ட குடும்பம்னு சொல்றதுக்கில்லே. போதுமான வசதிகள் இல்லாத நிலைமை. புள்ளைகுட்டி ஜாஸ்தி. எப்படியோ நேத்தியப்பாடு கழிஞ்சுது, இன்னையப் பாடு கழியுதுன்னு கட்டும் செட்டுமா வாழ்க்கை நடத்தியாக வேண்டிய ஒரு கட்டாயம் அந்தக் குடும்பத்துக்கு இருந்தது.

அதனாலே கல்யாண வீடு, விசேஷ வீடுகள் வந்தால், புள்ளைகள் மூணுவேளைச் சாப்பாட்டுக்கும் தவரும ஆஜராகிவிடும். வாய்க்கு ருசியாகவும் வயிறு முட்டவும் சாப்பிடமுடியுமே! ஆறுமுகமும் கரெக்ட்டா சாப்பாட்டுக்கு வந்து, பந்திக்கு முந்திக்கிடுவான். அவனுக்கு பொரிச்ச அப்பளத்திலே ஒரு ஆசை; அதனாலே முதல்லே அப்பளத்தை இலையிலே விழுற அப்பளத்தை எடுத்து இரண்டா முறிச்சு பத்திரமா மடியிலே வச்சுக் கட்டிக்கிடுவான். ஐயோவ், இந்த இலைக்கு அப்பளம், இங்கே அப்பளம் போடலேன்னு கத்துவான். ஆரம்பத்திலே ஒன்றிரண்டு இடங்களிலே அவன் யுக்தி பலிக்கவும் செய்தது. யாராவது இன்னொரு அப்பளம் கொண்டுவந்து இலையிலே வைத்துவிடுவாங்க. ஆனா அப்புறமா அவன் குட்டு வெளிப் பட்டுப்போச்சு. ஏலே, நான்தான் இலைவிடாம அப்பளம் போட்டேனே, உன் இலைக்குமட்டும் எப்படி அப்பளம் விழாமல் தவறும் என்று பரிமாறினவன் சண்டைக்கு வர, அடுத்த இலையிலிருந்த பையன் ஆறுமுகத்தின் வேலையை சொல்லிக்காட்ட, 'எலேய் அப்பளம் அமுக்கி, ஒவ்வொரு விசேஷ வீட்டிலும் நீ இப்படித்தான்லே செய்துக்கிட்டுவாறே' என்று பரிமாறுகிறவன் கத்த, ஒரே ரகளையாப்போச்சு. அதிலேயிருந்து ஆறுமுகத்துக்கு அப்பளம் அமுக்கி என்ற பேரும் நெலச்சுப்போச்சு. ஒருத்தனுக்கு ஒரு பேரு ஏற்பட்டால், அது அவன் சாகிறவரைக்கும் போகாது. ஏன், செத்த பிறகும்கூட விட்டுப்போவதில்லை. அவன் புள்ளைகுட்டி பேரன் பேத்திகளை குறிப்பிடதுக்கு அந்தப் பேரை சொல்லித் தானே விளக்குகிருங்க. நீரு இப்ப சொல்லலியா, அப்பளம் அமுக்கி ஆறுமுகம் பிள்ளை பேரன் இன்னு, அதுமாதிரி!'

'பட்டுலேஞ்சி' லேசாகச் சிரித்துவைத்தார். 'வாஸ்தவம் அண்ணாச்சி' என்றார்.

'சொக்கலிங்கம் எப்பவும் மானத்தை பார்த்துக்கொண்டே நடப்பான்; நிற்பான். யார்கூடப் பேசி நின்றாலும், எதிரே நிற்பவரின் முகத்தைப் பார்த்துப் பேசமாட்டான். மானத்தை மானத்தை பார்ப்பான். அதனாலே அவனுக்கு மானம் பார்த்

தான்னு பேரு வந்தது. சோமநாதபிள்ளைன்னு ஒருத்தர் இருந்தாரு. சோறு தின்னதும் நிறைய தண்ணி குடிச்சிடு வாரு. ஒரு செம்புத்தண்ணி குடிப்பாரு. பிறகு எதுக்களிச்சு எதுக்களிச்சு தண்ணியை துப்பிக்கிட்டே இருப்பாரு. அதிலே பருக்கைகளும் சேர்ந்துவந்து விழும். அதனுலே அவருக்கு இரை கக்கியாபிள்ளையின்னு பேரு வந்துட்டுது.'

'தாதன்குளத்துக்காரரு ஒருத்தரு சில வருசம் முன்னே இங்கே வந்து குடியிருந்தாரு. பிழைப்பு தேடி வந்தவர்தான். ஞானசம்பந்தம்னு பேரு. அவரு பேசும்போது வாய்க்கடை களிலே, வாயின் இரண்டு பக்க உதட்டு ஓரங்களிலும் எச்சில் நுரைத்துக்கொண்டு கிளம்பும். அவரை சாளவாய் ஞானசம் பந்தம்னுதான் எல்லோரும் சொல்றது வழக்கம். இந்த ஊரிலே காப்பி கிளப் நடத்த முடியுமான்னு பார்த்தாரு. முடி யலே. அப்புறம் ஸ்ரீவைகுண்டத்துக்கோ, கோவில்பட்டிக்கோ போயிட்டதாகச் சொன்னுங்க' என்று பால்வண்ணர் ஒரு தகவல் தந்தார்.

'அதுதான், யாராவும் இருக்கட்டுமே. பொருத்தமான பேரு வச்சுப்போடுவாங்க. பொம்பிளேகளும் தங்களுக்குள்ளே தனிப்பேரு வச்சிருப்பாளுக. அதை சாட்டித்தான் பேசு வாளுக. பரும் பாம்படக்ககாரி, வட்டக்கண்ணி, பெருமைக் கார மீனுட்சி—இப்படி விதம்விதமா இருக்கும். ஒருத்தி காது கொள்ளாமல் 'தொங்கத் தொங்க,தோளிலே வந்து புரளும்படி தண்டிதண்டியா பாம்படம் போட்டிருந்தா. அவளை எல் லோரும் பரும் பாம்படக்காரின்னுதான் குறிப்பிடுவாங்க.'

'ஆமண்ணுச்சி, இப்போ இந்தப் பாம்படம்கிற நகை அவ்வளவாக் கண்ணிலே படுறதில்லே, கவனிச் சேளா? வயசான பொம்பிளேக சிலபேரு காதுகளிலே காணப்படுது. இளந்தலைமுறைப் பொம்பிளேகளிலே யாருமே காது வளக்கிறதுமில்லே, பாம்படம் போட்டுக்கிடறதும் இல்லே' என்ருர் பால்வண்ணர்.

'முன்னுலே அதுதான் சில சாதிகளின் நீங்காத வழக் கமா இருந்துது. ஏழு வயசு, எட்டு வயசிலேயே காதை

அறுத்து, அதுக்குள்ளே பஞ்சையோ துணியையோ திணிச்சுத்திணிச்சு, காது நீளமாகித் தொங்கும்படி பண்ணு வாங்க. புண்ணு ஆறி, காது வலுத்ததும், பாம்படம் அணி வாங்க. அந்தக் காலத்திலே திருநெல்வேலி ஜில்லாவிலே எங்கேபார்த்தாலும் பாம்படக்காரிகள்தான்!'

'பாம்புவடம் என்கிறதுதான் பாம்படம்னு ஆகியிருக்கும் அண்ணுச்சி. வடம் வடமா, அதாவது வளைவா, சுருள் சுருளா, அடுக்கடுக்கா, எப்படி எப்படி எல்லாமோ அந்த நகை செய்யப்பட்டிருக்குமில்லே? பாம்பு சுருண்டு வளைஞ்சு வடமாகிக் கிடக்கிறமாதிரி இந்த நகையும் தோணுறதுனாலே அதுக்கு பாம்படம்—பாம்புவடம்-னு பேரு வந்திருக்கும்' என்று பால்வண்ணம் தன் ஆராய்ச்சி அறிவைக் காட்டிக் கொண்டார்.

'அப்படித்தான் இருக்கும்' என்று அண்ணுச்சி ஆமோதித்தார். 'எத்தனையோ இதுக காலவேகத்திலே அடிபட்டு மங்கியும் மறைஞ்சும், மாறியும் குறைந்தும் போயிக்கிட்டே இருக்கு. நாற்பது நாற்பத்தஞ்சு வருஷங்களுக்கு முன்னாலே நம்ம ஜில்லாவிலே கருப்பட்டிப் புகையிலே என்பது எவ்வளவு பிரபல்யமா இருந்துது! இப்ப அது போன இடமே தெரியலியே. அப்படி ஒரு புகையிலை இருந்தது, ஜனங்கள் அதை அதிகமா உபயோகிக்கிற பழக்கமும் இருந்தது, கையையும் வாயையும் அசிங்கமாக்கிக்கிட்டு, நின்ன இடம் இருந்த இடம் எங்கேயும் புளிச்-புளிச்னு துப்பிக்கிட்டு சில்லறைச் சனங்க நெடுகவும் அசிங்கப்படுத்திக்கிட்டுத் திரிஞ்சாங்க என்பதே, இப்போ உள்ளவங்களுக்கு நம்பக் கஷ்டமான ஒரு விஷயமாகத்தானிருக்கும்' என்றார்.

'எனக்கு நல்லா ஞாபகமிருக்கு அண்ணுச்சி. வெள்ளைப் புகையிலையை—நீளமா, சடைசடையா, கட்டமா இருக்கும்—அப்படி அப்படியே கருப்பட்டித் தண்ணியிலே நாள் கணக்கிலே ஊறவச்சு எடுத்து, ஓலைப்பாய் விரிச்சு வெயிலில் காய வைப்பாங்க. நான் சின்னப்பையனா இருக்கையிலே, பாளையங்கோட்டை வடக்கு பஜாரில், தெருவிலே இப்படிப் பாய்

விரித்து புகையிலையை உலர வைக்கிறதை தினசரி பார்த் திருக்கேன். சதசதன்னு, கறுப்பாகி, ஈ மொய்ச்சுக்கிட்டு— பார்க்க சகிக்காது. இதை எப்படித்தான் விரல்களால் பிச்சுப் பிச்சு வாயில் போடுறுங்களோ என்று நினைப்பு எனக்கு அதை பார்க்கும்போதெல்லாம் உண்டாகும்' என்று பால்வண்ணர் கூறினர்.

கருப்பட்டிப் புகையிலை பேச்சு எழுந்த சமயத்தில் அங்கு வந்து சேர்ந்திருந்த சுகவாசி சூரியன்பிள்ளை இப்போது குரல் கொடுத்தார்: 'கொத்துப் புகையிலை, தடைப் புகையிலை, அழகு அழகான பொட்டலங்களில் வரும் வெள்ளைப் புகை யிலை...பக்குவப்படுத்தப்பட்ட துணுக்குகள் எல்லாம் நாகரிக காலத்துக்கு ஏற்றதாயிட்டுது. அதுனலே கருப்பட்டி புகை யிலை போன இடம் புல்லு முளைச்சிப்போச்சு' என்றுர்.

'பேரு வைக்கிறது பத்தியில்லா சொல்லிக்கிட்டிருந் தேன் முதல்லே. ஒரு பையன் என் பேரை பீக்காக் ரைடர்னு மாத்தியிருக்கானே அதுகூட பழைய வழக்கத்தை ஒட்டித் தான் வந்திருக்கு. மயில் ஏறும் பெருமாள் என்பதுக்கு பீக்காக் ரைடிங் பிக் ஃபெல்லோ (Peacock Riding Big Fellow) என்று சொல்வதுதான் பொருத்தமாக இருக்கும். என்பதனலோ, அல்லது இதுவே போதும் என்றே என்னை வெறும் பீக்காக் ரைடர் ஆக்கிப்போட்டானுக பையனுக' என்று சொல்லிச் சிரித்தார் அவர்.

'சுத்தச் சின்னப்பயலுக!' என்றுர் 'பட்டுலேஞ்சி'.

'இதிலே கோபப்படுறதுக்கு ஒண்ணுமே இல்லே' என்று இயல்பாகப் பேசினர் மனு. பெனு. 'சின்னப் பையனுகளின் சுபாவமே அதுதான். நாங்க வைக்காத பேரா! பண்ணுத கேலியா! அரசப்பிள்ளை என்கிறவரை கிங் ஃபாதர் (King Father)னுதான் குறிப்பிடுவோம். செந்தலைக் கட்டையான்னு ஒருத்தி இருந்தா. செந்தலைக்கட்டை என்ற ஊரிலிருந்து வந்தவ. அவளை ரெட் ஹெட் வுட் (Red Head Wood) என்று தான் பேசுவோம். பெரியப்பாவை Big என்போம். Big நிக்குதே, Big எங்கோ கிளம்பிட்டுது என்று, திரிபுரசுந்த

ரின்னு ஒருத்தி. அவ த்ரீ ஸைட் பியூட்டி (Three side Beauty) ஆகியிருந்தா எங்க பேச்சிலே. இதெல்லாம் வாழ்க்கைக்கு சுவை ஏற்றுகிற ரசமான சிறு இனிமைகள். இதுகள் எல்லாம் இல்லாமப் போனு, வாழ்க்கை வறட்சி அதிகமா வாட்டும்.'

'ரசமான விஷயம்னதும் ஞாபகம் வருது, அண்ணுச்சி.. நாங்க படிக்கையிலே, நெய்ப்போளியின்னு ஒருத்தருக்குப் பேரு வச்சிருந்தோம். நெய் ஊற்றி தயாரித்த போளிமீது அவருக்கு ரொம்ப ஆசை போலிருக்குன்னு நெனைக்கிறவங்க நெனைச்சிக்கிடுவாங்க. ஆனு உண்மை அது அல்ல. அவருக்கு நெப்போலியன் போனபார்ட்தான் பெரிய ஹீரோ. அப்போ பிரிட்டிஷ்காரனுகளை அவருக்குப் பிடிக்காது. நம்ம நாட்டிலே சுதந்திரப் போராட்டம் வளர்ந்து கொண்டிருந்த கட்டம். சுதந்திரம் கொடுக்க மறுத்த பிரிட்டிஷ்காரனுகளை கதிகலங்க அடிக்கனும்; சரித்திரத்திலே வாருனே நெப்போலியன்—பிரிட்டிஷாரை திணற அடிச்சவன்—அவன்மாதிரி ஆசாமி இப்ப தலைகாட்டணும்; நம்ம நாடு விடுதலை அடைய நமக்கு ஒரு நெப்போலியன் தேவைன்னு லெக்சர் அடிக்கிற மாதிரிப் பேசுவார். இம்மென்னும் முன்னே இருநூறும் முந்நூறும், அம்மென்ருல் ஆயிரமும் ஆகாதோன்னு ஒரு பாட்டிலே வாற மாதிரி அவரு மூச்சுக்கு முந்நூறு தடவை நெப்போலியன்—நெப்போலியன்னு உச்சரிப்பாரு. ஒருசமயம் ஒருத்தர் கேட்டாரு—பாவம், ஹிஸ்டரி படித்திராதவர். நெப்போலியன் பற்றி அவர் என்னத்தைக் கண்டார்?—அதென்னய்யா இவரு சும்மா சும்மா நெய்ப்போளி நெய்ப்போளிங்கிருரே அது என்ன விஷயம்? நெய்ப்போளிங்கிறது ஒரு ஆளு பேரான்னு கேட்டாரு. எல்லாருக்கும் ஒரே சிரிப்புன்னு வையுங்க. அன்றுமுதல் நெப்போலிய பக்தருக்கு நெய்ப்போளிங்கிற பேரு வாய்த்துப்போச்சு' என்று பால்வண்ணம் சுவாரஸ்யமாகக் கூறினுர்,

சுகவாசி வாய்விட்டுச் சிரித்து இதை பெரிதும் ரசித்தார். அண்ணுச்சியும் 'போனுப் போகுது' என்று தயவுக்காகச் சிரிப்பது போல லேசாகச் சிரித்து வைத்தார்.

'ஊரு ரொம்பக் கெட்டுப் போகுது அண்ணாச்சி. ஊருன்னு நம்ம ஊரை சொல்லலே. பொதுவாச் சொல்லுதேன்' என்று புலம்பியபடி வந்து நின்ற பிறவிப் பெருமாள் பிள்ளை பள்ளிக் கூடத்துப் பையன்களின் போக்குகள் பற்றிக் குறை கூறினார். 'ஸ்ட்ரைக்காம். அதுக்காக பஸ்களை ஓடவிடாமல் மறிக்கிறானுக. நாகர்கோவில் பஸ் ஒன்றை நிறுத்தி, ஆட்களை இறங்கச் சொல்லி, பஸ்ஸுக்கு தீ வச்சுக் கொளுத்திட்டானுக. இதெல்லாம் என்ன வேலை? படிக்கிற பையனுகளா லெச்சணமா இருக்கிறதை விட்டுப் போட்டு...'

'எப்பவுமே படிக்கிற பையனுக, படிக்க விரும்பாமலே பள்ளிக்கூடம் போற பையனுக என்று இரண்டு இனம் உண்டு. முன்பு படிக்கிற பையனுக நெறய இருந்தாங்க. நாங்களும் படிக்கப் போறோம்னு சொல்லிக்கிட்டு சும்மனாச்சியும் பள்ளிக் கூடம் போயி ஜாலி-ரகளை-கலாட்டா பண்றவங்க குறைச்சலா, ஒரு வகுப்புக்கு ஒண்ணு ரெண்டு பேரு இருந்தாங்க. இப்போ அவங்களே மெஜாரிட்டி ஆயிட்டாங்க. உண்மையாப் படிக்க ஆசைப்படுறவங்களையும் படிக்க விடாமல் கெடுக்கிறாங்க' என்று பெரிய பிள்ளை கூறினார்.

'ஷேப்டர் (Schaffter) ஸ்கூல்லே, உள்ளே நுழைகிறதுக்கு முன்னாடி ஆர்ச்சுக்கு மேலே எழுதி வச்சிருக்கானே Disce Aut Discede என்று, அது நல்ல உபதேசம்னு தோணுது. அது லத்தீன் பாஷை; Learn or Leave out என்று அர்த்தம்னு முன்பு பாளையங்கோட்டை வாத்தியார் ஒருத்தர் சொன்னார். ஏ, பள்ளிக்கூடம்கிறது படிக்கிறதுக்காக ஏற்பட்டது. படிக்க வாறியா—ஒழுங்காப்படி. படிக்க இஷ்டமில்லாம கழுதைப் புரளி பண்ணனும்னு நெனக்கியா? அதை வெளியே போயி செய்யி; இங்கே இருந்துக்கிட்டு மத்தவங்களுக்கு இடைஞ்சல் பண்ணாதேன்னு அது தெரிவிக்குது என்றும் அவரு சொன்னாரு. ஒழுங்காப் படிச்சு முன்னேறணும்னு ஆசைப் படுறவங்க மட்டும் தான் பள்ளிக்கூடத்துக்குப் போகணும். அதை விட்டுப் போட்டு, படிக்கப் போறோம்னு போறது; பிறகு, ஸ்ட்ரைக், பள்ளிக்கூடம் போகாதேயின்னு கலாட்டா

பண்றது; இதெல்லாம் என்னங்கேன்? நாங்க படிக்கிற காலத்திலே எல்லாம் இப்படியா நடந்துது? என்ன அண்ணுச்சி?' என்ருர் பால்வண்ணர்.

'அது சரி. என்னமோ ஒரு பள்ளிக்கூடம் பேரு சொன்னீரே?'

'ஷேப்டர் ஸ்கூல்னேன். ஜங்ஷனிலிருந்து டவுனுக்குப் போற ரோடிலே இருக்கு.'

'அது ஸி.எம்.எஸ். இல்லையா? சர்ச் மிஷன் ஸ்கூல்?'

'அந்தப் பேரு மாறி ரொம்ப காலம் ஆச்சு அண்ணுச்சி. அதுக்கு வயக் காட்டுப் பள்ளிக்கூடம்னு ஒரு பேரு கூட இருந்துது.'

'அதே தான். வயல்காடுகள் மத்தியிலே தனிக் கட்டிடமா அந்தப் பள்ளிக்கூடம் இருந்துது, அதனுலே தான்.'

'இப்போ ரோடு நெடுகக் கட்டிடங்கள் ஆகிப்போச்சு. ஜங்ஷன் தனி, டவுண் தனி என்ற வித்தியாசமே கிடையாது. ஒரே நகரப் பகுதி மாதிரித்தான். பாளையங்கோட்டைக்குப் போகிற போதும் அப்படித்தான். வண்ணுர்பேட்டையிலே யிருந்து முருகன் குறிச்சி வரை நாகரிகக் கட்டிடங்கள் தான். அந்தக் காலத்திலே வயல்கள் பச்சுப்பச்சுனு, வளமா வளர்ந்து நிற்கும் நெல்பயிர்களோடு காட்சி தரும். அதுகளை அழிச்சு இப்போ மோட்டார் கம்பெனிகள், ஒர்க்ஷாப்புகள், பெட்ரோல் பங்க் என்று நாகரிகச் சேர்மானங்கள் வந்தாச்சு' என்று பால்வண்ணம் பிள்ளை தெளிவு படுத்தினுர்.

—நான் பாளையங்கோட்டை திருநெல்வேலிப் பக்கம் நாற்பது வருஷமா எட்டியே பார்க்கலே. இங்கே வந்த பிறகு கூடப் போய் பார்க்கலே. ஒரு தரம் போகணும்.

மனு. பெனு. வின் மனம் குறித்துக் கொண்டபோதே, அவர் பேசலானுர் :

'நான் மெட்ரிகுலேஷன் வரை வயல் காட்டுப் பள்ளிக் கூடத்திலே தான் படிச்சேன். இங்கிருந்து போய் வந்து தான். முதல்லே வீராவரம் ரயிலடிப் பள்ளிக்கூடத்திலே தான் படிச்சுக்கிட்டிருந்தோம். எட்டாவது வகுப்பை எட்டி யதுமே வால்தனம் பண்ண ஆரம்பிச்சிட்டோம். நானும் இந்த ஊரிலேயிருந்து போற பையன்களும் தான். வகுப்பு நேரத்திலே வெளியே வந்து மாமரத்திலே கல்லு வீசி மாங்கா அடிக்கிறது...அப்போ அங்கே சுற்று வட்டாரத்திலே மாந்தோப்புகள் நிறைய இருந்துது...இப்படி ஏதாவது பண்றது. தமிழ் ஐயா அருமையான சைவப் பழம். அவரை கிண்டல் பண்ணனும்னு திட்டமிட்டோம். அவரு வழக்கமா ஒரு பையனை அனுப்பி மூக்குப் பொடி வாங்கி வரச் சொல்லு வாரு. ஒரு நா நாங்க என்ன செய்தோம் தெரியுமா? ஒரு குருவிக் குஞ்சை புடிச்சுக் கொன்னு, அதை கல்லு வச்சுத் தட்டி சதசதன்னு ஆகும்படி பண்ணினோம். பொடி மட்டை யிலே இருந்த பொடியை கீழே தட்டிட்டு, கொஞ்சம் போல பொடியோட இந்தக் குருவிக் குஞ்சையும் சேர்த்துப் பிசைஞ்சு வச்சோம். அருமையா, கடைக்காரன் மட்டையை மடிச்சுக் கட்டிக் கொடுக்கிற மாதிரி, அந்தப் பையனிடம் கொடுத்து அனுப்பினோம். நாங்க கிளாசுக்குப் போனப்புறம் அவனை வரச் சொன்னோம். அவனும் அப்படியே செய்தான். தமிழ் ஐயா பொடி மட்டையை கையிலே வாங்கியதும், இன்னைக்கு தடியாவும் கனமாவும் இருக்குதே ; பொடி நிறைய இருக்கும் போல் தெரியுது; இன்னிக்கு கடையிலே யாருடா இருந்தாங்க என்று சொல்லிக்கிட்டு,பொடியை சிம்டாவா எடுக்கிறதுக்காக, பெருவிரலையும் இன்னொரு விரலையும் சேர்த்து மட்டைக்குள்ளே விட்டாரு விரல்களிலே ஈரமா சதசதன்னு ஏதோ படவும், எலேய் என்னதுடாயிதுன்னு வெளியே இழுத்துப் பார்த் தாரா? ரத்தமும் சதையுமா கூழு மாதிரி ஆகிப்போன குருவிக் குஞ்சு! அப்பா-முருகா-ஞானபண்டிதான்னு புலம்பிக்கிட்டு அதை கீழே போட்டாரு. அவருக்குக் கோபமானக் கோபம்! டேய்,எந்தப் பயடா இந்த வேலை செய்யச் சொன்னது? உள் ளதை சொல்லிப் போடு, இல்லேன்னு உன் முதுகுத் தோலை

உறிச்சுப்போடுவேன்னு கத்தி, அந்தப் பையனை அடிச்சாரு. அவன் நடந்ததை சொல்லிட்டான். எங்களுக்கும் பூசை கிடைச்சுது. அதோடு போசலியே! ஒரு பயலுக்கு கணக்கு வாத்தியாரு மேலே ஆத்திரம். பாவி மனுசன் வெறும் விரல்களாலே சதையை புடிச்சு நிமிட்டாம் பழம் கொடுப்பாரு பார்க்கணும்.—ரெண்டு நாளைக்கு அந்த இடத்திலே எரிச்சல் இருந்துக்கிட்டே இருக்கும். பெரம்பை வச்சு லொட்டு லொட்டுன்னு அடிச்சுக்கிட்டே இருப்பாரு. வயித்திலிங்கம் பிள்ளை சாகாரா-எங்க வயித்தெரிச்சல் தீராதா! கணக்கு வாத்தியான் சாகானு, எங்க மனக்குறை எல்லாம் தீராதான்னு நாங்க, ஸ்கூல் முடிஞ்சதும், வெளியே வந்ததும் பாட்டு மாதிரி ராகம் போட்டு நீட்டி முழக்குவோம். ஒருநாள் திருப்பாற்கடல் நம்பி இங்கிற அந்தப் பையனை அவரு உரி உரின்னு உரிச்சிட்டாரு. அவன் அவரை பழிவாங்கத் திட்டம் போட்டான். ஊமத்தங்காயை சாணியிலே பொதிஞ்சு பதுக்கி வச்சிருந்தான். வயித்திலிங்கம் பிள்ளை வரும்போது அவரு முதுகுமேலே ஓங்கி வீசினான். சாணி தெறிச்சு விலகி விழுந்திட்டது. முள்ளுமுள்ளா இருக்கிற ஊமத்தங்கா கோட்டிலே குத்திக்கிட்டு நின்னுது. அவரு பையனை இனம் கண்டுக்கிட்டாரு. இப்படி ரிப்போர்ட்டுகள் ஹெட்மாஸ்டரிடம் போச்சு. அவரு சிவபுரம் பையன்கள் போக்கிரிப் பயல்கள்; நம்ம பள்ளிக்கூடத்துக்கு லாயக்கில்லேன்னு சொல்லி பெற்றோருக்கு தெரிவிச்சுப் போட்டாரு. எல்லாருக்கும் டிரான்ஸ்பர் ஸர்டிபேகட் தாறேன்; அதுக்கு இஷ்டமில்லேன்னு பெயரை அடிச்சிருதேன்; இந்தப் பையனுக எங்க பள்ளிக்கூடத்துக்கு வேண்டாம்னு ஒரே வெறைப்பா நின்னுட்டாரு. அவ்வளவுதான். சில பையனுக படிச்சது போதும்னு ஊரோடு இருந்திட்டானுக. ஒன்றிரண்டு பேரு பாளையங் கோட்டைக்குப் போயி படிச்சிட்டு வந்தானுக. நானும் இன்னும் ரெண்டு பேரும் வயக்காட்டுப் பள்ளிக்கூடத்துக்குப் போனோம்...எதுக்காகச் சொல்ல வந்தேன்னு, பள்ளிக்கூடப் பருவத்திலே பையன்கள் பொறுப்பற்ற தனமா குறும்புகள் சேட்டைகள் பண்றது சகஜம் தான்கிறதுக்காகத் தான்.

அப்ப படிப்பையும் நாங்க விட்றலே. ஆனா, இப்போ படிப்பு முக்கியமல்ல, சேட்டையும் கல்லுளிமங்கத்தனமும் தான் முக்கியம் என்றாயிட்டுது!'

'ஆமா. நீங்க தினம் இங்கேயிருந்து எப்படி போய் வந்தீங்க?' என்று ஒருவர் விசாரித்தார்.

'ரயிலிலே தான். வீட்டிலேயிருந்து ஸ்டேஷனுக்கு ரெண்டு மைல் நடை. கொஞ்ச தூரம் வயல்கள் வழியாகவே நடந்து, அங்கே முக்குலே போய் குளத்தங்கரை ரஸ்தாவை பிடிப்போம் சிலசமயம். ரஸ்தா வழியா சுற்றியும் போவோம். ரயில் காலே ஏழரை மணிக்கு. வீட்டிலேயிருந்து ஆறரை மணிக்கே புறப்பட்டாகணும். பத்து மணிக்குத் தான் ஸ்கூல் ஆரம்பம். அங்கே எட்டு மணியிலேயிருந்து குட்டப்புழுதி பண்ண ரெண்டு மணி நேரம் இருந்தது. அப்புறம் சாயங் காலம் ஆறு மணிக்குத்தான் ரயிலு. ஆறேகாலுக்கு தாழை யூத்திலே வந்து இறங்குவோம். அங்கேயிருந்து நடந்து வீட்டுக்கு வாறதுக்குள்ளே இருட்டிவிடும். மழை காலத்திலே ரொம்பக் கஷ்டம். வந்ததும், வீட்டிலே இருக்கிற ஆறிப் போன சாப்பாட்டை வாயிலே போட்டுக்கிட்டதும், நீட்டி நிமிரலாம்னு தான் தோணும். படிப்பிலே கவனம் செல்லாது. இருந்தாலும் எப்படியோ படிச்சு பாஸ் பண்ணி னோம்னு வையுங்க. இப்ப ரொம்ப வசதியா ஒரு மணிக்கு ஒரு பஸ் ஓடுது. தாழையூத்திலேயே ஹைஸ்கூலும் இருக்கு' என்று மனா. பெனா. தெரிவித்தார்.

முற்காலத்திய படிப்பு முறைகளைப் பற்றி பேச்சு சுற்றியது. 'படிக்க வைக்கிறது' என்பதை தடபுடல் விசேஷ மாகக் கொண்டாடி, அவல் பொரி கடலையை தாராளமாக வழங்குவது; அண்ணாவி திண்ணைப் பள்ளிக்கூடத்தில் கல்வி ஆரம்பிப்பது; தரையில் மணலை பரப்பி அதன்மீது விரலால் அழுத்தி எழுதி எழுத்துக்களை கற்றுக்கொண்டது; ('கை விர லிலே தோல் உரிஞ்சு போகும். எரியும்'); படிக்காமல், பள்ளிக்கூடத்துக்கு வராமல் ஏய்க்கிற பையன் காலில் தடிக் கட்டையை சங்கிலியால் மாட்டி வைத்து ('கோதண்டம்')

அவனை துன்புறுத்துவது; அதை அவிழ்க்காமலேயே அவன் எங்கும் எப்போதும் கஷ்டப்பட்டு நடந்து திரியணும்; (‘வீட்டிலும் அந்தக் கட்டையோடுதான் நடமாடியாகணும்; உட்காரணும்; படுக்கணும். கொடுமையான தண்டனை தான்’)...அதை விடக் கொடியது ‘எமதண்டம்’. பையன் கைகளையும் கால்களையும் கட்டி, உத்திரத்திலே தொங்க விடுவது; கீழே அவனுக்கு நேரே மணலில் எழுத்தாணிகள், முள்ளுகள், கண்ணாடித் துண்டுகளை குத்தி நிறுத்தியிருப்பார்கள். கட்டு அறுந்து பையன் கீழே விழுந்தால் அவற்றின் மீதுதான் விழவேண்டும்...ஐம்பது அறுபது வருஷங்களுக்கு முன்பு பள்ளிப்படிப்பு என்பதில் சித்திரவதை அம்சங்களும் நிறைந்து கிடந்தன. பள்ளிக்கூடம் போவதே அஞ்சி நடுங்க வைக்கும் ஒரு தண்டனையாகத்தான் பல பேருக்குப் பட்டது.

‘வாத்திமாருக பையனுகளை இதுமாதிரி எல்லாம் படுத்தினதுனாலேதான், சில துணிஞ்ச பையனுக வாத்தியாருகளை பாடாய் படுத்திறுங்கண்ணு நெனைக்க வேண்டியிருக்கு. இல்லையா அண்ணாச்சி?’ என்று பால்வண்ணம் கேட்டார்.

‘ஊம் ஊம்’ என்றார் அண்ணாச்சி.

‘அந்தக் காலம் மலை ஏறிப் போச்சு. இப்போ மாணவர்கள் காலம். ஹெட்மாஸ்டரை மாத்துன்னு ஸ்ட்ரைக் பண்றாங்க. இந்த வாத்தியார் வேண்டாம், எங்களுக்கு அந்த வாத்தியார்தான் வேணுமின்னு ஸ்ட்ரைக். பரீட்சையே வேண்டாம், எல்லாருக்கும் பாஸ் மார்க் போடுயின்னு ஸ்ட்ரைக். வாத்தியாரு என்கிற மரியாதையை ரொம்பப் பேரு கொடுக்கிறதில்லே. வாத்தியார்களையும் அவன்—இவன் என்று பையன்கள் பேசுறதையும் நான் கேட்டிருக்கேன்’ என்றார் சூரியன் பிள்ளை.

வெகுநேரத்துக்குப் பிறகு எல்லோரும் பிரிந்து போனார்கள்.

போகும்போது பால்வண்ணம் பிள்ளையின் மனம் மட்டும் அரித்துக் கொண்டிருந்தது. ‘அந்தப் பையனுக பேசிக்

கிட்டதும் நியாயம் தான். அண்ணுச்சியா பிள்ளை அந்தக் காலத்திலே ஏன் ஊரை விட்டுப் போனுகளாம்? நாற்பது வருஷ காலம் ஏன் இந்த ஊருக்கே வராமல் இருந்தாராம்? அவரும் பன்னுப் பன்னுயின்னு பழம் கதை எல்லாம் பேசுதாரே; இதைப்பத்தி மூச்சுக் காட்டுதாரா பாருமேன்! இதிலே ஏதோ குட்டு இருக்கத்தான் செய்யுது. மத்தவங்களுக்கு டவுட் வராமல் போகுமா?' என்று அவரது எண்ணப் புரி கழன்று நீண்டது.

# 10

சிவபுரம் சுமாரான ஒரு கிராமம்.

பொதுவாக, தமிழ்நாட்டுக் கிராமங்கள் பலவற்றையும் போலவே, ஒரு காலத்தில் 'செயலாக இருந்து' வரவர க்ஷீணதசை அடைந்து கொண்டே போகிற ஒரு சிற்றூர் அது என்பதை அதன் தோற்றம் காட்டிக் கொண்டிருந்தது.

'முன்னுள்ளோர்'—அதாவது, மத்திய தரவர்க்கத்தைச் சேர்ந்த 'முப்பாட்டன்மார்' எப்படியோ சொத்து சேர்த்து வைத்திருந்தார்கள். நிலம், வீடு, தோப்பு, மாடு கன்று, வண்டி வாகனம் என்று கொண்டு, ஊரோடு பெருமையாக வாழ்ந்தார்கள்.

சிவபுரம் 'தெற்கு ஊர்' என்பது பிள்ளைமார் வசிக்கும் பகுதி. முன்பு அதுவே ஊரின் பெரும் பகுதியாக இருந்தது.

அதில் ஆறே தெருக்கள். கீழத்தெரு, மேலத் தெரு, வடக்குத் தெரு, தெற்குத் தெரு, நடுத் தெரு, குறுக்குத் தெரு.

ஒவ்வொரு தெருவிலும் இடவசதி பெற்ற பெரிய வீடுகள் தள்ளித் தள்ளி வசதியாகக் கட்டப் பெற்ற கட்டிடங்கள்

மூலப் பொருள்களும் மனித உழைப்பும் மிக மலிவாகக் கிடைத்துக் கொண்டிருந்த ஒரு காலத்திலே கட்டப்பட்டவை அவை.

அந்தக் காலத்தில் ஆயிரம், இரண்டாயிரம் ரூபாய் செலவில் உருவான அந்த வீடுகள் போன்ற கட்டிடங்களை இந்தக் காலத்தில் பல பத்தாயிரங்கள் செலவழித்தாலும் கட்டி முடிக்க முடியாது என்று, இன்று பார்க்கிறவர்கள் பிரமிக்கும் வகையில், அவை வசதியான அமைப்பும் மிடுக்கான தோற்றமும் கொண்டு ஊருக்கே ஒரு பெருமை அளிக்கின்றன.

என்றாலும், அந்த ஊரில் அவற்றுக்கு வாடகை மதிப்பு இல்லை. ஏழு ரூபாய்க்கும் எட்டு ரூபாய்க்கும் வீடு வாடகைக்குக் கிடைக்குமா என்று அலையும் வெளியூர்காரர்கள் பத்து ரூபாய், பதினைந்து ரூபாய் தர மனம் கூசி 'அநியாய வாடகை' என்று முணுமுணுப்பது ஊர் நியதியாக அமைந்து விட்டது.

முப்பாட்டனார்கள் தேடி வைத்த சொத்து பலத்தில் பாட்டன்மார்களும் அப்பாமார்களும் ஊரோடு இருந்து, வேலை எதுவும் செய்யாமலே, 'சுகஜீவனம்' என்பதை பெருமைக் குரிய ஒரு தொழில் போல் அறிவித்துக் கொண்டு காலம் கழிக்க முற்பட்ட போது, 'முன்னுள்ளோர்' பயிலாத கல்யாண குணங்களை கற்று, உல்லாச வாழ்வு நடத்தியதன் விளைவாக நடுத்தர வர்க்கத்துப் பிள்ளைமார்களின் சொத்தும் சுகமும் தேய்ந்து கரைவது தவிர்க்க முடியாத நிகழ்வு ஆயிற்று.

விலை உயர்ந்த நைஸ் வேஷ்டிகள், அருமையான சில்க் துணியாலான சட்டைகள், கிரீச்சிடும் உயர் ரகச் செருப்புகள், டவுனுக்குப் போய் வர வில் வண்டி, அதற்கு ஏற்ற அருமை யான ஜாதி மாடுகள், ஓட்டலிலும் லாலா கடைகளிலும் தயாராகும் தின்பண்ட தினுசுகள், உற்சாகமூட்ட தாசி உறவுகள் என்று 'மைனர் வாழ்வு' வாழக் கற்றுக் கொண்ட வர்கள் கையில் சொத்து எத்தனை காலத்துக்கு நிலைத்து நிற்கும்?

ஒவ்வொரு வயலாய் கைமாறியது. மகன்கள் வேலை தேடி வெளியூர் போக வேண்டிய அவசியம் ஏற்பட்டது. வெளியூருக்குப் போனவர்கள் போன போன இடங்களிலேயே தங்குவதும் சகஜமாயிற்று.

முப்பாட்டன்மார் அபூர்வமாக எப்பவாவது திருநெல்வேலி போய் வந்தாலே அது பெரிய திக்விஜயமாகக் கருதப்பட்டது. பாட்டன்மார்கள் திருச்செந்தூர், தென்காசி என்று போக நேரிட்ட போதிலும், வடக்கே மதுரை வரை போய் வந்தவர்கள் ஒரு சிலரே இருந்தனர். மணியாச்சிக்கு வடக்கே எட்டிப் பார்த்திராதவர்களே சிவபுரத்தில் அதிகம் பேர் இருந்தார்கள். பிறகு, மூன்ருவது தலைமுறையினர் அநேகர் திருச்சி, கோயம்புத்தூர், சென்னை என்று போய் அங்கேயே தங்கி விட்டார்கள். அதன் பிறகு வந்த இளைஞர்கள் பம்பாய், கல்கத்தா என்று போவதும், உல்லாசச் சுற்றுலா என்று காஷ்மீர் போவதும் சகஜமாகி விட்டது. 'மேல் படிப்புக்காக' சிவபுரம் இளைஞன் ஒருவன் அமெரிக்காவுக்கே போயிருக்கிருன் என்பது அவ்வூர் வரலாற்றின் சிறப்பு நிகழ்ச்சிகளில் ஒன்று ஆகும்.

ஆகவே, சிவபுரம் தவளைகளையும், தவளைப் புத்தியையும் வளர்க்கும் கிணறு ஆகவே இருந்து விட்டது என்று சொல்ல முடியாது.

ஆனாலும், ஊரோடு இருந்தவர்கள் விசால நோக்கும் பெரிய மனமும், நல்ல எண்ணமும் மனிதாபிமானமும் கொண்டு, தாங்கள் சந்தோஷமாக வாழ்வதுடன் மற்றவர் களும்—எல்லோரும்—இன்புற்று வாழவேண்டும் எனும் சுபாவத்தை போற்றி வளர்த்தார்கள் என்று சொல்வதற்கும் இல்லை.

பார்க்கப்போனல், 'ஒண்ணுக்குள்ளே ஒண்ணு' என்கிற தன்மையில் எல்லோரும் சொக்காரங்க' (சொந்தக்காரர்கள்) தான் என்று, தாயாதிமுறை கூறிக் குலப்பெருமை பேசிக் கொள்ளும் உறவு வகையினர் தான் தெற்குப் பகுதிக்காரர்கள் பூராவும். என்ருலும், 'அடுத்தவன் நல்லா இருக்கச் சம்மதிக்

காத உள்ளம்' அவ்வூர்காரர்கள் ஒவ்வொருவருக்குமே இருந்தது.

ஒருவரைப் பற்றி ஒருவர் இளப்பமாகப் பேசுவதிலும், குறை கூறுவதிலும், இல்லாததையும் பொல்லாததையும் இட்டுக்கட்டிப் பரப்புவதிலும் அவர்கள் உற்சாகம் காட்டுவது வழக்கம். ஆண்களுக்கும் பெண்களுக்கும் பொதுவான ஊர்ப் பண்பு ஆகவே இது அமைந்து, தலைமுறை தத்துவமாக வளர்ந்தும் வந்தது.

ஒரு வீட்டுக்காரனுக்கு ஆபத்து வந்தால்—ஒரு குடும்பத்துக்கு அவப்பேர் ஏற்பட்டால்—அடுத்த வீட்டுக்காரர்களும் இதர குடும்பத்தினரும் கைகொட்டிக் களிப்பதும், மனம் குளிர்ந்து வாய் ஓயாது பேசுவதும் இயல்பாக இருந்தது. சாரமற்ற வறண்ட வாழ்க்கையில் இதுவே வசந்த இனிமையும் சாரல் கிளுகிளுப்பும் தென்றல் சுகமும் சேர்ப்பதாக விளங்கியது.

அதனால், சிவபுரம் நபர் ஒவ்வொருவருக்கும் தனது காரியங்களில் உள்ள அக்கறையை விட அதிகமான அக்கறையும் ஆர்வமும் அடுத்தவர்களது போக்குகள் செயல்கள் மீது படிந்து கிடப்பது இயல்பாயிற்று. உண்பதையும் உறங்குவதையும், வம்ச விருத்தி பண்ண உதவுகிற திருப்பணியையும் தவிர, உருப்படியாகச் செய்வதற்கு அவ்வூர் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேறு அலுவல்கள் இல்லாது போன காரணத்தினால், ஊர் வம்பு வளர்ப்பதே அவர்களுடைய முக்கியத் தொழிலாகவும் ஜீவாதாரமான பொழுதுபோக்கு ஆகவும் திகழ்ந்தது.

ஆண்களை விடப் பெண்களுக்கு இதில் அதிக ஈடுபாடு. ஒவ்வொருவனைப் பற்றியும் ஒவ்வொருத்தியைப் பற்றியும் ஏதாவது கதை பண்ணிவிட்டால், அவர்களது அன்றையப் பொழுது வீண் பொழுதாய் போனது போன்ற மனச்சுமை அவ் ஊராரை—முக்கியமாகப் பெண்களை—உறுத்தும் என்றே தோன்றியது.

சிவபுரத்தில் விதவைகளும், வாழாவெட்டிகளும், அதிகம் என்று சொல்லப் படவேண்டிய அளவுக்கு இருந்தார்கள்.

சிவபுரம் பெண்களுக்கு வாய் அதிகம், தான் என்ற அகம்பாவம் ஜாஸ்தி, புருஷனை மாமியாரை மதித்து, பணிவாக அடங்கி ஒடுங்கி நடக்கும் சுபாவம் குறைவு. எனவே, புருஷனோடு வாழாது பிறந்த வீட்டுக்கே வந்து சுதந்திரமாக வாழ்ந்து, 'வாழாவெட்டி' என்று பட்டம் சூட்டிக் கொள்வது அவ்வூர் பெண்களுக்கு—அல்லது, பெண்களில் பலருக்கு—ஒரு பிறப்புரிமை மாதிரி ஆகியிருந்தது.

அவ்வூராரின் சுபாவப்படி, அவர்களைப் பற்றி சுவராஸ்யமான காதல்—காமக் கதைகள் கட்டிவிடப்படுவதும் தவிர்க்க முடியாத ஒரு அம்சமாகவே விளங்கி வந்தது.

ஆயினும், அது பற்றிக் கவலை எதுவும் கொள்ளாத, வாழ முடியாமல் போன வாழ்வரசிகளும், இல்லற இன்ப வாழ்க்கையை இழந்துவிட்ட முன்னாள் 'வாவரசி'களும் (இன்றைய விதவைகளும்) தங்கள் மன அரிப்பையும் உணர்ச்சித் தினவையும் சொறிந்து விட்டு சுகம் பெறும் முயற்சியாகத்தானோ என்னவோ, ஊரில் உள்ள ஒவ்வொருவரையும் பற்றி, 'அவள் இவனை வச்சுக்கிட்டிருக்கா' 'அவன் இவளோடு போனான்' 'இன்னவனுக்கும் இன்னவளுக்கும் தொடர்பு' என்ற ரீதியில் சுவாரஸ்யமாகப் பேசி மகிழ்வதை ஒரு வாழ்க்கை முறையாகவே ஆக்கிக்கொண்டு விட்டார்கள்.

அதற்கு அவர்களுக்கு பொழுதும் நிறைய இருந்தது. பொதுவாக, மத்தியானச் சாப்பாட்டுக்குப் பிறகு 'தரையிலே செத்த நேரம் உடம்மை கெடத்தி இருப்போமே' என்ற தூண்டுதலை தருகிற சோம்பல் உபாசனைப் பொழுதும், தூங்குவதற்கு என்று ஏற்பட்ட ராத்திரிகளில் தூக்கம் வராமல் விழித்துக் கொண்டிருக்கிற பெரும் பொழுதுகளும் அவர்களது கற்பனைக்கும் பேச்சாற்றலுக்கும் பெரிதும் துணை புரிந்தன.

'ஒரு கிளைப் பறவைகள்' என்று சொல்லப்படவேண்டிய, அவர்களைப் போன்ற அக்காள்களும் சித்திகளும் மதனிகளும்

அயலூர்களிலிருந்து வந்து அவர்கள் வீட்டில் ஒருநாள் இரண்டு நாள் தங்குகிறபோது, சுவையாக மூட்டை அவிழ்த்து உலுப்புவதற்குப் போதுமான செய்திகள் இரு சாராரிடமும் உண்டு. அயலூர் சரக்குகளை அதிதிகள் இங்கே அவிழ்த்துவிட்டு இவ்வூர் விஷயங்களை மூட்டை கட்டிக்கொண்டு போய் சேருவார்கள். இப்படியாக, உண்மையானவும் பொய்யானவுமான—நடைமுறையில் நிகழ்ந்தனவும், என்றுமே நிகழாதனவுமான—சமாச்சாரங்கள் உயிர்ப்போடு எங்கும் உலாவுவதற்கு மனிதர்களின் 'பண்பாடு' துணைபுரிந்து கொண்டிருந்தது.

பொம்பிளைகள் பிறப்பித்துவிடுகிற—கண்ணு மூக்கு, காது வாய், கால் கை எல்லாம் வைத்து உருட்டித் திரட்டி உலாவ விடுகிற—இந்த ரக அக்கப்போர்களை ஆண்கள் ஆசையோடு ஏற்று, சீராட்டிப் பாராட்டி, தங்களால் இயன்ற அளவு ஜோடனைகளும் சேர்த்து நெடுக நடமாட விடுவதில் ஊக்கமும் உற்சாகமும் காட்டுவது வழக்கம்.

சிவபுரம் பெண்ணின் அல்லது ஆணின் பேச்சுகளை கேட்கிறபோது, 'இந்த ஊரிலே ஒழுக்கமானவர், யோக்கியமானவர் ஒருவர்கூடக் கிடையாது போலிருக்கு' என்ற எண்ணம்தான் கேட்பவருக்கு உண்டாகும்.

அப்படி சுவாரஸ்யமாக மற்றவர்களைப் பற்றிப் பேசுகிறவர்களும் இப்படித்தானே இருப்பார்கள் என்று கேட்பவர் சந்தேகம் கொள்ளக் கூடுமே என்ற நினைப்பு ஒரு சிறிதுகூட இல்லாமல், ஒவ்வொருவனும் ஒவ்வொருத்தியும் ஊரில் உள்ள மற்ற 'ஆம்பிளைகளையும் பொம்பிளைகளையும் பற்றி' வம்பு பேசுவதிலும், கதை கட்டிவிடுவதிலும் குரூரமான ஒரு மனதிருப்தியை பெற்று வந்தார்கள்.

இப்போது கொஞ்சநாட்களாக அவர்கள் அசைபோடுவதற்குப் புதிய தீவனம் கிடைத்திருந்தது.

வேப்பமரத்து வீட்டு மயிலுப்பிள்ளை ஏன் இந்த ஊரை விட்டு 'சொல்லாமப் பொரையாம' ஓடிப்போனர்? ஏன்

நாற்பது வருஷகாலம் இந்த ஊரையே எட்டிப் பார்க்காமல் இருந்தார்? ஏன் இப்போ பெண்டாட்டியை அழைத்து வராமல், தான்மட்டும் வந்து தனியாகத் தங்கி இருக்கிறார்?

வேப்பமரத்து வீட்டு மயிலுப்பிள்ளை வாழ்க்கையில் மறைந்து கிடக்கிற இந்த ரகசியங்களை அறியாவிட்டால், தங்கள் தலை வெடித்துவிடும் என்பது போன்ற ஒரு உணர்வு ஒவ்வொரு பெண்ணுக்கும் ஒவ்வொரு ஆணுக்கும் ஏற்பட்டிருப்பதாகவே தோன்றியது. அவர்களது ஐயப்பாடுகளையும், மூடு பேச்சுகளையும் கேட்க நேரிட்ட சிறுவர் சிறுமிகளையும் இது தொத்துநோய் மாதிரி பற்றிப் படர்ந்தது.

நேரடியாக மயிலேறும் பெருமாள் பிள்ளையிடமே கேட்டு விட்டால் இந்த விவகாரம் மிகச் சுலபமாகத் தீர்ந்துவிடும் தான். ஆனால் அவர் உள்ளதை சொல்லுவார் என்பது என்ன நிச்சயம்? பொய்யான கதை எதையாவது சொல்லி, கண் துடைப்பு வேலைபண்ணி, பிரச்னையை திசை திருப்பிவிட மாட்டார் அவர் என்று எப்படிச் சொல்லமுடியும்? எனவே, வேறு யார் மூலமாகவாவதுதான் நிசத்தை அறியமுடியும்— அறியவேண்டும் என்று அக்கப்போர் பக்தர்கள் ஆசைப் பட்டார்கள்.

அந்தக் காலத்து மயிலேறுவின் போக்குகளை அறிந்து வைத்திருந்தவர்கள் சிவபுரத்தில் யாருமே இல்லை என்று பட்டது.

கண் தெரியாத, காதும் கேட்காத, 'வங்கிழடு' ஒன்று இருந்தது. அந்தத் தாத்தாவின் மூளையில் இந்த விஷயத்தை பதிய வைப்பதற்குள் பால்வண்ணம் பிள்ளையின் பாடு பெரும் பாடு ஆகிவிட்டது. அவ்வளவு சிரமத்துக்கு உரிய பலனும் கிடைக்கவில்லை.

'ஓகோ, மயிலேறு ஊரோடு வந்துட்டானு? வரவேண்டியதுதானே! அப்பா கட்டிவைத்த மடம் மாதிரியான வீட்டை பூட்டிப் போட்டுட்டு அவன் ஏன் அசலூரிலே காலம் தள்ளணும்? அவன் ஏன் போனுன்னு கேக்கயா? என்ன

எழவுக்குப் போனுனே! நாப்பது வருசத்துக்கு முந்தி நடந்தது யாருக்கு நினைவிருக்கு? போனவன் திரும்பி வந்துட்டானில்லே? பின்னே என்ன, விட்டுத்தள்ளு. 'பாணுங் கழுதை பரதேசம் போனு, தானே போயி தானே திரும்பும் என்கிறது சரியாத்தானிருக்கு' என்று பேச்சை முடித்து விட்டார் பாடகலிங்கம்பிள்ளை என்ற அந்தப் பெரியவர்.

## 11

சிவபுரம் வயல்களில் 'உளுந்து நெத்து பொறுக்குவதற்காக' பெண்கள் கூட்டம் கூட்டமாய் காலை வேளையில் போவதை, ஆற்றுக்குப் போய் குளித்துவிட்டுத் திரும்பும் மனு. பெனு. தினந்தோறும் காணமுடிந்தது.

பிள்ளைமார் தெருவை சேர்ந்த 'பெரிய குடும்பத்தில் உதித்த' ஒன்றிரண்டு பெண்களும்—நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்கள்—இதர உழைப்பாளி இனங்களை சேர்ந்த பல தரத்துப் பலவயதுப் பெண்களோடு, பெட்டியை இடுப்பில் வைத்துக்கொண்டு நடப்பது கால மாறுதலையும் வாழ்க்கை நிலை மாற்றங்களையும் உணர்த்துவதாக இருந்தது.

'பெரிய வீட்டுப் பொண்ணுக! பெரிய இடத்து மருமகளுக! இப்படிப் போயி பாடுபடவேண்டிய நிலைமை உண்டாயிட்டுதே! குடும்பங்கள் வாழ்ந்து கெட்டு வறுமை நிலையை அடைந்துவிட்டால், பெரிய குடும்பத்துப் பெண்களும் எந்த வேலையையும் செய்து வயிறு கழுவ வேண்டியதுதான் என்று ஆகிவிடுது. அந்தக் காலத்திலே இவள் எல்லாம் வயல்பக்கம் எட்டிப்பார்க்க முன்வந்திருப்பாளா?' என்று பிள்ளை நினைப்பதும் வழக்கமாயிற்று.

ஒருநாள், 'மாதப்பிறப்பு, விசேஷ நாள்' என்று பெரிய பிள்ளையோடு ஆற்றுக்குக் குளிக்கவந்த பிறவியாபிள்ளையிடம், அண்ணுச்சி உளுந்து பற்றி விசாரித்தார்.

'அநேக வயல்களிலே மிதி உளுந்து போடுறதுதான் இப்போ சில வருஷமா நடந்துவருது. மாசி பங்குனியிலே நெல் பயிர் அறுவடை ஆகிறபோது, அறுப்புக்கு முதல்நாளில் அல்லது அறுப்பு அன்னைக்கு, உளுந்தம் விதையை வயலிலே தூவுவ ங்க. அறுப்பாளுக காலில் மிதிபட்டு, மண்ணில் அழுந்தி, விதைகள் முளைச்சிரும். இதுக்கு தனியா பாடு பார்க்க வேண்டியதுமில்லே; தண்ணியும் தேவையில்லே பாருங்க. அதனாலே அநேகமா எல்லாருமே உளுந்து விதைக்கிறதுதான். ரெண்டு ரெண்டரை மாசத்திலே பலனும் கிடைச்சிரும். என்னமோ வீட்டுச் செலவுக்காவது உளுந்து கிடைக்குமே. சிலபேருக்கு நல்ல விளைச்சலும் இருக்கும்' என்று பிறவியாபிள்ளை தெரிவித்தார்.

'ஆமா, உளுந்து எடுக்கப் போறவங்களுக்கு கூலி எப்படி?' என்று பெரியபிள்ளை கேட்டார்.

'போன வருசம் ஆறுக்கு ஒண்ணுங்கிற கணக்கிலே கொடுத்தாங்க. இந்த வருசம் முதல் பறிக்கு ஏழுக்கு ஒண்ணு தான் கொடுக்கிருங்க. எட்டுக்கு ஒண்ணுதான் தருவோம்னு வாதாடுகிறவங்களும் இருக்காங்க.'

'இது என்ன கணக்கு?' என்று திகைத்தார் பெரியவர்.

'ஒவ்வொரு ஆளும் நெத்துகளை தனித்தனியா எடுத்து பெட்டியிலே சேகரிப்பாங்க. அப்படி அவங்க பறித்தெடுத்து வாறதை வீட்டிலே, வயல்காரி, குவியல் குவியலா ஆறு அல்லது ஏழு அல்லது எட்டு என்று பிரிச்சுவைப்பா. அப்படி பிரிக்கப்படுகிற குவியல்களிலே ஒரு குவியல்தான் பறித்தவளுக்குக் கூலியாக் கொடுக்கப்படும்.'

'ஏழிலே ஒண்ணு என்றால் ரொம்பக் கொஞ்சமாத்தானே இருக்கும்?'

'ஆமா, அதுதான் அவங்களுக்கு ஏற்பட்ட கூலி' என்று பிறவியாபிள்ளை சொன்னார்.

'இம்புட்டுப்போலே' உளுந்துக்காக வெயிலில் நின்று, குனிந்து குனிந்து, உளுந்து நெத்துகளை செடி செடியாகப் பார்த்துப் பொறுக்கி சிரமப்படுகிற பெண்களுக்காக மயிலேறும் பெருமாள் பிள்ளையின் மனம் இரக்கப்பட்டது. 'ஏதோ ஒன்றிரண்டு நாள் தோசைக்குக் காசு கொடுத்து உளுந்து வாங்க வேண்டாமே!' என்ற ஆசையோடு, இப்படி சிரமப்பட்டு உழைக்க வயல்வெளி தேடி நடக்கிற 'பெரிய இடத்துப் பெண்கள்' மீது அவருக்கு அனுதாபம் உண்டாயிற்று. நாற்பது வருஷங்களுக்கு முன்பு 'நாங்க எங்கேயும் வேலைக்குப் போகவேண்டிய அவசியம் கிடையாது. எங்க மகன்கள் யார்கிட்டேயும் கைகட்டிச் சேவகம்பண்ணி, கைநீட்டி சம்பளம் பெறவேண்டிய தேவையும் இல்லை' என்று கர்வத்தோடு பெருமையாகப் பேசும் சுபாவம் பெற்றிருந்த சிவபுரம் நடுத்தர வர்க்கத்தினரின் வாழ்க்கை முறையும், மனப்பண்பும் அவர் உள்ளத்தில் நிழலாடின. அவ் வர்க்கத்தினரது இன்றைய வாரிசுகளின் நிலைமையை எண்ணுகையில் தடுக்கமுடியாத பெருமூச்சுதான் அவரிடமிருந்து வெளிப்பட்டது.

'இப்ப நம்மூரிலே நிலவா போடுறதே இல்லையோ வயல்களிலே?' என்று அவர் வினவினார்.

'முன்னாலே நம்மூரிலே ஒருப்பத்து (ஒரு பூப்பற்று) நிலம் நிறைய இருந்தது. அதிலே நிலவா (நிலவாகை) பயிரிட்டாங்க. வரவர ஒருப்பத்து நிலம் பூராவுமே இருபூ நிலமா மாற்றப்பட்டுவிட்டது. மேலும், நிலவாய்க்கு இப்ப கிராக்கியும் இல்லே. அந்தக் காலத்திலே நிலவா இலைக்கு நல்ல டிமாண்டு இருந்தது. இங்கிலாந்துக்கு ஏற்றுமதி பண்ணிக்கிட்டிருந்தாங்க. அதனாலே இருந்தாங்குடியா எல்லாரும் நிலவா பயிரிட்டாங்க. தேவை, கிராக்கி, இருந்தால்தானே எதுக்கும் மதிப்பு! இப்போ ஒன்றிரண்டு வருசமா, நிலவா இலைக்கு மதிப்பு ஏற்பட்டு வாறமாதிரித் தெரியுது. முன்னாலே சாயம்-வர்ணம்-இறக்குறதுக்குன்னு அந்த இலையை வெள்ளைக்காரனுக வாங்கிக்கிட்டிருந்தாங்க; அப்புறம் கெமிகல் டைஸ்—ரசாயன முறையில் வர்ணங்கள்—தயாரிக்க முற்பட்டதும்,

இந்த இலையிலிருந்து தயாரிக்கப்படுகிற சாயங்களுக்கு மவுசு இல்லாமப் போச்சு. அதனாலே அங்க நிலவா இலையை நாடலே. அதனாலே நம்ம பக்கத்திலே நிலவா பயிரிடுறதும் இல்லாமப் போச்சுன்னு அப்பா அடிக்கடி சொல்லுவா. இப்போ நிலவாயிலையிலிருந்து ஏதோ மருந்துகள் தயாரிக்கிறுங்கலாம். அதனாலே அந்த இலைச்கு தேவை பிறந்திருக்கு. ஒத்தை செத்தை பயிரிடவும் செய்றுங்க. இந்த வருசம் நிலவா இலைக்கு நல்ல விலையின்னு கேள்வி' என்று பிறவியா பிள்ளை விளக்கினர்.

'அந்தக் காலத்திலே நம்மூரிலே எங்கே பார்த்தாலும் நிலவாதானே! வயல்களிலே பச்சையும் மஞ்சளுமா ஜில்னு இருக்கும். எல்லா வயல்களிலும் நிலவாப் பயிர் மஞ்சள் பூக்களை பூத்துக்குலுங்கி, பார்க்கிறதுக்கே பொன்மயமாய், ரொம்ப அழகாயிருக்கும். நிலவாயை வச்சு அநேகம் பேரு நல்லாப் பணம் பண்ணினுங்க' என்றுர் மனு. பெனு.

பழைய நினைவுகள் அவர் மன அரங்கில் ஊசலிட்டன.

— அந்நாட்களில் சிவபுரத்திலும் சுற்று வட்டாரத்துக் கிராமங்களிலும் நிலவாகை ஒரு முக்கியப் பயிராக வளர்க்கப் பட்டது. கோடைகாலப் பயிர். இப்போ கோடை மாசங்ளில் வயல்கள் வறண்டு கிடக்குதே. அப்போ அப்படியா கிடந்தது? குறுகிய சிறு இலைகளைக் கொண்ட நிலவாகை பச்சுப்பச்சுனு வளரும். பிறகு, பூந்தி உருண்டைமாதிரி உருண்டை உருண்டையான மஞ்சள் நிற மொட்டுகள் கொத்துக் கொத்தாகத் தோன்றும். எல்லாம் மஞ்சமஞ்சேர்னு பூத்துச் சிரித்து, வயல்களையே பொன்மயமாக்கிக் காட்டும். அந்த இலைகளை உருவிவந்து நிழல் உணர்த்தலா உணர்த்து வாங்க. இந்த ஊரிலே சில பெரிய வீடுகளில் உள்பகுதி வெளிச்சமற்ற, வசதி இல்லாத, அறைகளாக இருந்தபோதிலும், முன்பகுதி எடுப்பா, விசாலமா, நல்ல உயரத்தோடு, கல்யாண மண்டபம்மாதிரி பெரிசாக் கட்டப்பட்டிருப்பதுக்கே இதுதான் காரணம். அந்த வீட்டு ஐயாக்கள் நிலவாகை இலை பிசினஸ் பண்ணினுங்க. அந்த இலைமீது வெளிச்சம்

லேசாப்படணும், வெயில் பட்டிரப்படாது என்கிறதுக்காக அந்த ஹாலிலே நிறையச் சன்னல்களும், உயரத்தில் வர்ணக் கண்ணாடிக் கதவுகள் பொருத்திய சிறு சன்னல்களும் அமைச்சாங்க. நிலவா இலை பிசினஸை பெரும் அளவில் நடத்தினவங்க, தோட்டக்காடுகளை பயன்படுத்தி, ஒரே நெட்டுக்கு ஓலைப்பறைப் பந்தலும், சுற்றுச் சுவர்மாதிரி ஓலை அடைப்பும் வேய்ந்து—அதை நிலவாப்பறைன்னு சொல்லுவாங்க—அதுக்குள்ளே இலையை உலரப்போடுவாங்க. வசதியுள்ள ஒருத்தரு, தனது நீளப் பெரும் தோட்டத்தில் செம்மண் சுவர்களை எழுப்பி கொல்லம் ஓடுபோட்டு, அருமையான நிலவாப் பறை கட்டியிருந்தாரு. இலைகள் உலர்ந்ததும் ஒரு மாதிரியான வாடல் இலைவாசனை தெருபூரா நிலவி நிற்கும். உலர்ந்த இலைகளை பெரிய பெரிய மூடைகளாக்குவாங்க. இரண்டு சாக்குகளை ஒன்றாக வைத்து நீளமாய் தைத்து, அதுக்குள்ளே இலைகளை போட்டு அடைஞ்சு மிதிச்சு, மூட்டை ஆக்கி ரயிலுக்கு அனுப்புவாங்க. தாழையூத்து ஸ்டேஷனிலே அந்தக் காலத்திலே நிலவா இலை மூட்டைகளும் அந்த வாசனையும்தான் நிறைஞ்சிருக்கும். அப்போ, நடுவிலே, நாழி ஓடு வேய்ந்த சிறு கட்டிடமும் சுற்றிலும் தாழ்வாரமும் கொண்ட சின்ன ஸ்டேஷன்தான். ஒத்தை லயன்தான். இப்போதல்லவா ஸ்டேஷனும் பெரிசாகி, பல லைன்களும் ஏற்பட்டிருக்கு! நிலவா இலை மூட்டைகளை வாங்கி ஏற்றுமதி பண்றதுக்குன்னே ஸ்டேஷன் பக்கத்திலே வெள்ளைக்காரன் கம்பெனி ஒண்ணு இருந்துது. அதன் கட்டிட அமைப்பே தனி ரகமாக, விசேஷக் கவர்ச்சியோடு இருந்துது. நிலவா இலை பிசினஸ் படுத்ததுமே, அந்தக் கம்பெனியும் போயி, அந்தக் கட்டிடமும் ஆக்கங்கெட்டுப் போச்சு. அந்நாளையிலே நிலவா இலை உற்பத்தி திருநெல்வேலி ஜில்லாவிலே முக்கியமானதாக இருந்தது. தாழையூத்து வட்டாரத்திலே சிறப்பாகவும் செழிப்பாகவும் இருந்தது. இந்த இன நிலவாகைக்கு 'டின்னவெல்லி ஸென்னா' (Tinnnevelly senna) என்றே வெள்ளைக்காரன் பெயர் சூட்டிவிட்டான் என்றால் பார்த்துக்கிறேமேன்!

மனு. பெனு. தனது எண்ண ஓட்டத்துக்கு ஒரு தடை போட்டுவிட்டு, பிறவியாபிள்ளையிடம் கேட்டார்: ‘முன்னலே கோடையிலே வயல்களிலே பாவைக்காய், சுரைக்காய், சீமைப்பூசனி, வெள்ளரி எல்லாம் போடுவாங்களே; இப்போ யாருமே போடுறதில்லையா? ஏதோ போட்டு வச்சா வீட்டுப் பாட்டுக்கு உதவுமேன்னு நினைப்பிலே போடுற வழக்கமே இப்ப கிடையாதோ?’

‘ஊரு முன்னெ மாதிரி இல்லே அண்ணுச்சி’ என்ருர் தம்பி. ‘ரொம்பவும் மாறிப் போச்சு. நம்மவங்க கை ரொம்பத் தாழ்ந்து போயிட்டுதுன்னு தான் சொல்லனும். முன்னெ மாதிரி செல்வாக்கா, சொல்லும் செயலுமா, நம்ம வங்கள்ளே யாரு இருக்கா? செயம் செயம்னு கொடி கட்டிப் பறக்கும்படியா வாழ்ந்தவங்க எல்லாம் போயிட்டாங்க. இன்னும் கொஞ்ச காலத்திலே வயல்லே விளையிற நெல்லு நம்ம வீடு வந்து சேர்ந்தால்தான் நெசம், அப்பதான் நமக்குச் சொந்தம்னு உரிமை கொண்டாட முடியுங்கிற நிலைமை ஏற்பட்டு விடும்னு தான் தோணுது. வடக்கு ஊர் காரங்க கையடியும் வாயடியும் அடாவடித்தனமும் ஓங்கிக் கிட்டே போகுது. வயலிலே எதையும் பயிர் பண்ணிக் கொண்டுவர நீதமில்லே. சுரை, பூசனி எல்லாம் போட்டால், விளைகிற காய்கள் வயல்காரனுக்குக் கிடைக்காது. எவன் எவனே கொண்டு போயிருவான். மிளகுச் செடி போட்டுப் பார்த்தாங்க ஒன்றிரண்டு பேரு. அது லாபகரமா இல்லே. ஒன்றிரெண்டு பேரு சிறு கிழங்கு லாபமா இருக்குமின்னு கணக்குப் பண்ணி விதைச்சாங்க. அந்த வருசம் அது கையை கடிச்சுட்டுது. மறுவருஷம் அவங்கஅது பக்கமே போகலே. சேம்பு, சேனை கிழங்குகளை சிலபேரு வரப்புலே, வசதியா கிடந்த திரட்டிலே விதைச்சுப் பார்த்தாங்க. நல்லாத்தான் வந்தது. ஆனு அவங்க பலனை அனுபவிக்கிற துக்கு முந்தி, யார் யாரோ கிழங்குகளை தோண்டி எடுத்துக் கிட்டு, மேலே உள்ள தண்டையும் இலைகளையும் நட்டு வச்சிட்டுப் போயிட்டாங்க. கேலியை பார்த்தீகளா! யாருன்னு

சொல்ல முடியும்? வயல்காரனுக்கு எவ்வளவு வயித்தெரிச்சல் இராது? திரும்ப அவன் கிழங்குகள் பயிரிடணுமின்னு ஆசைப் படுவானு? அவனுக்கு நேர்ந்ததுதானே நமக்குமின்னுதானே அக்கம் பக்கத்து வயல்காரனும் சும்மா இருந்திருவான்? இந்த ஊரிலே ஒத்துமை போதாது அண்ணுச்சி. ஒரு கட்டுப்பாடு கிடையாது. அவன் அவனுக்கு வந்ததை அவன் அவன் அனுபவிக்க வேண்டியதான்; நமக்கென்ன என்று ஒவ் வொருவரும் நினைப்பதனுலே, ஊரு நிலைமையே மோசமாப் போச்சு!' என்று மூக்கால் அழுதுவைத்தார் பிறவியாபிள்ளை, தனது இயல்பின்படி.

# 12

'சிவபுரத்துக்கு வந்து சேர்ந்து இருபது நாட்கள் ஆச்சு. நான் இன்னும் பாளையங்கோட்டை, ஜங்ஷன், திருநெல்வேலி பக்கமே போகலியே! இது பெரிய குறைதான்' என்று எண்ணிக்கொண்ட மயிலேறும் பெருமாள் பிள்ளை திடீரென்று கிளம்பிவிட்டார்.

'ஊர்களை பார்த்த மாதிரியும் இருக்கும். தேவையான சாமான்களை வாங்கின மாதிரியும் ஆச்சு' என்று தனது பிரயாணத்துக்கு ஒரு நோக்கமும் கற்பித்துக் கொண்டார் அவர்.

தனது வாழ்விலேயே முதல் முறையாக பாளையங் கோட்டை திருநெல்வேலி வட்டாரத்தை, விழிப்பு உணர் வோடு, ஒரு பட்டணப் பிரவேசம் மாதிரி, சுற்றிப் பார்த்தது அவர் நினைவில் பசுமையாய் கிடந்தது.

அப்போது மயிலேறுவுக்கு வயது ஆறு. அவனுடைய பெரியப்பா மகனை பெரிய அண்ணுச்சி ஒருவர் 'மாட்டு

டாக்டர்' ஆக இருந்தார். வெளியூரில் பல இடங்களில் பணி புரிந்து விட்டு, வீராவரம் மாட்டு ஆஸ்பத்திரிக்கு டாக்டராக வந்திருந்தார். வசதியான இடம். ஆஸ்பத்திரி காம்பவுண்டிலேயே சௌகரியமான வீடு டாக்டருக்கு. அவரை பார்ப்பதற்காக மயிலேறுவின் அப்பா, மகனையும் கூட்டிக்கொண்டு அங்கே போனுர். டாக்டரின் குழந்தைகள் இரண்டு பேர், மயிலேறு, இன்னும் இரண்டு பிள்ளைகள் எல்லோருக்கும் 'பட்டணப் பிரவேசம்' நடத்தத் திட்டமிட்டார் டாக்டர் அண்ணுச்சி. ஆஸ்பத்திரியை சேர்ந்தது தானே, அல்லது டாக்டருக்குத் தெரிந்த பிரமுகர் எவருடையதோ, அல்லது வாடகைக்குப் பேசப்பட்டது தானே—அது மயிலேறுவுக்கு ஞாபகமில்லை. அருமையான இரண்டு வெள்ளைக்குதிரைகள் பூட்டப்பெற்ற 'ஃபீட்டன்' வண்டி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

அந்தக் காலத்தில் பிளஷர் கார்கள் அபூர்வமாகச் சில பேரிடம்தான் இருந்தன. பஸ்களும் ஒரு சிலதான் ஓடின. கல்யாண வீடுகள், விசேஷ நிகழ்ச்சிகளுக்கெல்லாம் 'ரெட்டைக் குதிரை சாரட்டு' தான் முக்கியமாகவும் மதிப்புக்கு உரிய விஷயமாகவும் விளங்கியது. சின்னப் பிள்ளைகளுக்கு குஷியூட்டுவதற்காக அப்படி ஒரு வண்டியையே கொண்டுவர ஏற்பாடு செய்தார் டாக்டர் அண்ணுச்சி.

முதலில் திருநெல்வேலி போய், ரதவீதிகளை சுற்றிவிட்டு வந்து, நேரே பாளையங்கோட்டை போக வேண்டியது; அங்கே பஜாரில் ஏதாவது தின்பண்டம் ('மில்க் சாக்லேட்டு தான் நல்லது') வாங்கிக் கொடுத்து, ஹைகிரவுண்ட் வரை போய் விட்டு திரும்பி வந்து சேரவேண்டும் என்று திட்டம் வகுத்து, ஒரு வேலைக்காரனையும் துணைக்கு அனுப்பினுர்.

அப்படியே நடந்தது. ஃபீட்டன் சவாரியும், புதிய இடங்களை கண்டுகளிக்கும் வாய்ப்பும் சிறுவன் மயிலேறுவுக்கு அதிக உற்சாகமும் கிளுகிளுப்பும் ஊட்டின. அந்தப் புதுமை அனுபவம் ஆனந்தமாக அவன் உள்ளத்தில் பதிந்து விட்டது.

அதன் பிறகு எத்தனையோ தடவைகள் மயிலேறும் பெருமாள் திருநெல்வேலியை சுற்றி விட்டு, சுவாமி நெல்லையப்பர் ஹைரோடு வழியே வீரராகவபுரம், கொக்கிர குளம், வண்ணார்பேட்டை, முருகன்குறிச்சி என்று பார்த்தவாறே பாளையங்கோட்டை போயிருந்த போதிலும்—நடந்தும், இன்னொருவர் சைக்கிள் ஓட்ட தான் பின்பக்கம் கேரியரில் அமர்ந்தும், ஒசி காரிலும், பஸ்ஸிலும், வில் வண்டியிலும், மொட்டை வண்டியிலும் கூட, போய் வர நேர்ந்தது உண்டு. என்றாலும் —அந்தச் சின்னஞ் சிறு வயசில் கிட்டிய அனுபவத்தின் உளக் கிளர்ச்சி பிறகு எப்போதுமே ஏற்பட்டதில்லை என்று மஞெ. பெஞெ. பிற்காலத்தில் அடிக்கடி எண்ணிக் கொள்வது வழக்கமாயிற்று.

இப்போதும் அப்படி ஒரு கிளுகிளுப்பை பெறமுடியாது போனாலும் கூட, கிட்டத்தட்ட அதற்கு சமமானதொரு உணர்வுக் கிளர்ச்சியை, நாற்பது வருஷங்கள் பாராதிருந்து விட்டு மீண்டும் காண்பதன் மூலம் பெறுவது சாத்தியமாகலாம் என்று அவர் எண்ணினார்.

அதனால், முதலில் திருநெல்வேலிக்குப் போவது; அங்கே ரதவீதிகளை சுற்றிவிட்டு, ஜங்ஷன் வந்து, அப்புறம் பாளையங்கோட்டை போவது என்று திட்டமிட்டார்.

அவர் ஊருக்குக் கிளம்புகிற போது வந்து முளைத்த பால்வண்ணம் பிள்ளை, 'அண்ணாச்சி, தூரமா?' என்று கேட்டு வைத்தார்.

'சும்மா இப்படி, திருநெவேலி பாளையங்கோட்டை பக்கமா...' என்று பெரியவர் இழுத்தார்.

'நானும் வாறேன் அண்ணாச்சி. எனக்கும் எங்கெயாவது போய் சுற்றிட்டு வந்தா நல்லாயிருக்கும்னு தான் தோணுது. ரொம்ப நாள் இடுப்பிலேயே இருந்தாச்சு' என்றார் பால்வண்ணர். தனது போக்கு, வேண்டாத சனியனின் குறுக்கீடாக அவருக்குத் தோன்றுமோ என்ற சந்தேகம் தலைகாட்டவும், 'நான் உங்க கூட வாறதைப் பத்தி உங்களுக்கு

ஒண்ணுமில்லேயே, அண்ணுச்சி? ஏதாவது இடைஞ்சலா இருந்தா சொல்லிப் போடுங்க' என்ருர்.

பெரிய பிள்ளை சிரித்தார். 'இதிலென்ன வே சங்கடம்? நான் என்ன உம்மை தோளிலே தூக்கிட்டுப் போகப் போறேனு? அது ஒண்ணும் இல்லியே. நீரு பாட்டிலே வரப் போறேரு! என் கூட வாறதுனலே உமக்குத்தான் சங்கடமா இருக்கும். திடீர்னு நான் பாளையங்கோட்டைக்கு பஸ்லே போகவேண்டாம், நடந்தே போகலாமேன்னு கிளம்பிருவேன். அங்கே இங்கேயின்னு சுத்துவேன்...'

'அதுக்கு நான் பயந்தவனில்லே அண்ணுச்சி. நீங்களே நடக்கிறபோது, நான் நடக்கக் கூடாதா? இல்லே, நான் கால் மூளை செத்தவனு? எனக்கும் நடந்து அனுபவம் உண்டு அண்ணுச்சி. நடக்கிறதிலே ஆசையும் உண்டு. உங்களுக்கு, முன்னலே பார்த்த ஊர்களை, இடங்களை இப்ப திரும்பவும் பார்க்கணும்கிற நெனைப்பு. இல்லையா? நாம பாளையங்கோட்டையிலே சுத்திப்போட்டு, சாயங்காலமா நடந்தே கோட்டூரு—படப்பகுறிச்சி—திம்மராசபுரம் வழியா வந்து, ஆற்றை கடந்து நம்மூருக்கு வரலாம். அந்தக் காலத்திலே சர்வ சாதாரணமான நடைபாதையாக இருந்த இந்த ரூட், இப்போ எப்படி இருக்கு என்கிறதையும் இந்த ட்ரிப்லேயே பார்த்துவிடலாம்' என்று 'ஒரு ஐடியா' கொடுத்தார் மற்றவர்.

பாராட்டுதலும் மகிழ்ச்சியும் கலந்த பார்வையை அவர் முகத்தில் நிறுத்தி, 'நல்ல யோசனைதான். அப்படியே செய்வோம் வே' என்ருர் பெரியவர்.

ஆகவே, இரண்டு பேரும் கிளம்பினர்கள். காலை எட்டரை மணி காரிலேயே (இங்கெல்லாம் 'பஸ்'ஸை 'கார்' என்றும், சொந்தக் காரை 'பிளஷர்' என்றும் குறிப்பிடும் பழக்கம்தான் இன்னும் இருக்கிறது) பிரயாணம் செய்தார்கள்.

'இப்போ திருநெவேலியை டவுண் என்றும், வீரா வரத்தை (வீரராகவபுரத்தை) ஜங்ஷன் என்றும் சொல்வது

தான் சகஜமாக இருக்கு. திருநெல்வேலி ஒண்ணும் முழிப்பா இல்லே. ரொம்ப வளர்ந்திட்டதாவும் தோணலே. பழைய கறுப்பனாகவே இருக்க மாதிரித் தான் எனக்குப் படுது. ஆனா, டவுனுக்கும் வீராவரத்துக்கும் அடைப்பட்ட பகுதி—ரோட்டை ஒட்டி ரெண்டு பக்கமும்—பெரும் மாறுதல்கள். சினிமா தியேட்டர்களும், மோட்டார் கம்பெனி, பெட்ரோல் பங்க், கடைகள் என்று ஏகப்பட்ட கட்டிடங்களும், வரிசையா ஒண்ணை அடுத்து ஒண்ணு, நெருக்கமா ஏற்பட்டிருக்கு. அதன் பலனாக, நல்ல விளைச்சல் தரக்கூடிய இரு போக நிலங்கள்—வயல்கள்—இல்லாமலே போச்சு. அது ஒரு நஷ்டம்தான். ஒண்ணின் அழிவிலேதான் இன்னொண்ணு வளரமுடியும்—வளர வேண்டியிருக்கு. இது எல்லாக் காலத்துக்கும், எல்லா வகைகளுக்கும் நிலைமைகளுக்கும் பொதுவான விதி...'

மயிலேறும் பெருமாள் பிள்ளை தனது இயல்பின்படி தன் எண்ணங்களை சொல்லிக் கொண்டே வந்தார். கூட ஒருவர் துணைக்கு இல்லாமல் போயிருந்தால், அவை நினைவுகளாக நெளிந்திருக்கும். பேச்சாக வெளிப்பட்டிராது. அவ்வளவு தான் வித்தியாசம்.

'முன்பு இந்த ரோடிலே ரொம்ப உயரமா வளர்ந்த மருத மரங்கள் நெருக்கமா, செறிவா, நிறைய நின்றன. இப்போ அவற்றிலே பாதிக்கு மேலே வெட்டுப்பட்டுப் போச்சு!'

'அதுதான் வருஷா வருஷம் வெட்டிக்கிட்டே இருக்காங்களே. மீதி நிற்கதையும் சீக்கிரமே குளோஸ் பண்ணிப் போடுவாங்க' என்று பால்வண்ணம் பிள்ளை அபிப்பிராயப் பட்டார்.

இரண்டு பேரும் டவுனிலிருந்து ஜங்ஷனுக்கு நடந்து தான் வந்தார்கள்.

ஜங்ஷன் மேம்பாலம் வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. அதனால் பஸ்கள் எல்லாம் தச்சநல்லூர் வழியாக ஜங்ஷனுக்குப் போய் வந்து கொண்டிருந்தன.

'மேம்பாலம் இரண்டு அடுக்கிலே கட்டுருங்க. ஆசியா விலேயே இதுதான் முதலாவதோ—ரெண்டாவதோன்னு சொல்லிக்கிடுருங்க' என்ருர் பால்வண்ணர்.

'உமக்குத் தெரியுமா? வீராவரம் ஜங்ஷன்கிற பெயரை அடையிறதுக்கு முன்னுலே திருநெல்வேலிப் பாலம்னுதான் பேரு பெற்றிருந்தது. ரயில் டிக்கட்லேகூட அதே பேருதான் அச்சிட்டிருந்தாங்க' என்று பெரியபிள்ளை கூறினர்.

'ஏனப்படி? இங்கே ஊரு எதுவும் இல்லாமலிருந்து, ஆத்துப்பாலத்தை அடையாளமா வச்சு அப்படிப் பெயரிட்டிருந்திருப்பாங்களோ?' என்று 'பாவன்னு'வின் ஆராய்ச்சி உணர்வு கேட்டது.

'ஏனே தெரியலே. ரயில்வே ஸ்டேஷன்லே, தண்டவாளத்தை கடக்க உதவுகிற மேம்பாலம் இருந்தது. அதுக்கு அப்போ மேலே கூரைகூடக் கிடையாது...'

'திருமங்கலம் ஸ்டேஷன்லே கூட சமீப காலம்வரை அப்படித்தான் இருந்தது.'

'ஆமா. அதேமாதிரித்தான். அந்நாட்களிலே அது மாதிரி தண்டவாளங்களை கிராஸ் பண்ற மேம்பாலம் அதிகம் இருந்ததில்லை. அந்தப் பாலத்தை அடையாளமாக வச்சுத்தான் திருநெல்வேலி பிரிட்ஜ்—திருநெல்வேலிப் பாலம்— என்று பெயாடப்பட்டிருக்கும் என்று மாட்டு டாக்டர் பிள்ளை சொன்னரு. அதை ஒட்டி இந்த இடமெல்லாம் திருநெல்வேலிப் பாலம்னுதான் வழங்கப்பட்டது.'

'ஓகோ, போலீஸ் ஸ்டேஷன்லே கூட திருநெல்வேலி பாலம் போலீஸ் ஸ்டேஷன்னு போர்டு உண்டு. இதுக்கு ஏன் பாலம் காவல் நிலையம்னு பேரு, பக்கத்திலே பாலம் ஒண்ணும் இல்லையேன்னு நான் நினைக்கிறது உண்டு. இப்போதான் விஷயம் புரியுது' என்ருர் தம்பியாபிள்ளை.

'இன்னொரு விஷயம்லா!' என்று அவரே தொடர்ந்தார். 'பாரதி பாட்டிலே, கண்ணன் பாட்டில் ஒரு இடத்திலே, பாலத்துச் சோசியனும் கிரகம் படுத்துமென்ருன்னு வருது.

மரத்தடி சோசியன், கிளி சோசியன்கிறமாதிரி, பாலத்தடி சோசியன்னுதான் இதுக்கு பொருள் தோணும். இப்ப உள்ள வங்க, இந்தப் பக்கத்து ரசிகரேயானாலும் அப்படித்தான் சொல்லுவாங்க. ஆனா ஒரு பெரியவரு, இந்த ஜில்லாக்காரரு தான், சில வருஷங்களுக்கு முன்னாலே எழுதியிருந்தாரு. இது வருகிற பாட்டுக்கு விரிவான கட்டுரை எழுதும்போது, திருநெல்வேலிப் பாலத்தைச் சேர்ந்த வீரராகவபுரம் பிரபல சோதிடர்கூட, கிரகம் படுத்தத்தான் செய்யும் என்று சொல்லி விட்டான்னு எழுதினாரு. அதனுடைய வயணம் எனக்கு இப்போதான் தெளிவாகப் புரியுது!'

தம்பியாபிள்ளையின் இந்த அதிகப்பிரசங்கத்தை அண் ணாச்சி பொறுமையோடு சகித்துக்கொண்டார்.

ஜங்ஷன் வட்டாரத்தின் பிரமாண்ட வளர்ச்சியை, பரபரப்பு மிகுந்த ஒரு மாநகரத்தின் பகுதிபோல் அதன் தோற்றம் அமைந்துவிட்டதை, பஸ் நிலையத்தின் கும்பலை நெருக்கத்தை, அங்கு வந்து - தேங்கி - பிரியும் சுற்று வட்டா ரத்துச் சிற்றூர்கள் பலவற்றையும் சேர்ந்த பலரகமான ஜனங் களின் தோற்றத்தை, நடை உடை பாவனை செயல்களை எல்லாம் மயிலேறும் பெருமாள் சிறுபிள்ளைத்தனமான ஒரு வியப்போடு வேடிக்கை பார்த்து நின்றார்.

'எவ்வளவு மாறிப்போச்சு இந்த இடம்! எத்தகைய வளர்ச்சி! எவ்வளவு கூட்டமும் பரபரப்பும்!' என்று வியப் புற்றது அவர் மனம்.

முன்பு அவருக்குப் பரிச்சயமாகியிருந்த இந்த வட்டாரத் துக்கும் இப்போதைய நிலைமைக்கும் எவ்வளவு வித்தியாசம்!

— எவ்வளவு பஸ்கள், கார்கள்! என்ன போக்கு வரத்து!

'இப்போ பஸ் போகாத ஊரே இல்லை என்றாகிவிட்டது அண்ணாச்சி. மூலைமுடுக்குக்கு எல்லாம் பஸ்கள் போகுது. அதுனாலேதான் இவ்வளவு கூட்டம். எத்தனை பஸ்கள் விட்டாலும் சரியாகத்தானிருக்கும். டவுனுக்கும் பாளையங்

கோட்டைக்குப் போற பஸ்களைதான் பாருங்களேன். எப்பவும் நெருக்கடிதான். நின்னுக்கிட்டுதான் போகணும். எல்லா பஸ்களிலும் இதே கதைதான். எங்கேதான் போவாங்களோ! எதுக்குத்தான் போய்வாருங்களோ! பணம் எப்படித்தான் கிடைச்சுக்கிட்டிருக்குதோ! பஸ் ஸ்டாண்டிலே நின்னு பார்க்கிற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் எனக்கு இதே மலைப்பு தான்' என்று பால்வண்ணர் பேசிக்கொண்டிருந்தார்.

மனு. பெனு. தன் கண்முன்னே உயிர்த்து உலாவிய புது உலகத்தை பார்த்த திகைப்பில் மௌனியாகவே நின்று விட்டார்.

இருவரும் ரயில்வே ஸ்டேஷனில் போய் சிறிதுநேரம் உட்கார்ந்து ஓய்வெடுத்தார்கள். 'மணி பன்னிரண்டாகுது. இங்கேயே சாப்பாட்டை முடித்துவிடலாம்' என்று ஒரு ஓட்டலுக்குப்போய் சாப்பிட்டார்கள்.

திரும்பவும் பஸ் நிலையத்தில் வந்து நின்றார்கள்.

பெரியபிள்ளை தன் மன ஓட்டத்தை சொல்லாக்கிக் கொண்டிருந்தார்.

'ஐம்பது வருஷங்களுக்கு முன்னாலே ரெண்டே பஸ் தான் திருநெல்வேலிக்கும் பாளையங்கோட்டைக்கும் இடையே போய் வந்துக்கிட்டிருந்துது. வெவ்வேறு கம்பெனி பஸ். 'எம்.எஸ்.எம்.'னு ஒரு பஸ்பேரு. இன்னொண்ணு 'செல்வன்.' எம். எஸ். மோட்டார் சர்வீஸ்—மீனாட்சிசுந்தரம் மோட்டார் சர்வீசோ என்னமோ!—பழைய பஸ்ஸை ஓடவிட்டிருந்துது. செல்வன் மோட்டார் சிறிசா, நீலவர்ணம் பூசப்பட்டு, பார்க்க நல்லாயிருக்கும்...இந்தக்கட்சி கட்டுற விவகாரம் மனுசங்க கூடப்பிறந்த வியாதியின்னே சொல்லணும். எரிந்த கட்சி, எரியாத கட்சி பேசுறமாதிரி, அது உசந்தது, இது மட்டம்னு கட்சிகட்டி வாதாடுவதும் வசைபாடுவதும் இயல்பாகவே, சின்ன வயசிலிருந்தே ஏற்பட்டு வளருது. புகழப்படுற வனாலே இவங்களுக்கு தம்பிடிக்குப் பிரயோசனம் இருக்காது. மட்டம் தட்டிப் பேசப்படுகிறவனாலே இவங்களுக்கு எந்த

விதமான தீமையும் ஏற்பட்டிராது. இருந்தாலும் இதுதான் உசந்தது, அது தாழ்ந்தது என்று சிலர் ஒன்றை உயர்த்திப் புகழ்றதும், அதை எதிர்த்து வேறு சிலர் மறுப்பு பேசுறதும் எந்தத் துறையிலுமே இருந்துதான் வருது. சினிமா நட்சத்திரங்களிலே எவன் பேரிலாவது மோகம் கொண்டு, இவன் வாழ்க—அவன் ஒழிக என்கிற ரீதியில் கட்சிகள் கட்டி கூப்பாடு போடலியா, அதுமாதிரித்தான். அப்போ, திருநெல்வேலிப் பையன்களுக்கு செல்வன் மோட்டார் மேலே ஒரு மோகம்; எம். எஸ். மோட்டார் மீது வெறுப்பு. எம். எஸ். எம். என்று பேரு எழுதியிருந்ததுனலே, அதைக் கண்டதுமே முறுக்கு சுண்டல் மசால்வடேன்னு பையன்கள் கத்துவாங்க. அது பாளையங்கோட்டையிலே தெற்கு பஜார் போய், கோபாலசாமி கோயில் தேர் மண்டபத்தை சுற்றிக்கொண்டு திரும்பிவரும். அதனுலே மண்டபம் சுற்றும் மோட்டார் சர்வீஸ் என்று கேலியாக விரிவுரை சொல்வார்கள். செல்வன் மோட்டாரை புகழ்ந்து பாட்டுகள் கூட எழுதியிருந்தாங்க. அது எனக்கு ஞாபகமில்லே. 'நானூத்தேழு செல்வனை போல் நாகரீகமேது' என்று ஒரு வரிமட்டும் நினைவிருக்கு.'

'ஏயப்பா, உங்க ஞாபகசக்தியை பாராட்டவேண்டியதுதான். இதெல்லாம் கூட உங்களுக்கு ஞாபகம் இருக்குதே!' என்று ஆச்சர்யப்பட்டார் பால்வண்ணர்.

'பிறகு மூணு நாலுன்னு பஸ்களின் எண்ணிக்கை கூடிச்சு. இருந்தாலும் ரோடு பலநேரம் வெரிச்சோடித்தான் கிடக்கும். ஒருசமயம் ஒரு டிரைவர் ஹார்ன் சக்கிரவர்த்தின்னு பட்டம் பெற்ருரு. திருநெல்வேலி சந்திப்பிள்ளையார் கோயில் முக்கிலே புறப்படும்போது ஹாரனை அமுக்க ஆரம்பிச்சவரு, பாளையங்கோட்டை போறவரை நிறுத்தலே. திரும்பி வரும் போதும் அப்படியே ஓசைப்படுத்திக்கிட்டே இருந்தாரு. ஹாரனிலேயே பாட்டை ஒலிபரப்பிஞரு. 'தண்ணிக்குப் போ மகளே—தலைகுனிஞ்சு வா மகளே!—மோட்டாரு ட்ரைவரை கண்டா—முகம் கொடுத்துப் பேசாதே.' என்று அப்போ பிரபலமாயிருந்த ஒரு பாட்டை ஹாரனிலேவாசிச்சுக் காட்டினா

திஞலே, அவருக்கு ஹாரன் சக்கிரவர்த்தி அருணுசலம்னு பேரு ஏற்பட்டுட்டுது. ஒவ்வொரு ட்ரிப்பிலும் அட்டகாசமா இப்படி ஹாரன் பண்ணிக்கிட்டே போனதை இன்ஸ்பெக்டர் சாந்தப்பபிள்ளை கவனிச்சுக்கிட்டே யிருந்தாரு' என்று சொல்லிவந்தவர், 'சவுக்கடி சாந்தப்பபிள்ளையை உமக்குத் தெரியுமா?' என்று கேட்டார்.

'கேள்விப்பட்டிருக்கேன். அவ்வளவுதான்' என்ருர் பாவன்ன.

'ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் சாந்தப்பபிள்ளை பெரிய ஆளு. ரொம்பக் கண்டிப்பானவர். நேர்மையான மனுஷன். ஒழுக்கம் நேர்மை நியாயம் இவை எல்லாம் வாழ்க்கையிலே அமுல் நடத்தப்படவேணும் என்ற கொள்கை உடையவர். அந்தக் காலத்திலே இங்கே போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டராக இருந்தாரு. அப்போ அவங்க அதிகாரமும் ஆளு செல்வாக்கும் ரொம்ப மேலோங்கியிருந்த காலம். பொதுவா சர்க்கார் உத்தியோகஸ்தர்களை பத்திச் சொல்றேன். பவரும் பலமும் உள்ளவங்க என்ன வேணும்ஞலும் துணிஞ்சு செய்யலாம் என்று இருந்த காலம். ஆஞ சாந்தப்பபிள்ளை அதை நேர்மை நியாயம் ஒழுக்கத்துக்காகப் பயன்படுத்திஞரு' என்று அவரைப்பற்றி புகழ்ந்து பேசலாஞர் மஞ. பெஞ.

சாந்தப்பபிள்ளை எப்போதும் மோட்டார் பைக்கிலேயே பாளையங்கோட்டைக்கும் திருநெவேலிக்கும் சுற்றித் திரிவார். அவர் கையில் எப்போதும் சவுக்கு இருக்கும். ரோடில் எவன் தவறு செய்தாலும், சவுக்கால் சுளீரென்று ஒரு அறை கொடுத்துவிடுவார். வண்டி ராங்ஸைடிலே போஞல், சைக்கிளில் ஸ்பீடாகப் போஞல்—இப்படி என்ன குற்றம் என்ருலும், அவர் சவுக்காலடித்து உணர்த்துவார். வாய்க்காலில், பெண்கள் குளிக்கும் படித்துறை அருகே ஆண்கள் வேட்டியோ துண்டோ கட்டிக்கொள்ளாது கோவணம் மட்டும் கட்டிக் கொண்டு கரைமீதோ, தண்ணீரிலோ நின்ருல், அதை சாந்தப்பபிள்ளை பார்த்துவிட்டால், சவுக்காலடித்துத் திருத்துவார். 'பொம்பிளைக குளிக்கிற இடத்திலே ஆம்பிளைக இப்படி

நிற்கக்கூடாது. வேட்டி அல்லது துண்டு கட்டிக்கிட்டுத்தான் குளிக்கணும்' என்று கண்டிப்பு செய்வார். கார்கள் ஸ்பீடா ஓடி ஒன்றை ஒன்று முந்தக்கூடாது; பையன்கள் ரோட்டிலே ஜாலியா வட்டு உருட்டிக்கிட்டுப் போகப்படாது என்றெல்லாம் கார்வார் பண்ணினர். பையன்கள் ரப்பர் அல்லது இரும்பு வளையத்தை குச்சியால் தட்டித்தட்டி ஓட்டி கூடவே ஓடுவதை பார்த்தால், அவர் சவுக்கினல் சுண்டி அந்த வளையத்தை எடுத்து தூர வீசி எறிவார். குப்பைத் தொட்டியில் வீசுவார்; பக்கத்திலே முனிசிபல் குப்பை வண்டி போனால் அதில் போட்டுவிடுவார். அதே பையன்கள் மீண்டும் அதே குற்றத்தைச் செய்வதைப் பார்த்தால் சவுக்கினல் அவர்கள் மீதே சுண்டுவார். அவர் எந்த வேளையில் எந்தப்பக்கம் ஆஜராவார் என்று சொல்லமுடியாது. எந்நேரமும் சுற்றிக்கொண்டேயிருந்ததால், வாய்க்காங்கரை, குளத்தோரம், சந்துபொந்து, பெரிய வீதி என்று நெடுக அவர் மோட்டார் பைக் ஓடியதால், எங்கும் எல்லோரும் சாந்தப்ப பிள்ளையையும் அவர் சவுக்கடியையும் நினைத்து பயந்தபடியே செயல்புரிந்தார்கள். தெருக்களை, ரோட்டோரங்களை அசிங்கப்படுத்தும் காரியங்களை செய்ய அஞ்சினர்கள். சவுக்கடி சாந்தப்பபிள்ளை என்ற பேரு எங்கும் பிரபலமாக இருந்தது.

இப்படி அவர் பெயர் பல ஜில்லாக்களிலும் பிரபலமாகியிருந்ததால், அவர் அதை பயன்படுத்தி ரொம்ப நிறைய சொத்து சேர்த்திருப்பார் என்று பலரும் கருதினர்கள். ஒரு முறை பாளையங்கோட்டைக்கு வந்த ஐ. ஜி. ஆவ் போலீஸ் சாந்தப்ப பிள்ளையிடமே கேட்டார்: இதுவரை நீர் எவ்வளவு சொத்து சேர்த்திருக்கிறீர்? லட்சக்கணக்கிலே பணம் சேர்த்திருப்பீர் என்று பேசப்படுகிறதே? சாந்தப்பபிள்ளை புன்னகை புரிந்தார். 'பத்து லட்சம் சேர்ந்திருக்கு' என்றார். அதுபற்றி மேலும் ஐ. ஜி. விசாரிக்கவும், 'எல்லாம் மூவபிள் பிராப்பர்டிதான். அதுகளை உங்க முன்னலே கொண்டுவந்து காட்டுறேன். கொஞ்சம் இருங்க' என்று சொல்லி வீட்டுக்குள் போனர். அவருக்கு ஆண்களும் பெண்களுமா பத்துப்

பிள்ளைகள். அவர்களுக்கு நல்ல ஆடைகள் அணிவித்து, சீவிச் சிங்காரித்து, வயது வாரியா வரிசைப்படுத்தி ஐ. ஜி. முன்னே கொண்டுவந்து நிறுத்தினர். குழந்தைகள் பணிவோடு வணங்கினர்கள். 'இவைதான் என்னுடைய பத்து லட்சம். ஒவ்வொரு பிள்ளையும் எனக்கு ஒரு லட்சரூபாய் சொத்து. இவை தவிர எனக்கு சொத்தோ பணமோ சேரலே. சம்பளத்தைக்கொண்டு ஸிம்ப்பிளா வாழ்க்கை நடத்துறேம்' என்று பிள்ளை தெரிவித்தார். அவருடைய உயர்ந்த பண்பையும் நேர்மையையும் அறிந்த ஐ. ஜி. சாந்தப்பபிள்ளையை பாராட்டி, குழந்தைகளுக்கு வாழ்த்து தெரிவித்ததோடு, அவரைப்பற்றி நல்ல ரிப்போர்ட் எழுதி, உத்தியோக உயர்வுக்கும் சிபார்சு செய்தார்.

இதெல்லாம் அந்நாட்களில் மக்களால் உயர்வாகப் பேசப்பட்ட பெருமைகள். பள்ளிக்கூடத்தில் படிக்கிற பையன்கள் கூட போகிற வருகிற வழிநெடுக சாந்தப்பபிள்ளையின் பெருமைகளைப் பற்றிப் பேசி மகிழ்ந்து போனர்கள். 'ஹாரன் சக்ரவர்த்தி அருணசலம்' பற்றியும் அவர்கள் பேசினர்கள்.

'தண்ணிக்குப் போ மகளே—தலைகுனிந்து வா மகளே!' என்று ட்ரைவர் அருணசலம் எந்த மகளுக்கோ ஹாரன் மூலம் உல்லாச எச்சரிக்கை செய்தபடி நாலாவது ட்ரிப் ஆக அருமையான ரஸ்தாவில் பஸ்ஸை உற்சாகமாக ஓட்டிக் கொண்டிருந்தபோது, சாந்தப்பபிள்ளையின் மோட்டார் பைக் அந்த பஸ்ஸின் அருகில் ஓடியது. அவர் சவுக்கின் சுண்டுதல் 'ஹாரன் சக்கிரவர்த்தி' கையை விசாரித்தது. 'என்ன இது? ஒழுங்கா ட்ரைவ்பண்ணு. இப்படிப் போனல் ஆக்ஸிடென்ட் ஏற்படும். இனியும் இதுமாதிரி நடந்தியோ, சார்ஜ் பண்ணிடுவேன்' என்று எச்சரித்துவிட்டு சவுக்கடி சர்க்கிள் தனது வழியே போனர். இதையும் பையன்கள் வியந்து பேசி மகிழ்ந்தார்கள்.

மயிலேறும் பெருமாள்பிள்ளை கதைபோல் இதை எல்லாம் பால்வண்ணம்பிள்ளையிடம் சொல்லித் தீர்த்தார்.

அவரும் ரசித்துக் கேட்டார். பிறகு சொன்னார்: 'எனக்கும் சிலசமயம் தோணும் அண்ணாச்சி. ஊர்களிலே தெருக்களிலே நடக்கிற அநியாயங்கள், அட்டூழியங்கள், அக்கிரமங்கள், அசிங்கங்களை எல்லாம் பார்க்கிறபோதுதான் ; நம்ம சனங்க லேசிலே திருந்தமாட்டாங்க, சவுக்கால அடிச்சுத் தான் திருத்தணும் ; முன்காலத்திலே கொடுத்தமாதிரி சவுக் கடி கொடுத்து கற்றுக் கொடுக்கணுமின்னு. இதை நாற்பத் தஞ்சு நாற்பத்தாறு வருசங்களுக்கு முன்னாடி சாந்தப்பபிள்ளை செயலிலே செய்து சாட்டியிருக்காரு. பேஷ்!'

தான் இன்று நினைப்பதை அன்றே ஒருவர் சாதித்துக் காட்டியிருந்திருக்கிறாரே என்ற சந்தோஷம் அவருக்கு. 'பேஷ் பேஷ்! சவுக்கடி சாந்தப்பன்களும் நாட்டுக்குத் தேவைதான்' என்று சொல்லிக்கொண்டார்.

இரண்டு பேரும் பாளையங்கோட்டைக்கு பஸ்ஸிலேயே போவது என்று தீர்மானித்தார்கள். 'முதலில் என். ஜி. ஓ. காலனி, எழில்நகர், ஹைகிரவுண்ட் இதுகளை எல்லாம் உரிய பஸ்களிலேயே போய் பார்த்துவிடுவோம். அப்புறம் நமக்குப் பழக்கமான பழைய தெருக்களில் ஒரு நடை நடந்து, அப் படியே வடக்கு பஜார்போய், கோட்டூர் ரோடு வழியா ஊர்ப் பயணத்தை மேற்கொள்ளலாம்' என்று தம்பியாபிள்ளை போட்ட பிளானை அண்ணாச்சி ஏற்றுக்கொண்டார்.

பாளையங்கோட்டை ரொம்பவும் வளர்ந்துவிட்டது. பெருமாள்புரம், மகாராஜபுரம், என். ஜி. ஓ. காலனி, ஸ்டேட் பாங்க் எம்ப்ளாயீஸ் காலனியான 'எழில் நகர்' என்று நீண்டு கொண்டே போய், இன்னும் வளர்ந்துகொண்டிருந்தது. முன்பு பெரியபிள்ளைக்கு அறிமுகமாகியிருந்த 'ஹைகிரவுண்ட்' இப்போது இல்லவே இல்லை!

அந்தக் காலத்தில் 'ஹைகிரவுண்ட்' ஒரு சுகவாசஸ் தலம். பாளையங்கோட்டையிலிருந்து இரண்டு மைல் கிழக்கே தள்ளியிருந்த மேட்டுநிலம், வசதி மிகுந்தவர்களும், வெள்

ஊக்காரர்களும், டிஸ்ட்ரிக்ட் மெடிகல் ஆபீஸர் போன்ற உயர் அதிகாரிகளும், அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கட்டப்பட்டிருந்த பங்களாக்களிலும் சிறு வீடுகளிலும் குடியிருந்தார்கள். ரிட்டயர்ட் ஜட்ஜ், ஓய்வுபெற்ற உயர்மட்ட சர்க்கார் அதிகாரி, பண்ணையார் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்று 'மேட்டுக் குடியினர்'—ஹைகிரவுண்ட் காற்றேட்டமுள்ள இடம்; கடல் காற்று வந்து வீசுகிற இடம்; ஆரோக்கியத்துக்கு நல்லது என்று அங்கே பங்களா வாடகைக்கு எடுத்துத் தங்குவார்கள். சாரட்டு, குதிரை வண்டி அல்லது கார் வைத்திருந்தவர்கள் தான் அங்கே வசித்தார்கள். ஓய்வு பெற்ற உத்தியோகஸ்தர் களும், வாழ்க்கை வசதிபடைத்த கிழவர்களும் பொழுது போக்கவும் தேகப்பயிற்சியாகுமே என்றும் சாயங்கால வேளை களில் ஹைகிரவுண்டுப் பக்கம் 'வாக்' போவார்கள். அவர் களுக்கென்று 'இண்டியன் கிளப்' ஒன்று இருந்தது. சீட்டாட் டமும் கேரம் விளையாட்டும் முக்கியத்துவம் பெற்றிருந்தன. பாட்மின்ட்னும் உண்டு. இவர்கள் 'கிளப்' இரவு எட்டு மணிக்குள் அடைக்கப்பட்டுவிடும். 'இங்கிலீஷ் கிளப்' ஒன்றும் இருந்தது. அங்கு கூடுகிற வெள்ளையர்கள் குடித் துக் கும்மாளியிட்டு இரவில் வெகுநேரம்வரை கலகலப்பாக இருப்பார்கள். சனி இரவுகளில் 'துரைசானி'களும் வருவார் கள்; துரைகளும் துரைசானிகளும் குடித்துவிட்டு, டான்ஸ் ஆடிக் களிப்பார்கள் என்று விஷயம் தெரிந்தவர்கள் பேசிக் கொண்டார்கள்.

பள்ளி மாணவர்கள் ஒருசிலர் சனி ஞாயிறு மாலைகளிலும், விடுமுறை நாட்களிலும் சீக்கிரமே ஹைகிரவுண்ட் போய் விளையாடிப் பொழுது போக்கிவிட்டு, இருட்டுகிற சமயத்தில் திரும்பிவிடுவார்கள்.

வெறிச்சிட்டு விரிந்துகிடந்த அந்தச் செம்மண் பூமியில் அங்கும் இங்குமாக நின்ற ஒருசில கட்டிடங்கள் தவிர, ஒன் றிரண்டு ஆலமரங்களும், புல் இனங்களும் கற்றாழையும்தான் காணப்பட்டன. திருச்செந்தூர் கடலிலிருந்து வந்த காற்று

சுகமாக ஜிலுஜிலுக்கும். டி. பி. நோய்காரர்களுக்கு அது இதம் தரும் என்று சொல்லிக் கொள்வார்கள்.

திருநெல்வேலி வட்டாரத்துக்கு முதல் முதலாக வந்த ஆகாய விமானம் ஹைகிரவுண்டில்தான் இறங்கி நின்றது. எல்லோரும் வந்து பார்க்கட்டும் என்று பத்து நாட்கள் அது அங்கே நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. பழங்கால மாடல்; பெரிய ஏரோப்ளேன். அவ்வப்போது தரையிலிருந்து கிளம்பி மேலே பறந்து வட்டமிட்டு, நேரே மேற்கே போகும். பிறகு திரும்பிவரும். பேட்டைவரை போய் திரும்புவதாகச் சொன்னார்கள். அப்படி மேலே ஏறுவதும் இறங்குவதும் பார்ப்பதற்குப் பெரும் வேடிக்கை ஆயிற்று. சுற்றுவட்டாரத்திலுள்ள சகல ஊர்களிலிருந்தும்—முப்பத்தைஞ்சு நாற்பது மைல்களுக்கு உட்பட்ட பெரிய ஊர்கள், பட்டிதொட்டிகளில் இருந்தெல்லாம்—ஜனங்கள் 'ஆகாசக் கப்பலை' பார்ப்பதற்கென்றே ஹைகிரவுண்டுக்கு வந்து போனார்கள். எப்ப பார்த்தாலும் திருவிழாக் கூட்டம்தான். சாமி நெல்லையப்பர் தேரோட்டத்தின் முதல் நாளுக்குக் கூடுகிற கூட்டத்தைவிட அதிகமான கூட்டமே தினசரி கூடிக்கொண்டிருந்தது. 'மானத்திலே பறக்கிற கப்பலை கிட்ட நின்று நல்லாப் பார்க்கலாமே. அது கிளம்பி மேலே போறதையும், இறங்கி ஓடி நிற்பதையும் பார்க்கலாமே' என்ற ஆசை ஆண்களையும் பெண்களையும், சகல வயசு, சகல தரத்து மக்களையும், ஹைகிரவுண்டுக்கு இழுத்துவந்தது. அந்த மேட்டுநிலம் அதனுடைய வரலாற்றிலேயே அப்போதுதான் அவ்வளவு ஜனங்களை கண்டிருந்தது.

ஏரோப்ளேன் பக்கத்தில் போகமுடியாது. எட்ட, வேலி கட்டியிருந்தது. அங்கே சுற்றி நின்றுதான் பார்க்கவேண்டும். நன்றாகவே பார்க்கமுடிந்தது. ஒரு ரூபாய் கொடுத்தால், பக்கத்தில் போய் அதை சுற்றிவந்து தொட்டுத்தடவி பார்க்கலாம். கதவைத் திறந்து உள்பகுதியையும் காட்டுவார்கள். ஐந்து ரூபாய் கொடுத்தால் உள்ளே ஏறி உட்கார்ந்து, பறக்கலாம். பேட்டைவரை போய் வந்து இறங்கலாம். அப்படி

ஐந்து ரூபாய் கொடுத்து ஏகப்பட்ட பேர் பறக்கும் அனுபவம் பெற்ருர்கள்.

சிவபுரத்தை சேர்ந்த அக்காள் ஒருத்தி—அப்போது அவளுக்கு இருபத்துமூன்று இருபத்துநான்கு வயசிருக்கலாம் —கல்யாணத்துக்கு எடுத்திருந்த, ஜரிகை நிறைய நெய்த, 'முகூர்த்தப் பட்டை' கட்டிக்கொண்டு, இருந்த நகைகளை எல்லாம் அணிந்துகொண்டு, பெருமையாக ஏரோப்ளேன் பார்க்கப்போய், ஐந்து ரூபாய் கொடுத்து அதில் ஏறிப் பறந்து பார்த்துவிட்டு, சிறு பெண்ணின் குதூகலத்தோடு 'நான் ஏரோப்பிளேன் சவாரி போய்வந்தேனே' 'நான் ஏரோப் ளேனிலே பறந்திட்டு வந்தேனே' என்று ஜம்பமாக ஒலிபரப் புவதை ரொம்பநாள் அனுஷ்டித்து வந்தாள். இதுவும் மயிலேறும் பெருமாளுக்கு நன்ருக ஞாபகமிருந்தது.

'இப்போது ஹைகிரவுண்டே அடையாளம் தெரியாதபடி மாறிப்போச்சே!' என்று அங்கலாய்த்தார் பெரியபிள்ளை.

காலனிப் பகுதிகளும் கட்டிடங்களுமாய்—ஆஸ்பத்திரி, வைத்தியக் கல்லூரி, வீடுகள், காலேஜ், கட்டிடங்கள்... கட்டிடங்கள்! சாதிக்காப் பலகைப் பெட்டிகள் போன்ற, அழகோ எடுப்போ இல்லாத, நாகரிகக் கட்டிடங்கள்! கண் போன இடமெல்லாம் செம்மண் விரிநிலமாய், பொட்டல் காடாய், காட்சிதந்த மேட்டுநிலம் இப்போது காங்கிரீட் கட்டிடக்காடு ஆகி, நகரத்தின் ஒரு எக்ஸ்டன்ஷன் ஆக வளர்ந்து, கும்பலும் பஸ் போக்குவரத்தும் பெற்ற பிரதேச மாக மாறிநின்றது.

'என்னமா மாறிப்போச்சு! என்னமா மாறிப்போச்சு!' என்று பெரியபிள்ளை, அதிசயிக்கிருரா அல்லது அந்த மாறு தலுக்காக வருத்தப்படுகிருரா என்று புரியாத விதத்தில், திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தார்.

'பட்டணங்கள் இப்படித்தான் அண்ணுச்சி அசுர வேகத் திலே வளர்ந்துக்கிட்டே போகுது, கிராமங்கள் அழுதுவழிஞ்ச

நிலையிலேயே இருக்குது; அல்லது தேஞ்சு போகுது' என்று பால்வண்ணம் குறிப்பிட்டார்.

அவர்கள் அங்கேயே ஒரு ஓட்டலில் காப்பிமட்டும் குடித்தார்கள். பஸ்ஸில் ஏறி பாளையங்கோட்டை சேர்ந்தார்கள்.

தெற்கு பஜார், கோபாலசாமி கோயில் மாடவீதிகள், ரதவீதிகள் எல்லாம் பெரும் மாறுதல் எதையும் பெறுமல்—நாகரிக நகரத்துக்குரிய பரபரப்போ பகட்டோ கும்பல் நெருக்கடியோ இல்லாமல், தூங்கிவழியும் தோற்றத்தில்தான் தென்பட்டன.

'என் கூடப்படிச்சவர் ஒருவர் மெட்ராசிலே இருக்கார். சில வருஷங்களுக்கு ஒருதடவை இங்கே வருவார். ரொம்பப் பிரியமா, குட் ஓல்ட் பேலம்கோட்டா (Good old Palam-cottah) அன்னைக்கு இருந்த மாதிரியேதான் இன்னைக்கும் இருக்கு; என்னை மாதிரித்தான் அதுவும் இருக்கு; புறப் பாதிப்புகளினுலே தீவிரமா அசைக்கப்படாமல் அப்படியே, என்று குறிப்பிடுவார். அவர் இந்த வட்டாரத்தை மனசிலே வச்சுக்கிட்டுத்தான் அப்படிச் சொல்ற வழக்கம்' என்ருர் பாவன்ன.

அவர்கள் மார்க்கெட்டுக்குள் போய் காய்கறிகள் வாங்கினர்கள்.

'மார்க்கெட்டின் பழைய அழகு கெட்டுப்போச்சுதே. முன்பு விசாலமா, அமைதியும் அழகும் நிறைஞ்சதா இருந்துது. இப்போ குறுகி, நெருக்கடி மிகுந்து, எல்லாவிதமான கடைகளும் இடிச்சு நெருக்கிகிட்டு, என்னமோ மாதிரி இருக்குதே' என்று பெரியபிள்ளை வருத்தப்பட்டார்.

அப்புறம் வடக்கு பஜாரில் தேவையான சாமான்களை வாங்கி, பையில் வைத்துக்கொண்டு, ஒரு ஓட்டலில் டிபன் சாப்பிட்டுவிட்டு, கோட்டூர் ரோடு வழி நடந்தார்கள்.

தென்வடலாய் நீண்டு கிடக்கும் குறுகிய அந்தத் தெருவின் தெற்குப்பகுதியில், ஆரம்பத்தில், கடைகள் நெருக்கமாகக் காணப்படும். அடுத்து வசதி உள்ளனவும் இல்லா

தனவுமான வீடுகள் அடுக்கு அடுக்காக. காற்ரேட்டமில்லாத சூழ்நிலே.

அவர்கள் இருவரும் சாவகாசமாக நடந்தார்கள். அப்போது மணி நாலு ஆகியிருக்கவில்லே. மெதுமெதுவாக நடந்தாலும் அஞ்சு-அஞ்சேகால் மணிக்கு தாமிரவர்ணி ஆற்றுக்குப் போய்விடலாம் என்ற தெம்பு அவர்களுக்கு இருந்தது.

தெருவின் பாதியில் வருகிறபோதே வடக்கே கீழ்புறத்து வீடு ஒன்றின் வாசல்படியில் நின்று ஒரு அம்மாள் இவர்கள் பக்கமே பார்ப்பது தெரிந்தது. வேறு ஒன்றிரண்டு பெண்கள் நின்று வேடிக்கையாய் தெருவை பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

இவர்கள் நெருங்க நெருங்க அந்த அம்மாள்—அவளுக்கு ஐம்பது வயதுக்கும் அதிகமாகவே இருக்கும்—இவ் இரண்டு பேரையுமே கூர்ந்து நோக்குவது புரிந்தது.

இருவரும் அவ் வீட்டை மிகவும் சமீபித்ததும் அவள் படிகளே விட்டுத் தெருவில் இறங்கி நின்று, அவர்கள் முகத்தையே கவனித்தாள். பிறகு 'ஐயா, நீங்க சிவபுரத்திலே இருந்தா வாறீக?' என்று தயக்கத்தோடு கேட்டாள்.

'ஆமா' என்ருர் பெரியபிள்ளே.

அவரை மேலும் நன்ருக நோக்கிய அவள், 'நீங்க வேப்ப மரத்து வீட்டு ஐயாதானே?' என்ருள்.

'ஆமா' என்ருர் அவர், இவள் யார்னு தெரியலியே எனும் மனக்குழப்பத்தோடு.

'ஐயா வாங்க' என்று கும்பிட்ட அவள், முகம் மலர்ச்சியுற, அதில் சிறிது வெட்கமும்கூட, 'ஐயா மதுரையிலே யிருந்து எப்ப வந்தீக? ரொம்பகாலமா ஊர்பக்கமே வராம இருந்தீகளே?' என்ருள்.

'நான் வந்து இருபது நாளாச்சு' என்ருர் மஞ. பெஞ. நீ யாரு, என்னேபத்திய விவரம் உனக்கு எப்படித் தெரியும்

என்று அவளிடம் கேட்கவேண்டும் என மனம் துடித்தாலும் அதை கேட்காமல் அவளையே பார்த்தபடி நின்றார்.

இவ யாரு? இவளை முன்னாலேயே பார்த்தமாதிரி இருக்குதே என்று குழம்பிக்கொண்டிருந்தார் பால்வண்ணம்பிள்ளை.

'ஐயா, என்னை இனம் தெரியுதா? ஐயாவுக்கு என்னை அடையாளம் கண்டுக்கிட முடியுதா?' என்று அவள் சிரித்துக்கொண்டே கேட்டாள்.

அவளுக்கு ஐம்பது-ஐம்பத்திரண்டு வயதுதான் இருக்கும் என்றாலும், அவ்வயசுக்கு மீறிய முதுமைச் சின்னங்களை காலம் அவள் முகத்திலும் மேனியிலும் உழுது விதைத்திருந்தது. வறுமையும் வாழ்க்கைச் சோதனைகளும் அதற்குக் காரணமாக இருக்கலாம். உடல் மெலிந்து, கன்னங்கள் ஒட்டிப்போய், தலைமயிர் நரைத்து, இளமையின் அழகையும் இயல்பாய் அவளுக்கிருந்த அம்சங்களையும் சிதைத்துப் பாழ்படுத்தியிருந்தன. அதனால் நாற்பது வருஷங்களுக்கு முன்னே அவள் எப்படி இருந்திருப்பாள் என்று நினைத்துப்பார்த்து, இன்னார்தான் என்று இப்போது புரிந்துகொள்ள முடியவில்லை பெரியபிள்ளையால்.

தனது இயலாமையை மறைக்க விரும்பவில்லை அவர். 'தெரியலையே! யாரு?' என்று, தன்னை நன்றாக அறிந்து வைத்திருக்கும் அவளிடமே இப்படிக் கேட்க வேண்டியிருக்கிறதே என்ற வருத்தத்தோடும் வெட்கத்தோடும், கேட்டார்.

'நாற்பது வருசமாச்சே! நானும் ரொம்ப மாறிப்போயிட்டேன். எப்படி கண்டுகொள்ளமுடியும்?' என்று தனக்கும், தயங்குகின்ற அவருக்கும் சமாதானம் கூறிக்கொள்பவள் போல் முணமுணத்து, 'நான்தான் செம்பகம். உங்க வீட்டிலே வேலை செய்துகிட்டிருந்த பொன்னம்மா மக' என்று அறிமுகப்படுத்திக் கொண்டாள்.

'செம்பகம்' என்ற சொல்லே அவர் உள்ளில் ஏகப்பட்ட வெளிச்சத்தைத் தட்டி ஒளியூட்டிய ஸ்விச்சின் க்ளிக் ஓசை போல் அமைந்துவிட்டது. 'செம்பகமா!' என்று அதிச

யித்தது அவர் மனம். 'அந்தச் செம்பகமா இப்படிக் கிழவி ஆகி...' என அதிர்ந்தது. ஒளி மினுமினுக்கும் கண்களும், அந்த மூக்கும், சிரிக்கும் உதடுகளும் மோவாயும், இப்போ கவனித்துப் பார்க்கையில் ஆளை அடையாளம் காட்டும் மிச்ச சொச்சங்களாக இன்றும் அமைந்துகிடப்பது பட்டது.

அவர் ஒன்றும் பேசாமல் தன் முகத்தையே பார்த்த'படி நின்றுவிட்டதைக் கண்டு, 'இன்னும் ஐயாவுக்கு அடையாளம் பிடிபடலையா?' என்று சிரித்துக்கொண்டே அவள் கேட்டாள்.

'புரியாமல் என்ன! நல்லாத் தெரியுது. எப்படி இருந்தவ எப்படி ஆகி இருக்கிறே என்ற திகைப்பிலே என்னலே ஒண்ணும் பேசமுடியலே' என்ருர் பிள்ளை. உணர்வின் தளதளப்பு அவர் குரலில் வேலை செய்தது.

'வீட்டுக்கு வாங்க ஐயா. இப்படி தெருவிலே நிறுத்தி வைச்சிருக்கேனே நானும்...'

'இல்லே, நாங்க போறேம். காலையிலேயே ஊரைவிட்டு வந்திட்டோம். இந்தப் பாதை வழியே போயி பழகின ஊர்களை பார்த்துக்கிட்டே போகலாமேன்னு இப்படி நடந்து வந்தோம்...'

'அது எனக்கு நல்லகாலமா அமைஞ்சிருக்கு. பழகின பழைய ஆளுன்னு என்னையும் மதிச்சு, தயவு செய்து என் வீட்டையும் மிதிச்சிட்டுப் போகணும்' என்று அவள் வேண்டினுள். 'ஐயா, தயவுசெஞ்சு நீங்களும் வரணும்' என்று பால்வண்ணத்தையும் கேட்டுக்கொண்டார்.

அவள் பணிவுடன் வேண்டிக்கொண்ட விதமும், வர வேண்டுமே என்ற ஆவலும் ஏக்கமும் கலந்த பாவத்துடன் நோக்கிய விதமும், வரமாட்டோம் என்று தட்டிவிட்டு வழியோடு போனல் அந்த ஏமாற்றத்தினல் அவள் கண்டிப்பாக மனவருத்தம் மிகுதியாகக் கொள்வாள் என்று எண்ண வைத்தன. அதனல் அவள் வேண்டுதலை மறுக்கமுடியாமல் அண்ணச்சி தம்பியை பார்க்க, தம்பியாபிள்ளை 'போயிட்டுத்

தான் போவமே' என்க, 'உம்' என்று பெரியவர் முன் நடக்கவும், மகிழ்ச்சி பூத்துக்கிடந்த செண்பகத்தின் முகத்திலே சூரியப் பொன்னொளி வந்து தங்கியது போன்ற ஜொலிப்பு ஏற்பட்டது.

அவள் அவசரமாகப் படிகள் ஏறி உள்ளே விரைந்தாள். அங்கு நின்ற மகளிடம் ஏதோ சொல்லிவிட்டு, பாயை எடுத்து விரித்தாள். வந்துகொண்டிருந்த இருவரையும் 'வாங்க வாங்க' என்று உபசரித்தாள். 'உட்காருங்க உட்காருங்க' என்றாள்.

அவர்கள் அமர்ந்தார்கள்.

'குடிக்கத் தண்ணி வேணும்' என்றார் பெரியவர்.

'இதோ? என்று உள்ளே விரைந்து, ஒரு செம்பு நிறைய குளிர்ந்த நீரும், இரண்டு டம்ளர்களும் எடுத்துவந்து அவர்களுக்கு முன்னே வைத்துவிட்டு விலகி, தூணருகே போய் நின்றாள் செண்பகம்.

இரண்டுபேரும் தண்ணீர் குடித்தார்கள்.

'எப்படி இருக்கிறே? இங்கே எப்ப வந்தே?' என்று பெரியபிள்ளை கேட்டார்.

'ஊம், இருக்கேன். நான் பாளையங்கோட்டைக்கு வந்து ஒரு வியாழவட்டம் ஆயிட்டுது. பன்னிரண்டு வருசமா இதே வீட்டிலேதான் இருக்கிறேன். என் கதையை இந்த சந்தோச நேரத்திலே ஏன் சொல்லணும்? எவ்வளவு கஷ்டங்கள் படணுமோ அவ்வளவும் பட்டாச்சு. இன்னும் ஈசன் என் தலையிலே என்ன எழுதியிருக்கானோ, அதையும் அனுபவிக்கத்தானே வேணும்? அனுபவிக்கமாட்டேன்னு சொன்னாக் கண்டா அவன் விட்றப்போறானா?' என்று புலம்பத் தொடங்கினாள்.

அவள் புலப்பத்தை நிறுத்த விரும்பியவர்போல, 'ஆமா. இங்கே நீ மட்டும்தான் இருக்கியா?' என்று கேட்டுவைத்தார் பெரியவர்.

'என் மக இருக்கா. அவளுக்கும் பதினெட்டு வயசு முடிஞ்சுபோச்சு. கல்யாணம் நடக்கிறதுக்கு இன்னும் வேளையும் பொழுதும் வரலே' என்று கூறிவிட்டு, உள்ளே பார்த்து 'மயிலு!' என்ருள்.

'மக பேரு மயிலம்மையா?' என்று கேட்டுவைத்தார் பாவன்ஞு, தானும் ஏதாவது பேசவேண்டுமே என்பதற்காக.

'நான் இந்த நிலைமையிலாவது இருக்கேன்னு சொன்ஞ அது பெரிய ஆச்சி புண்ணியத்திஞலேயும் இந்த ஐயா ஆசீர் வாதத்திஞலும்தான். ஐயாவோட பேரைத்தான் என் மக ளுக்கு இட்டிருக்கேன்' என்று நன்றி விசுவாசத்தோடு செண் பகம் பேசிஞள்.

அவள் அப்படிச் சொன்னது மயிலேறும் பெருமாள்பிள்ளை யின் இதயத்தை தொட்டது. அவருள்ளத்தில் ஒருவித கனம் படிந்தது போலிருந்தது. அவர் எதுவும் சொல்லாமலே பாயை பார்த்தபடி உட்கார்ந்திருந்தார்.

மயிலு ஒரு தட்டில் அஞ்சாறு முறுக்குகளை எடுத்துவந்து அம்மாவிடம் கொடுத்துவிட்டு அவ்விருவரையும் நோக்கிய வாறு நின்ருள். பதினெட்டு வயதுக் குமரியை கவனித்த பெரிய பிள்ளைக்கு செண்பகத்தின் பதிமூன்று-பதிஞன்கு வயசு உருவமே நினைவில் படிந்தது. 'பெரியமனுஷி' ஆவ தற்கு முன்னரே—அவளுடைய பதிமூன்று பதிஞன்காவது வயதிலேயே—செண்பகம் நல்ல உடல் வளர்த்தி பெற்றிருந் தாள்.

முதலிலேயே மகளும் அம்மையும் சேர்ந்து நின்றிருந்த தால், சின்னவளின் தோற்றத்தைக் கொண்டே இவள் செண் பகம் மகளாஞல் பெரியவள் செண்பகமாகத்தான் இருக்க வேண்டும் என்று மிகச் சுலபமாக இனம் கண்டிருக்க முடியுமே என்று அவர் மனம் எண்ணியது.

'முறுக்கு சாப்பிடுங்க. மயிலு, காப்பியை எடுத்தாம்மா' என்றவள், 'நில்லு நில்லு. இவங்கதான் சிவபுரம் பெரிய ஐயா. மதுரையிலேயே தங்கிட்டாகன்னு சொன்னேனே

அவுக. ஐயாவை கும்பிடு. அவுகளையும் கும்பிடு' என்று மகளுக்கு அறிவுறுத்தினாள்.

மகளும் பணிவுடன் வணங்கிவிட்டு உள்ளே போனாள்.

'இதெல்லாம் எதுக்கு! இப்பதான் வடக்கு பஜார் ஓட்டல்லே டிபனும் காப்பியும் சாப்பிட்டோம்' என்றார் மனா. பெனா.

'ஆமா, சாப்பிட்டுட்டுதான் இப்படித் திரும்பினோம்' என்று பால்வண்ணம் தெரிவித்தார்.

முறுக்குத்தட்டை அவர்கள் முன் வைத்துவிட்டு, 'அதனாலே என்ன? நான் அன்போடு தாறதையும் சாப்பிட்டு வையுங்க. ரெண்டு முறுக்குக்கா வயிற்றிலே இடம் இல்லாமல் போகுது!' என்று கூறி லேசாகச் சிரித்தாள் செண்பகம். மகள் கொண்டுவந்த காப்பி டம்ளர்களை வாங்கி அவர்கள் பக்கத்தில் வைத்தாள்.

அவர்கள் மறுப்பதற்கில்லை. முறுக்கு ருசியாக இருந்தது. காப்பிதான் கருப்புக்கட்டிப் பானகமாக இருந்தது. அன்புடன் தரப்பட்டதை குறை கூறிக் கொண்டிருக்க முடியுமா?

சிறிதுநேரம் பேசிவிட்டு இரண்டுபேரும் 'அப்ப நாஙக வாரோம்' என்று கிளம்பினார்கள்.

'ஐயா எங்களை மறந்துடாதீங்க. ஞாபகம் இருக்கட்டும்' என்று கூறி வணங்கினாள் தாய்.

'மறக்கமுடியுமா?' என்றார் மனா. பெனா. 'போயிட்டு வாரோம்...வாரோம் மயிலு!' என்று விடை பெற்றார்.

மயிலும் வணக்கம் கூறித் தலையை ஆட்டினாள். 'அந்தக் காலத்துச் செம்பகமே கண்ணுக்குள்ளே வந்து நிக்கிறமாதிரி இருக்கு' என்று பெரியபிள்ளை எண்ணிக்கொண்டார்.

# 13

பாளையங்கோட்டை எல்லையை கடந்து கோட்டூரை தாண்டி, சிறிதுகாலம் வாய்க்கால் ஓரமாக உள்ள ரோடில் நடந்து, பின் வயல்காட்டினுள் இறங்கினார்கள் இரண்டு பேரும்.

கோடை நாட்கள் ஆகையால் வாய்க்கால் வயல்கள் எல்லாம் வறண்டு வனப்பிழந்து காட்சிதந்தன.

வயல்களில் பயிர் வளர்ந்து நிற்கும் காலமாக இருந்தால், நீர்வளமும் பசுமையும் ஜிலுஜிலுக்கும். மரகதப் பசுங்கடல் என வியாபித்து வளர்ந்திருக்கும் நெல்பயிர் காற்ருேடு அலையாடிக் குதிப்பது உவகையூட்டும். இருபுறமும் நிற்கும் பயிர்களினூடே, அகலமான நடைவரம்பில் நடப்பதே இனிய அனுபவமாக அமையும். மேலே பளீரிடும் வானநீலமும், வெகுதூரம்வரை புலனுகும் பலரகச் சுற்றுவட்டாரக் காட்சிகளும் அற்புதமாக விளங்கும்.

இப்போது வரப்புகளின் புல் காய்ந்து கருகி, வயல்களில் களிமண் பாளம்பாளமாய் வெடித்து, வெயிலின் சக்தியை எடுத்துக்காட்டின.

'பார்த்துப் பன்னிரண்டு வருசத்துக்கு மேலாகிவிட்டதனுலே, செம்பகத்தம்மாளை சட்னு எனக்கு அடையாளம் தெரியலே. அதுவும் இல்லாம இந்த இடைக்காலத்திலேயே ஆளு ஒரே அடியா மெலிந்து, கிழடுதட்டி, ரொம்பவும் மாறிப் போயிருக்கா. இல்லாமைதான் காரணம்' என்று பால்வண்ணம், வயல்களினூடே நடக்கும்போது, சொன்னுர்.

'உம்...ஊம்' என்று கூறிவந்த மனு. பெனு. 'நான் இவளை இவளோட பதினாலாவது வயசிலே பார்த்தது. அதுக்குப்பிறகு பார்க்கவே இல்லை. சம்பகம்னு சொன்னு அவளுடைய அந்த இளமை உருவம்தான் நினைவிலே நிக்குது. நாற்பது வருசங்களுக்குப்பிறகு வந்து, அதுவும் எதிர்பாராத

நேரத்திலே எதிர்பார்க்காத இடத்திலே வந்து நின்னுக்கிட்டு, ' நான் சம்பகமில்லா! என்னை தெரியலியா உங்களுக்கு?'ன்னு கேட்டா, மனுசன் திகைச்சுப்போயி நிக்காம என்ன செய்ய முடியும்?' என்று பெரியபிள்ளை கேட்டார்.

' அது சரிதான் அண்ணச்சி. அவ உங்களை மறக்கலே. அதுமட்டுமில்லே. உங்களைப்பத்தி விசாரிச்சுக்கிட்டே இருந் திருந்திருக்காயின்னும் தெரியுது. இந்தக் காலத்திலே இவ்வளவு விசுவாசமா இருக்கிறவங்க அபூர்வம் அண்ணச்சி!' என்று பாவன்னு தன் மனசில் பட்டதைச் சொன்னார்.

' உம்-ஊம்' என்று தான் மறுமொழி கொடுத்தார் பெரி யவர். ' அம்மை உயிரோடு இருந்தவரை இவளோட தாயாரு பொன்னம்மாதான் எங்க வீட்டிலே வேலை செய்துக் கிட்டிருந்தா. இந்தப் புள்ளெயை—அப்ப செம்பகம் சின்னப் புள்ளைதானே—அம்மா பிரியமா கவனிச்சுக்கிடுவா. வீட்டிலே என்ன செஞ்சாலும் அதுக்கும் ஒரு பங்கு உண்டு. அது எங்க வீட்டுச் சோற்றை உண்டுதான் வளர்ந்துதுன்னு வையுமேன். அம்மை செத்தபிறகும் பொன்னம்மாதான் வீட்டுக்காரியங்கள் அனைத்தையும் கவனிச்சுக்கிட்டா. செம்பகம் புள்ளெயும் கூடமாட வேலைகள் செய்யும். பொன்னம்மாளுக்கு ஏலாத நாள்களிலே அதுவே சகல வேலைகளையும் செய்துமுடிக்கும். பதிமூணரை-பதினாலு வயசுவரை அது பெரியமனுஷி ஆகலே...இப்போல்லா பன்னெண்டு வயசிலேயே, இம்புட்டுப் போலே இருக்கையிலேயே, பொட்டைப் புள்ளைக சமைஞ்சு சடங்கு கழிக்கிற அந்தஸ்தை அடைஞ்சிருதுக. அவசர காலத்துக்கு ஏத்தபடி எல்லாம் அவசரம்தான்! ஆனா உயரத் திலேயோ உருவத்திலேயோ அந்நாளைய வளர்த்தி இந் நாளைய புள்ளெகளுக்கு இல்லை...செம்பகம் பதிமூணாவது வய சிலே பெற்றிருந்த வளர்த்தியை அவ மக மயிலு பதினெட் டாவது வயசிலே பெற்றிருக்கலே. செம்பகம் மினுமினு தள தளன்னு நல்ல குதிரைக்குட்டி மாதிரி இருந்தா. பருவம் அடைஞ்சு அதுக்கேற்ற உடல் பொலிவையும் பெற்று வளர்ந் திருக்கக்கூடிய சமயத்திலே அவள் ரொம்ப ஜோராகத்தான்

இருந்திருக்கணும். ஆறு, அந்த அழகெல்லாம் எங்கே போச்சு? வாலிப வனப்பும் வலிவும் சிறப்பும் நாற்பது வருச காலத்திலே எப்படியோ மக்கிப்போயி, பரிதாபத்துக்குரிய ஒரு உருவமா நிக்கிறதை பார்க்கையிலே, மனுசப் பிறவியிலே ஏன் இப்படி எல்லாம் நடக்கு என்ற வேதனைதான் எனக்கு ஏற்படுது' என்று கூறி, நீண்ட பெருமூச்சு உயிர்த்தார்.

எதிர்ப்பட்டவளின் சின்னவயசு உருவத்தை நினைத்துப் பார்த்து ஏங்குவதுபோல் அவர் பேசியதைக் கேட்கவும், 'அண்ணுச்சியும் பெரிய ஆளுதான் போலிருக்கு!' என்று பால்வண்ணம் எண்ணிக்கொண்டார். அவர் வேதாந்த ரீதியிலே பேச்சை முடிக்கவும் இவருக்கு சப்பென்றுகிவிட்டது.

வயல்வெளி முடிந்ததும் ஒரு வாய்க்கால். அதன் பாலத்தைக்கடந்து, படிக்கட்டைத் தாண்டி, 'முடுக்கு' போன்ற தெருவில் அடிவைத்தால், படப்பகுறிச்சி ஊர். வாய்க்காலில் தண்ணீர் ஓடினால் குளிக்கும் ஆட்கள் நிறைய தென்படுவார்கள். இப்போது ஒரு 'ஈ-காக்கைகூட' தென்படவில்லை!

அப்புறம் சற்று தொலைவுக்கொரு ஊராக அநேக கிராமங்கள். எல்லாம் வறண்டு தூங்கி வழிந்துகொண்டுதான் இருந்தன.

'இந்த ஊர்கள் எல்லாம் அன்னைக்குப் பார்த்தமாதிரியே தான் இருக்கு. பிரமாத மாறுதல் எதையும் காணோம். பளிச்னு தெரிகிற மாற்றம் அல்லது வளர்ச்சியின்னு ஒன்றை சொல்லணுமின்னு, எங்கே பார்த்தாலும் புதர்புதரா மண்டிப் பேயா வளர்ந்துகிடக்குதே நீர்க்கருவைச் செடி—வேலிக் கருவையின்னும் சொல்லுவாங்க—அதைத்தான் சொல்லணும். எந்த ஊருக்குப் போனாலும் இதுதான் வனமா வளர்ந்து கிடக்கு! குறுகிய காலத்திலே ரொம்ப வேகமாப் பரவிப் படர்ந்திட்டுது ஐயா இந்தச் செடி. மேலும் மேலும் பிசாசு வேகத்திலே வளர்ந்துகிட்டேயிருக்கு!' என்றார் மன. பென.

'இதுனாலே ஒரு லாபம்—ஊராரின் விறகுப் பிரச்னை சுலபமாத் தீருது. வெட்ட வெட்ட துளுத்துக்கிட்டே இருக்குதே

இந்தச் செடி! வெட்ட வெட்டத்தான் அதன் வளர்ச்சிக்கு வேகம் ஏற்படுது' என்றார் மற்றவர்.

'அந்நாளையிலே சப்பாத்திக்கள்ளி இப்படித்தான் வேகமாப் படர்ந்து பரவி, ரொம்பத் தொல்லையா மாறிக்கிட்டிருந்துது. அதை ஒழிக்க ஒரு வெள்ளைப்பூச்சி வந்துது. ஒருசில வருசத்திலே சப்பாத்திக்கள்ளி இருந்த இடம் தெரியாமப் போயிட்டுதே! அப்புறம் அது தலைதூக்கி ஒத்தை செத்தெ வளர முயற்சித்தாலும், கூடவே அந்த வெள்ளைப்பூச்சியும் தோணி அதை தலை எடுக்க விடாதபடி அதை அழிச்சுக்கிட்டே இருக்கு. அதுமாதிரி, பெரும் தொல்லையாகவும் இடைஞ்சலாகவும் மாறிவிட்ட இந்த வேலிக்கருவையையும் அழிச்சு ஒழிக்கிறதுக்கு ஒரு பூச்சி வந்து சேராதுன்னு இருக்கு இப்ப!'

'அப்படி ஏதாவது வந்து அழிச்சாத்தான் உண்டு அண்ணைச்சி. இப்ப நம்ம ஆத்தங்கரை நெடுக இந்தச் செடி கண்டமானிக்கி அடர்த்தியா வளர்ந்து வண்டித்தடமே இல்லாதபடி பண்ணிப்போட்டுது. போகப்போக கரைமேலே ஆட்கள் நடக்கிறதுகூடக் கஷ்டமாகி விடும்போல் தோணுது. ஒரே அடியா, புதர்புதரா இந்தச் செடி வளர ஆரம்பிச்சிட்டுது' என்றார் பாவண்ணா.

இருவரும் தாமிரவருணி ஆற்றை வந்தடைந்திருந்தார்கள்.

ஆற்றை கடந்து வடகரை சேர்ந்து, பைகளை புல்தரையில் வைத்துவிட்டு, 'அப்பாடா!' என்று உட்கார்ந்தார்கள்.

'கொஞ்சநேரம் ரெஸ்ட். அப்புறமாக் குளிப்பு' என்றார் பெரியபிள்ளை.

'அப்படியே செய்வோம்' என்று, சட்டையை கழற்றிவிட்டு, புல்மீது துண்டை விரித்து, நீட்டி நிமிர்ந்தார் பால்வண்ணர்.

# 14

'ஆத்திலே குளிக்கிற சுகமே தனிதான்' என்று பால் வண்ணம்பிள்ளை மகிழ்ந்துபோனார். இரண்டு முங்கு போட்டு விட்டு நடு ஆற்றில் உட்கார்ந்திருந்தார் அவர்.

தலையைமட்டும் வெளியே வைத்தபடி தண்ணீருக்குள் கிடந்த மயிலேறும் பெருமாள்பிள்ளை, 'சொல்லணுமா அதை!' என்றார். 'அதிலும் அதிகாலை நேரத்திலே வந்து, அமைதி நிறைந்த சூழ்நிலையில், குளுகுளு தண்ணீரில் முங்கிக் குளிக்கிற சுகத்துக்கும், அது தருகிற சந்தோஷத்துக்கும் ஈடு இணை கிடையவே கிடையாது. ரெண்டு வேளையும் ஆற்றுக்கு வந்து குளிப்பதனாலே மனசுக்கு ஏற்படுகிற இதமும், உடலுக்கு உண்டாகிற நலமும் அனுபவிக்கிறவங்களுக்குத்தான் தெரியும்' என்று சிலாகித்தார்.

'நானும் தினம் காலையிலே ஆத்துக்கு வரணும்னு நினைக்கிறதுதான். முடியலியே அண்ணாச்சி!'

'எதுக்கும் கொடுத்துவச்சிருக்கணுமய்யா கொடுத்து வைச்சிருக்கணும்!' என்று சொல்லி, நீருக்குள் அமிழ்ந்து அப்படியே கொஞ்சநேரம் ஆழ்ந்திருந்தார் பெரியபிள்ளை. பிறகு தலையை வெளியே தூக்கினார்.

பால்வண்ணரும் குளித்தவாறே, 'என்ன இருந்தாலும் தாமிரவர்ணித் தண்ணிக்கு இருக்கிற மதிப்பு தனிதான்' என்றார்.

'ஒவ்வொரு ஆறை ஒட்டி வாழ்கிறவங்களும் இப்படித்தான் பெருமைபட்டுக் கொள்கிறாங்க. காவேரிக்கரை ஓரமா வசிக்கிறவங்க, காவேரித் தண்ணியின் பெருமையையும் அதில் நீராடுகிறதனால் உண்டாகிற சிறப்பையும் சொல்லிச் சொல்லி கர்வப்படுகிறாங்க. பார்க்கப்போனா மனுசங்களுக்கு தன் வீடு, தன் இனம், தன் சாதி, தன் ஊரு, தனது ஜில்லா, அப்புறம் தன்னுடைய நாடு என்கிற நினைப்பினாலே ஏற்படுகிற

பெருமையும் கர்வமும் நோய்மாதிரி—ஒரு வெறிமாதிரி—பல பேரையும் ஆட்டிவைக்குதுன்னு எண்ணவேண்டியிருக்கு' என்று மயிலேறும் பெருமாள் அழுத்தமாக அபிப்பிராயப் பட்டார்.

'அதுக்கில்லே அண்ணாச்சி. தாமிரவர்ணித் தண்ணி யிலே தாமிரசத்து கலந்திருக்கு, அது உடம்புக்கு நல்லது என்கிற நம்பிக்கை ரொம்பகாலமா இருக்குதே; அதனாலே சொன்னேன். உடம்புக்கு ஆரோக்கியம்னு தாமிரபஸ்பம் செய்து சாப்பிடுவாங்களாமே அந்த காலத்திலே? இந்தத் தண்ணியிலே தினமும் குளிச்சு, தினம் இதை குடிச்சா ஆரோக்கியம் ஏற்படும்னு சொல்லுவாங்க.'

'இருக்கலாம். அதிகாலையில் எழுந்து ஒரு மைல் நடந்து விட்டு ஆற்றின் குளிர்ந்த நீரில் குளிப்பதே தேக ஆரோக்கி யத்துக்கு நல்லதுதான்' என்று சொல்லிவிட்டு நீருக்குள் மூழ் கினார் அண்ணாச்சி. பிறகு வெளியே தலைநீட்டியதும் பேசினார்:

'இப்போ இந்த ஆற்றுத் தண்ணியிலே தாமிரசத்தை விட சாக்கடைகளின் சத்துதான் அதிகம் சேர்ந்திருக்கும். பெரிதாக வளர்ந்துவிட்ட திருநெல்வேலி டவுன், ஜங்ஷன், மீனாட்சிபுரம் சாக்கடைகள் எல்லாம் இந்த ஆற்றில்தான் சேருது...'

'ஆமண்ணாச்சி. மீனாட்சிபுரம், கொக்கிரகுளம், சிந்து பூந்துறை பக்கமெல்லாம் ஆறு ஆருகவே இல்லை. சாக்கடையே தான். வண்ணார்கள் வேறு ஏகமா அழுக்குத்துணிகளை துவைச்சுக்கிட்டிருப்பாங்க. அங்கே எல்லாம் தண்ணியை பார்த்தா குளிக்கவே மனம் வராது!'

'கிழக்கே வரவர தண்ணி தெளிஞ்சிருது. மணலில் ஓடி வருகிறதனால் ஏற்படுகிற நன்மை அது. பாபநாசம் அணை கட்டப்பட்ட பிறகு ஆற்றின் அழகும் மதிப்பும் கெட்டுத்தான் போச்சு.'

'ஆனாலும் அண்ணாச்சி, அணைகட்டி நீரை தேக்கிவச்சு அவ்வப்போது தேவைக்குத் தக்கபடி திறந்துவிடுகிறதனாலே தான் விவசாயம் ஒரே சீரா நடைபெற வசதி ஏற்பட்டிருக்கு. அணை இருப்பதினாலேதான் இந்தக் கடும் கோடையிலே கூட இவ்வளவு நிறையத்தண்ணி ஆற்றிலே ஓடுது. ஆற்றிலே அணை கட்டதுக்கு முன்னாலே, கோடையிலே இவ்வளவு தண்ணி ஓடினதே கிடையாதே!'

'அது வாஸ்தவம். கோடையிலே ஆறு வாய்க்கால் மாதிரி ஆகிவிடும். லேசா, ஒரு ஓரமாத் தண்ணி ஓடிக்கிட்டிருக்கும். ஆனா, மணல் நெடுக நிறையக்கிடக்க வசதி இருந்துது. வெள்ளம் மேலும் மேலும் மணலையே கொண்டு வந்து சேர்க்கும். இப்போ அழுக்கையும் அசிங்கங்களையும் தான் படியவைக்குது' என்று பெரியபிள்ளை சொல்லவும், வெள்ளங்களைப்பற்றி பேச்சு திரும்பியது.

ஆற்றிலே இருகரையும் தொட்டு வெள்ளம் 'பொழிஞ்சு போற' காட்சி காணவேண்டிய, கம்பீரமும் மிடுக்கும் எடுப்பும் நிறைந்த, ஒரு காட்சிதான். தண்ணீர் ஓடாது அசையாது பரந்து நிற்பதுபோல் தோன்றும். ஆனால் அது உள்ளுக்குள் சுழியிட்டு வேகமாக முன்னேமுன்னே போய்க்கொண்டு, மேலும் மேலும் வந்தவாறே இருக்கும். தண்ணீரில் இழுபட்டு மிதந்துவரும் மரக்கிளை, சிறுகம்பு அல்லது ஏதாவதொரு பொருள் முன்னேறிச் செல்வதை கவனித்தால் நீரோட்டத்தின் வேகம் நன்கு புலனாகும். அல்லது, எங்காவது ஓரிடத்தில் சிறு தடைபோல் எழுந்து நிற்கும் மண்டபத்தின்மீது மோதிச் சுழலிட்டு விலகிச் சீறிப் பாய்கிறபோது வெள்ளத்தின் ஓட்ட வேகம் வெளிப்படும். அப்படி ஓடிக்கொண்டே இருக்கிற வெள்ளத்தை, அதன் இயக்கங்களை, எவ்வளவு நேரம் பார்த்து நின்றாலும் அலுக்காது.

சிவபுரம் ஆறு என்று குறிப்பிடப்படும் இடத்தில், ஆற்றினுள்ளே நிற்கும் சிறு மண்டபத்தை மூழ்கடிக்கக்கூடிய வெள்ளம் அபூர்வமாக வருஷத்தில் ஒருதடவை வந்தாலும்

வரும். அரை மண்டபம், முக்கால் மண்டபம்வரை தண்ணீர் பெருகி வருவது சாதாரணம்.

மண்டபத்தைச் சுற்றிலும் தண்ணீர் பரந்து ஓட ஆரம்பித்தாலே, ஆற்றில் இறங்கி மறுகரைக்குச் செல்ல விரும்புகிற ஆட்கள் இறங்க பயப்படுவார்கள். இழுப்பும் ஆழமும் அதிகமாக இருக்கும். தோள்வரை தண்ணீர் போகிறபோதுகூட, துணிந்து இறங்கி தென்கரையிலிருந்து வடகரைக்கும், வடகரையிலிருந்து தென்கரைக்கும் போகிற-வருகிற தைரியசாலிகளும் உண்டு. அப்படித் துணிந்து இறங்கியவர்களில் ஒரு சிலர் ஆற்றோடு போய்விட்டதும் உண்டு.

எதுக்கும் உடல் தைரியத்தைவிட மன தைரியம்தான் அதிகம் வேணும். தென்கரை மீதுள்ள சிவன் கோயிலுக்கு முன்பு சிவபுரம் பஞ்சாங்கய்யர் தினம்போய் பூஜை செய்து கொண்டிருந்தார். ஒல்லியாய், பார்க்க நோஞ்சான் மாதிரித்தான் இருப்பார். ஆனாலும் மன தைரியம் ஜாஸ்தி. பெரிய வெள்ளமானாலும் பயப்படமாட்டார். வாழை அடிமரத்தை மிதக்கவிட்டு, அதைக் கட்டிப்புடிச்சபடியே ஆற்றைக்கடந்து போய்விடுவார். மேற்கே தள்ளிப்போய் ஆற்றிலே இறங்கி, நீரோட்டத்துக்குத் தக்கபடி லாகவமா நீச்சலடித்து கிழக்கே, இந்த வெள்ளிமலைக்குக் கீழ் பக்கமாப் போய் ஏறிவிடுவார். திரும்பும்போதும் அப்படி வசமாப்பாத்து இறங்கி, கிழக்கே தோப்புக்கிட்டே போய் ஏறிவிடுவார். மனசிலே தைரியம் இருந்தால்தான் அதெல்லாம் சாத்தியம்.

ஐம்பது ஐம்பத்தைந்து வருஷங்களுக்கு முன்னாலே 'பக்கிள்பிள்ளை' என்று ஒருத்தர் இருந்தார். அவருக்கு ஏன் அந்தப் பெயர் ஏற்பட்டதுன்னு தெரியலே. பக்கிள்பிள்ளை வாலிப காலத்திலே சிவபுரம் ஊரோடுதான் இருந்தார். பெரிய சூரன்னுதான் சொல்லணும். இந்த ஆற்றிலே மண்டபம் தட்டட்டி மட்டும் தெரிகிற அளவுக்கு வெள்ளம் போகையிலே அவரு பந்தயம் கூறுவாரு. அந்தத் தட்டட்டி மேலே ஏறி நின்று பல்டி அடிச்சுக் காட்டுதேன் பாரு என்று. மன்னன் அப்படியே செய்தும் காட்டுவாரு. ஒரு பர்லாங் மேற்கே

போயி ஆற்றிலே குதிப்பாரு. அஞ்சாம நீந்திவந்து மண்டபத்துத் தட்டட்டி மேலே ஏறி நின்று பாட்டுப் பாடுவாரு. அப்புறம் பல்டி அடிச்சு தண்ணீரிலே பாய்வாரு. வரால் மாதிரிப் போயி கிழக்கே போய் ஏறுவாரு. கரையிலே நிற்கிற வங்களுக்குத்தான் நெஞ்சு திக்திக்குனு அடிக்கும். அவரு கொஞ்சம்ஞலும் பயப்படனுமே? ஊகுங். மனுசனுக்கு அசாத்திய துணிச்சல்!

சின்ன வயசிலே இப்படி ஒரு பயிற்சி இருந்ததனுலே தான் பக்கிள்பிள்ளை பின்னுலே ஒரு பெரிய சாதனை புரிய முடிஞ்சுது. ஒரு வருசம் ஆற்றிலே பெரிய வெள்ளம். கொக்கிரகுளம் ஆற்றுக்குள்ளே இருக்கிற தைப்பூச மண்டபத்தை முக்கிப் போடுமோ என்று எண்ணவேண்டிய அளவுக்கு தண்ணி பெருகி ஓடுது. மேல்மட்டம், தட்டட்டிதான் பாக்கி. தட்டட்டி மேலே பத்துப் பதினைஞ்சு பேரு உசிருக்குப் பயந்து நடுங்கியபடி இருக்கிருங்க. என்ன, பண்டாரம் பரதேசி பிச்சைக்காரங்க ராத்திரி நேரத்திலே மண்டபத்தில் படுக்கிறது வழக்கம். திடீர்னு ஆற்றிலே தண்ணீர் வந்துவிட்டால், அவங்க எழுந்திருச்சு மேலே போக வசதியாக ஒரு ஏணியும் மண்டபத்தோடு சேர்த்து பதிக்கப்பட்டிருக்கும். அது வழியே உசரே போய் தங்கியிருப்பாங்க. தண்ணீர் குறைந்ததும் இறங்கி வந்திடுவாங்க. இப்பவும் அப்படித்தான் செஞ்சிருக்காங்க. அவங்க கஷ்டகாலம், மூணு நாளாத் தண்ணீர் வற்றவேயில்லே. அதுமட்டுமா? வெள்ளம் அதிகம் ஆகிக்கிட்டே வந்து, மண்டபத்தை இன்னிக்கு ராத்திரிக் குள்ளே முக்கியே போடும்கிறமாதிரி கூடிக்கிட்டே போச்சு. மண்டபத்து மேலே இருந்த அத்தனைபேரையும் வெள்ளத்துக்கு பலி கொடுப்பதா என்ற கேள்வி பிறந்தது. அது கூடாது, அவங்களை காப்பாத்தியே தீரணும்னு திருநெல்வேலி காங்கிரஸ் தொண்டர்கள் தீர்மானிச்சாங்க. அவர்களில் பக்கிள்பிள்ளையும் ஒருவர்.

சுலோசன முதலியார் பாலத்துக்கு வந்து சேர்ந்தாங்க எல்லாரும். மீட்பு வேலைக்கான கயிறு, தொட்டில் மாதிரி

யான அமைப்பு, அது அங்கேயும் இங்கேயும் போய்வருவ துக்கு ஏற்ற உருளை, இப்படி அநேக சாமான்கள். பாலத் திலே நின்னு சிரமம் எடுத்துக் குனிஞ்சால் வெள்ளத்தை தொட்டுப் போடலாம். அவ்வளவு தண்ணீர். பாலத்து மேலே வண்டிகிண்டி எதுவும் போகப்படாது என்று கட்டுப் பாடு பண்ணியிருந்தது. வீரவரம் கடைத்தெருவிலேகூடத் தண்ணீர் பரவிக்கிடந்தது. சரி. பாலத்துச் சுவற்றிலே பாருங்கயிறின் ஒரு முனையைக் கட்டியாச்சு. உருளையை மாட்டியாச்சு. கயிற்றின் மறு முனையை மண்டபத்திலே வசமான இடத்திலே பலமாக் கட்டியாகணும். கயிறை வீசி எறிந்தால், அது மண்டபத்தை தொட்டுவிட்டால், அங்கே இருந்தவங்களிலே எவனுவது ஒருவன் அதை பிடிச்சுக் கட்டி விடலாம். ஆனல் கயிறு அங்கே போய் சேரணுமே! அநேக தடவை வீசி வீசிப் பார்த்தாங்க. அது மண்டபத்தை போய் தொடுறதாயில்லை. இப்படிப் பந்தாடினல் கா்ரியம் நடக்காது ஐயா; இங்கேருந்தே ஒரு ஆளு கயிறை மண்டபத்துக்குக் கொண்டுபோயாகணும்; வேற வழியேயில்லை என்ருர் ஒருவர். நடக்கக்கூடிய காரியமா என்று மலைத்தார்கள் எல்லாரும். நடக்கத்தான் போகுது, பாருங்களேன் என்ருர் யோசனை சொன்னவர். பக்கிள்பிள்ளைதான் அப்படிச் சொன்னது. அவரு அப்போ திருநெல்வேலியிலேயே குடியிருந்தார். காங்கிரஸ் தொண்டர். பொதுநல சேவையில் நல்ல உற்சாகமாகப் பாடு பட்டார். சும்மா வாய்ச்சவடாலுக்காகப் பேசவில்லை; தைரிய மாய்ச் செயல்புரியக் கூடியவர் என்பதை அவர் அன்றைக்கு நிருபித்துக்காட்டினர். கயிற்று முனையை இடுப்பிலே வரிந்து கட்டிக்கொண்டு மனுசன் வெள்ளத்திலே குதிச்சு நீச்சல் அடிக்க ஆரம்பிச்சிட்டார்.

வெள்ளம் பார்க்க வந்தவங்க, வெள்ளத்திலே அகப்பட்ட வங்களை காப்பாத்த வந்தவங்க அவங்களை வேடிக்கை பார்க்க வந்தவங்க என்று ஏகமாய் கூடிநின்ற ஆட்கள் எல்லாரும் தைப்பூச மண்டபத்தையும், அது மேலே நிஞ்சி நடுங்கிக்கிட்டு நின்னவங்களையும் அந்த வேளைக்கு

மறந்திட்டாங்க. எல்லார் கண்களும் பெரிய வெள்ளத்திலே எதிர் நீச்சல் போட்டுப் போராடி முன்னேறும் பக்கிள்பிள்ளை பேரிலேதான் நிலைத்து நின்றன. அவர் மண்டபத்து மேலே போய் சேர்ந்ததும் எல்லாரும் கைதட்டி தங்கள் பாராட்டை தெரிவித்தாங்க. ஹாய், என்ன அற்புதமான நேரம் அது!

அங்கிருந்து தொட்டிலை கயிற்றில் கட்டி இழுத்து ஒவ்வொரு ஆளாக ஏற்றி அனுப்பிவைத்தார் பக்கிள்பிள்ளை. பாலத்து மேலே தயாராக நின்றவங்க தொட்டிலை இழுத்து ஆட்களை கரையேற்றினாங்க. எல்லாரும் வந்து சேர்ந்தபிறகு, பக்கிள்பிள்ளை கயிற்றை அவிழ்த்து விட்டுவிட்டு நீச்சலடிச்சே பாலத்துக்கு வந்து சேர்ந்தார். அன்றைக்கு அவரை, அவர் வீரத்தை, வியந்து பாராட்டாதவங்களே கிடையாது.

இந்த அனுபவத்தை விரிவாகச் சொன்ன மயிலேறும் பெருமாள்பிள்ளை, 'எப்படியாப்பட்ட ஆள்கள் எல்லாம் இருந்திருக்காங்க! அவங்களும் கடைசியிலே போன இடம் தெரியாமல் செத்து மறைஞ்சுபோனாங்க' என்று முடித்தார்.

'அப்படிப்பட்ட சூரன்களும் நம்ம சிவபுரத்திலே பிறந்து வளர்ந்தாங்க என்று நெனைக்கிறபோது எவ்வளவு பெருமையாக இருக்கு! சந்தோஷமாகவும் இருக்கு' என்று பால்வண்ணம்பிள்ளை மகிழ்வுற்றார்.

## 15

'என்ன அண்ணைச்சி, திருநெல்வேலிக்குப் போயிருந்தேளா?' என்று கேட்டபடி பிறவியாபிள்ளை வந்து சேர்ந்தார், அன்று ராத்திரி.

'திருநெவேலிக்குத்தானே, போயிட்டு மத்தியானம் வந்திருவீகளேன்னு நெனச்சு மத்தியானத்துக்கு மேலே

வந்து பார்த்தேன். மூனு மணிக்கும், நாலு மணிக்கும் நீங்க வரலே' என்றும் தெரிவித்தார்.

'விசேஷம் ஏதாவது உண்டுமா?' என்று பெரியவர் கேட்டார்.

'ஒண்ணுமில்லே, சும்மாதான்.'

'நான் திருநெல்வேலி, வீராவரம், பாளையங்கோட்டைன்னு சுத்திப்போட்டு வந்தேன். பால்வண்ணமும் வந்திருந்தாரு. வரும்போது அப்படியே நடந்துவந்து, ஆற்றிலே குளிச்சுப் போட்டு வீடுவந்து சேரையிலே ஏழுமணி ஆயிட்டுது' என்று மனு. பெனு. கூறினார்.

'ராத்திரிக்குச் சாப்பாடு? தோசை சுட்டு கொண்டுவரட்டுமா அண்ணாச்சி?' என்று பிறவி விசாரித்தார்.

'தோசை எதுக்கு! பழையச்சோறு நிறையவே இருந்துது. பிழிஞ்சுவச்சு, சுண்டக்கறி, நாரத்தங்கா ஊறுகா எல்லாம் சேர்த்து சாப்பிட்டாச்சு. நீரு வேணும்னாலும் சாப்பிடலாம்' என்று பெரியபிள்ளை திருப்தியோடு சொன்னார்.

'செத்த முந்தி பால்வண்ணம்பிள்ளையை பார்த்தேன். நீங்க போய் வந்ததுபத்தி எல்லாம் சொன்னாரு. சம்பகம் மகளோடு பாளையங்கோட்டை வடக்குப்பேட்டையிலே குடியிருக்காளாமே?'

'ஊம்' என்று இழுத்தார் மனு. பெனு. 'எனக்கு ஆளை அடையாளமே தெரியலே முதல்லே. அவ புருசன் இருக்காளோ என்னவோ தெரியலே. சிவப்புச்சீலைதான் கட்டியிருந்தா' என்றார். 'ஆனா இந்தக் காலத்திலே தாலி அறுத்தவங்ககூட சிவப்புச்சீலை கட்டுறதுதான் சகஜமாயிட்டுதே' என்று முணுமுணுத்தார்.

அவர் 'சிவப்புச்சீலை' என்று குறிப்பிட்டது சிவப்பு நிறச் சேலை என்ற கருத்தில் அல்ல. வெள்ளைச்சீலை அல்லாத இதர வர்ணச்சீலைகள் என்ற பொருளில்தான் இந்தப்பதம் இவ் வட்டாரத்தினரால் உபயோகிக்கப்படுவது வழக்கம். கணவனை

இழந்த பெண் வெள்ளைச் சீலைதான் கட்டவேண்டும் என்றிருந்த கட்டாயம் காலவேகத்தில் தானுகவே அடிபட்டுப் போயிற்று. கணவனை இழக்க நேரிடுகிற இளம் பெண்கள் மட்டுமின்றி, வயது அதிகமான மகளிர்கூட சகல வர்ணச் சீலைகளையும் கட்டிக்கொள்வது நாகரிக நியதியாகவும் சகஜ வழக்காகவும் ஆகிவருகிறது என்பதை நினைத்துத்தான், செண்பகத்தைப்பற்றி எந்தவிதமாக முடிவுகட்டுவது என்று குழம்பினுர் பெரியபிள்ளை.

'அவ புருசன் இருந்தும் ஒண்ணுதான், இல்லாமல் போனுலும் ஒண்ணுதான். அவனுலே செம்பகத்துக்கு ஒரு காலத்திலும் நன்மை ஏற்பட்டதில்லை. அவன் இருக்கானு செத்தொழிஞ்சு போனுனு என்பதைப்பற்றி அவள் கவலைப் படுவதையும் முன்னமேயே விட்டுட்டா' என்று பிறவியா பிள்ளை சொன்னுர்.

'ஏன், என்ன விசயம்? அவளுக்கு எந்த ஊரிலே கலியாணமாச்சு?'

செம்பகத்துக்கு ரொம்பநாள் கலியாணம் ஆகாமலே இருந்தது. அவ தாயார் பொன்னம்மா, மகளுக்கு மணம் முடிச்சு வைக்க ரொம்பவும் கஷ்டப்பட்டா. அலையாத ஊரு இல்லை, சொல்லாத ஆள் இல்லைன்னு மிகுந்த பிரயாசை எடுத்துக் கிட்டா. நான் அப்போ சின்னபயலாகத்தான் இருந்திருப் பேன். நடந்த விவரம் எல்லாம் எனக்கு நல்லாத் தெரியாது. அப்பா சொல்லியும், பொம்பிளைகள் பேச்சு மூலமும் தெரிஞ்சுக் கிட்டதுதான். செம்பகம் தனக்குக் கல்யாணமே ஆகாதுன்னு தீர்மானிச்சிட்டா; அவ அழுது கண்ணீர் வடியாத நாளே கிடையாதுன்னு அப்போ சொல்லிக்கிட்டாங்க. அவளைபத்தி யாரோ மோசமா கதை கட்டிவிட்டிருந்தாங்க போலிருக்கு. நம்ம ஊரைப்பத்தி சொல்லணுமா? இந்தக் கலையிலே ரொம்பக் கைதேர்ந்தவங்களாச்சே நம்ம ஊர்காரங்க! அதுனுலேயும் அவளுக்கு கலியாணம் ஆகிறது தடைபட்டு வந்தது போலிருக்கு. இருபத்தஞ்சாவது வயசிலேயேதான் அவளுக்குக் கல்யாணம் நடந்தது. மாப்பிள்ளைக்கு சங்கரன் கோயிலோ,

கோயில்பட்டியோ, எனக்கு சரியா ஞாபகம் இல்லே அவ்வளவு செயலானவன் ஒண்ணுமில்லே. அன்ருடம் பாடுபட்டு சாப்பிடவேண்டியவன்தான். கல்யாண வீடு, விசேஷ வீடுகளிலே தவசுப்பிள்ளையா வேலைபார்க்கிற ஆளு. ஏட்டுத் தவசுப்பிள்ளையும் இல்லே. ஏட்டுத் தவசுப்பிள்ளை எவனுவது மனசுவைச்சுக் கூப்பிட்டு வேலை கொடுத்தா உண்டு. ஆளும் பாக்கிறதுக்கு லெச்சணமா இருக்கமாட்டான். மாசத்திலே முக்கால்வாசி நாளு அங்கே கலியாணம், இங்கே கிரகப் பிரவேசம், சடங்கு, மறுவீடு, கருமாதியின்னு சொல்லி சமையல் வேலைக்குப் போயிருவான். வந்து ஊரோடு இருக்கிற நாளிலும் சம்பகத்தை நல்லபடியா நடத்தினன்னும் சொல்லமுடியாது. அவள் ஆள் அழகா இருந்தா. அவளுக்கு நாம ஏத்த மாப்பிள்ளை இல்லேன்னு அவன் மனசுக்குள்ளேயே உறுத்திக்கிட்டு இருந்திருக்கும். ஊரிலே யாராவதும் அவளைப்பத்தி அவன்கிட்டே வத்திவச்சும் இருப்பாங்க. அதனுலே அவகிட்டே எப்பவும் சண்டைபோட்டு கண்டமானிக்கி அவளை ஏசிப் பேசுவான். அடி அடின்னு அடிப்பான். காட்டு மாட்டுப்பய, கையிலே எது கிடைச்சாலும் சரி—விறகுக்கட்டையானுலும், தடிக்கம்பு ஆனுலும், சாட்டையானுலும், எது கைக்கு அகப்பட்டதோ அதைவச்சு சாத்து சாத்துனு சாத்திப்போடுவான். அவள் நாள்கணக்கிலே உடம்பு வலியும் மன வேதனையும் தாங்காம அழுதுகிட்டே கிடப்பா. அவளுக்கு ஆரம்பகாலமா புள்ளையே பிறக்கலே. ஒன்றிரண்டு தடவை புள்ளை உண்டானதுகூட, அந்தப் புருசன்காரன் அடிச்சதிலேயும் உதைச்சதிலேயும் இசைகேடாப்பட்டு கருச்சிதைவு ஆயிட்டுது. பிறகு ஒரு மாதிரியா ஒரு பெட்டைப்புள்ளை பொறந்துது. அதுதான் பெரிசா வளர்ந்து இப்போ இருக்குது.'

'பெண்ணுகப் பொறந்து புண்ணு உலைகிறேனே' என்று பொம்பிளைக சொல்லுவாங்களே, அநேகம் பேரை பொறுத்த வரையிலே அது சரியாகத்தான் இருக்கு. செம்பகம் பாடு இப்படியா இருந்திருக்கு!' என்று மனு. பெனு. பெருமூச்சு விட்டார். 'அவ இந்த ஊரைவிட்டுப் போயி பன்னிரண்டு வருசம் ஆயிட்டுதாமே?'

'இருக்கும். அவ புருசனைபத்தி நான் இன்னும் பூராவும் சொல்லலியே! அவன் குடிக்கவேறு செய்தான். சூதாடினான். செம்பகம் போட்டிருந்த நகைகளை புடுங்கிக்கிட்டுப் போயி இந்த வழியிலே அழிச்சான். மாதக்கணக்கிலே வீட்டுக்கே வரமாட்டான். வந்தால், அடி உதை. போகிறபோது வீட்டிலே இருக்கிற அரிசி, பண்டபாத்திரங்களை அபேஸ் பண்ணிட்டுப் போயிடுறதுன்னு இருந்தான். அப்புறம் வருசக் கணக்கிலே வராமலே தொலைஞ்சு போயிட்டான். அங்கே பார்த்தேன் இங்கே பார்த்தேன்னு யார் யாரோ சொன்னாங்க. எவளையோ சேர்த்துவச்சுக்கிட்டு இருக்கான்; அவளோடு சேர்ந்து சிந்துபூந்துறையிலே சாயாக்கடை வச்சிருக்கான், கோயில்பட்டியிலே சாப்பாட்டு கிளப் நடத்துறான், திருச்செந்தூரிலே கடை போட்டிருக்கான்னு ஆள் ஆளுக்கு ஒண்ணு ஒண்ணு சொன்னாங்க. வாழ்க்கையிலே நல்ல நாளையே கண்டிராத செம்பகம், அவன் எக்கேடும் கெட்டு எப்படியும் நாசமாப் போட்டும்னு இருந்துட்டா. அவ வழக்கமான வேலைகளை செய்து பிழைப்பு நடத்திவந்தா. அஞ்சாறு வீடுகளுக்கு தோசைக்கு அரைச்சுக் கொடுத்தும், ரெண்டு மூணு வீடுகளுக்கு சமையல் பண்ணியும், அதுலே கிடைக்கிறதை கொண்டு காலம் கடத்தி ஒழுங்கா யோக்கியமா இருந்துகிட்டிருந்தா. அவளை இந்த ஊரைவிட்டுக் கிளப்பினதே சூரியன் பிள்ளைதான்.'

'யாரு? சுகவாசியா?'

'ஆமா.'

'சவத்துப்பயலுக்குப் பொறந்த பய—அவன் என்னவே செஞ்சான்?' என்று ஆத்திரத்தோடு கேட்டார் மனை. பெனை.

பிறவியாபிள்ளை தொடர்ந்தார்:

'அப்போ செம்பகத்துக்கு நாற்பது வயசாவது இருக்கும். வறுமை வாழ்வுதான். இருந்தாலும்கூட ஆளு களையா, லெட்சுமிகரமாத்தானிருந்தா. சுகவாசிக்கு அவள் மேலே விருப்பம் விழுந்திருக்கும் போலிருக்கு. ஏதோ முயற்சிகள்

பண்ணியும் பார்த்திருக்கலாம். ஒண்ணும் பலிக்கலே. அதனாலே பழிவாங்க திட்டம்போட்டு, செம்பகம் பள்ளன் ஒருத்தனை வச்சுக்கிட்டிருக்கான்னு பேச்சை பரப்பினாரு. சின்னப்பயல்களை தூண்டி சுவரிலே கரியாலே எழுதச் செய்தாரு. பள்ளப்பய கூடப்படுத்து சுகம் அனுபவிக்கிறவ கையாலே சமையல் செய்ற சாப்பாட்டை சாப்பிடலாமா? அவ தோசைக்கு மாவு அரைக்கலாமா என்றெல்லாம் வம்புகள் பண்ணினாரு. அவரு வாய்க்கு பயந்து பிள்ளைமார் வீட்டுக் காரங்க செம்பகத்தை ஒதுக்கிட்டாங்க. அப்புறம் அவள் இந்த ஊரிலே இருந்து எப்படி வாழ்க்கை நடத்த முடியும்? பட்டணக்கரையா பார்த்துப்போயி, இட்டிலி சுட்டும் பலகாரங்கள் தயாரித்து விற்றும் பிழைப்பு நடத்தலாமேன்னு இங்கிருந்து போயிட்டா. அது நடந்தும் பன்னிரண்டு வருசம் ஆச்சுதுன்னு செம்பகமே சொல்றாளே, பின்னே என்ன!'

மயிலேறும் பெருமாள்பிள்ளை நிமிர்ந்து உட்கார்ந்தார். 'சுத்த வெறுவாக்கெட்ட பய ஊரு இது. அப்பாவியா வாழ்ற ஆண்களையும் பெண்களையும்பத்தி புரளிகட்டி, அவங்கபேருக்கு களங்கம் உண்டாக்குவதே இந்த ஊர்காரங்களுக்கு முக்கிய தொழிலாப்போச்சு. சில வருசங்களுக்கு ஒருமுறை யாரை யாவது இப்படி ஊரைவிட்டு ஓடும்படி பண்றதிலே இந்த ஊரானுகளுக்கு ரொம்ப குஷியும் திருப்தியும் கிடைக்கிற மாதிரி தோணுது' என்று சீற்றக்குரலில் பேசினார்.

'இப்பகூட இந்தத் தொழில் சிறப்பா இங்கே நடை பெற்று வருது அண்ணாச்சி' என்றார் பிறவியாபிள்ளை.

# 16

நாற்பது வருஷங்கள்—

எல்லையற்ற காலப்பெருவெளியில் அது ஒரு அற்பம். உலக வரலாற்றில், முக்கியமான பற்பல நிகழ்ச்சிகளுக்குக் களம் அமைத்துக் கொடுத்திருந்த போதிலும், அவ்வளவாகக் கவனிப்புக்கு உள்ளாகாத காலகட்டம். தனித்தனி நாடுகளின் கதையில் பெரும் மாறுதல்களை உண்டாக்கிய கணிசமான காலப்பகுதி.

நாற்பது வருஷங்கள்—

பெரும் பல ஊர்களின் வாலாற்றில் சாதாரணமான ஒரு அத்தியாயம் அது. சில ஊர்களின் கதையில் பசுமையான, சுவாரஸ்யமான—அல்லது, வறண்ட கொடிய—காலப்பகுதி. குடும்பங்களின் சரிதையில் வளமும் இன்பங்களும் நிறைந்த அத்தியாயமாகவோ, துன்ப துயரங்கள் சோதனைகள் மிகுந்த பருவமாகவோ, அல்லது இரண்டும் கலந்து கிடக்கும் பகுதி யாகவோ அது அமைந்திருக்கும்.

தனி மனித வாழ்க்கையில் நாற்பது வருஷங்கள் என்பது பெரும் அளவானது; மிக முக்கியமானது. அவரவர் வாழ்வின் மிகப் பெரும் பகுதியும்கூட.

நேற்றுப்போல் இன்று—இன்றுபோல் நாளை என்று—என்றும் ஒன்றுபோல் சாரமற்ற வாழ்க்கை நடத்துகிற சராசரி மனிதர்களிடம்கூட நாற்பது வருஷங்கள் என்ற காலகட்டம் எத்தனையோ பாதிப்புகளை, நிகழ்ச்சிகளை, உணர்வுக் கிளர்ச்சிகளை, லாப நஷ்டங்களை, வளர்ச்சி வீழ்ச்சிகளை, தடுக்கி விழுதல்கள் நிமிர்ந்து நிற்றல்களை கொண்டு சேர்த்திருக்கத்தான் வேண்டும்.

ஒவ்வொரு மனிதன் உள்ளுமே தினம் தினம் எத்தனை எத்தனையோ மாறுதல்கள் நிகழ்ந்துகொண்டிருக்கின்றன. ரூப நிலையிலும் அரூபமாகவும், ரத்தத்திலும் உணர்ச்சிகளிலும் எண்ணச் சுழிப்புகளிலும்தான்.

அப்படி இருக்கையில், பல தனி நபர்களைக் கொண்ட குடும்பங்களில், பலபல குடும்பங்கள் வசிக்கிற ஊர்களில் மாறுதல்களே நிகழாது இருந்து விடுவது சாத்தியம் அல்ல.

'மாறுதல் வளர்ச்சியின் அறிகுறி' என்று சொல்லப் படுவது உண்டு. மாறுதல்கள் அனைத்துமே வளர்ச்சியின் சின்னங்களாகத்தான் இருக்கவேண்டும் என்கிற கட்டாயம் எதுவும் இல்லை.

மாறுதல்கள் வளர்ச்சியை சுட்டுவனவாகவும் இருக்கலாம். சரிவை, தேய்தலை, காட்டுவனவாகவும் இருந்துவிடலாம். எனவே, மாறுதல்கள் 'தேக்கமின்மை'யின் அறிகுறி என்று கொள்ளப்படவேண்டும்.

மயிலேறும் பெருமாள்பிள்ளை சொந்த ஊரில் இல்லாமல் போன நாற்பது வருஷகாலத்தில், இந்த நாட்டிலே எத்தனை எத்தனையோ மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டன.

'சூரியன் அஸ்தமிக்காத சாம்ராஜ்ய'த்தை கொண்டிருந்த பிரிட்டிஷ் சிங்கம் என்று கீர்த்திக்கொடி நாட்டி இந்த நாட்டை ஆட்சி புரிந்துகொண்டிருந்த வெள்ளையரை எதிர்த்து நடந்த போராட்டத்தில்—

'அரை நிர்வாணப் பக்கிரி' என்றும் 'பழம் ராட்டுப் பயில்வான்' என்றும் அதிகாரவர்க்கத்தினரால் இழிவாகப் பேசப்பட்ட, சாதாரண மனிதத் தோற்றம் பெற்றிருந்த, ஆனாலும் 'மகாத்மா'வின் மாண்புகளைக் கொண்டிருந்த ஒரு தலைவனின் சக்திக்குக் கட்டுப்பட்டு, மக்கள் கிளர்ந்தெழுந்த போது—

இந்த நாட்டின் பலபல பகுதிகளிலும், எங்கெங்கோ உள்ள ஊர்களிலும், எண்ணற்ற குடும்பங்களிலும், கணக்கிலடங்காத் தனி நபர்களின் வாழ்க்கையிலும் அதிசயிக்கத் தகுந்த மாறுதல்கள் எவ்வளவோ புகுந்தன.

உலகத்தை பாதித்த இரண்டாவது உலக மகாயுத்தத்தினால் இந்த நாடும், ஊர்களும், குடும்பங்களும், தனி நபர்களும் பலரக மாறுதல்களை அனுபவிக்க வேண்டியிருந்தது.

சுதந்திரமும், சுயநாட்டு மக்களிடையே வளர்ந்து செல்வாக்குப் பெற்றிருந்த ஒரு கட்சியை சேர்ந்தவர்களின் அரசாங்கமும், அவர்களை எதிர்த்து வளர முயன்ற பல கட்சிகளின் கொள்கைகளும் செயல்முறைகளும் எத்தனை எத்தனையோ மாறுதல்களை எங்கும் விதைத்தன.

பின்னர், ஆளும் கட்சி மாறி, வேறொரு கட்சி அரசு அமைத்துத் தனது நோக்குகள் கொள்கைகளுக்கு ஏற்ப செயல்புரியத் தொடங்கியதும், மக்கள் மத்தியில் தலையெடுத்த மாறுதல்கள் பலப்பல.

இவ்வாறெல்லாம் காலவேகம் அலை அலையாகக்கொண்டு சேர்த்த பொதுப்படையான மாறுதல்களும், தனித்துவமான மாற்றங்களும், மயிலேறும் பெருமாள் பிள்ளையின் சொந்த வாழ்விலும், அவரது சொந்த ஊரான சிவபுரத்திலும் சிலசில அதிர்வுகளை உண்டாக்கின என்று சொல்லமுடியுமே தவிர, அழுத்தமான முத்திரைகளை பதித்துவிட்டன என்று சொல்வதற்கில்லை.

மயிலேறும் பிள்ளை போன்ற மனிதர்கள் எத்தனை எத்தனையோ பேர்! சிவபுரம் போன்ற ஊர்களும் எத்தனையோ தான்!

மகாத்மா காந்தியின் சக்தியும் காங்கிரஸ் கட்சியின் செல்வாக்கும் ஓங்கிவந்த காலத்தில், இளைஞன் மயிலேறும் பெருமாள் கதர் கட்டுவதை வழக்கமாக்கிக் கொண்டான். வீட்டில் காந்திஜி படத்தை மாட்டிவைத்தான்.

சிவபுரத்தில் அநேக வீடுகளில் காந்தி, ராஜேந்திர பிரசாத், படேல், ஜவாஹர்லால் நேரு படங்கள் காட்சி அளிக்கலாயின. அநேகர் கதராடை உடுத்தினர்.

பால்வண்ணம் காந்திக் குல்லாய் அணிந்துகொண்டு, காந்திஜி புத்தகங்களை வாங்கிப் படித்தார்.

ஊரில் காங்கிரஸ் கொடியை கம்பத்தில் உயரமாய் பறக்க விடுவதில் உற்சாகம் காட்டினார்கள்.

பிறகு, பால்வண்ணம் ஜெயப்பிரகாஷ் நாராயண் எழுதிய புத்தகங்களை வாங்கி வாசித்து, சோஷலிஸ்ட் கட்சிக் கொள்கைகளை பேசிக்கொண்டு திரிந்தார். பின்னர், கம்யூனிஸ்ட் கொள்கைகளில் ஆர்வம் காட்டினார். அந்தக்கட்சி வெளியீடு களை வாங்கிப் படித்து மகிழ்ந்தார். இப்போது அவர் சைவ சமயத்தில் பற்றுக்கொண்டு, தேவாரம், திருவாசகம், ராம லிங்கர் அருட்பா என்று புத்தகங்களை வாங்கிக்கொண்டு, திருத் தலங்களை சுற்றித்திரிகிறார்.

இவர் மாதிரி எத்தனையோ பேர்.

சிவபுரத்தின் சராசரி மக்கள் சுதந்திரம் வந்தபோது, எல்லா ஊர் மக்களையும் போலவே, கொடி ஏற்றி இனிப்பு வழங்கி சந்தோஷம் கொண்டாடினார்கள். பிறகு சில வருஷங் கள் ஏதோ ஒருமாதிரி சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது. அப்புறம் தானாகவே அது நின்றுவிட்டது.

காங்கிரஸ் கொடி நைந்து பழசாகிச் சாயம்போய் கிழிந்து தொங்கியது மாற்றப்படவும் இல்லை. அதன் பக்கத்தில் கம்யூ னிஸ்டுக் கட்சிக் கொடியும், கறுப்பு சிவப்புக்கொடியும் காலப் போக்கில் இடம் பெற்றன. அவை சாயம்போய், பழசாகிக் கிழிந்து தொங்கின. எப்பவாவது மாற்றவும்பட்டன.

சிவபுரம் மக்கள் அரசியல் விழிப்பு பெறவில்லை. அரசியல் கட்சிகள் அவர்களைப் பெரிதாக பாதித்துவிடவுமில்லை. தேர்தல் காலங்களில் பிரசாரகர்கள் வந்து கத்திவிட்டுப் போவதும், ஓட்டு தினத்தன்று கொஞ்சம் பரபரப்பு ஏற்படுவதும்தான் அரசியலால் ஏற்பட்ட தாக்கங்கள் ஆகும். மற்றபடி அவர்கள் உண்டு, அவர்கள் அலுவல்கள் உண்டு; அவர்களது சோம்பல் உண்டு; அவர்களுடைய ஊர் வம்புகளும் அளப்புகளும் உண்டோ உண்டு.

சிவபுரம் மக்களில் பெரும்பாலோர் பத்திரிகை பற்றி எதுவுமே தெரியாதவர்கள். அவர்களில் தினப்பத்திரிகை வாங்குகிறவர்கள் மூன்று-நான்கு பேர்களே. அவற்றைப் பார்க்கிறவர்கள் பத்துப் பன்னிரண்டு பேர் இருக்கலாம்.

ரேடியோ ஆரேழு வீடுகளில் இருந்தன. 'ரேடியோ நியூஸ்' கேட்பவர்கள் ஒன்றிரண்டு பேர்தான் உண்டு. ஆகவே, உலக விவகாரம், உள்நாட்டு அக்கப்போர்கள் பற்றிய ஞானம் சிவபுரவாசிகளுக்கு அதிகம் இல்லை என்றே குறிப்பிட வேண்டும்.

அவற்றை அறிந்துகொள்ள வேண்டும் என்கிற அவாவும் அவர்களுக்கு இல்லை.

சிலர் 'பக்திப் பாடல்'களை ரேடியோவில் கேட்பதில் ஆர்வம் காட்டினர். அநேகமாக எல்லோருமே 'திரை கானம்'களை அந்தந்த நேரங்களில் கேட்பதிலும், சிலோன் ரேடியோவின் சினிமா சங்கீத ஒலிபரப்புகளை எல்லா நேரங்களிலும் கேட்பதிலுமே ஈடுபாடு உடையவர்களாக இருந்தார்கள்.

ரேடியோ வருவதற்கு முன்பு? கிராமபோன் மூலம் இசைத்தட்டு இன்னிசையை ரசித்துக்கொண்டிருந்தார்கள்.

இப்போது இரவு பத்தரை மணிக்கும் பதினொரு மணிக்கும், ரசனை என்பதைவிட, பழக்கத்தினாலும் பெருமைக்காகவும் ரேடியோவை அலறவிட்டு மகிழ்வதுபோல, அந் நாட்களில் ராத்திரி ரொம்ப நேரம்வரை 'பூனக்கிராப் பெட்டி'யை ('போனோகிராப்' ஒலமிடவிட்டு, கூட்டமாக இருந்து கிட்டப்பாவையும், சுந்தராம்பாளையும், முசிரியையும், செம்மங்குடியையும், திருச்செந்தூர் சண்முகவடிவையும், சுப்புத்தாயியையும் கேட்டு சந்தோஷப்படுவது அவர்கள் வழக்கமாக இருந்தது.

ஏதோ சாரமற்ற வாழ்வில் ஒரு தனிரசம் என்ற முறையில் தான் இதுவெல்லாமே தவிர சங்கீதத்தில் ஈடுபாடோ ரசனையோ அவர்களுக்கு என்றும் இருந்ததில்லை; இன்றும் இல்லை.

ஒன்றிரண்டு பிரமுகர்கள் தங்கள் வீட்டிலும் பத்திரிகை வாங்குவது உண்டு என்று காட்டுவதற்காகப் பெருமையாக

சில இதழ்களை பட்டாசல் பெஞ்சிலோ, மேஜை மீதோ அலட்சியமாகப் போட்டு வைத்திருப்பார்கள். அதை எடுத்துப் பார்த்தால், அது இரண்டு வருஷத்துக்கு முந்திய 'கலைமகள்', போன வருஷம் ஒரு மாசத்தின் எந்த வாரத்திலோ வந்த 'ஆனந்த விகடன்', மூன்று மாதங்களுக்கு முற்பட்ட 'குமுதம்' இதழாக இருக்கும். அந்த வீட்டுக்காரரும் என்றோ பத்திரிகை வாங்கியிருக்கிறார்! அதுதான் முக்கியம் இங்கே!

மனிதர்கள் மாறுகிறார்கள்—மாற்றுகிறார்கள்; மாறிவிடுகிறார்கள்—மாற்றப்படுகிறார்கள்.

காலவேகம், வாழ்க்கை நியதி, நாகரிகச் சூழல்கள், பொருளாதார ஏற்ற இறக்கங்கள், நாட்டு நிலைமைகள்—இப்படி எத்தனையோ புறப்பாதிப்புகளும், அவர் அவர்களுடைய விருப்பு வெறுப்புகளும், ஆசைகளும் கனவுகளும், உணர்ச்சிகளும், எண்ணங்களும் போன்ற அகப்பாதிப்புகளும் இத்தகைய மாற்றங்களுக்கு 'பாவு விரித்து'—'நடை பாவாடை' பரப்பி—கொடுக்கின்றன.

காந்திஜியிடமும் காங்கிரஸ் கட்சியிடமும் மோகம் கொண்டு, ஆரம்ப காலத்தில் கதர் அணிந்தவர்களில் அநேகர் அப்புறம் அந்தப் பழக்கத்தை விட்டுவிட்டார்கள். மயிலேறுவும் மதுரைக்குப் போனதும் அதை மறந்துவிட்டான். 'நாட்டு வேட்டி' என்ற கைத்தறி வேட்டிக்கு மாறி, 'பாம்பே மில்' வேட்டிக்குப் போய், பின்னர் 'நைஸ் மல்' வேட்டிக்கு வந்து—அருமையா— மல் வேட்டி கட்டும் பெரிய மனிதராகும்படி காலம் செய்துவிட்டது.

சிவபுரத்து அந்நாளைய வாலிபர்கள், பம்பாய் நைஸ் ரக எட்டுமுழ மில் வேட்டிகட்டி, ஃப்யூஜி ஸில்க் என்கிற ஜப்பான் இறக்குமதிச் சரக்கில் தொளதொளச் சட்டை போட்டு, தோளில் அகலமான சிவப்புக்கரை உடைய தேங்காப்பூத்

துண்டு என்கிற—'டர்க்கி டவல்' என்று அவர்கள் பெருமையாகச் சொல்லிக் கொள்கிற—ஒரு ரகத்துண்டை தோளில் 'வல்லாட்டு ஆக'ப் போட்டுக்கொண்டு, நெஞ்சை நிமிர்த்தி 'ஜம்பம் ஜான்கள்' ஆகத் திரிவது வழக்கம். அவர்களைப் பார்க்கும்போது மயிலேறுவின் மனம் குமையும்; நமக்கு டர்க்கி டவல் வாங்க வழி இல்லையே என்று ஏங்கும்.

மதுரைக்கு வந்ததும் மயிலேறு தேங்காப்பூத் துண்டு வாங்கி, தோளில் போட்டுக்கொண்டு ஜம்பமாகத் திரிந்தான். மெதுமெதுவாக இந்தப் பழக்கம் மறைந்து போய்விட்டது. காலம் தன் போக்கில் எத்தகைய மாறுதல்களைச் செய்து கொண்டே போகிறது!

முன்பெல்லாம் ஆண்பிள்ளைகள்கூட தலைமுடியை நீளமாக வளரவிட்டுக் கொள்வது இயல்பாக இருந்தது. பையன்கள் சடைப்பின்னி தொங்கவிட்டு பூமுடித்து அலைவதும் சகஜமான காட்சி.

பையன்களும் கைகளில் தங்கக்காப்பு அணிவது கேலிக்குரியதாக இருந்ததில்லை. காதுகுத்தி, சிவப்புக்கல் அல்லது வெள்ளைக்கல் குச்சி, அல்லது 'முக்கட்டு' கிளாவர் கடுக்கன் போட்டுக்கொள்வது பெருமைக்கும் அந்தஸ்துக்கும் உரியதாக இருந்தது.

மயிலேறு பதிமூணு வயசுமுடிய தலைமுடி வளர்த்துக் கொண்டிருந்தான். காதுகளில் கடுக்கன் பதினாறு வயதுவரை கிடந்தது. பதினாலு வயசுவரை கைகளில் காப்புகள் அணிந்து கொண்டிருந்தான்.

இப்போது சிவபுரத்திலே இதெல்லாம் அநாகரிக விஷயங்கள் ஆகிவிட்டன. சின்னஞ்சிறு வயசிலேயே 'ஆம்பிளைப் புள்ளை'களுக்கு கிராப் வைத்துவிடுவதும், மாதத்துக்கு ஒரு தடவை அதை வெட்டிவிடுவதும் நடைமுறையாகி உள்ளது.

அந்நாட்களில், பெரியவர்கள் அநேகமாக சட்டை போடுவது கிடையாது. விசேஷ வீடுகளுக்குக்கூட நேரியல் அல்லது வெண்பட்டு போட்டபடி போய் வந்துவிடுவார்கள்.

சட்டை அணிகிற பெரியவர்கள், சட்டைக்கு மேலே ஒரு துண்டு போட்டுக்கொள்வதுதான் வழக்கம். அதுதான் கௌரவம்.

விசேஷ வீடுகளுக்கு, வெளியூருக்குப் போகிறபோது சட்டை மேலே நேரியல் அல்லது 'விசிறி மடிப்பு' லேஞ்சி போடுவது ஒரு பெருமையாகக் கருதப்பட்டு வந்தது.

இப்போது என்ன ஆச்சு? உள்ளூர் விசேஷ வீட்டுக்குக் கூட எல்லோரும் சட்டைதான் போடுகிறார்கள். சட்டை மட்டுமே போடுகிறார்கள். மேலே துண்டு, நேரியல், விசிறி மடிப்பு, பட்டுலேஞ்சி என்று எதுவுமே கிடையாது.

பால்வண்ணம் பிள்ளைகூட—சதா பட்டுலேஞ்சி அணிந்து திரிந்ததன்மூலம் அதையே ஒரு பட்டப்பெயராக ஏற்றுக் கொண்டுவிட்ட உல்லாசிகூட—இப்போது சட்டை அணிந்து கொண்டால் மேலே லேஞ்சி போடுவதில்லை. சலவை செய்த துண்டுகூடப் போடுவது கிடையாது. (என்றாலும் அவருடைய 'பட்டு லேஞ்சி' என்ற பெயர் என்னவோ இன்னும் மறையவில்லை.)

சட்டையில்கூட, முன்பு பெரிய மனிதர்கள் தொள தொள என்று பெரிதாய், கீழே முழங்காலைத் தொடும் அளவுக்கு நீண்டு தொங்கும் (முழுக்கை அல்லது அரைக்கை) சட்டை தைத்துக் கொள்வதே கௌரவம் என்றே கருதினார்கள்.

இப்போது பெரிய மனிதர்கள்—வயசிலும் உருவத்திலும் எவ்வளவு பெரியவர்களாக இருந்தபோதிலும்—'தலைவழியாகப் போட்டுக் கழற்றுகிற' சட்டைகளை விரும்பாது—கைகளை சுலபமாகப் புகுத்தக்கூடிய, மார்புப்பக்கம் திறந்து கிடக்கிற, குட்டைச் சட்டைகளை—இடுப்புவரை நின்று விடுகிற 'ஸ்லாக் ஷர்ட்'டுகளை அணிவதையே கௌரவம் என்று மதித்து நடக்கிறார்கள்.

வெள்ளைத்துணியில் சட்டைகள் தைத்துக் கொள்வதே கௌரவம், பெரிய மனுஷத்தனம் என்று கருதியவர்கள்கூட,

இப்போது 'வயசுப் பிள்ளையாண்டான்கள்' மாதிரி விசித்திர மான வர்ணங்களில் எல்லாம், விதம் விதமான கட்டங் களையும் கோலங்களையும் கொண்ட துணிகளில்கூட, சட்டை தைத்துப் போட்டுக்கொண்டு, வல்லாட்டும் மேல்துண்டும் இல்லாமலே எங்கு வேண்டுமானாலும் போய் வருகிறார்கள்.

இதுபோன்ற எத்தனையோ மாற்றங்களை மயிலேறும் பெருமாள்பிள்ளை நாகரிக நகரங்களில் மட்டுமல்லாது, சாதாரண கிராமமான சிவபுரத்திலும் கவனிக்கத்தான் செய் தார். துருவித்திரியும் அவரது பார்வையும், சதா சலனித்து அனைத்தையும் பதிவு பண்ணிக்கொள்ளும் அவர் மனமும் இதை எல்லாம் கவனிக்கத் தவறவில்லை.

இவ்வாறு தனிமனிதப் பழக்கவழக்கங்கள் என்று சொல் லப்படவேண்டியன தவிர்ந்த பொதுவான விஷயங்களிலும்—குடும்பங்கள், இனம், ஊர் நிலைமைகளிலும்—பலபல மாறு தல்கள் ஏற்பட்டிருப்பதையும், இன்னும் ஏற்பட்டு வருவதை யும் பெரியபிள்ளை கவனிக்கத்தான் செய்தார்.

'பத்தரை மாத்து' சைவப்பிள்ளைகள்—பிள்ளைமாரிலே உயர்ந்த இனம்—என்று சொல்லிக்கொண்டவர்கள் சிவபுரத் துக்காரர்கள். முட்டையைகூடத் தொடமாட்டார்கள். ரொட்டி, கேக் தினுசுகளில் முட்டை கலக்கப்படுவது உண்டு என்று பலரும் பேசுவதனால் அவற்றை வாங்கவேமாட்டார்கள். 'ஓவல்டின்'னில் முட்டைச்சத்து சேருது என்பதனால், டாக்டர் தேக ஆரோக்கியத்துக்காக 'ஓவல்' சாப்பிடணும் என்று சிபாரிசு செய்தாலும்கூட, அதை தொடக்கூட மறுத்தவர்கள் அவர்கள். முஸ்லிம் கடைப்பக்கம் எட்டியும் பாராதவர்கள்.

காலப்போக்கிலே என்ன ஆச்சு? 'வெறும் டீயும் பிஸ் கட்டும் சாப்பிடப் போறோம்' என்று முஸ்லிம் ஓட்டல்களுக் குப்போக ஆரம்பித்தார்கள். பிறகு, பிரியாணி சாப்பிடப் போனார்கள். இப்போது எந்த ஓட்டலில் எந்தக் கறிவகை ருசிகரமாக இருக்கும் என்று ஊரிலேயே சர்ச்சை செய்து பொழுது போக்கி, சாயங்காலம் ஆனதும் அவற்றை ருசி

பார்த்து மகிழ்வதற்காக ஜங்ஷனுக்கும் டவுனுக்கும் விரைகிற பிள்ளைமார் குலக்கொழுந்துகள் நிறைந்திருக்கிறார்கள் சிவபுரத்திலே.

மயிலேறு ஊரைவிட்டுப் போகும்போது 'பத்தரை மாத்து'கள் குடும்பங்கள் சிவபுரத்தில் எண்பது இருந்தன. மயிலேறும் பெருமாள்பிள்ளை ஆக அவர் திரும்பிவந்துள்ள இப்போது பிள்ளைமார் வீடுகள் 'பதினெட்டே பதினெட்டு' தான் இருக்கின்றன.

பெரியவர்கள், வயதானவர்கள், ஊருக்கே 'அத்தாரிட்டி' யாக இருந்து 'போடு போடுன்னு போட்டவர்கள்' பலபேரும் 'தெற்கே ஆத்தங்கரை' போய் சேர்ந்துவிட்டார்கள். அநேக குடும்பங்கள் கடன் பெருகி, இருந்த வீடுவாசல் நிலங்களை விற்றுவிட்டு பிழைப்புத் தேடி வெளி ஊர்களுக்குப் போய் விட்டன. 'பட்டிக்காட்டில் இருக்கப்பிடிக்காத' பலர் இங்குள்ள வீடுகளை வாடகைக்கு விட்டுவிட்டு, அல்லது அடைத்துப் பூட்டிவிட்டு, திருநெல்வேலிக்கும் பாளையங்கோட்டைக்கும், தூத்துக்குடிக்கும் மதுரைக்கும் குடியேறி, சில வருஷங்களில் அங்கங்கே வீடு கட்டிக்கொண்டு தங்கிவிட்டார்கள்.

விற்பனையான வீடுகளில் சிலவற்றை மறவர் அல்லது கோனார் அல்லது வேறு இனத்தவர் எவராவது வாங்கிக் கொண்டு குடியேறி, குழந்தை குட்டிகளோடு வசித்ததோடு, ஆடுகளையும் கோழிகளையும் வளர்த்து நெடுகிலும் நடமாடச் செய்துகொண்டிருந்தார்கள். நயம் தேங்காயெண்ணெயில் கறிவகைகள் தாளிப்பது, பண்ட பலகாரங்கள் செய்வது என்று, சதா தேங்காயெண்ணெ மணம் எழுந்து பரவிநிற்கும் 'பெருமையை உடைத்தாயிருந்த' சைவப்பிள்ளைமார் வட்டாரத்தில் இப்போது ஆட்டுக்கறி, கோழிக்கறி வகையரா பக்குவம் செய்யப்படுவதால் எழுகிற மணமும், கருவாடு வறுப்பதால் உண்டாகிற நாற்றமும் கலந்து நிலவுவதும் சகஜமாகிவிட்டது.

வசதி படைத்த சில பிள்ளைமார் வீடுகளில்கூட இக்கறி வகைகள் சமையற்கட்டில் பக்குவமாகத் தயாரிக்கப்படுவது உண்டு என்றும் சந்தேகிக்க இடம் ஏற்பட்டிருந்தது.

முன்பு இதர இனத்தவர் செருப்பு போட்டுக்கொண்டு பிள்ளைமார் தெருக்களில் நடக்கக் கூசினார்கள். செருப்பணிந்து வந்தாலும், இந்தந் தெருக்களில் புகும்போது கால் செருப்புகளைக் கையில் எடுத்துக்கொண்டு நடப்பார்கள். தோளில் கிடக்கும் துண்டை இறக்கி, கை மடிப்பில் தொங்கவிட்டபடி போனார்கள். அப்படிச் செய்ய மனமில்லாதவர்கள் முதலிலேயே துண்டை தலைப்பாகையாகக் கட்டிக்கொண்டுதான் இந்தப்பக்கம் வருவார்கள்.

இந்த நாற்பது வருஷ காலத்தில் அதெல்லாம் மாறிப் போச்சு. இப்படி எவரும் நடந்துகொள்வதில்லை. 'காலப் போக்கில் நாட்டிலே ஏற்பட்ட சீர்திருத்தங்கள், படிப்பு, பண நிலைமை இவைகள் எல்லாம் இதற்குக் காரணம். அத்தோடு மற்ற இனத்தவங்க உசந்துவிட்டாங்க; நாம தாழ்ந்துக்கிட்டே போறோம் என்பதும் முக்கிய காரணம்தான்' என்று மன. பென. எண்ணுவதும் பேசுவதும் சகஜமாயிற்று.

பொருளாதார நிலையில் சிவபுரத்தின் மத்தியதரவர்க்கத்துப் பிள்ளைமார் குடும்பங்கள் சறுக்குப்பாதையில் வேகமாய் கீழிறங்கிக் கொண்டிருந்தன. வீடுகள்தான் வெளிப்பார்வைக்கு பெரிது பெரிதாகக் காட்சி அளித்தனவே தவிர, வீட்டுக்குள்ளிருந்துவர்கள் 'காய்ந்து காற்றுடிக்கொண்டும்', பஞ்சப்பாட்டு பாடிக்கொண்டும் காலம் கழிக்கவேண்டிய நிலையில்தானிருந்தார்கள். வருஷா வருஷம் வீட்டுக்கு வெள்ளை அடிப்பதே பெரும்பாடாக இருந்தது பலருக்கும். கதவு போன சன்னல்கள், காறை உதிர்ந்த சுவர்கள், உப்புப் பொரிந்து செங்கல் விழுந்துவிட்ட பகுதிகள் போன்றவற்றை 'புதுப்பிக்கணும். சுண்ணும்பு பூசணும். சிமிண்டு வச்சுக் கட்டணும்' என்று சொல்லிக்கொண்டும் நினைத்துக்கொண்டும் இருந்தார்களே தவிர, செயலில் நிறைவேற்ற வசதி இன்றித் தவித்தார்கள். அன்றாட வாழ்க்கையின் அத்தியாவசியத்

தேவைகளுக்கே 'ஒண்ணும் ரெண்டும்' 'அஞ்சும் பத்தும்' கடனாகப் புரளாதா? 'இன்று யாரிடம் கேட்டுப் பார்க்கலாம்' என்பதை பெரும் பிரச்னையாகக்கொண்டு குழம்பித் திணறும் நிலையிலிருந்த குடும்பத்தலைவர்கள் வீடுகளை பழுதுபார்க்கும் பணியில் ஈடுபடுவது எவ்வாறு?

ஒருநாள் மனு. பெனு. மற்றவர்களிடம் கேட்டார்: 'நம்ம ஊரிலே சமீபகாலத்திலே, இந்தப் பத்துப்பதினைஞ்சு வருஷத்திலேன்னு வச்சுக்கிடுங்களேன்! யாராவது புதுசா வீடுகட்டி இருக்காங்களா? புதுவீடு எத்தனை கட்டப்பட்டிருக்கும்?'

நகரங்களில் தினந்தோறும் வீடுகள் கட்டப்படுவதையும், மாதந்தோறும் 'புதுமனை புகுவிழா'க்கள் அநேகம் நடைபெறுவதையும் கண்டு பழகிய பெரியபிள்ளைக்கு, சிவபுரத்திலேயே இருந்தவர்கள் சொன்ன பதில் வியப்பை மட்டுமல்ல வேதனையும் தருவதாக அமைந்திருந்தது.

'நல்லாக் கேட்டீங்க போங்க!' என்று கனைத்தார் பால்வண்ணர். 'புது வீடாவது கட்டுறதாவது! இருக்க வீடுகளை ஒழுங்காக் காப்பாத்தினால் போதாதா?' என்றார்.

'சமீபத்தில் பத்துப் பதினைஞ்சு வருசம் என்ன! முப்பது–நாற்பது வருஷ காலத்திலேகூட இந்த ஊரில் பிள்ளைமார் பகுதியில் புதுசா ஒரு வீடும் கட்டப்படவில்லை. மறவர்கள் மிகுந்த வடக்கு ஊரில் புது வீடுகள் நிறையவே கட்டப்பட்டிருக்கு. கிழக்கே முன்பு அரிசனங்கள் மண்குச்சுகளில், ஓலைப்பறை வீடுகளில் இருந்தார்கள். இப்போ அங்கே ஒரு ஓலைப்பறைக் குச்சுகூடக் கிடையாது. எல்லாம் ஓட்டுவீடுகள். மச்சுவீடுகள் கூட வந்திட்டுது. எலெக்ட்ரிக் லைட்டு, மேசை நாற்காலி, ரேடியோ வகையறாக்கள் உள்ள வீடுகளும் அங்கே இருக்கு. அது இப்போ கீழூருன்னு மதிப்பாகக் குறிக்கப்படுது' என்று பிறவியாபிள்ளை சொன்னார்.

'நம்ம வட்டாரத்திலே பழைய வீட்டை இடிச்சு புதுப்பித்துக் கட்டியிருக்காங்க ரெண்டு மூணு வீட்டுக்காரங்க. ஒருத்தருக்கு கொள்ளிமுடிஞ்ச பணம் வந்தது. இன்னொருத்

தருக்கு வீடு இடிஞ்சு விழவும், கடன் வாங்கியாவது புதுப்பிக்கனும் என்ற கட்டாயம் ஏற்பட்டுவிட்டது. மற்ருருவர் பெண்டாட்டி கழுத்திலே கிடந்த தங்கம், வீட்டிலே இருந்த வெள்ளி இதுகளை வித்து, பூர்வகாலத்து வீடு இடிஞ்சு விழுந்திராதபடி எடுத்துக்கட்டினரு' என்று சூரியன்பிள்ளை பட்டியல் பரப்பினர்.

'இந்த ஊரிலே இடிந்துவிழுந்த வீடுகள் உண்டு. அடைத்துக்கிடக்கிற வீடுகள் உண்டு. விலைபேசி கைமாறி விட்ட வீடுகள் உண்டு. ஒத்திக்கும் அடமானத்துக்கும் விடப்பட்ட வீடுகள் உண்டு. இந்த வருஷமோ அடுத்த வருஷமோ-முன்னையோ பின்னையோ—விழுந்துவிடுவோம் என்று கட்டியம் கூறிநிற்கும் வீடுகள் உண்டு. புதுசாக் கட்டப்பட்ட வீடு ஒன்றுகூட இல்லை' என்று ஏதோ மந்திரம் ஓதுவதுபோல் நீட்டி முழக்கினர் பால்வண்ணம்பிள்ளை.

அவரே தொடர்ந்து பேசினர்: 'இதிலே வருத்தப்படதுக்கு ஒண்ணுமில்லே அண்ணச்சி. நான் பஸ்களிலே பலரூட்களிலும் போகையியே வரையிலே, வழியிலே பலதரப்பட்ட கிராமங்களையும் கவனிக்கிறதுதான். அநேக கிராமங்களில் இப்படித்தானிருக்கு. இடிந்த வீடுகள், இடிந்துகொண்டிருக்கிற வீடுகள்...ஒன்றிரண்டு ஊர்களிலே ஒரு தெருவே அழிஞ்சு கிடந்ததைப் பார்த்தேன். தெருவில் உள்ள வீடுகள் எல்லாம் இடிஞ்சும் சிதைந்தும், கறையான் புடிச்சும்—அது ஒரு சோக நாடகம் ஸீனரியாக எனக்குப்பட்டது. அதை விடப் பெரிய கொடுமை—ஒருசமயம், குடியோடிப்போன குக்கிராமம் ஒன்று வெறுமையாய்—குடிசைகளும், கூரை சிதைந்த குச்சுகளும், மேல்பகுதியே போய்விட்ட கட்டமண்ணுகளும், சிதைந்து சரிந்துகொண்டிருந்த குட்டிச்சுவர்களுமா...மொத்தம் இருபது வீடுகள் இருக்கும்—எலும்புக் கூடு மாதிரி காட்சிதந்து நிற்பதை நான் கண்ணலே காண நேர்ந்தது. எனக்கு அது ரொம்ப மனவேதனை தந்தது, அண்ணச்சி. குடியோடிப்போய் இடிந்து சிதைகிற தனிவீடு ஒரு சோகக்கதை என்ருல், வெறுமையாகிப் பாழ்பட்டுப்போன

ஒரு தெரு சோக நாடகம் என்றால், இப்படி ஆட்களே இல்லாமல் போய், சிதைந்து சீரழியும் நிலையில் காணப்படுகிற சிற்றூர் மாபெரும் சோக நாவல் இல்லையா? இப்படி என் மனம் அடிக்கடி கேட்டுக்கொள்ளும். இதுக்கெல்லாம் நாம என்ன பண்ணமுடியும் அண்ணாச்சி? காலத்தின் கோரக் கைகள் அழுத்தமாகக் கீறிவிடுகிற கொடுமையான காயங்கள் இதெல்லாம்!'

தனது இலக்கிய ஈடுபாட்டையும் பேச்சாற்றலையும் 'அம்பலப்படுத்த' அருமையான வாய்ப்பு கிட்டியதைக் குறித்து ரொம்ப திருப்தி அவருக்கு. ஆனால் மயிலேறும் பெருமாள் பிள்ளையின் இதயத்தை சோகம் அழுத்தவே, அவர் மௌனப்பிள்ளையார் ஆகத்தான் இருக்கமுடிந்தது அவ் வேளையில்.

சிவபுரம் 'பத்தரைமாத்துகள்' கடன்வாங்கிக் காலம் ஓட்டவேண்டிய நிலையில் இருந்தபோதிலும் ஜம்பத்தை விட்டு விடுவதில்லை. பரஸ்பரம் ஒரு வீட்டாரை அடுத்தக் குடும்பத்தினர் கேவலமாக மதிப்பிட்டுப் பேசுவதையும் விட்டுவிடுவதில்லை.

'இப்போ மேல்மினுக்காத்தான் இருக்காரு. பெரியவரு செத்தால் தெரியும் குடும்ப நிலைமை. ஏகப்பட்ட கடன் இருக்கு!' என்று ஒவ்வொரு குடும்பமும் இதர குடும்பத்தாரைப் பற்றி வக்கணை கொழிக்கும்.

அதே சமயத்தில் தங்கள் குடும்பக் கடனைப்பற்றி யாராவது குறிப்பிட்டுவிட்டால், பேசுகிற குடும்பத்தாருக்குக் கோபம் மூக்குக்குமேலே வந்துவிடும். 'கடன் என்ன கடன், பிரமாதக் கடன்! இந்தக் காலத்திலே எவன் ஐயா கடன் வாங்காம வாழ்க்கை நடத்துறான்? ஆனைப்பட்ட அரசாங்கமே கடன், கடனுக்கு மேலே கடன்னு, கடன்கள் வாங்கியேதான் காலம் ஓட்டுது. அப்புறம் நாம கடன் வாங்குறதிலே என்ன குறைச்சல் மயிரு வந்துட்டதாம்?' என்று குடும்பத் தலைவரோ, தலைவியோ சீற்றம் காட்டுவதும் மனித சுபாவமாகவே இருந்தது.

'அப்போ எல்லாம் நம்மவங்க வளமா வசதியா வாழ்க்கை நடத்தினுங்க; வாழ்க்கையை நல்லா அனுபவிச்சாங்க என்று தான் எண்ணவேண்டியிருக்கு' எனப் பெரியபிள்ளை அடிக்கடி நினைத்துக்கொண்டார்.

ஒரு அக்கா வீட்டுக்கோ அத்தை வீட்டுக்கோ எப்போது போனாலும், தம்பிகளுக்கும் மருமகன்களுக்கும் இந்த ஊரின் எந்த வீடுகளிலும் தின்பதற்கு ஏதாவது கொடுத்து மகிழ்ச்சி கொடுத்து மகிழ்ச்சியோடு உபசரிப்பது வழக்கமாக இருந்தது.

காலை நேரம் என்றால், இரண்டு தோசைகளை தட்டில் வைத்து, தேங்காய்த்துண்டும் கருப்பட்டியும் எடுத்துவைத்து, அக்காக்காரி அன்பாக உபசரிப்பாள். அவள் 'கூடப்பிறந்த அக்கா'ளாகத்தான் இருக்கவேண்டும் என்றில்லை. மத்தியானமோ மாலையிலோ எட்டிப்பார்த்தால், முறுக்கு, சீடை, பொருவிளங்காய் என்று அக்கா அல்லது அத்தை கொடுத்து மகிழ்வாள். கொடுப்பதில் ஒரு சந்தோஷம் உண்டு என்பதை அனுபவபூர்வமாக உணர்ந்தவர்கள்.

எல்லா வீடுகளிலும் எப்பவும் வெண்கலப் பானையில் முறுக்கு, சீடை, கடலைப்பணியாரம், அவரைக்காய் பணியாரம், பொருவிளங்காய் போன்ற திண்பண்டங்களில் ஒன்றிரண்டு வகைகள் ஸ்டாக் இருந்துகொண்டேயிருக்கும். 'நாக்கு கொட்டுக் கொட்டு என்கிற சமயங்களில்', ஏதாவது தின்னு நல்லாயிருக்குமே என்று மனம் ஏங்குகிற வேளைகளில், எதையாவது மடிநிறையக் கட்டிக்கொண்டு சுவைத்து மகிழ்வார்கள். வீட்டுக்கு வருகிறவர்களுக்குக் கொடுக்கிற மனமும் அவர்களுக்கு இருந்தது.

சில வீடுகளில் 'கூழ்ப்பதினி' தூக்குச்சட்டியில் இருக்கும். இளகிய கருப்புக்கட்டிச் சாறுமாதிரி, ஆனால் தனியானதொரு ருசியோடு, இருக்கிற அதை தோசையோடு சேர்த்துச் சாப்பிடுவதில் 'டேஸ்ட்' அதிகம் கிராமவாசிகளுக்கு.

வசதி மிகுந்த வீடுகளில் மைசூர்பாகு, முந்திரிக்கொத்து, நெய்யுருண்டை போன்ற உயர்ந்த ரகப் பண்டங்கள் செய்து

வைத்திருப்பார்கள். அவற்றை அன்போடும் பிரியத்தோடும் மற்றவர்களுக்கு உதவும் தாராள மனமும் முன்பு எல்லோருக்கும் இருந்தது.

அடிக்கடி 'திரட்டுப்பால்' கிண்டிச் சாப்பிடுவார்கள். இதற்குப் பாலும் தேங்காயும் சர்க்கரையும் அதிகம் தேவைப்படும்; செலவு அதிகமாகும். என்றாலும் அக்கம்பக்கத்தாருக்குக் கொடுத்து இன்புற அவர்கள் தயங்கியதில்லை.

கோடைகாலத்தில் பதினியில் நுங்கு, மாம்பழம், எலுமிச்சம்பழம் எல்லாம் கலந்து சாப்பிடுவார்கள். குளுகுளு என்று 'திவ்யமாக' இருக்கும். 'நாகரிக நகரத்துப் பெரிய ஓட்டலின் ஃப்ரூட் ஸாலட் எந்த மூலைக்கு!' என்று எண்ணிக் கொள்வார் மனு. பெனு.

குடும்பத்தினர் அனைவரும் வயிறுமுட்ட திருப்தியாய் சாப்பிட்டதும், உறவுக்காரப் பையன்களை கூப்பிட்டுக் கொடுத்து மகிழ்வித்து மகிழ்கிற மனம் பெரிய வீட்டுக்காரர்களுக்கு அன்று இருந்தது.

வரவர வாழ்க்கை வசதிகள் குறைந்து, வளங்கள் சுருங்கி, 'காய்ச்சல்பாடு' அதிகமாகிவிட்டதால், மனிதர்களின் மனவளமும் வறண்டு குறுகிப்போய்விட்டது. தங்களுக்கே பற்றாதபோது ஊராருக்குத் தானம் செய்ய மனம் எப்படி முந்தும்?

'மனம் சுருங்கி குறுகிப் போகப்போகத்தான் வளங்களும் தேய்ந்து அருகிப்போயின. மனம்போல் வாழ்வு என்பது சும்மாவா பின்னே? எந்த நிலையிலும் தாராள மனம் என்பது மனுசனுக்குத் தேவை' என்று மயிலேறும் பெருமாள்பிள்ளை எண்ணுவார்.

யோசிக்கும்போது மண்ணும் இயற்கையும்கூட தாராளத்தனம் குன்றி, வறண்டு வருவதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருந்தது.

உதாரணத்துக்கு எள்ளும் நல்லெண்ணையும் போதுமே என்று பிள்ளையின் மனம் நினைவுபடுத்தும்.

அவர் முன்பு ஊரோடு இருந்த நாட்களில் அதிகாலையி லிருந்தே, ஊரின் ஒரு கோடியில் உள்ள இடத்திலிருந்து செக்குகளின் ஓசை தனி இசையாக எழுந்து பரவிநிற்கும். செக்குகளில் எள்ளுபோட்டு எண்ணை ஆட்டாத நாளே கிடை யாது என்றிருந்தது. எந்தக் கிராமத்துக்குப் போனாலும், செக்குமாடுகள் சுற்றிச்சுற்றி வந்துகொண்டிருக்கிற காட்சியும், செக்கு எழுப்புகிற ஓசையும் நீங்காத அம்சங்களாக இருந் ததை உணரமுடிந்தது.

நடுத்தரவர்க்கத்தினர் வீடுகள் ஒவ்வொன்றிலும் ஜாடி களில், கலயங்களில் நல்லெண்ணெய் நிறைய இருந்து கொண்டே இருக்கும். 'பெரிய வீடு'களில், அவர்களது வயல் களில் எள் விதைத்து, அங்கு விளைந்த எள்ளைக்கொண்டு எண்ணை ஆட்டி, குடங்களில் பெரியபெரிய கலயங்கள் அல்லது பானைகளில், ஜாடிகளில் ஸ்டாக்பண்ணி வைத்திருப்பார்கள். எண்ணை 'காம்பிவிடக்கூடாது' (கெட்டுப் போகக்கூடாது) என்று கருப்புக்கட்டி வட்டுகளை எண்ணைப் பாத்திரங்களுக்குள் போட்டிருப்பார்கள்.

— அந்த வளமான காலம் எங்கே போச்சு? ஏன் எள் விளைச்சல் குறைந்து போச்சு? 'இளைத்தவன் எள்ளை விதை; கொழுத்தவன் கொள்ளை விதை' என்று அனுபவ ஞானம் பேசி, எள் பயனுள்ள லாபகரமான பயிர் என்று கண்டு பயிரிட்டு வாழ்ந்தவர்கள், ஏன் எள் விதைப்பதை நிறுத்தினார் கள்? அல்லது குறைத்துக் கொண்டார்கள்? எள்ளுக்கு தட்டுப்பாடும், நல்லெண்ணைக்கு அநியாய விலையும் ஏற்பட வேண்டிய அவசியம்தான் என்ன?

இப்படி பெரியபிள்ளையின் உள்ளத்தில் கேள்வி அலைகள் பொங்கிப் புரளும். பதில் யார் சொல்வது? 'எல்லாம் காலம் செய்கிற கோலம்தான்' என்று அவர் மனமே கூறிக் கொள்ளும்.

இதே கதைதான் பல விஷயங்களிலும்.

'செல்வமும் வாழ்க்கை வளங்களும் வண்டிச்சக்கரம் மாதிரி சுற்றிக்கொண்டே இருப்பன. சக்கரச் சுழற்சியில், ஒருசமயம் மேலே இருப்பது அடுத்தகணம் கீழே வந்து விடுவதுபோலவே, செல்வ வள நிலைமைகளும் வீழ்ச்சி எழுச்சிகளுக்கு உட்பட்டதுதான். நன்றாக வாழ்ந்து அனுபவித்த குடும்பங்கள் இப்போது தாழ்ந்து போய்விட்டன. தாழ்ந்த நிலையிலிருந்து கஷ்டப்பட்டுக் கொண்டிருந்தவர்கள் மேல் நிலைக்கு வந்து, இன்றைய வளங்களையும் வசதிகளையும் அனுபவித்துப் பெருமைப்படுகிறார்கள்' என்று மனு. பெனு.வின் சிந்தனை கூறும்.

'அனுபவிக்கட்டும். நல்லா அனுபவிக்கட்டும். ஆனா இதிலே விரும்பத்தகாத விஷயம் என்னன்னு, வாழ்க்கையில் உண்மையான மாண்புகள் மதிக்கப்படுவதில்லை. உயர்ந்த பண்புகள் உரிய மதிப்புகளைப் பெறமுடிவதில்லை. போலியான பெருமைகளுக்கு மதிப்பு வந்துவிடுகிறது. பணம் ஒன்றுக்கே முக்கியத்துவம் கொடுத்து பழக்கப்பட்டு விட்டதனாலே, பணத்தை-பணவருவாயை வைத்துத்தான் மனிதர்களை மதிப்பது என்ற நிலை சாதாரண ஜனங்களிடையிலும் பரவிவிட்டது. படித்த அறிவாளி, உயர் பண்புகளைப் போற்றி வளர்க்கும் நல்லவன், யோக்கியமானவன் போதிய பணவருவாய் பெற முடியாமல் போகிறபோது, இன்றைய சமூகங்களில் மட்டமானவனாகவே கருதப்படுகிறான். படிப்பு அதிகம் இல்லாவிட்டாலும், ஒரு மில்லிலோ, சிமின்ட் ஃபேக்டரியிலோ லேபரர் ஆகி, மாதந்தோறும் முந்நூறும் நானூறும் சம்பளம் என்றும், வருஷத்துக்கு ஒருதடவை கைநிறைய போனஸ் தொகையும் பெறமுடிகிற காரணத்தினால், படித்தும், பண்பாடுகள் வளர்த்தும் பண வருவாய் பெறமுடியாத நிலையிலிருக்கிறவர்களைவிட, தான் உயர்ந்தவன்—செயலானவன் என்ற எண்ணமும் நம்பிக்கையும், அதனால் எழும் கர்வமும், பெருமையும், அகந்தையும் சாதாரண நபர்களுக்கு ஏற்பட்டுவிடுகிறது. பட்டம் பெற்ற, ஆற்றல் பெற்ற, அறிவாளிகளை-திறமைசாலிகளைவிட, அதிகம் அதிகமாகப் பணவருவாயும், 'கிளாம'ரும் புகழும்

அடைந்துவிடுகிற வாய்புகளை பெற்றிருப்பதனுல் சினிமா நடிகன்களும் நடிகைகளும் பெருமதிப்புக்கு உரியவர்கள் என்கிற ஒருநிலை இந்த நாட்டின் நகரங்களிலே வளர்ந்து விட்டதைப் போன்றதுதான், கிராமங்களில் மில் லேபரர் களும் ஃபாக்டரிக் கூலிகளும் பெற்று வளர்க்கிற இந்த நோக்கும் போக்கும்!'

பால்வண்ணம்பிள்ளை, அவருடைய பண்பாட்டின்படி, ஒரு சமயம் இப்படி லெக்சர் அடித்தார்.

'உம்-உம்' என்று தலையாட்டத்தான் முடிந்தது பெரிய பிள்ளையால்.

வேறு என்னத்தைச் சொல்ல?

காலவேகத்தில் சமூகங்களில் ஏற்படுகிற எழுச்சிகளும் தாழ்ச்சிகளும் சம்பந்தப்பட்டவர்கள் மத்தியில் விதம்விதமான நோக்குகளையும் மனேபாவங்களையும் உண்டாக்கிவிடுவது இயல்பேயாகும்; தவிர்க்க முடியாதது என்று அவர் மனம் கூறிக்கொண்டது.

# 17

சிவபுரத்தில் ஒரு கல்யாணம் நடைபெற்றது.

அதை பார்த்த பெரியபிள்ளைக்கு அது ஒரு கல்யாண மாகவோ, அந்த வீடு கல்யாண வீடுபோலவோ தோன்ற வில்லை!

தெருவில் வீட்டின் முகப்பில்மட்டும் ஒரு 'ஆர்ச்' போட் டிருந்தார்கள். இரண்டு பக்கங்களிலும் 'கால்' நாட்டி, இடையே உயரத்தில் வெள்ளைத்துணியை சிறிதளவு இழுத் துக்கட்டி, அதுக்கு சுற்றிலும் 'பார்டர்' மாதிரி குறுகலான

வப்புத்துணியை கட்டிவைத்திருந்தார்கள். அதுதான் 'ஆர்ச்'. கல்யாண வீட்டுப் பந்தலும் அதுவேதான். அதன் கம்பங்களில், பக்கத்துக்கு ஒன்ருக, வாழை மரம் குலையோடு கட்டப்பட்டிருந்தது.

உள்ளே, வீட்டு வாசலில் ஒரு 'தட்டுப்பந்தல்'. 'ஸிம்ப்பிளா' முடிந்தது விஷயம்.

இப்போது இவ்வூரின் எல்லாக் கல்யாண வீடுகளிலும் இப்படித்தான் நடைபெறுகிறது என்று மனு. பெனு. தெரிந்து கொண்டார்.

'அந்தக் காலத்திலே இப்படியா!' என்று பரிகாசமாகச் சிரித்தது அவர் மனம்.

— பெரிசா 'கொட்டகைப்பந்தல்' போடுவார்கள். அதுக்குள்ளே 'பாத்தி' 'கிணறு' என்று அலங்கார வேலைப்பாடு பிரமாதமாக இருக்கும். ஒவ்வொரு 'பாத்தி' (சதுரம்), 'கிணறு' (வட்டம்) மத்தியிலும் 'லஸ்தர் விளக்கு' தொங்க விடப்பட்டிருக்கும். அடுக்கடுக்காக, வட்ட வளையங்களிலே, பூக்கிண்ணங்கள் மாதிரி, கண்ணுடி லோட்டாக்கள் மாதிரி, வெள்ளையிலும் கலர்களிலும் கண்ணுடி அமைப்புகள். அதுக்குள்ளே மெழுகுவத்திகள் வச்சு எரியவிடுவாங்க. வளையங்களிலே, விதம் விதமான அமைப்புகளில் கண்ணுடிக் குண்டுகள், குமிழ்கள், நீள வடிவங்கள், சரம் சரமாத் தொங்கும். பார்ப்பதற்கே வசீகரமாக இருக்கும். அப்புறம், ரொம்பப் பெரிசாக ஊதப்பட்ட பலூன்கள் மாதிரி, தடித்தடி 'ஃபுட் பால்கள்' மாதிரியான 'ரசகுண்டு'கள் மினுமினுன்னு தொங்க விடப்பட்டிருக்கும், பந்தலிலே. இதுகளும் ரகம்ரகமான கலர்களில் இருக்கும். வெளியே, தெருவை மறிச்சு 'அம்பாரிப் பந்தல்'. அதன் நாலு கால்களிலும் வாழைமரங்கள். 'கொட்டகைப் பந்தல்' போடாத வீடுகளில்கூட, பெரிசா, சாதாரணப் பந்தலாக இருந்தாலும் எடுப்பாகத்தான் இருக்கும். இதுமாதிரி 'ஒப்பேத்து வியாபாரம்' சமீப காலத்திலே தான் வந்து சேர்ந்திருக்கு!

பிள்ளைவாளின் மனம் அதன் தொழிலை ஒழுங்காகச் செய்துகொண்டிருந்தது.

'கல்யாண வீடும் ஒரு கல்யாண வீடு மாதிரியாவா இருந்துது? முந்தினநாள் சாயங்காலம் நாலு மணியிலே இருந்து ரிக்கார்டுகளை ஒலிபெருக்கி மூலம் அலறவிட்டிருந் தாங்க, கல்யாண வீடு என்கிறதுக்கு அடையாளமா! மற்றப் படி ஒரு கூட்டமா, கலகலப்பா, அதா இதா ஒரு மண்ணும் கிடையாது. அந்த வீட்டுக்காரங்களும் அவங்களைச் சேர்ந்த அஞ்சாறுபேரும் இருந்தாங்க. வெளியூர்காரங்க எல்லாம் மறு நாள் முகூர்த்த நேரத்துக்கு வந்தாங்க. தாலி கட்டி முடிஞ் சதும் வெத்திலைபாக்கு வாங்கிக்கிட்டு கம்பிநீட்டிட்டாங்க பல பேரு. சாப்பாடு முடிஞ்சதும் சப்ஜாடாவும் குளோஸ். உள்ளூர் காரங்க, பொம்பிளைக எல்லோரும் சாப்பிட்டபிறகு, கல்யாண வீட்டிலே பழையபடி வீட்டுக்காரங்க, பொண்ணு மாப்பிள்ளை, இவங்களை சேர்ந்தவங்க கொஞ்சப்பேரு—இவ்வளவேதான். ஒலிபெருக்கி சினிமாப்பாட்டுகளை கத்திகிட்டே இருந்துது. இதுக்குப் பேருதானு கல்யாணம்?' என்று மயிலேறும் பெரு மாள் குறைபட்டுக் கொண்டார்.

'நம்ம ஊர்லே மட்டுமா இப்படி நடக்கு? எல்லா ஊர்களி லும் எல்லாச் சாதிகளிலும் இப்போ இப்படித்தானே நடக்கு' என்று பூல்வண்ணம்பிள்ளை கூறினர்.

'வரவர, கல்யாணங்களில் கல்யாணம் என்பதுக்குரிய சிறப்புகளே இல்லாமப் போயிட்டுதே! முன்னுலே எல்லாம் நம்ம ஊரிலே கல்யாணம் வந்திட்டுதுன்னு சொன்ன, அது ஊரு பூராவுக்கும் பொதுவான ஒரு விசேஷமா, எல்லோருக் கும் சந்தோஷம் அளிக்கக்கூடிய ஒரு நிகழ்ச்சியா இருக் குமே!' என்று பெரியபிள்ளை சொன்னர்.

— கல்யாண வீட்டு வேலைகள் செய்ய உற்ருர் உறவினர் எல்லாரும் ஒண்ணு சேருவாங்க. கல்யாணத்துக்குப் பல நாட்களுக்கு முன்பிருந்தே கல்யாணப் பலகாரங்கள் தயாரிப் பதில் பொம்பிளைகள் மும்முரமா ஈடுபடுவாங்க. நாலுநாள் கல்யாணம், மூணுநாள் கல்யாணம், ரெண்டுநாள் கல்யா

ணம்னு போடுபோடுன்னு நடந்த காலங்களை மறந்திடுவோம்: ஒருநாள் கல்யாணம்னு நியதி ஏற்பட்டபிறகு கூட, அது பிரமாதமான ஏற்பாடுகளோடுதான் நடந்துதுன்னே சொல்ல வாறேன். நம்ம ஊரிலே கல்யாணத்துக்கு ரெண்டு நாட்களுக்கு முன்னடியே வீடுவீடா ரெண்டுபடி அரிசி கொண்டு வந்து கொடுத்துட்டுப் போவாங்க, தோசைக்கு மாவு அரைக்க. மறுநா உளுந்தம்பருப்பு கொடுத்திட்டு, அரிசி மாவை எடுத்துக்கிட்டுப் போவாங்க. அப்புறம் உளுந்த மாவை வாங்கிப்போக வருவாங்க. நான் அரைக்கமாட்டேன்—முடியாதுன்னு யாரும் சொல்றதில்லே. ஊர் ஒற்றுமையை, கூட்டுறவை, ஒத்துழைப்பை எடுத்துக்காட்டுகிற சின்னமாகத்தான் ஒவ்வொரு விசேஷமும் இருந்தது. விசேஷ வீட்டுக்காரன் எப்படியும் சமாளிக்கட்டுமேன்னு தெருக்காரங்க, ஊர்க்காரங்க விட்டுறமாட்டாங்க. என்ன வேலை நடக்கு, ஏதாவது செய்யனுமான்னு கூடமாட வந்து ஒத்தாசை செய்வாங்க. கல்யாணத்துக்கு முந்தினநாள், அந்தத் தெருவிலே ஒரு வீட்டிலும் அடுப்பு புகையாது. எல்லாருக்கும் கல்யாண வீட்டிலே தான்சாப்பாடு. பொம்பிளைகளும் ஆம்பிளைகளும் கல்யாண வீட்டு வேலைகளை இழுத்துப்போட்டு செஞ்சுக்கிட்டிருப்பாங்க. கல்யாணத்தன்னைக்கு மத்த வீடுகளில் சமையல் இராது. எல்லாருக்கும் கல்யாணச் சாப்பாடுதான். இப்போ சொந்தக்காரங்க, நெருங்கினவங்க, பக்கத்து வீட்டுக்காரங்க கூட முகூர்த்த வேளைக்கு தலையைகாட்டிப்போட்டு சாப்பாட்டுக்கு வராமலே இருந்திடுறாங்க. மனுஷாளுக்கு மனுஷாள் ஒட்டு உறவு விட்டுப்போச்சு...

'நம்மளவங்க கடன் வாங்கியோ, இருக்கிறதை வித்தோ, தாம்தூம்னு கல்யாணத்தையும் கருமாதியையும் நடத்தி நடத்தித்தான் கெட்டுக் குட்டிச்சுவராய் போறுங்க. ஊர் திரட்டி, தூரா தொலைவிலே இருக்கிற உறவினரெல்லாம் வரனுமின்னு சொல்லி, ஆர்ப்பாட்டமா ஒருநாள் கூத்திலே ஏகப்பட்ட பணத்தை வேட்டுவிடுவது வேண்டாத வேலை' அண்ணச்சி. மத்தவங்களுக்கும் வெட்டிச் செலவும் வீண்

சிரமமும். இந்தவழக்கங்களை எல்லாம் குறைக்கணும் அண்ணுச்சி என்று பால்வண்ணம் ஓங்கி அடித்தார்.

'வறண்ட சாரமற்ற வாழ்க்கையிலே இது மாதிரி விசேஷங்கள் சந்தோஷமும் ஜிலுஜிலுப்பும் உண்டாக்கும்னு தான் அந்தக் காலத்திலே இதுகளை சிறப்பா, விஸ்தாரமா செய்தாங்க. கல்யாணத்திலே எத்தனை சடங்குகள், அயிட்டங்கள்! எல்லாம் வரவரக் குறைந்து போச்சே. பட்டணப் பிரவேசம்கிறது இல்லாமல் போனது கல்யாணத்தின் சிறப்பையும் அழகையும் நயத்தையும் எவ்வளவோ குறைச்சிட்டுதுன்னு தான் நான் சொல்வேன். குதிரைச் சாரட்டிலே ஊர்வலம், மோட்டாரிலே பவனி, ஆயான் தகத்திலே பட்டணப்பிரவேசம்—இதெல்லாம் எவ்வளவு குதூகலமா, வர்ணமயமா, குளுகுளுப்பா இருந்தது! 'தகத்து' என்ற அந்தத் தேர் மாதிரியான அமைப்பிலே, பொண்ணும் மாப்பிள்ளையும் ஜம்னு வீற்றிருக்க, பொம்மைகள் கையிலே மெழுகுவத்தி விளக்குகள் ஏந்தி நிற்க, ரெண்டு பொம்மைகள் வெண்சாமரம் வீச, கியாஸ் லைட் வெளிச்சத்திலே, அந்தத் தகத்தில் நெடுகவும் பதிக்கப்பட்டிருந்த ரசம் பூசின சின்னச் சின்னக் கண்ணுடிகள்—தகதகன்னு பலநூறு சதுரங்களா ஒளிவெட்ட... அதனுலேதான் அந்த வண்டிக்கு தகத்துன்னு பேரு வந்திருக்கும்...ஆகா, எவ்வளவு ஜோரான காட்சி அது! எல்லாம் இப்போ இல்லாமலே போயிட்டுதே. வரவர ஜனங்கள் தங்களுடைய வாழ்க்கையின் வர்ண மயமான அம்சங்களை இழந்துக்கிட்டே வாருங்கன்னுதான் எண்ண வேண்டியிருக்கு!' என்றுர் மனு. பெனு.

'பொருளாதார அடிப்படைதான் காரணம். வளங்களும் வருமானமும் குறையக் குறைய, வறட்சி ஏற்பட ஏற்பட, இந்த வகையான மாறுதல்கள் தானகவே வந்து வளருது' என்று பால்வண்ணம்பிள்ளை அபிப்பிராயப் பட்டார்.

'இப்படி வறட்சியும் வெறுமையும் இருப்பதனுலேதான், அன்றுட வாழ்க்கையில் விறுவிறுப்பும் சூடு பிடிக்கட்டுமே என்று, மனிதர்கள் வம்புகளையும் அக்கப்போர்களையும்

உண்டாக்கி, பரப்பி விடுவதிலே அதிக ஆர்வம் காட்டு கிறார்கள்' என்று மனு. பெனு. எண்ணினார்.

அது அவர் விஷயத்திலேயே பலித்துவிடும் என்று பெரிய பிள்ளை எண்ணியதேயில்லை.

ஆனால் அது நடக்கத்தான் செய்தது. சாரமற்றதுபோல் தோன்றிய சிவபுரம் வாழ்க்கையில் 'விறுவிறுப்பும் சூடும்' ஏறுவதற்குத் தூண்டுகிற ஒரு தீயசக்தி மாதிரி வந்து வாய்த் தாள் கல்யாண வீட்டுக்கு 'வருகை புரிந்த' செம்பரா நல்லூர் அழகம்மை ஆச்சி.

செம்பராநல்லூரில்(செண்பகராமநல்லூரில்) 'வாக்கைப் பட்டிருந்த' (வாழ்க்கைப்பட்டிருந்த) அழகம்மை அம்மாள் பிறந்த ஊர் சிவபுரம் தான்.

இதில் அவளுக்கு ஒரு தனிப்பெருமை. 'எங்க பெரிய வீட்டுச் சித்தப்பா அடிக்கடி சொல்லுவோ—சிவபுரம் பத்தரை மாத்து சைவப் பிள்ளைமாரின் நாத்தங்கால்னு. நாத்தங் காலிலே முளைச்சு வளருகிற நாத்துகளை எடுத்து எங்கெங்கோ உள்ள வயலுகளிலே நட்டுப் பயிராக்குகிற மாதிரி, சிவபுரத்தி லேயிருந்து ஏகப்பட்ட பெண்ணுக எல்லாத் திசை ஊர்களி லும் வாழ்க்கைப்பட்டு நம்ம சாதி பரவிப் பெருகும்படி பண்ணி வருதுங்க. எப்பவுமே சிவபுரத்திலே பெண்ணுக அதிகம் தான். இப்போ கூட இந்த ஊரிலே கல்யாணத்துக்குக் காத்திருக்கிற பெண்ணுகளின் எண்ணிக்கை இருபதுக்குக் குறையாது' என்று அவள் அடிக்கடி பெருமையோடு கூறிக் கொள்வாள்.

அவள் எந்த வருஷத்தில் இதை சொன்னாலும், அந்தச் சமயம் வீட்டோடு இருந்த பருவ மகளிர் எத்தனை என்று எண்ணிப் பார்த்தால் இருபதுக்கு அதிகமாகவே சேர்ந்து விடும். பொழுது போகாத பொம்பிளைகளுக்கும், கண்டதை எல்லாம் பேசிப் பொழுது போக்குகிற ஆம்பிளைகளுக்கும் அவ்வப்போது இப்படி 'ஸென்ஸஸ் எடுப்பது'—யார் யார் வீட்டிலே எத்தனை பொண்ணு 'சமைஞ்சிருக்கு' என்று

எண்ணிப் பார்ப்பது—ஒரு முக்கிய அலுவலாகவே இருந்தது சிவபுரத்தில்.

'பெரிய மனுஷி' ஆகி 'வீட்டுக்குள் அடைபட்டு விட்ட' குமரிகளுக்கும் இப்படி கணக்கெடுப்பதும் ஊர் விவகாரங்களை அலசுவதும் பிரதானமான அலுவலாகத்தான் இருந்தது.

'கடல்குமரி கரை ஏறினாலும் நடைக் குமரி கரை ஏற மாட்டாள்; இடை நடையிலே உட்காராதேட்டி!' என்று ஆச்சியும் அத்தையும், அம்மையும் பெரியம்மையும் அதட்டியும் இடித்தும், அன்பாகவும் கண்டித்தும், சமயம் நேரும் போதெல்லாம் எடுத்துச் சொல்லி வந்தாலும், குமரிப் பொண்ணுக என்னவோ எப்பவும் இடைநடையில் உட்கார்ந்து வம்பு பேசுவதிலும், வம்புகளைசெவி மடுப்பதிலும் அதிக ஈடுபாடு உடையவர்களாகத்தான் இருக்கிறார்கள். தெற்குக் கடலோரத்தில் 'நின்று நித்தம் தவம் செய்யும்' குமரி தான் கரை ஏறின பாடாயில்லை! 'நடைக்குமரி'கள் கரையேறிக் கல்யாண பந்தத்தின் மூலம் சம்சார சாகரத்தில் குதித்து உருப்பட்டும் உருப்படாமலும், பலரை உருப்பட விடாமலும் செய்து, திருப்தியோ அதிருப்தியோ அடைந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

குமரியாக சிவபுரத்தில் வசித்து, இந்தப் பழக்க வழக்கங்களை எல்லாம் குறைவறக் கற்றுத் தேர்ந்த அழகம்மை, கல்யாணமாகி சண்பகராம நல்லூர் போய் அழகம்மை அம்மாளாகிப் பெரியதனம் பெற்ற பின்னரும், தன் தொழிலை ஒழுங்காகச் செய்து வந்தாள். ஒரு வியாழவட்டம் புருஷனோடு வாழ்ந்த பிறகு, காசநோய் வந்து அவர் 'ஆசாரிப்பள்ளம்' ஆஸ்பத்திரியில் ஒரு வருஷம் கிடந்து உயிரை விட்டபிறகு, அவள் நிலம்-கரை-வீடு வாசல் எல்லாம் நிறையவே இருந்ததால் 'செம்பராநல்லூ'ரிலேயே தங்கி விட்டாள். அவளுக்குக் குழந்தை குட்டி எதுவும் இல்லை.

அழகம்மை அம்மாள் கால ஓட்டத்தில் அழகம்மை ஆச்சி என்ற கௌரவத்தைப் பெற்றுவிட்ட போதிலும் அவளுடைய சின்னப்புத்தி அவளை விட்டுப் போகாமலேதான் இருந்தது.

புருஷன் இருந்த காலத்திலேயே அவள் அடிக்கடி சிவபுரம் வந்து, அந்த ஊர் பற்றிய செய்திகளை சேகரிப்பாள்.

அவள் தனிநபர் என்ற போதிலும், ஒரு துப்பறியும் இலாகா மாதிரி இயங்கி வந்தாள் என்றே சொல்லவேண்டும். சிவபுரம் 'பத்தரை மாத்துகள்' எந்தெந்த ஊரில் இருந்தாலும் சரி; அவர்களைப் பற்றிய சகல விவரங்களையும் எப்படியாவது அறிந்து, சிவபுரத்தார்களின் 'பெர்சனல்ஃபைல்'களை பத்திரப்படுத்தியுள்ள அந்தரங்க அலமாரியாகத் தன் உள்ளத்தை மாற்றிக்கொண்டிருந்தாள் அவள். கோயில் என்றும் குளம் என்றும், சாமியார்கள் என்றும் க்ஷேத்ரம் என்றும் சதா 'ஸர்க்கோடு' (ஸர்க்யூட்) போய் வருவதில் உற்சாகம் காட்டிய அம்மையாருக்கு எங்கும் ஏகப்பட்ட 'நிருபர்கள்' கிடைத்திருந்தார்கள். அவர்கள் தங்கள் கைச் சரக்குகளையும் சேர்த்து வண்டி வண்டியாக அவளுக்கு 'நியூஸ் சப்ளை' பண்ணிக் கொண்டிருந்தார்கள். அவளும் 'ஆடிக்கு ஒரு தடவை, அமாவாசைக்கு ஒரு தடவை', தீபாவளிக்கொரு தடவை, திருவாதிரைக்கு ஒரு தடவை என்று சமயச்சந்தர்ப்பங்களை ஏற்படுத்தி, தனக்குக் கிடைத்த அக்கப்போர்களை மூட்டை கட்டிக்கொண்டு வந்து சிவபுரத்திலே அவிழ்த்து உதறுவாள்.

மற்றவர்களைப் பற்றிய நல்ல விஷயங்களை பேசிப் பரப்புவதைவிட, பிறர் மீது கரிபூசும்—பிறரை அவமானப்படுத்தக் கூடிய—மட்ட ரகச் சங்கதிகளை வெகு சுவாரஸ்யமாக எங்கும் தெளித்து விடுவதிலேயே, ஆச்சிக்கும் அவளது கூட்டாளிகளுக்கும் ஆர்வமும் அக்கறையும் அதிகம்.

செம்பராநல்லூரில் 'சிவபுரத்தா' என்று சாட்டிப் பேசப்பட்ட ஆச்சி, சிவபுரத்தில் 'செம்பராநல்லூரா' என்று குறிக்கப்பட்டதும் அவளுடைய 'வவ்வால்தனத்தை' சுட்டிக் காட்டும் 'ஸிம்பாலிஸம்' ஆக அமைந்திருந்தது என்று கொள்ளலாம்.

அழகம்மை ஆச்சிக்கு இப்போது அறுபதுக்கும் அதிகமாகவே வயசாகி விட்டது. இருந்தாலும், கவலையற்ற

வாழ்வு; விரதம் அனுஷ்டானம் என்று சொல்லி பாலும் பழங்களும், அவலும் சத்தான ஆகாரங்களும் தின்று தின்று உரமேறிய உடல்; ஓய்ந்திருக்காது ஓடியாடி உழைத்தும், ஊர் சுற்றி அலைந்தும் வைரம் ஏறிப்போன கட்டை. ஆகவே, அவள் தெம்பாகத்தான் நடமாடிக் கொண்டிருந்தாள். கண் பார்வையும் கூர்மையாக இருந்தது; காதுகளும் அருமையாகக் கேட்டன. மூளையும் 'குட்ரயுக்திகள்' பண்ணி, சுறுசுறுப்பாக இயங்கியது. இவை எல்லாம் இப்படி நல்ல நிலைமையில் இருப்பது ஊர்காரர்களைப் பற்றிய வம்புதும்புகளை சேகரித்து, அதிகப்படியான யூகங்கள்-கற்பனைகளையும் சேர்த்து, தன் ஒத்தவர்களிடம் சுவையாகப் பேசி, 'எல்லோரும் இன்புற்றிருப்ப'தற்காகத்தான் என்பது அவள் நம்பிக்கை.

இம்முறை கல்யாணத்துக்கு என்று சிவபுரத்துக்கு விஜயம் செய்த செம்பராநல்லூர் ஆச்சிக்கு, வேப்பமரத்து வீட்டு மயிலேறும்பெருமாள் இரை ஆனார்.

கல்யாணமெல்லாம் முடிந்தபிறகு ஒருநாள் ராத்திரி, 'ஒரு கிளைப்பறவை'களாய் ஒரு வீட்டில் கூடியிருந்தபோது, ஆச்சி அதிசயமாய் கேட்டாள், 'ஆமா, மயிலுப்பிள்ளை ஊரோடு வந்துட்டாரமே? என்ன அதிசயமாயிருக்கு! நாப்பது வருசகாலம் இந்தப்பக்கமே திரும்பிப் பார்க்காத விரதம் அனுஷ்டித்த விசுவாமித்திரஞ இருந்தாரே! இப்ப எந்தக் காந்தம் அவரை இங்கே இழுத்திட்டு வந்துதாம்?' என்று. அவள் நீட்டி நீட்டி இழுத்துப் பேசும் தோரணையே தனி.

ஆச்சி கொஞ்சம் படித்திருந்தாள். புராணம் இதிகாசம் தேவார திருவாசகம் எல்லாம் அத்துபடி.

'ஆமா ஆச்சி, ஒங்கிட்டே கேட்டா விசயம் தெரியுமே?' என்று பீடிகையோடு பேச்சை துவக்கினாள் நாற்பது வயசுப் பேத்தி ஒருத்தி. 'ஏன் ஆச்சி அவரு இந்த ஊரைவிட்டுப் போயி வெளியூரிலே அப்படி இருந்தாரு? இங்கே யாருக்குமே தெரியலே. எத்தனையோ பேரிட்டே கேட்டுப்பார்த்தாச்சு!'

அழகம்மை ஆச்சிக்கு நாற்பது வருஷ சமாச்சாரம் மட்டுமா தெரியும்? நான்கு தலைமுறைகளின் ஜாதகங்களும் சரித்திரமும், வம்புகளும் வதந்திகளும் அவளுடைய நினைவுக் கருவூலத்தில் அடைந்து கிடந்தனவே! அவற்றை எந்த நேரத்தில் வேண்டுமானாலும் குறி தவறாமல் எடுத்துப் பிரித்துக் கடைபரப்பக் கூடிய ஆற்றலும் அவளுக்கு இருந்தது.

வெறும் நாக்கையே சுழட்டிச் சப்புக்கொட்டி மகிழும் சுபாவம் பெற்றிருந்தவள் சுவையான 'புட்டுக் கருப்பட்டி' கிடைத்தால் விட்டுவைப்பாளா?

'அதையேங் கேட்கேபோ!' என்று தொடங்கினாள். 'அந்தக் கரிக்கொல்லனுக்கு முப்பது வயசாகியும் கல்யாணம் ஆகாமலே இருந்துது. யாரும் பொண்ணு கொடுக்க முன் வரலே. எவ வருவாங்கேன்? அவனோட ஆத்தாகாரிதான் பத்தாயிரத்தை கொண்டா, இருபதனாயிரத்தை கொண்டான்னு ஏலம் கூறிக்கிட்டிருந்தாளே! அவ மகன் எப்பே (F.A.)யும் பீயே (B.A.)யும் படிச்சு, தாசில் வேலையும் கலெக்டர் உத்தியோகமும் பார்த்தமுல்லா! சவத்துமுண்டை சாகமாட்டாமெ அலைஞ்சா. பொறகு செத்துத் தொலைஞ்சான்னு வையி. பாழறுவானுக்கு பொண்ணு கெடைக்கலே. ஆனா வயசு சும்மா இருக்கவிடுமா? கொழுப்பும் கறியும் வெறுமனே படுத்துக்கிடக்க விட்டிருமா? வீட்டிலே பொன்னம்மா பொன்னம்மான்னு ஒருத்தி எல்லா வேலையும் செய்துக்கிட்டிருந்தா...'

'அவளை பெண்டாட்டியாக்கிக்கிட்டாராக்கும்?' என்று 'பூஜை வேளையில் கரடி' விட்டது அவசரப்பிச்சு.

'நான்தான் சொல்லிக்கிட்டு வாரேனே. அதுக்குள்ளாற உனக்கு என்னட்டி அவசரம்?' என்று கண்டித்துவிட்டு ஆச்சி தொடர்ந்தாள். 'பொன்னம்மா பாவம் அரைக்கிழவியானவ. ரொம்பவும் கஷ்டப்பட்டு ஒட்டி உலர்ந்து போனவ. அவளை பத்தி பழி சொன்னா பாவமாக்கும். அவளுக்கு செம்பகம்

செம்பகம்ன்னு ஒரு மக இருந்தா. அப்போ அவளுக்கு பதி மூணு பதினாலு வயசிருக்கும். காதரை கூதரையா அலேஞ்சுது சவம். செக்கொலக்கை மாதிரி உருண்டு திரண்டு வளர்ந் திருந்ததே தவிர, பெரியமனுஷி ஆகாமத்தான் இருந்துது. இந்தக் கரிமுடிவான் வீட்டுக்கு அடிக்கடி வரும். வேலேகளும் செய்யும். இந்தத் துப்புக்கெட்ட தூமையைக்குடிக்கி அதை சீண்டி விளையாடி, சிரிக்கச் சிரிக்கப்பேசி, தின்கிறதுக்கு நெறையக் கொடுத்தும், துட்டுகளைகுடுத்தும் நைஸ்பண்ணி, கட்டிப்புடிச்சு......என்னென்னமோ பண்ணி, பொண்டாட்டி இல்லாத குறையை தணிச்சுக்கிட்டு இருந்திருக்கான். ஒரு நா பகலிலே, அந்தப் புள்ளையை கட்டிப்புடிச்சி விளையாடிக் கிட்டு இருக்கையிலே யாரோ பார்த்திருக்காங்க. இதை சும்மா விட்டுவைக்கப்படாது, அவனை விசாரிச்சு தெண்டம் வசூலிக்கணும்னும், இல்லே, சரியானபடி உதை குடுத்து அவனை திருத்தணுமின்னும் தெருக்காரங்க—ஊர்காரங்க மத்தியிலே கசமுசா கிளம்பியிருக்கு. அதை தெரிஞ்சுக்கிட் டதும் அவன் ராவோடு ராவா ஊரைவிட்டே ஓடிப்போயிட் டான். அவன் என்ன ஆனான், எங்கே போனான்னு இங்கே ஊரே அலேமோதிச்சு. அப்பாவி பொன்னம்மாளுக்குக் கூட விசயம் தெரியாதுன்னு பார்த்துக்கியேன்! பொறகு ஊசு பாசுன்னு லேசுலேசா குட்டு வெளிப்பட்டுது. பிறவியாபிள்ளே யோட அப்பா நாரம்புநாத பிள்ளைதான், அவனை மதுரைக்கு அனுப்பிவைச்சாரு. அங்கே ஒரு வெள்ளிக்கடையிலே வேலே கிடைக்க வழி செஞ்சாருயின்னு தெரிஞ்சுது. அப்புறம் மயிலு நல்லபடியா இருந்து, மயிலேறும் பெருமாள்பிள்ளே ஆகி, கல்யாணமும் நடந்து, ஒரு பையனுக்கு தகப்பனும் ஆயிட் டாரு. தான் பண்ணினது அவருக்கு மனசிலே குத்தலே. இந்த ஊருமேலேதான் ஐயாப்பிள்ளைக்கு பொத்துக்கிட்டு வந்துட்டுது. இங்கே எட்டியே பார்க்கமாட்டேன்னிட்டு இருந்தாரு. ஆனா இந்த ஊரிலே உள்ள நெலத்திலே விளைஞ்சு வாறதை வித்த பணம்மட்டும் அவருக்குக் கசக்கலே. பூவுக் குப்பூவு நெல்லுவித்த பணத்தை வாங்கி முடிஞ்சுக்கிட்டுத் தான் இருந்தாரு' என்று சொல்லிமுடித்தாள்.

'இப்புடியும் உண்டுமா அநியாயம்!' 'அநியாயம்னு லேசுப்பட்ட அநியாயம்னு சொல்லுதே! பெரியமனுஷி ஆகாத சின்னப்புள்ளையை...ஆங்!' என்று, என்றைக்கோ நடந்த தாகச் சொல்லப்படும் ஒன்றை எண்ணி இன்று அங்கலாய்த் தார்கள் ஆச்சியின் தோழிமார்கள்.

'இப்பம் எதுக்காக ஆச்சி இவரு இங்கேவந்து தங்கியிருக் காராம்?' என்று ஒரு பேத்தி தூண்டினாள்.

'என்ன எழவுக்கோ, யாரு கண்டா?' என்ற ஆச்சி, குரலை தாழ்த்திக்கொண்டு சொன்னாள்: 'செம்பகம் பாளை யங்கோட்டையிலேதான் இருக்கா. அவ ஒண்ணும் லேசுப் பட்டவ இல்லே. இந்த ஊரிலேயே இருந்து பேரு எடுத்த சிறுக்கி அவ.'

'எவனோ பள்ளனுக்கும் அவளுக்கும் தொடுப்புன்னு பேச்சு அடிபட, இந்த ஊரைவிட்டே போய் சேந்தாளே அந்தச் செம்பகமா?' என்று ஒருத்தி விசாரிக்க,

ஆச்சி உற்சாகத்தோடு 'ஆமோ ஆமா. அவளேதான்' என்று அங்கீகரித்தாள்.

'அப்படிச் சொல்லடி வழக்கை, இப்படிக்குடுடி ஒழக்கை யின்னுளாம்!' என்று ஒருத்தி கைகொட்டிக் களித்தாள்.

'செம்பகம் இப்ப முக்கால் கிழவி ஆகியிருப்பாளே ஆச்சி?'

'அதுனாலே என்னட்டீ? அவகிட்டே சின்னப்புள்ளையா ஒரு மக இருக்கா. நம்ம மயிலுப்பிள்ளைக்குத்தான் சின்னப் புள்ளைன்னு சொன்னா ரொம்ப பிரியமாச்சே!' என்றாள் ஆச்சி.

'இருந்தாலும், அவருக்கு இப்பம் எழுபது வயசு ஆச்சுங் கிறுளே. இந்த வயசிலே...' என்று ஒரு 'சாதுக்குழந்தை' (இவளுக்கும் முப்பது வயசு ஆகுது) சந்தேகப்பட்டது.

'உனக்கு என்னட்டி தெரியும் உலகத்தைப்பத்தி! இதுக் கெல்லாம் வயசு வந்து குறுக்கே நிக்காது. எழுபது எம்பது வய

சிலே, சின்னப் பொண்ணுத் தேடி கல்யாணம் கட்டிக்கிடுத வங்களைப்பத்தி அப்பப்போ பேப்பர்லே போட்டுவிடத்தான் செய்யுதான். இது இந்த காலத்திலே மட்டுமில்லே; எல்லாக் காலத்திலும் இருந்த நடைமுறைதான். யயாதின்னு ஒரு ராசா இருந்தான். தொண்டு கிழமாப்போன பிறகுகூட இந்த ஆசை அவனுக்கு விடலே. அப்படியும் தேவயானி, சன் மிஷ்டைன்னு ரெண்டு பொண்டாட்டிக கூட வாழ்ந்து பிள்ளை குட்டி பெத்தவன்தான். அவன் மேலும் மேலும் அனுபவிக் கணும்னு ஆசைப்பட்டு, அவனுடைய மகன் ஒருத்தன் புரு யின்னு, அவன் தன் இளமையை இவனுக்குத்தர, இந்தக் கிழட்டுத்தூமை ரொம்பகாலம் ஆசைப்பட்டதை எல்லாம் அனுபவிச்சுக்கிட்டு இருந்தான்னு புராணம் சொல்லுது. நடந்ததை-நடக்கதை—தான் முன்னுள்ளோரு இப்படி கதையா எழுதிவச்சிருக்காங்க. இந்த ஆம்பிளைகளை, எப் படிப்பட்டவங்களா இருந்தாலும், நம்பவேபடாது. அவங்க கிட்டே உடல்சுத்தம், மன சுத்தம் கெடையவே கெடையாது' என்று அழுத்தம் திருத்தமாக அபிப்பிராயம் தெரிவித்தாள் செம்பராநல்லூர் ஆச்சி.

'என்னமோ அம்மா, இதெல்லாம் யாருக்குத் தெரியுது!' என்றும், 'ஊரிலே உலகத்திலே என்னென்னவெல்லாமோ நடக்கு!' என்றும், 'ஊரு ரொம்பக் கெட்டுப்போச்சு!' என்றும், 'காலம் கெட்டுப்போச்சு!' என்றும், ஆள் ஆளுக் குத் தோன்றியதை சொல்லிவைத்தார்கள் 'அம்மாக்கமாருக'.

இப்படி வம்பு 'பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே' என்ற கருத்துக் கொண்டுள்ள ஆச்சிக்கு அன்றையப்பொழுது வீணாகவில்லை என்று திருப்தி !

# 19

'இந்த ஸீசன்லே மாம்பழம் மலிஞ்சுபோச்சு. ஜங்ஷன், பாளையங்கோட்டை நெடுக மலைமலையாக் குவிஞ்சுகிடக்கு சவம்!'

'தச்சநல்லூரிலும் அம்பாரம் அம்பாரமாக் குவிச்சுவச்சிருக்கான். ஆனா விலையை விட்டுக்குடுக்க மாட்டேன்கிறாக.'

'பழம் பெரிசா இருக்கே தவிர, ருசியா இல்லியே. நல்லப் பழுத்த பழமாவும் இல்லே.'

'இந்த வாழைப்பூச்சாதியே அப்படித்தான். ஒருபக்கம் புளிப்பாவும் ஒரு பக்கம் இனிச்சும் தானிருக்கும். விக்கிறவங்க நல்லாப் பழுக்கிறவரை விட்டுவைப்பதுமில்லை. உரைக்காயிலேயே பறிச்சிட்டு வந்து விக்கிறதுக்குக் குவிச்சிடுறாங்க. நல்லாப் பழுத்த பிறகுதான் விக்கிறதுன்னு ஆரம்பிச்சா, அவங்களுக்கு நஷ்டம். விக்கிறதுக்கு அநேக நாளாகுது. அதுக்குள்ளே பழங்கள் ஒண்ணு ஒண்ணா அழுகத் தொடங்கிடும். அதனாலேதான் பழுத்தும் பழாமலும் இருக்கையிலேயே விற்பனைக்கு வந்திருது.'

ஒருநாள் சாயங்காலம் மயிலுப்பிள்ளை ஆற்றுக்குப்போய் கொண்டிருந்தபோது, முன்னே சென்ற மூன்று பேர் மாம்பழங்களைப் பற்றிப் பேசியவாறே நடந்தார்கள்.

அப்போதுதான் அவருக்கு 'கொற நோக்காட்டு மாம்பழம்' ஞாபகத்துக்கு வந்தது. பெரிதாகவும், அறுத்தால் செம்மை கலந்த மஞ்சள் நிறமாகவும், சதைப்பற்று நிறைந்ததும், மிகுந்த இன்சுவையும் மணமும் கொண்டும் இருந்தது அந்த சாதிப்பழம். தோல் பச்சையாகத்தான் இருக்கும். சிறிது மஞ்சள் கலந்தும் இருக்கும். பழுத்தும் பழுக்காதது மாதிரி. ஒவ்வொரு பழமும் ஒரு செம்பு—'பால் சொம்பு' என்று சொல்லப்பட்ட உருண்டையான பெரிய செம்பு—அளவுக்கு இருக்கும். ஆனால் மேலே பூராவும் குஷ்டரோகியின்

உடம்பில் காணப்படுவதுபோல் முண்டுகளும் முடிச்சுகளும் பரவியிருக்கும். அதனால்தான் அதற்கு 'குட்டநோக்காட்டு மாம்பழம்' 'கொற நோக்காட்டு (குறை நோக்காடு) மாம் பழம்' என்ற பெயர்.

பெருங்குளம் சிவன்கோயில் பிரகாரத்தில் நின்ற இரண்டு மரங்களில் மட்டும்தான் அப்படிப்பட்ட காய்கள் காய்த்துப் பழமாயின. ஒவ்வொரு மரத்தின் ஒவ்வொரு கிளையிலும் நிறையவே காய்த்துத் தொங்கின. ஐம்பது வருஷங்களுக்கு முன்பு. அதற்கு அவ்வூர்க்காரர்கள் ஒரு கதையும் சொன்னார்கள்.

—ஆதியில் அந்த மரத்துக் காய்களும் பழங்களும் குறை இல்லாமல், வழவழ மினுமினுப்போடுதான் இருந்தன. ஒரு சமயம் ஒரு பரதேசி அந்த ஊருக்கு வந்தான். சிவன் கோயில் பிரகாரத்தில் குலைகுலையாய் மாங்காய்கள், செம்பு தண்டிக்கு, காய்த்துத் தொங்குவதைப் பார்த்தான். ஏயம்மா, எவ்வளவு பெரிசு, எத்தாத் தண்டி, எவ்வளவு காய்கள் என்று சொன்னான். மறுநாளே காய்கள் மீது, குஷ்டரோகிக்கு உள்ளதுபோல், முண்டு முண்டாக துருத்தல்கள் ஏற்பட்டுவிட்டன. அதிலிருந்து தொடர்ந்து இப்படியே தானிருக்கு. அந்தப் பரதேசியின் கண்பட்டுத்தான் அம்மரங்களின் காய்களுக்கு இந்தக்குறை ஏற்பட்டுவிட்டது. அன்று முதல் அதுக்கு கொறநோக்காட்டுப்பழம், குட்டநோக்காட்டுப்பழம் என்ற பேரும் ஏற்பட்டுவிட்டது. ஆனாலும் பழம் பருமனிலோ, நிறத்திலோ, ருசியிலோ மாற்றம் அடையவில்லை. கடவுள் செயல்தான்!

பல வருஷங்கள் அம்மரங்கள் காய்த்து நின்றன. ரொம்ப வருஷங்களுக்குப் பிறகு அவை காய்ப்பு ஓழிந்து வெறும் மரமாகி நின்றன என்றும், பிறகு பட்டுப்போயின என்றும் அவர் கேள்விப்பட்டிருந்தார்.

அங்கே அம்மரங்கள் காய்த்துப் பழங்கள் தந்துகொண்டிருந்ததை அவர் பார்த்திருக்கிறார். முண்டுகள் படர்ந்த

பெரிய அளவு பழத்தை நறுக்கித் தின்று அதன் மிக இனிய சுவையை ருசித்தும் இருக்கிறார். அதுபோன்ற 'குறைநோக் காட்டுப் பழங்களை' அப்புறம் அவர் வேறு எங்கும் கண்டது மில்லை.

இப்போது அதை நினைத்துக்கொண்டபோது மனு. பெனு. எண்ணினார் :

— இயற்கையின் செயல்களில் எத்தனையோ மர்மங்கள் கலந்திருக்கு. எல்லாவற்றையும் பூரணமாகப் புரிந்துகொள்ள முடியும் என்று சொல்ல இயலவில்லை. நல்ல முறையில் காய்த்துக்கொண்டிருந்த மரத்தில் இப்படி ஒரு விசித்திரம் தோன்றுவானேன்? அந்த ஜாதி மாஞ்செடி முளைக்குமா என்று யாரும் சோதனை நடத்தலே போலிருக்கு. அந்த மரத்தின் நல்லப் பழுத்த பழத்தின் கொட்டைகளை அந்த ஊரிலும் வேறு ஊர்களிலும் நட்டு, மாமரம் முளைக்குதா, அதில் காய்க்கும் காய்கள் எப்படி இருக்கு என்று யாரும் சோதிச்சுப் பார்க்கலே போலிருக்கு. ஒரு விசித்திரமான ஜாதி மரம் அப்படியே அழிஞ்சு போயிட்டுதே! வீணாக அழியும்படி விட்டுட்டாங்களே! ஊம்ங். நம்மவங்ககிட்டே இதுதான் பெரியகுறை. புதுமைகளை பாதுகாக்கணும்கிற முயற்சி, உந்துதல், ஊக்கம் கிடையாது. ஆராயும் அவா, சோதனைகளை நடத்தி வெற்றிகரமான விளைவுகளை காண வேண்டும் என்கிற துடிப்பு கிடையாது. இருக்கிறதுகளை அப்படி அப்படியே ஏற்று, இருக்கின்றவரை அனுபவி. அவை மறைஞ்சுபோச்சா? சேரி, விட்டுத்தள்ளு ; அவற்றின் விதி அவ்வளவுதான்னு நினைக்கிற மனோபாவம்தான் வேரூன்றி இருக்கு. ஆனா, ஒவ்வொண்ணுக்கும் பொருத்தமா ஒரு கதைகட்டி விடுறாங்கய்யா. அதிலே இவங்க கெட்டி!

இந்த நினைப்பு கிளையோடி, ஒரு காலத்தில் இருந்து, காலவெள்ளத்தில் அடிபட்டு, இன்று இல்லாது போய்விட்ட எத்தனையோ விஷயங்களைத் தொட்டது. அதன் தீண்டுதலில் 'பத்தாசி' என்ற தின்பண்டமும் அகப்பட்டது.

'ஏ பார்த்தியா, இந்த பத்தாசி என்கிற பண்டம் இல்லா லாமலே போயிட்டுதே!' என அதிசயித்தது அவர் மனம்.

வெறும் சீனிப்பாகுதான் அது. சீனியை முறுகக் காய்ச்சி, அந்தப் பாகை ஒரு கரண்டியாலே கோதி, தாம்பாளத்திலே அல்லது மரப்பலகையிலே, வட்டம் வட்டமா ஊத்துவாங்க. அது காய்ந்ததும், சில்லுச் சில்லாக, எடுக்கிறதுக்காக வாட்டமா வந்துவிடும். வெள்ளை வெளேர்னு, ஊடே ஊடே காற்றுக் குமிழ்களான வெற்றிடங்களோடு, தின்ன மொறு மொறு என்று, தனிச்சுவையோடு ரொம்ப இனிப்பாக இருக்கும். சின்னப் பிள்ளைகள் விரும்பித் தின்பார்கள். கல்யாணம் முடிந்து, மறுவீட்டுப் பணியார தினுசுகள் வந்து சேர்ந்ததும், மாப்பிள்ளை வீட்டார் 'ஊர் வழக்கம்' என்று, உறவின் முறையாருக்கு பண்டங்கள் வழங்குவார்கள். அவற்றில் ஒன்றிரண்டு பத்தாசியும் இருக்கும். முன்பு அந்நாட்களில் சைவப்பிள்ளைகள் நடத்திய மிட்டாய் கடைகளில் இந்த இனிப்புப் பண்டமும் விற்கப்பட்டு வந்தது. பிறகு இல்லாமலே போய்விட்டது.

'மனுசங்களுக்கு தோற்றமும் மறைவும் இருப்பது போலவே, இயற்கையில் தோன்றுகிறவற்றுக்கும் மறைவு என்று ஒன்று நிகழ்வதுபோலவே, மனுசர்களால் உண்டாக்கப்படுகின்றவற்றுக்கும் மறைவு என்பது தானுகவே ஏற்பட்டு விடுது' என்று பெரியபிள்ளை எண்ணினுர்.

தின்கிற விஷயங்களை பற்றியே எண்ணிக்கொண்டிருந்ததால், மனநாக்கில் நீர் சொட்டலாயிற்று. எதையாவது தின்ருல் நன்ருக இருக்குமே என்ற எண்ணம் பசி எனும் நினைப்பை அவருக்கு உண்டாக்கியது. வீடுநோக்கி நடக்கிற போதே, தின்பண்டம் வேணும் என்கிற ஆசை வளர்ந்தது.

— இந்தச் சமயம் எதுவும் தின்னலாம். பஜ்ஜி, வடை, பூரி கிழங்கு...அல்வா, கேசரி, மைசூர்பாகு. திரட்டுப்பால் ஜோராக இருக்கும். பிஸ்கட் தினுசுகள், கேக்குகள்...முறுக்கு, தேங்குழல், மிக்ஸ்சர்...மொறமொறன்னு ஏதாவது. ஆற்றி

லிருந்து வீடு சேர்ந்தவுடன் தின்பதற்கு பண்டம் ஏதாவது இருக்கணும். மிக்ஸ்சர், காராசேவு, பிஸ்கட் தினுசுகள் வாங்கி ஸ்டாக் பண்ணிக்கொள்ளணும். நினைக்கிறபோது கொஞ்சம் கொஞ்சம் எடுத்து வாயிலே போட்டுக்கலாம். ஒருநாள் திரட்டுப்பால் செய்து பார்க்கணும். திரட்டுப்பால் தின்னு ரொம்ப நாளாச்சு...

# 20

அன்று இரவு மயிலேறும் பெருமாள்பிள்ளைக்கு சரியான உறக்கம் இல்லை. மனம் காரணம் இல்லாமலே சஞ்சலமுற்றது. இனம் புரியாத ஒரு கனம்—சோகச்சுமை—உள்ளத்தை அழுத்தியது.

இரவு இரண்டு மணிக்கு அவர் விழித்துக்கொண்டார். பொதுவாகவே, அவருக்கு தூக்கம் அதிகம் கிடையாது. எட்டரை அல்லது ஒன்பது மணிக்குப் படுத்தால், நான்கு மணிநேரம் ரொம்ப அசந்து தூங்குவார். நல்ல தூக்கம். எங்கே என்ன நடந்தாலும், வெளியே தெருக்களில் எவ்வளவு கூச்சல்கள் கலாட்டாக்கள் நிகழ்ந்தாலும் அவருக்குத் தெரியாமலே போய்விடும். எதுவும் அவர் துயிலை கலைத்துவிட முடியாது. பிறகு, சடாரென்று, யாரோ தட்டி எழுப்பியது போல விழிப்பு வந்துவிடும். அப்புறம் உருண்டு புரண்டு கொண்டிருக்க வேண்டியதுதான். தூக்கமும் விழிப்புமாக, தூக்கம் என்றும் சொல்லமுடியாத—விழிப்பு என்றும் கொள்ள முடியாத கிறக்க நிலையாக, பல ரகமான கனவுகளும் குழம்பிக் கலக்கும் ஒரு அவஸ்தையாக, இரண்டிலிருந்து நான்கு மணி வரை பொழுது கழியும். நாலரை மணிவரை எதையாவது எண்ணியவாறு கண்களை மூடிக்கொண்டு கிடப்பார். அப்புறம் எழுந்துவிடுவார்.

சிவபுரத்தின் தெற்குப் பகுதித் தெருக்களில் பகல் நேரத்திலேயே ஆள் நடமாட்டம் அதிகம் இராது. ஊரிலே ஆட்களே இல்லையோ என்று சந்தேகிக்கவைக்கும் அளவுக்கு வெறிச்சோடிக்கிடக்கும். இருட்டிய உடன் அழுத்தமான அமைதி கவிந்துவிடும். ஏழரை எட்டு மணிக்கெல்லாம் 'ஒரு சுடுகுஞ்சுகூட' தெருவில் நடமாடாது. ஒன்பது மணிக்கு ஒரே உறக்க மயம்தான்.

முன்பு மணு. பெணு. ஊரோடு இருந்த காலத்தில் விளக்கு வெளிச்சம் இராது. சத்தங்கள் அங்குமிங்குமாக நாய் குரைப்பதும், எங்காவது பிள்ளை அழுவதும்தான் இரவுகளில். பகலில் நாயின் குரைப்பு இராது. மத்தியான வேளைகளில், சமையல் நேரத்தில், பல வீடுகளுக்கப்பால் அம்மி தட்டுவது கூட (அம்மியில் தேங்காய் அல்லது மசால் சாமானை வைத்து, அரைப்பதற்காகத் தட்டுவது) சடார்-மடார் என்று செவிட்டில் அறைகிறமாதிரி காதில் விழும். அடுத்த தெருவில் எங்கோ ஒரு வீட்டில் தட்டுவதுகூட, பக்கத்து வீட்டில் தட்டப்படுவது போல் கேட்கும். பிற்பகலில் அமைதி தொங்கும். அதை கலைக்க முயல்வதுபோல் ஈயின் ரீங்கரிப்பும், கருவண்டின் இடையருத ஓசையும் பெரிதாக ஒலிக்கும்.

இப்போதும் அம்மி தட்டுகிற ஓசை அடிக்கடி காதை பிய்க்கத்தான் செய்கிறது. ஒரு மணிக்கு அல்லது முக்கால் மணிக்கு ஒருதடவை பஸ் வந்து போகும் இரைச்சலும், 'ஆரன்' ஓசையும் காற்றில் மிதந்து வருகின்றன. இதற்கெல்லாம் மேலாக இரண்டு மைல்களுக்கு அப்பால் உள்ள சிமின்ட் ஃபாக்டரியில் இடைவிடாது ஒலித்துக் கொண்டிருக்கிற இயந்திர ஓசை, ஏதோ ஒரு கதியில் இசைக்கப்படும் ஊமை சங்கீதம் மாதிரி, இரவு பகல் எந்நேரமும் கேட்கிறது. இரவுகளில் கனமாக ஒலிக்கும்.

இரண்டு மணிக்கு விழித்துவிட்ட மணு. பெணு.வின் காதுகளை அந்த இயந்திர ஒலி நிறைத்தது. வேப்ப மரத்திலிருந்து கத்திய இரண்டு ஆந்தைகளின் அலறல் அறுத்தது.

— இப்போ பரவால்லே. முன்பு நடுராத்திரிலே, கூகூ...கூவோய்...கூவோகூ என்று பயங்கரமான கூச்சல் திடீரென்று எழும். யாரோ பயந்து அடித்தொண்டையி லிருந்து அலறுகிற மாதிரி. கழுத்தைப் புடிச்சு நெரிக்கிறது னாலே, நெரிக்கப்படுகிறவன் கத்த முடியாமக் கத்துகிற மாதிரி. பயப்படவைக்கும் கோரமான கதறல். சின்னப் பிள்ளைகள் பதறி அழும். கூகை சத்தம்தான். ஆந்தை மாதிரி ஒரு ராப்பறவை. ஆந்தையை விடக் கொஞ்சம் பெரிசாக இருக்கும். ஆனா என்னமாதிரித் தொண்டை! எவ்வளவு பயங்கரமான கத்தல்! வீட்டுக் கூரையிலே வந்து உட்கார்ந்து கத்தும். ஓட்டு மேலே, மரத்து மேலே, தட்டட்டி மேலே, எங்கெங்கோ உட்கார்ந்து அலறும். இங்கே கத்துறது அந்த வீட்டிலே எழவு விழும் என்பாங்க. இப்ப அது இல்லா மலே போச்சு. சவம் ஒழிஞ்சுது!

அதில் பெரியபிள்ளைக்கு ரொம்ப சந்தோஷம். ஊருக்கு வந்த சில தினங்களிலேயே, கூகைச்சத்தம் கேட்பதில்லை என உணர்ந்து, அதுபற்றி மற்றவர்களிடம் விசாரித்தார். கூகைகள் பெருத்துப்போனதால், அவற்றை சுட்டு ஒழிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன; இரண்டு மூன்றை சுட்டுக் கொன்றவுடன் எஞ்சியிருந்தவை பயந்துபோய், ஊருக்குள் வராமல் ஆற்றங்கரை மாந்தோப்பிலும் பனங்காட்டிலும் பதுங்கித் திரிந்தன. இரவின் கண்ட கண்ட நேரங்களிலும், விடியப்போகிற சமயத்திலும் தோப்புகளிலிருந்து கூகைகள் கூவிக்கொண்டிருந்தது இங்கேவரை கேட்டது. பயங்கரமான சத்தம். அபசகுனம் மாதிரியும் இருந்தது. ஊரிலிருந்து ஏற்பாடு பண்ணி, வேட்டையாட்களை அனுப்பி ஒன்றுவிடாமல் அவற்றை சுட்டுத் தீர்த்தாச்சு. அப்புறம் கூகை தலைகாட்ட வில்லை. ஆந்தைகள்தான் பெருத்துப்போச்சு என்று ஊர் காரர்கள் தெரிவித்தார்கள்.

'தொலையவேண்டியதுதான்!' என்று மகிழ்வுற்றார் பிள்ளை.

கிருஷ்ணபட்சத்து நிலவு அருமையாக மிளிர்ந்து, எங்கும் அமுத ஒளி பூசிக்கொண்டிருந்தது.

'நாலு மணி ஆகுது. எந்திரிச்சு காப்பி போடலாம். இன்னிக்கு காப்பி குடிச்சிட்டே ஆத்துக்குப் போகலாம். ரெண்டு நாளா மனசே சரியாயில்லே. ஏன் என்றே புரியலே...'

மஹ. பெஹ. எழுந்து, படுக்கையைச்சுருட்டி வைத்தார். பம்பில் தண்ணீர் அடித்து, வாய் கொப்புளித்து முகம் கழுவினார்.

— நாலரை மணிக்கெல்லாம் 'ஃபர்ஸ்ட் பஸ்' வாறசத்தம் கேட்கும். முதல் கார் சத்தத்தைக் கேட்டு சிலபேர் எந்திருச்சிருவாங்க. அஞ்சு மணிக்கு, பக்கத்து வீட்டிலே பம்பு அடிச்சு தண்ணி புடிக்கிற சத்தம், வாளியை இழுத்து நகர்த்துகிற ஓசை...சிமின்ட் கம்பெனிக்கு, மில்லுக்கு, கார்பைட் பாக்டரிக்கு 'முதல் ஷிப்டு'க்கு வேலைக்குப் போகிறவங்களுக்காக அவங்க அவங்க வீட்டிலே உணவு தயாரிப்பாங்க. அங்கும் இங்குமா அம்மி தட்டுற ஓசை, காலையின் அமைதியூடே ரொம்பவும் கனத்து வந்து காதைத் தாக்கும். அஞ்சே கால் மணிக்கு 'ரண்டாவது கார்' ஆரனை அலறவிட்டுக்கிட்டு வந்து சேரும்...சத்தங்களுக்குக் குறைவேயில்லை !

நான்கு மணிக்கு முன்பிருந்தே ஒரு குருவி—கறுப்பாய், குயிலைவிடச் சிறியதாய், சிறிது நீண்டவால் உடையதாய் இருக்கும்—இனிய குரலில் 'வீஞ்சிட்டு...வீஞ்சிட்டு' என்று நீட்டி நீட்டிக் கூவும். விடியும்வரை கூவிக்கொண்டேயிருக்கும். அது 'விடிஞ்சிட்டு-விடிஞ்சிட்டு' என்று ஒலி பரப்புவது போலவே தொனிக்கும்.

இப்போதும் அந்தக் கருங்குருவி 'வீஞ்சிட்டு-வீஞ்சிட்டு !' என்று ராகமெடுத்துக் கூவியது. விடிவதற்கு இன்னும் நேரம் கிடந்தபோதே அவசரக்குடுக்கையான அந்தக் குருவி 'விடிஞ்சிட்டுது' என்று அறிவித்து யாரையோ எழுப்ப முயன்று கொண்டிருந்தது வேடிக்கையாகத்தான் பட்டது பெரியபிள்ளைக்கு.

— இந்தக் குருவி பங்குனி சித்திரையிலேதான் ரொம்பச் சத்தம் போடுது. மாசி மாசத்துக்குப் பிறகுதான் இந்தச்

சத்தம் எழுகிறது. அப்புறம் வைகாசி கடைசியிலே அல்லது ஆனியிலிருந்து கேட்காமலே போயிருது. ஆத்தங்கரையிலே அதிகாலையிலே 'அக்காக்குருவி' கத்துதே அதுவும் மாசிக்குப்பிறகு, கோடை வருகிற சமயத்திலேதானே வருது! மற்றக் காலத்திலே எங்கேயோ போயிருது; அல்லது, இந்தப் பக்கத்திலேயே திரிஞ்சுக்கிட்டிருந்தாலும் ஏக்கத்தோடு 'அக்கோ-அக்கோ'ன்னு கத்துறது இல்லே. அதே மாதிரி இந்தக் கருங்குருவியும் இளவேனில் பருவத்திலே இங்கே தென்படுது; பிறகு இல்லாமப் போயிருதுன்னு பால்வண்ணம் சொன்னான். அவன் வருஷக்கணக்கிலே கவனிச்சுப் பார்த்தானும். சும்மா சொல்லமாட்டான். முன்னாலே நான் இங்கே இருந்தபோது இந்த விஷயத்தைக் கவனிக்கலே. இந்தக் குருவி எல்லாக் காலத்திலேயும் கத்திக்கிட்டு இருக்கும்னுதான் நெனச்சேன். இனிமே கவனிக்கணும்.

அடுப்பில் காப்பி கொதிக்கிற நேரத்தில் பெரியபிள்ளை பறவைகளைப்பற்றி நினைத்துக்கொண்டிருந்தார்.

வால் மிக நீண்டு தொங்க, அப்படியும் இப்படியும் அழகாகப் பறக்கும் ஒருவகைக் குருவி—கறுப்பு, வெள்ளை, கருமை ஓடிய வெண்மை, சிவப்பு நிறத்தில் எல்லாம் விதம் விதமாக—ஊருக்குள் காணப்பட்டது. காலப்போக்கில் காணாமலே போய்விட்டது.

பனைமரங்களின் ஓலையில் தொங்கும், நுட்பமான வேலைப்பாடு கொண்ட கூடுகளை பின்னி வசிக்கும் தூக்கணாங்குருவிகள்...அவையும் இல்லாமலே போயின.

கறுப்பும் வெள்ளையும் கலந்த ஒரு தனி நிறச் சிறு பறவையாய், சிறு கொண்டை தலையில் பெற்று, முகத்தில் கண்களைச் சுற்றி கன்னங்கரேல் என்றும், கழுத்தில் வெளேர் என்றும், வாலடியில் செவேல் என்றும் பளிச்சிடும் வர்ணங்கள் பெற்றும், வசீகரமாக விளங்கித்திரிந்த ஒரு இனக் குருவியையும் காணவில்லை.

எண்ணிப்பார்த்தால், மறைந்துபோனவை இப்படி பல இருக்கும்.

காப்பியை வடிகட்டி, ஃபிளாஸ்கில் ஊற்றி வைத்து விட்டு, அப்போதைக்கும் ஒரு தம்ளர் குடித்தார். பல் துலக்கும் வேலை எப்பவோ முடிந்திருந்தது.

இரண்டாவது பஸ் இரைச்சலிட்டு வந்து வடக்குத் தெருவில் திரும்பியது. அங்குள்ள ஸ்டாப்பில் நின்று கிளம்பிய ஓசையும், 'ஆரன்' ஒலியும் மிகத் தெளிவாய் கேட்டன.

— அஞ்சேகால் மணி ஆச்சு. ஆத்துக்குக் கிளம்பவேண்டியதுதான்.

சாமான்களை ஓரமாக எடுத்துவைத்து, கதவுகளை சாத்திவிட்டு, முன் அறைக்கு வந்தார். அந்த அறையில் மட்டும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது.

வெளியே 'ஐயா' என்று மெதுவாகக் கூப்பிட்டு, கதவை விரலால் லேசாகத் தட்டுகிற ஒலி எழுந்தது.

'யாரது?' பிள்ளையின் கேள்வி அதட்டலாகத் தெரித்தது. யாருடா இது, இந்த நேரத்திலே என்ற அதிசயம் குமிழ்த்து வெடித்தது அவருள்.

'நான்தான்—செம்பகம்.'

ரொம்ப ஆச்சரியம்தான். அவர் கதவை திறந்துவிட்டு ஒதுங்கி நின்றார்.

செண்பகம் கையில் ஒரு பெரிய பையுடன் காட்சி தந்தாள். அவசரமாக உள்ளே வந்து மறைவாகத் தள்ளி நின்றாள்.

திகைப்பில் தடுமாறித் திண்டாடிய பிள்ளை, வந்தவளை 'வா' என்று கேட்கவேண்டுமே என்ற உணர்ச்சி வரப்பெற்றவராய், 'வா செம்பகம்' என்றார். 'இப்ப சத்தம் கேட்டுதே அந்த பஸ்லேதான் வந்தையா?' என விசாரித்தார்.

'ஆமா' என்றவள் பைக்குள்ளிருந்து சின்னத் தூக்குச் சட்டி ஒன்றை எடுத்தாள். 'உங்களுக்கு திரட்டுபால் பிடிக்குமேன்னு பண்ணி எடுத்தாந்தேன். முறுக்குச்சுத்தி அம்பது முறுக்கும் கொண்டாந்திருக்கேன். பல்லு விளக்கியிருப்

பேளே? கொஞ்சம் தின்னு பார்க்கேளா?' என்று அன்பாக உபசரித்தாள்.

'இப்ப வேண்டாம். நான் ஆத்துக்குப் புறப்பட்டுக்கிட்டிருந்தேன். தினம் அஞ்சேகாலுக்கே போயிருவேன். இன்னிக்கு அஞ்சரைக்குப் போகலாமேன்னு தாயமாடினேன். அதுவும் நல்லதாப் போச்சு. ஏது திடீர்னு? மயிலு சும்மா இருக்காள்ளா?' என்று கேட்டார் அவர்.

— ஏன் இவ இப்படி திடீர்னு இந்த நேரத்திலே வந்து சேர்ந்திருக்கா? என்ன முக்கிய விஷயம் இருக்கும்?

அவர் மனம் குறுகுறுத்துக் கொண்டிருந்தது.

'பகல் நேரத்திலே வாறதுக்கு எனக்கு என்னவோமாதிரி இருந்துது. ராத்திரியே வந்து, பேசவேண்டியதை பேசிட்டு, அதிகாலையிலே முதல் காருக்கே திரும்பிவிடலாம்ன்னு கூட நெனைச்சேன். அது வேண்டாம், நல்லாயிருக்காதுன்னு பட்டுது. நாலரைக் காருக்கு வரணும்னு, நான் பாளையங் கோட்டையிலிருந்து மூணு மணிக்கே கிளம்பியாகணும். அதுவும் தோதுப்படாதுன்னிட்டுத்தான் அஞ்சேகாலுக்கு இங்கே வந்து சேருத காரிலே வத்தேன். வரும்போது யாருக்கும் தெரியவேண்டாமேன்னு நெனைப்பு. போகும் போது தெரிஞ்சாலும் பரவாயில்லேன்னு நெனைச்சேன். இந்த மனசு என்னவெல்லாம் தான் எண்ணிக்குழம்புது!' என்று சொல்லிச் சிரித்தாள் செண்பகம்.

'நீங்க நிற்கேளே? ஆத்துக்குப் போயிட்டு வாங்க.-நீங்க வாறதுக்குள்ளே நான் காப்பி போட்டு வய்க்கேன்.

'இன்னிக்கு நான் நாலு மணிக்கே எழுந்திரிச்சிட்டேன். காப்பியும் போட்டாச்சு. அஞ்சு மணிக்கே ஆத்துக்குப் போகாம இருந்துது உன் அதிர்ஷ்டம்தான்!' என்று கூறி மனு. பெனு. சிரித்தார்.

'உங்க வாக்குப்படியே இருக்கட்டும். ஆமா. பாலு?'

'கடுங்காப்பிதான். பாலு ஏழு மணிக்கு மேலேதான் கிடைக்கும்.'

'சரி. நான் இட்டிலி அவிச்சு வைக்கிறேன். அல்லது தோசை சுட்டு...'

'அதொண்ணும் கிடையாது. பழையச் சோறுதான் நீ எதுவும் செய்யவேண்டாம். பேசாமல் கதவை சாத்தி, தாப்பாள் போட்டிட்டு பட்டாசலிலே படுத்திரு. தூக்கம் வந்தால் தூங்கு. அடுப்படியிலே, ஃப்ளாஸ்கிலே காப்பி வச்சிருக்கேன். வேணுமின்னு எடுத்துக்குடி. இப்ப மணி அஞ்சரை. நான் ஆறரைக்கெல்லாம் வந்திருவேன்' என்று சொல்லி, முன்வாசல் கதவை இழுத்துச் சும்மா சாத்திவிட்டு, தெருவில் இறங்கி வேகமாக நடந்தார் அவர்.

'அப்படி என்ன முக்கிய விஷயம் இருக்கும்?' என்று அவர் மனம் அலைமோதியது. அந்த சஞ்சலத்தினூடும் உண்மையான ஆனந்தம் அரும்பி மலர்ந்தது.

'சில சமயங்களில் மனம் எண்ணுகிறதும் ஆசைப்படுவதும் உடனடியாக நிறைவேறி விடுது; ரொம்ப அதிசயம் தான். நேற்று சாயந்திரம்தான், திரட்டுப்பால் தின்னு நாளாச்சு, திரட்டுப்பால் செய்து பார்க்கணும்னு நினைச்சேன். தின்ன நினைக்கிறபோது எடுத்துத் தின்கிறதுக்கு வசதியா தினபண்டம் ஏதாவது ஸ்டாக் பண்ணணும்னு ஆசைப்பட்டேன். திரட்டுப்பாலும் இப்ப வந்திருக்கு; ஸ்டாக் பண்ண முறுக்கும் கிடைச்சிருக்கு. ஹ ஹ ஹ...

மகிழ்வுற்றது அவர் உள்ளம்.

# 21

ஆற்றுக்குப் போகும்போதும், ஆற்றில் குளித்தபோதும், திரும்பி நடந்தபோதும், பெரியபிள்ளை செண்பகத்தைப் பற்றித்தான் எண்ணிக் கொண்டிருந்தார்.

— செண்பகம் எவ்வளவு அன்பு வச்சிருக்கா! அவளுக்கு என்னவோ காரியம் ஆகவேண்டும், அதுக்காகத்தான் தேடி வந்திருக்கான்னாலும், ஞாபகம் வச்சு, எவ்வளவு பிரியத்தோடு திரட்டுப்பாலும் முறுக்கும் தன் கையாலேயே செய்து எடுத்திட்டு வந்திருக்கா! கடையிலே கொஞ்சம் முட்டாசியும் ரெண்டு பழமும் வாங்கிட்டுப் போனாலும் போச்சுயின்னுதான் மத்தவங்க நெனைப்பாங்க.

அவ மனசுக்குள்ளே என் பேரிலே ஆசை கொண்டிருந்திருக்காங்கிறது அன்னைக்கு அவளை பாளையங்கோட்டையிலே சந்தித்தப்பவே புரிஞ்சுது. என் ஞாபகமாயிருந்து, என்னைப் பற்றி அவ்வப்போது விசாரிச்சு அனைத்தையும் தெரிஞ்சு கொண்டிருந்ததும் அல்லாமே, என் பேரையே தன் மகளுக்கும் இட்டிருக்காளே! இதெல்லாம் வளர்த்த பாசம், அம்மை மீது கொண்ட அன்பும் நன்றியும்தான்னு சொல்றதுக்கில்லே. அதுவும் இருக்கும். ஆனா அது மட்டுமேதான்னு சொல்லி விட முடியாது. அதுமாத்திரமாகவே இருக்குமானால், அம்மை பேரையே தன் மகளுக்கு இட்டிருந்திருப்பாளே காமாட்சியின்னு.

அம்மை செத்தபோது செம்பகத்துக்கு எட்டு அல்லது ஒன்பது வயசு இருக்கும். சின்னப் புள்ளைதான். அம்மைக்கு பொட்டைப்புள்ளை இல்லேங்கிறது பெரிய குறை. வீட்டிலே பேரன் பேத்தியும் இல்லை என்கிற ஆற்றாமை. செம்பகத்தை, வேலைக்காரி பொன்னம்மா மகதானேன்னு அலட்சியப்படுத்தாமெ, பிரியத்தோடு வளர்த்தா. எப்பவும் அந்தப்புள்ளை இங்கேதானே கிடந்துது. அவ வீட்டிலே நல்ல சாப்பாட்டுக்கு வழி ஏது? இங்கே காப்பி, இட்டிலி தோசை, ருசிருசி

யாச் சாப்பாடு, அடிக்கடி தின்பண்டம் கிடைத்துக் கொண்டே இருக்குமே. எந்தப் புள்ளையாறுலும் சரி, சதா தீவனம் கிடைக்கிற இடத்தையேதான் சுத்திக்கிட்டு வரும். தீனி கொடுக்கிறவங்க கிட்டே, கொடுக்கிறதை நிறுத்தது வரை, பிரியமாத்தான் இருக்கும். அம்மை, செம்பகத்துக்கு அடிக்கடி சட்டை பாவாடை எல்லாம் புதுசு புதுசா எடுத்துக் கொடுத்துக்கிட்டிருந்தா. அதனுலே வேறே அம்மை மேலே பிரியம் ஏற்பட்டிருந்திருக்கும். அம்மை செத்துக் கிடக்கையிலே அது என்ன அழுகை அழுதுது! அப்புறம் எத்தனை நாள் நினைச்சு நினைச்சு அழுதுக்கிட்டே இருந்துது! ஆனு, செத்தவங்களை சீக்கிரமே மறந்திருதாங்க எல்லோரும். கிடைக்க வேண்டியது குறையாம ஒழுங்காக் கிடைச்சுக்கிட்டே இருந்தா செத்தவங்க நினைப்பு எதுக்காக வரப்போகுது?

செம்பகத்துக்கு வழக்கம்போல எல்லாம் கிடைக்கும்படி நான் கவனிச்சு வந்தேன். அது மேலே எனக்கு விசேஷமான பாசமோ பிடிப்போ ஒண்ணுமில்லே. அம்மை தொடர்ந்து அன்புகாட்டி வளர்த்தாளே, தொடர்ந்து அதை கவனிச்சு, அதுக்கு வேண்டியதை செய்தா அம்மையின் ஆத்மா திருப்தி அடையுமேன்னுதான். நான் வேறே திதி-திவசம் எதுவும் செய்யலே. அதிலே எல்லாம் எனக்கு நம்பிக்கையும் இல்லே.

செம்பகம் கவலை இல்லாம வளர்ந்துது. எப்பவும் வீட்டிலேயேதான் கிடக்கும். நினைச்சா பள்ளிக்கூடத்துக்குப் போகும். அநேக நாள் போகாது. நாலாம் கிளாசோடு படிச்சது போதும், வாத்தியாரு அடிக்காருன்னு சொல்லி, பள்ளிக்கூடம் போறதையே விட்டுட்டுது. வீடுதான் பெரிசாக் கிடக்கே. விளையாடதுக்கு தெருப்புள்ளைகளைக் கூட்டியாந்து அடைச்சுக்கிடும். அம்மை இருந்தால் சத்தம் போட்டு அதுகளை விரட்டுவா. நான் விளையாடிட்டுப் போட்டுமேன்னு சும்மா இருந்திடுவேன். பிள்ளைகள் சேராதபோது என்கூட விளையாடி, சிரிச்சுப் பேசி நேரம் போக்கும். கதை சொல்லு, கதை சொல்லுன்னு பஞ்சரிக்கும்.

செம்பகத்துக்கு பன்னெண்டு வயசானதும், பொன்னம்மா அதுக்கு சமையல் வேலை கத்துக் கொடுத்து, வீட்டு வேலைகளைச் செய்யும்படி கார்வாரு பண்ண ஆரம்பிச்சிட்டா. அதும் எல்லா வேலைகளையும் செய்துது. அப்படி வேலைகள் செய்ததே ஒரு தேகப்பயிற்சியாக அமைய, நல்ல சாப்பாடும், கவலையத்து விளையாடிச் சிரிக்கிற வசதியும் சேர்ந்து புள்ளை அருமையா வளர்ந்துது. பெண் வளர்த்தியோ பேய் வளர்த்தியோ என்பாக. அப்படித்தான் இருந்தது செம்பகத்துக்கு உடல் வளர்த்தியும். பதிமூணு வயசிலே செம்பகம் தளதள மினுமினுன்னு—குளுகுளுன்னு வளர்ந்த பயிறு மத்தியிலே செழித்து ஓங்கி வனப்பா நிக்கிற மூப்பன் கதிருமாதிரி—ஜோரா இருந்தா. அப்பவும் என்கிட்டே சகஜமாப் பேசிச் சிரிச்சு விளையாடிக்கிட்டுத்தான் இருந்து.

அதனோடே அந்த சுபாவத்திலேதான் வினையே வந்தது.

அப்போ செம்பகத்துக்கு பதினாலு வயசு வரலே. இன்னும் ரெண்டு மூணு மாசத்திலே பதிமூணு வயசு முடியப் போகுது; எந்த நேரத்திலும் அவ பெரிய மனுஷி ஆயிருவா, செலவுதான் காத்திருக்குன்னு பொன்னம்மா அடிக்கடி புலம்பிக்கிட்டிருந்தா. அது நல்ல ஞாபகமிருக்கு.

ஒருநாள், பகல் நேரம்தான். மத்தியானம் ரெண்டரை மூணு மணி இருக்கும். நான் வெளியே எங்கெயோ போயிட்டு வந்தேன். பொன்னம்மா அடுக்களையிலே தோசைக்கு அரைச்சுக்கிட்டிருந்தா. வெளி வாசல் கதவை நான் சாத்தலே. அது எப்பவும் திறந்தேதான் கிடக்கும். செம்பகமும் ரெண்டு மூணு புள்ளைகளும் ஓடி ஒளிஞ்சு தொட்டுப் புடிச்சு விளையாடுத விளையாட்டு ஆடிக்கிட்டிருந்திருக்கும் போலே. மத்தப் புள்ளைகளை காணோம். செம்பகம் ஒரு அறையிலே கதவுக்குப் பின்னாலே பதுங்கி நின்னிருக்கு. அது எனக்குத் தெரியாது. கதவு சரியா சாத்தப்படாமலும் விரியத் திறந்து வைக்கப்படாமலும் ஒஞ்சரிச்சு இருந்ததுனாலே, அதை சுவரோடு படும்படியா நல்லத் திறந்து வைக்கலாமேன்னு கதவை புடிச்சேன்.

காலடிச்சத்தம் கேட்டு, தன்னை தொட்டுப் புடிக்க எந்தப் புள்ளேயோ வந்திருக்குன்னு எண்ணி கம்முனு நின்ன செம்பகம், கதவு உள்நோக்கி தள்ளப்படவும், அந்தப் புள்ளையை பயப்படச் செய்யணும்னு நினைச்சு, 'ஒவ்' என்று பெரிசாச் சத்தம் போட்டுவிட்டு வெளியே பாய்ஞ்சுது. சிரித்தபடி வேகமா வந்த அது என் கைகளுக்குள் அகப்பட்டுக்கிட்டுது. 'நீங்களா!' என்று சொன்ன அதுக்கு வெட்கம் வேறே நிறைய வந்துட்டுது. சிரிப்பும் வெட்கமும் குழப்புமாகி முகம் சிவந்து, தலேகுனிந்து அது அப்படியே நின்னுட்டுது. நானும் அந்தப் புள்ளையின் அந்த நேரத்து முக அழகையே பார்த்து ரசித்தபடி, கைகளே விலக்காமலே நின்னுட்டேன்.

அந்தச் சமயம் பார்த்து ஒரு ஆளு எதுக்கோ என்னை தேடி வீட்டுக்குள்ளே வந்திருக்கு. நாங்க நின்ன நிலேயை பார்த்து விபரீதமா அர்த்தம் கற்பிச்சுக்கிட்டு, 'ஒகோ, சரி தாஞ் சரிதான்!'னு சொல்லிப்போட்டு வந்தவழியே திரும்பிட்டுது.

அப்பதான் நான் என் தவறை உணர்ந்தேன். செம்பகமும் தன்னை உணர்ந்து விலகி, அடுப்பங்கரை பக்கம் ஓடிப் போனுள். இவ்வளவுதான் நடந்தது. ஆனு அது எப்படி எப்படியோ உருமாறி, பூச்சுமானமெல்லாம் பெற்று, ஊரு பூராப் பரப்பப்பட்டுவிட்டது. கலியாணம் ஆகிறதுக்கு வழி இல்லாமப்போன மயிலேறும்பய சின்னப்புள்ளேயை கெடுத்திட்டான். ரொம்ப நாளா அதுகிட்டே விஷமம் பண்ணி விளையாடிக்கிட்டிருக்கான். இன்னிக்குத்தான் அது அம்பலமாச்சுன்னு பேச்சு பரவிவிட்டுது. ஒழுக்கத்தை காப்பாத்தி ஊரிலே கொலு இருக்கப் பண்றதுக்காகவே வாழ்றதா பாவலாப் பண்ணிக்கிட்டுத் திரிகிற சில பயலுக, என்னை உதைச்சு எனக்கு புத்தி கற்பிக்கணுமின்னு திட்டம் தீட்டினுங்க. சில பெரிய மனுசங்க மறுநாள் விசாரிச்சு அபராதம் போடலாம்னு யோசிச்சிருப்பதாகவும், எனக்கு வேண்டியவன் ஒருத்தன் வந்து சொன்னுன். எனக்கானு ஆத்திரமும் கோபமும் பொங்கி வந்துது. ஒரு பழியும் இல்லாதபோது,

ஒரு குற்றமும் செய்யாதபோது, இப்படி அநியாயமாப் பழி சுமத்தினுங்களேன்னு வருத்தம். திரைமறைவிலே, இருட்டிலே, எவ்வளவோ அக்கிரமங்களும் அநியாயங்களும் இந்த ஊரிலேயே நடந்துகிட்டு இருக்கு. விசாரிக்கப்போகிற பெரிய மனுசங்களிலேயே சிலபேரு செய்துக்கிட்டு இருக்காங்க. என்னை அடிக்க பிளான்பண்ற பயல்களே பண்ணிக்கிட்டிருக்காங்க. விளையாட்டா, தற்செயலா நிகழ்ந்துவிட்ட ஒரு அசம்பாவிதத்துக்கு, இத்தனை காது மூக்கு வச்சு ஓகோன்னு கலாட்டா பண்ணுருங்களேன்னு எனக்கு மனவேதனை. அப்போ எனக்கு முப்பது வயசு. ஊருக்கு எதிரா ஒண்ணும் பண்ணமுடியாது. எதிர்த்து நிற்கக்கூடிய தெம்பும் திராணியும் பணபலமும் எனக்கு இல்லே. அதனுலே இரவோடு இரவா ஓடிப்போய்விடுவதுதான் நல்லதுன்னு முடிவு செஞ்சேன். நாரம்பு மாமாவும் துணை புரிஞ்சா. மதுரைக்குப் போனேன்.

அது நடந்தும் நாற்பது வருஷம் ஆச்சு. காலப் புழுதியிலே எல்லாம் மூடி மறைஞ்சு போச்சு. என்னை விசாரிக்கணும்னு சொன்னவங்க எப்படி எப்படியோ ஆகி, செத்தும் போனுங்க. அடிக்கணும்னு திரிஞ்சவங்களும் போய் ஒழிஞ்சாங்க. அவங்க எல்லோரும் உயிரோடு இருந்தால் கூட இந்த விஷயத்தை மறந்திருப்பாங்க. கொஞ்ச நஞ்சம் நினைவு இருந்தாலும், நான் பணக்காரனு, வெள்ளிக்கடை முதலாளி என்கிற கவுரவத்தோடு, பெரிய மனுஷ தோரணையோடு, இந்த ஊருக்கு வந்து சேரையிலே அதை பெரிது பண்ண முன் வந்திருக்க மாட்டாங்க. பத்துப்பன்னெண்டு வருஷத்துக்கு முன்னடியே நான் இங்கே வந்திருக்கலாம் தான். ஆனல், பணம் பண்ணுகிறவெறி அப்போ எனக்கு நிறைய இருந்தது. பையன் சொக்கையாவும் சின்னவனு இருந்தான். இப்போ கடையை நிர்வகிக்கக் கூடிய திறமையும் சக்தியும் வயசும் அவனுக்கு வந்திட்டுது. எனக்கும் எழுபது வயசு ஆச்சு. வீட்டு நினைப்பு போட்டு அடிச்சுக்கிட்டே இருக்கு. இந்த வீட்டிலே கொஞ்ச நாளாவது வசிக்காமல் செத்துவச்சால், என் நெஞ்சு வேகாது, ஆத்மா அமைதி அடையாதுன்னு

பட்டுக்கிட்டே இருந்துது. ஆமா. நான் இன்னும் எத்தனை காலம் வாழ்ந்திடப் போறேன்! சீக்கிரம் போய்சேர வேண்டியது தான்.

— அது சரி. இப்போ திடீர்னு செம்பகம் மொட்டு மாதிரி முளைச்சிருக்காளே; இது என்னத்துக்காக இருக்கும்? ரெண்டு நாளா என் மனசு வேறே சரியாவே இல்லே. இனம் புரியாத ஒரு கலவரம் இருந்துக்கிட்டே இருக்கு. என்ன தான் காத்திருக்குதோ, எனக்கே புரியலே. உம். நடக்கிறது நடந்து தான் தீரும். என்ன வேணும்னாலும் நடக்கட்டும்!

## 22

செண்பகம், மயிலேறும் பெருமாள் பிள்ளையிடம், தனது சோக வரலாறு முழுவதையும் சொல்லித் தீர்த்தாள்.

அவர் பிறவியா பிள்ளை மூலம் அறிந்து கொண்ட கதை தான் அது. இருப்பினும், அவள் ரொம்ப விஸ்தாரமாக, தனது உணர்ச்சிகள், எண்ணங்கள், கருத்துக்களை எல்லாம் சேர்த்துச் சொல்வதை அவர் பொறுமையோடு கேட்டிருந் தார். திரட்டுப்பாலைருசித்துச் சுவைத்து, ('திரட்டுப் பால் ரொம்ப அருமையாக இருக்கு, செம்பகம்'), முறுக்குகளை அசைபோட்டு ('முறுக்கு பொறுபொறுன்னு, வாயிலே போட் டதும் கரைஞ்சு போற மாதிரி இருக்கு, செம்பகம்'),

'பிளாஸ்கிலே இருக்கிற காப்பி அப்படியே இருக்கட்டும். அதை பொறவாட்டும் குடிச்சாப் போகுது' என்று சொல்லி செண்பகம் போட்டுக் கொடுத்த காப்பியை சூடாக மணத் தோடு குடித்தபடி, அவளது பேச்சையும் கிரகித்துக் கொண் டார் அவர்.

முடிவாக அவள், தான் வந்த காரியத்தையும் தெரிவித்தாள். 'எனக்கும் வயசாயிக்கிட்டே போகுது. முன்னெ மாதிரி ஏலெல (இயலவில்லை). திடீர்னு மண்டையை போட்டு வச்சா அந்தப் புள்ளை மயிலுகதி என்ன ஆகும்கிற கவலை பெரும் கவலையா இருக்கு. அவளுக்கு நாதியாரு இருக்கா? கல்யாணமின்னு பண்ணி எவன் கையிலாவது புடிச்சுக் கொடுத்திட்டா, அந்தப் பொறுப்பு என்னை விட்டு நீங்கி விடும். ஈசன் என்னைக்கு அழைக்காரோ அன்னைக்கு கவலையில்லாமல் போய் சேர்ந்திருவேன். கல்யாணம் முடிக்கதுன்னு சொன்ன லேசா? காசு பணம் வேணுமே. நானும் எவ்வளவோ பிரயாசைப்பட்டுப் பார்த்தேன். குறைஞ்சது ஆயிரமாவது வேணும். ஏழை எளியவன, ஏதாவது வேலை பார்க்கிறவன, ஒருத்தனை பார்த்து கோயிலிலோ குத்து விளக்கு முன்னலோவச்சு தாலியை கட்டும்படி செய்து, மயிலை அவன் கையிலே ஒப்படைச்சிரணும். நானும் யோசிச்சு யோசிச்சுப் பார்த்தேன். உங்களை கேட்பது தவிர எனக்கு வேறே வழியில்லே. கேட்கவேண்டாம், கேட்கக் கூடாதுன்னு தான் இருந்தேன். ஆன, மயிலு கதி என்னகும்னு எண்ணுற போது உங்க உதவியை நாடத்தான் வேணும்னு என் மனசு சொல்லிச்சு. உங்க வீட்டிலே உங்க வீட்டுப்புள்ளெ மாதிரி வளர்ந்தேன். அம்மையும் நீங்களும் அப்படி என்னை வளர்த்தீக. பாவி மட்டை ஊரிலே இருந்தவங்க பழியும் பாவமும் சுமத்தி என் பாவத்திலே அடிச்சுவிழாம இருந்திருந்தா, என் கல்யாணத்தையும் நீங்களே நல்லபடியா நடத்தி வச்சிருந்திருப்பீக. அது நடக்க முடியாம என் விதி பண்ணிப் போட்டுது. என் மகளுக்காவது நீங்க நல்ல வழி காட்டணும். உங்களை தெய்வமா நினைச்சுக் கும்பிடுதேன். நீங்கதான் எனக்கு தகப்பன் மாதிரி. ஒரு அண்ணச்சி மாதிரி. உங்க மகளுக்கு, உங்க தங்கச்சிக்கு நீங்க உதவி செய்றதா நினைச்சுக்கிட்டு எனக்கு இந்த உதவி பண்ணணும். ஆயிரம் ரூபா கொடுத்து, மயிலு கல்யாணம் நடக்க வழி பண்ணணும். உங்க நினைவாத்தான் அவளுக்கு இந்தப் பேருவிட்டிருக்கேன். நீங்க தான் எங்க குலதெய்வம்...'

செண்பகம் உருக்கத்தோடு, இதயதாபத்தோடு, அவர் தனது வேண்டுதலுக்கு செவிமடுத்து உதவி பண்ண வேண்டுமே என்ற ஏக்கத்தோடு, சொன்னதையே திரும்பத்திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தாள்.

அவள் பேச்சும் பரிதாப நிலைமையும் அவர் இதயத்தைத் தொட்டன. 'நல்ல பையனு மாப்பிள்ளை யாரையாவது பார்த்து வச்சிருக்கையா?' என்று கேட்டார்.

'இன்னமே தான் பார்க்கணும். பணம் கிடைச்சிட்டா பையன் கிடைக்காமலா போவான்?' என்றாள் அவள்.

அவர் பெருமூச் செறிந்தார். 'உன் அம்மை செய்த தவறையேதான் நீயும் செய்ய ஆசைப்படுறே, செம்பகம். அவ என்ன செஞ்சா? தன் பொறுப்பும் சுமையும் கழியணும்; எவன் கையிலாவது உன்னை புடிச்சுக் குடுத்திரணும்னு நெனச்சா. அப்படியே செய்தா. உன் வாழ்க்கை பாழாச்சு. நீயும் உன்மக விஷயத்திலே அதே மாதிரித் தான் ஆசைப் படுறே. வீணு அந்தப்புள்ளை வாழ்க்கையையும் கெடுத்துப் போடாதே. யோசிச்சு நல்ல முறையிலே செய்ய வேண்டிய காரியம் இது' என்றார்.

எங்க அம்மை என்ன செய்வா? அவளுக்கு உதவிக்கு யாருமே இல்லே. தன்னுலே ஆனதை செய்து முடிச்சா. என்விதி இப்படி இருந்திருக்கு. எந்தத் தாயாராவது தன் மக வாழ்க்கையை நாசமாக்கணும்னு நினைப்பாளா? நானும் மயிலுக்கு நல்லதைத்தான் நினைக்கிறேன். அவ தலை எழுத்து எப்படி இருக்கோ அதன்படி நடக்கது நடந்துட்டுப்போகுது' என்று அவள் சொன்னாள்.

—நம்ம ரத்தத்தோடு ரத்தமா, தலைமுறை தலைமுறையா ஊறிப்போன தத்துவம் இது. லேசிலே இது மாறிப்போகுமா? இல்லை, மாற்றிவிடத்தான் முடியுமா?

பெரியபிள்ளையின் மனம் சிரித்துக்கொண்டது. அவர் சிறிது நேரம் யோசனையில் ஆழ்ந்திருந்தார்.

'சரி செம்பகம், என்னாலான உதவிகளை நான் நிச்சயம் செய்வேன். நீ அவசரப்படாதே. இன்னிக்கு என்ன கிழமை? வியாழனா? திங்கள்கிழமை மத்தியானம் நான் உங்க வீட்டுக்கு வாறேன். அன்னைக்கு உன் வீட்டு விருந்துச் சாப்பாடு எனக்கு!' என்று சொல்லி ரசித்துச் சிரித்தார் பிள்ளை.

'உங்களுக்கு விருந்துபண்ண எனக்கு கொடுத்து வச்சிருக்கணுமே!' என்று கூறிய செண்பகம், அவர் எதிர்பாராததை செய்தாள். அவர் முன் விழுந்து கும்பிட்டு, அவருடைய பாதங்களை தொட்டுத் தன் கண்களை ஒற்றிக்கொண்டாள்.

'செச்சே, என்ன இது! என்ன செண்பகம் இப்படி?' என்று பதறினார் அவர்.

'எங்க குல தெய்வத்தை கும்பிடுறதிலே என்ன தோஷம் இருக்கு?' என்று முணுமுணுத்தாள் அவள்.

'மனுஷன் தெய்வம் ஆகணும்னு ஆசைப்பட வேண்டாம். மனுஷனாகவே நடந்து, மனுஷத்தன்மை குன்றாத காரியங்களை செய்து கொண்டிருக்க விரும்பி அப்படியே செய்து முடித்தால் போதுமே!' என்று பெரியபிள்ளை குறிப்பிட்டார்.

'நீங்க இந்த வயசிலே உங்க கையாலே சமைச்சு சாப்பிட்டுக்கிட்டு இருக்கிறதை நெனைக்கையிலே எனக்கு மனசுக்குக் கஷ்டமாயிருக்கு' என்று வருத்தப்பட்டாள்.

'கஷ்டமோ சிரமமோ, அவரவர் மனசுக்குப் பிடிச்ச காரியங்களை செய்துகொண்டிருப்பதிலே தனியான ஒரு சந்தோஷம் ஏற்படுது. அதன் மதிப்பு அதை அனுபவிக்கிறவங்களுக்குத்தான் தெரியும்' என்று மனா. பெனா. கூறினார்.

'சங்கடமான சமையலை' செய்யும் சிரமம் அன்றைக்கு அவருக்கு இல்லாமல் போய்விட்டது. சோறு வடித்து, சாம்பார் வைத்து, உருளைக்கிழங்கு பொரியலும் தயாரித்து முடித்த பிறகே செண்பகம் அவரிடம் விடை பெற்றுக் கொண்டு பாளையங்கோட்டைக்குப் போனாள்.

# 23

காலப்புழுதி மனிதர் மனசிலே மறதி படியும்படிச் செய்து, அனைத்தையும் மூடிவிடும் என்று எண்ணிய மயிலேறும் பெருமாள்பிள்ளை, சிவபுரம்வாசிகளின் ஆற்றலைச் சரியாகப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டார் என்றே தோன்றியது. செம்பரா நல்லூர் ஆச்சி போன்ற சூறைக்காற்று எந்தப் புழுதியையும் கிளப்பி, பறக்கச் செய்து, குழிபறித்து விடக்கூடிய சக்தியும் கொண்டிருக்கும் என்பதையும் அவர் கருத்தில் கொள்ள வில்லை.

செம்பராநல்லூர் அழகம்மை ஆச்சி பற்றவைத்த வத்தி சுர்சுர்ரென்று பற்றிக் கொண்டது. அவர் பேச்சை நேரடியாகக் கேட்ட அஞ்சாறு பேர்களும் அந்த விஷயத்தை தங்களுக்கு வேண்டியவர்களிடம் சொல்ல, அவர்கள் தங்கள் புருஷன்மாரிடமும் சொந்தக்காரர்களிடமும் தெரிவிக்க, மறந்து மக்கிப்போய்விட்டதாக மன. பென. முடிவுகட்டி யிருந்த, விஷயம் புது மெருகோடும் புதிய பூச்சுமானங்களோடும் மறுமலர்ச்சி பெற்று, ஊர் முழுதும் சுற்றிக்கொண்டிருந்தது. இதற்கு இரண்டு நாட்கள்கூடத் தேவைப்பட வில்லை.

ஆனல், இப்போது பெரிய மனிதராய், பெரும் பணக்காரராய் வளர்ந்திருந்த மன. பென. வை, அந்த ஊரில், அவருக்குப்பிந்தி வந்த தலைமுறையை சேர்ந்தவர்கள் ஒன்றும் செய்துவிட முடியாது. என்றாலும், அவர் மகாப் பெரியவர் ஒன்றுமில்லை; குறைபாடும் பலவீனமும் களங்கமும் உடைய மனிதர்தான் என்று சுட்டிக்காட்டிப் பேசவும், ‘இவரு இப்படியா, இஹிஹி!’ என்று இளித்துப் பழிக்கவும் அவர்களுக்கு ஆச்சி சொன்ன சங்கதி ரொம்பவும் பயன்பட்டது.

ஆச்சி போய்விட்ட மூன்றாம் நாள், செண்பகம் பெரிய பிள்ளையை பார்க்க வந்தாள், அவரிடம் ஏதோ ரகசியங்கள் பேசிவிட்டுப் போனாள் என்ற விஷயமும் தெரியவந்தது.

சிவபுரத்தில் யார் வீட்டில் எது நடந்தாலும் அது வெகு சீக்கிரமே 'பப்ளிக் ஆகிவிடும்'. ஒளிவு மறைவு என்பதற்கு அங்கே இடமே கிடையாது.

'ஆச்சி வாய்க்கு ரெண்டு கரண்டிச் சீனிதான் போடணும். அவ சொன்னபடியே நடந்திட்டுதே. இந்தச் செம்பகம் பெரிய ஆளுதான்!' என்று ஆச்சியின் வியப்பர்களான அம்மாள்கள் பேசினார்கள். ஒருத்தி இந்த விஷயத்தை விரிவாக எழுதி, ஒரு ஸ்பூன் சீனியும் கவரில் வைத்து, தபாலில் செம்பராநல்லூருக்கே அனுப்பியம் தீர்த்தாள்.

ஒழுங்கான பாதை வழியாக ('த்ரூ ப்ராப்பர் சேனல்') இந்த விவகாரம் எல்லாம் பால்வண்ணம்பிள்ளை காதுகளையும் எட்டியது. 'ஓகோன்னுனும்!' என்று விழிப்பு பெற்றார் அவர். 'அப்படியா விஷயம்!' என்று தலையை ஆட்டிக்கொண்டார். 'அதனுலேதான் அண்ணுச்சி தனது நாற்பது வருஷ அஞ்ஞாதவாசம் பற்றி வாயே திறக்கலே! அன்னைக்கு பாளையங்கோட்டையிலே செம்பகம் பரிஞ்சு பரிஞ்சு உபசாரம் பண்ணினதும், தன் மகளுக்கு இவாள் பேரை விட்டிருப்பதை எடுத்துச் சொன்னதும், இவாள் பதிமூனு பதினாலு வயசுச் செம்பகத்தின் அழகை நினைச்சு நினைச்சு உருகினதும்—அடா அடா! இப்பல்லா எல்லாம் புரியுது' என்று மகிழ்ந்துபோனார்.

'அண்ணுச்சிகிட்டே இதைப்பத்தி எல்லாம் ஒண்ணும் பேசப்படாது. நமக்குத் தெரிஞ்சதாவே காட்டிக்கிடப்படாது. வே, இளம் வயசிலே இதெல்லாம் நடக்கிறதுதான். இப்படி எல்லாம் ஏதாவது செய்துக்கிட்டிருந்தால்தான் மனுசன்னே ஆவான். இல்லேன்னு சொன்னா, அவன் கல்லுச்சிலை அல்லது கடவுள் ஆயிருவான். கடவுள்கள்கூட இதுமாதிரி எல்லாம்—ஏன், இதைவிட அதிகமாகவே—என்னென்னவோ பண்ணியிருப்பதை நம்ம புராணங்கள் விஸ்தாரமாகவே சொல்லுது. பின்னேப் போட்டு பேசுவானேன்? விட்டுத்தள்ளும்!' என்று போதித்தது அவர் மனக்குறளி.

என்றாலும், சுகவாசி சூரியன்பிள்ளை போன்றவர்கள் அவரிடம் வந்து எதையாவது சொல்லிவிட்டுப் போனார்கள்.

'அந்தச் சிறுக்கி இங்கே வந்துபோனது நமக்குத் தெரியாமப் போச்சே. அவ என் கண்ணிலே பட்டிருந்தா சரியான கேள்வி கேட்டிருப்பேனே. எவனையாவது விட்டு, வாங்க வாங்களடி லவண்டீங்களா—வாத்தியாரு சட்டாம்பிள்ளையை கண்டீங்களா?—அடி, போங்க போங்களடி லவண்டீங்களா! ஒரு புருசனுக்கு ஆசைப்பட்டு நின்னீங்களா?-ன்னு பாடச் சொல்லியிருக்கலாமே! அந்தக் காலத்திலே ரொம்ப ஃபேமஸா இருந்த நாடகப்பாட்டு ஐயா இது. தூக்குத்தூக்கி நாடகத்திலே பபூன் சண்முகம் பாடுவான் பாரும், ரொம்பப் பிரமாதமா இருக்கும். அப்புறம் பிளேட்டிலேகூட வந்துது. ஆகா!' என்று 'சுகவாசி' சொக்கினர்.

பிறவியாபிள்ளையிடம் கேட்காமல் இருப்பார்களா? கேட்டார்கள், கேட்டார்கள். 'என்ன, அண்ணச்சியை பத்தி என்னென்னமோ பேச்செல்லாம் அடிபடுதே! செம்பகம் இங்கே வந்திட்டுப் போனளாமே? எல்லாம் நெசம்தான?' என்று நல்லவர்கள் போல் விசாரித்தார்கள்.

'உங்களுக்குத் தெரிஞ்ச அளவுதான் எனக்கும் தெரியும். ஊர்னு இருந்தா வல்லதையும் பேசத்தான் செய்வாங்க. நல்லது பொல்லாதது, உள்ளது இல்லாதது எல்லாம் பேச்சிலே அடிபடத்தான் செய்யும்!' என்று அவர் சொல்லி வைத்தார்.

அண்ணச்சி மதுரையில் இருந்தபோது, இங்கே சிவபுரத்தில் நடப்பது அனைத்தையும் ஒன்றுவிடாமல் அவருக்கு எழுதி அறிவிப்பது பிறவியாபிள்ளையின் வழக்கமாக இருந்தது. இப்போது ஊரில் நடமாடுகிற இந்தப் புரளியையும்—அது பெரியபிள்ளை சம்பந்தப்பட்டதாகவே இருந்தபோதிலும்—அண்ணச்சியிடம் தெரிவிக்கவேண்டியது தனது கடமையாகும் என்று பிறவியாபிள்ளை கருதினர்.

ஆகவே, மன. பென. இரவுச் சாப்பாட்டை முடித்துவிட்டுக் கட்டிலில் ஓய்வாக படுத்துக்கிடந்தபோது, பிறவியாபிள்ளை காலை தேய்த்துத் தேய்த்து நடந்துவந்து தயங்கித்

தயங்கி நின்றார். அவர் வந்த தோரணையிலும் நின்ற நிலையிலும், ஏதோ சொல்வதற்கு வந்திருக்கிறார் என்பது புலனாயினும், அவர் ஒன்றும் பேசாமலே திகைத்துப்போய் நிற்பதை கண்ட பெரியபிள்ளை, 'என்னய்யா விசயம்? ஏன் ஒருமாதிரி நிக்கேரு?' என்று கேட்டார்.

பிறவியாபிள்ளை புடதியைச் சொறிந்தார். மோட்டை பார்த்தார். 'ஒரு விசயம் சொல்லவும் வேணும்; சொல்லவும் கூடாதுன்னு இருக்கு' என்று இழுத்தார்.

'சும்மா சொல்லும் வே' என்று பெரியவர் எழுந்து உட்கார்ந்தார். 'உட்காரும். சும்மா இப்படி கட்டில்லேயே இரியும்' என்றார். தன்னைப் பற்றிய விஷயம், அதனால்தான் தம்பியாபிள்ளை தயங்குகிறார் என்ற சந்தேகமே அவருக்கு வரவில்லை. ஏதோ சொந்த சமாச்சாரம்; அண்ணாச்சியிடம் எப்படிடா சொல்றதுன்னு தயங்குறான் என்றுதான் அவர் எண்ணினார்.

பிறவியாபிள்ளை உட்கார்ந்தார். 'இந்த ஊரைத்தான் உங்களுக்குத் தெரியுமே. சுத்த மோசம் அண்ணாச்சி. யாரை பத்தி என்னதான் பேசுறதுன்னே கிடையாது. வாய் புளிச்சுதோ மாங்காய் புளிச்சுதோன்னு கண்டமானிக்கி பேசுறதுதான் வழக்கமா இருக்கு. அதிலேயும் பொம்பிளைக இருக்காங்களே—அப்பா, சொல்லவே வேண்டாம். ஒருத்தி ஒரு விசயத்தை ரகசியம்னு சொல்லி வைக்கிறது. உடனே எல்லாரும் அதையே பெரிசுபடுத்தி தமுக்கடிச்சு, பாத்தியா-பாத்தியா, கேட்டையா-கேட்டையான்னு கூத்தடிக்கிறதுதான் வழக்கமாப்போச்சு' என்று சுற்றி வளைக்கலானார்.

'விசயத்தை சொல்லும். இப்ப என்ன நடந்தது?'

'செம்பராநல்லூர் கிழவி என்னத்தையோ விதைச்சு வச்சிருக்கா. அது ஊரு பூரா முளைச்சு வெடிக்குது!' என்று விவரத்தைச் சொன்னார் பிறவியாபிள்ளை. 'அதுக்கு ஏத்தாப்பலே செம்பகமும் வந்திட்டுப் போயிருக்கா. 'குசுவை கேட்டே சாமி ஆடுறவங்க, கொட்டைக்கண்டா விட்டுடு

வாங்களா' என்கிறமாதிரி ஆயிட்டுது. ஆச்சி போட்ட தூபத்தக்கு, இவ வந்ததும் போனதும் குழை அடிச்சு கிளறி விட்டதுபோல ஆயிடுச்சு' என்று முடித்தார்.

பெரியபிள்ளை இதை எதிர்பார்க்கவில்லை. இவ்வளவு நடந்திருக்கா!' என்றது அவர் மனம். என்ன பேசுவது என்றே தோன்றவில்லை அவருக்கு. கல்லுப்பிள்ளையார்மாதிரி உட்கார்ந்திருந்தார்.

அவர் ஏதாவது பேசுவாரோ என்று பிறவியாபிள்ளை காத்திருந்து பார்த்தார். அப்படி அவர் முன் காத்திருப்பதே பெரிய சங்கடமாகவும் இருந்தது. நேரம் கனத்து, சுமையாக அழுத்துவது போலிருந்தது.

'அண்ணுச்சி தனியாயிருந்து யோசிக்கட்டும்' என்று நினைத்து பிறவியாபிள்ளை மெதுவாக எழுந்தார். அங்குமிங்கும் பார்த்தபடி நின்றார். வாசல் திண்ணையில் வந்து சிறிதுநேரம் நின்று தெருவைப் பார்த்தார். பிறகு படி இறங்கி, குனிந்த தலையோடு தன் வீடுநோக்கி நடந்தார்.

பெரியபிள்ளைக்கு மற்றவரின் செயல்கள் பிரக்ஞையில் பதியவேயில்லை. குறுகுறு என்று ஒரு வேதனை பூச்சிமாதிரி உள்ளில் அரிக்க, 'சே, இதை நான் எதிர்பார்க்கவே இல்லையே...சே, சே' என்று மனசில் புழுங்கியவாறு உட்கார்ந்திருந்தார்.

நேரம் ஊர்ந்தது. அந்த வீட்டின் மவுனமே அவரை அழுத்தியது.

—இதனுல்தான் ரெண்டு நாளா ஒருத்தனும் இங்கே எட்டிப் பார்க்கலேங்கிறது இப்போல்லா புரியுது! பால் வண்ணம் தினம் மத்தியானத்துக்கு மேலே கட்டையை கீழே போட வருவானே, காணுமேன்னு நெனச்சேனே. சுகவாசி அடிக்கடி வருவானே, அவன்கூட எட்டிப் பார்க்கலியேன்னு யோசிச்சேன். இவ்வளவு நடந்திருக்கா! இப்போ பிறவி தயங்கித் தயங்கி இதை என்கிட்டே சொல்லலேன்னு எனக்கு ஒண்ணுமே தெரிஞ்சிருக்காது. ஒவ்வொருத்தனும் என்

முதுக்குக்குப் பின்னாலே வலிச்சம் காட்டி சிரிச்சுக்கிட்டிருப்பான்!'

பெருமூச்சு பொங்கி வந்தது.

'வெறும் பயலுக. வெறும் வீணப்பய புள்ளைக. ஆம்பிளைக பொம்பிளைக எல்லாருமேதான்!'

கனன்றது அவர் உள்ளம். எழுந்து கதவைச்சாத்தி தாழ்ப்பாள் போட்டார். லைட்டை அணைத்தார். படுக்க விரும்பவில்லை. தூக்கம் வரப்போவதில்லை.

—இன்னைக்கு சிவராத்திரிதான். தூக்கமாவது மண்ணாவது!

அவர் அங்கும் இங்கும் நடந்தார். இருட்டே துணையாக, அதுவே தைரியமூட்டும் சக்தியாக, மடம் போன்ற-கோயில் போன்ற-சத்திரமே போன்ற ஒரு தனித்துவமும் புனிதமும் அழுத்தமுமான மவுனமும் சாந்தி அளிக்கக்கூடிய ஒரு அம்சமாக விளங்க, அறை அறையாக நடந்தார்.

—அஞ்சாறு நாளாகவே மனசு சரியில்லாமல் குழம்பிக்கிட்டேயிருந்தது. எதுக்கு இப்படி அர்த்தமில்லாத கலக்கமும் குழப்பமுமின்னு அடிக்கடி நினைச்சேனே. இதுக்குத்தான், இதுக்கேதான்.

அவர் என்னென்னவோ எண்ணினார். தன்னைபற்றி, இந்த ஊரையும் ஊர்க்காரர்களையும் பற்றி, தனித்தனியாக சிற்சிலரைப்பற்றி எல்லாம் எண்ணினார். செம்பகத்தை பற்றியும் நினைத்தார். மதுரையில் உள்ள மனைவி மீனாட்சியைப் பற்றியும், தனக்கு உதவிபுரிந்து தன்னை ஆளாக்கிவிட்ட வெள்ளிக்கடை முதலாளி கணபதியாபிள்ளையைப் பற்றியும் எண்ணிக் கொண்டார்.

—அவாள் தங்கமான மனுஷர். எனக்கு எல்லா உதவிகளும் செய்து, நான் வளருவதுக்கு வழியும் காட்டி, என்னையும் ஒரு மனிதனாக்கிவிட்டாங்க. அதுதான் உண்மையான மனுஷத்தன்மை. ஒரு பையன் அறிவு பெற அவனுக்கு கல்வி

கற்பிக்கிறது; கற்றுக்கிட வசதிகள் செய்து கொடுப்பது; அப்புறம் அவனுக்கு ஒரு வேலை கிடைக்கும்படி செய்றது; இதெல்லாம் அவனை வாழவைக்கிறது ஆகும். அதேமாதிரி கல்யாணம் ஆக வழி இல்லாமல் காத்திருக்கிற ஒரு கன்னிக்கு மணம் முடிச்சு வைப்பது அவளுக்கு வாழ்க்கை அளிப்பது ஆகும். மற்றவங்களை கெடுக்கிறமாதிரி அபவாதங்களையும் பழிச் சொல்களையும் பரப்புவதா நல்ல செய்கை?...வெறும் பயல்கள்! வெறும் பயலிகள்!

அவர் நடந்துகொண்டே சிந்தித்தார். யோசித்துக் கொண்டே இருட்டில் நடை போட்டார்.

— கணபதியா பிள்ளை எனக்கு வாழ்க்கை அளித்தார். அவருக்கோ அவர் குடும்பத்துக்கோ நான் உபகாரம் செய்தால்தான், நன்றியோடு இருப்பதாகும் என்று கொள்ள வேண்டும் என்றில்லை. அவாள் செயலை மறக்காமலிருக்க, என்னால் இயன்ற அளவு வேறுயாருக்காவது உதவிகள் செய்தும், ஒருவரையாவது வாழவைக்கத் துணை புரிந்தும் காரியங்கள் செய்தால், அதுதான் உண்மையான நன்றிக் கடன் தீர்ப்பது ஆகும். நான் ஒருவனுக்கு உதவி செய்தால், அவன் மூலமே எனக்கு நன்மையும் பிரதி உபகாரமும் வந்து சேரணும்கிற கட்டாயம் அல்லது நியதி எதுவும் இல்லை. நான் என்னாலியன்ற உதவிகளையும், நல்லதுகளையும் செய்து கொண்டே இருக்க வேண்டியது. வேறு வழிகளில் எனக்கு நன்மைகள் வந்து சேரும்... நன்மைகளும் லாபங்களும் வந்து சேராவிட்டாலும் ஒன்றுமில்லை. அப்படி நல்லதுகளும் லாபங்களும் வரும் என்று நம்பி, என்னால் இயன்ற அளவு நன்மைகளை செய்வது கூட ஏதோ ஒரு வாணிபம்தான். நல்லதுகளை, பிறருக்கு உதவிகளை, செய்து கொண்டிருப்பதனாலேயே ஒரு மன நிறைவும் சந்தோஷமும் உண்டாகுமே, அதற்காகவே அவற்றைச் செய்யலாம். ஒரு சிலராவது சந்தோஷமாக இருப்பதற்கு நம்மாலானதை செய்தோம் என்ற திருப்தியே போதும். மற்றவங்க என்ன சொன்னால் என்ன? எவ்வளவு கேவலமா நினைத்தா நமக்கு என்ன!

அவர் நடையோடு சிந்தனையும் வளர்ந்து கொண்டே போயிற்று.

— மற்றவங்க, ஊர்காரங்க, திருப்தி அடையும்படியா எல்லாக் காலமும் ஒருவனால் வாழ்ந்து விட முடியாது. அப்படி வாழ வேணும்கிற அவசியமும் இல்லை. ஆனால் ஒவ்வொருவனும் தன் மனசுக்கு உண்மையா நடந்தாகணும். தனக்குத்தானே நியாயமாக, யோக்கியமான முறையில், நல்லவனாக நடக்கணும். அது தான் முக்கியம். நான் நல்லவனாக, யோக்கியனாக, ஒழுக்கசீலனாக நடந்து கொண்டிருந்த போதிலும், நான் வேலைக்காரியின் மகளோடு தொடர்பு வைத்து அக்கிரமம் செய்து விட்டேன் என்று நாற்பது வருஷங்களுக்கு முன்பிருந்தவங்க பிரசாரம் பண்ணினாங்க. இன்றைக்கு இருப்பவங்களும் அந்தக் கதையை நம்பி, பிரசாரம் செய்து சந்தோஷப்படுறாங்க. போகட்டும்! அப்படி எதுவும் நடக்கலே. அது என் மனச்சாட்சிக்குத் தெரியும். செம்பகத்துக்கும் தெரியும். அது போதும். மற்றவங்க எப்படியும் நினைத்து, என்ன வேண்டுமானாலும் பேசிக் கொள்ளட்டும். நான் கவலை கொள்ளவோ பயப்படவோ மாட்டேன். இந்த வீட்டை விட்டுப் போகவும் மாட்டேன். எனக்கு சரி என்று படுவதை, நான் செய்து கொண்டு தான் இருப்பேன்...

மயிலேறும் பெருமாள் பிள்ளையின் மனம் உறுதிப் பட்டது. அவர் நிதானமாக, நிம்மதியாக, இருளின் ஆழத்தில், அந்த வீட்டின் ஆத்மா போல, அறை அறையாக நடந்து கொண்டேயிருந்தார்.

# 24

திங்கள் கிழமை. 'வடக்கேயிருந்து வரும்' எக்ஸ்பிரஸை எதிர்பார்த்து, திருநெல்வேலி ஜங்ஷன் பிளாட்பாரத்தில் காத்து நின்றவர்களில் மனு. பெனு. வும் ஒருவர். மதுரையிலிருந்து வரும் சுந்தரம் என்பவனை வரவேற்க அவர் தயாராக நின்றார்.

அவருடைய 'வேல்முருக விலாசம் வெள்ளி பாத்திரக் கடை'யில் கணக்கெழுதும் சிப்பந்தி. அவனுக்கு முப்பது வயசுக்கு மேலாகியிருந்தது. 'நல்ல பையன்'. இன்னும் கல்யாணமாக வில்லை. அவன் மனு. பெனு. வுக்கு அவருடைய இறந்த காலத்தை நினைவுபடுத்தும் ஒரு சின்னமாகவே இருந்தான். அவனுக்கு வாழ்க்கையில் ஒரு பற்றுதலும் பிடிப்பும் உண்டாக்க, உரிய சமயத்தில், தன்னால் இயன்ற உதவிகளை செய்ய வேண்டும் என்று மனு. பெனு. ரொம்ப காலமாகவே எண்ணிக் கொண்டிருந்தார்.

செண்பகம் தன் மகள் மயிலுக்கு வாழ்க்கை அமைத்து விட வேண்டும் என்று பெரியபிள்ளையின் உதவியை நாடிய போது, மயிலுக்கு மட்டுமல்லாது சுந்தரத்துக்கும் நல்வாழ்வுக்கு வழி செய்து விட முடியும் என்ற எண்ணம் அவர் உள்ளத்தில் பளிச்சிட்டது. அதனால்தான் திங்கள் மத்தியானம் தன்னை எதிர்பார்த்து விருந்துச் சாப்பாட்டுடன் இருக்கும்படி செண்பகத்திடம் அவர் சொன்னார்.

பதினோரு மணிக்கு 'திருநெல்வேலி எக்ஸ்பிரஸ்' வந்து சேர்ந்தது. அதில் சுந்தரமும் வந்து இறங்கினான். அவர் கேட்டு எழுதியதற்கிணங்க மகன் கொடுத்து அனுப்பியிருந்த பணத்தை அவன் அவரிடம் தந்தான்.

ஸ்டேஷனை விட்டு வெளியே வந்ததும், பெரிய பிள்ளை அவனோடு ஒரு ஓட்டலுக்குப் போனார். காப்பிக்கு ஆர்டர் கொடுத்து விட்டுக் காத்திருந்த போதும், காப்பி குடிக்கும்

போதும், அவர் தன் விருப்பத்தை எடுத்துச் சொன்னார். 'இதனால் உனக்கு நன்மை தான் ஏற்படும். நீ யோசிப்பதற்கு எதுவும் இல்லை. இருந்தாலும், பெண்ணை பார்த்து விட்டே நீ உன் முடிவை சொல்லலாம்' என்றார்.

'ஐயா எப்பவும் எனக்கு நல்லதையேதான் செய்வீங்க. ஐயா விருப்பத்துக்கு நான் மறுத்தா சொல்லப் போறேன்!' என்று சுந்தரம் தெரிவித்தான்.

பாளையங்கோட்டைக்குப் போவதற்கு முன்பு ஆற்றில் குளித்து விட்டு, சுத்தமாகச் செல்வதே நல்லது என்று மனு. பெனு. அபிப்பிராயப்பட்டார். பிரயாண அசதியும் மேலே படிந்திருந்த ரயில் கரியும் தூசியும் நீங்க அது தேவைதான் என்றே அவனும் கருதினான்.

அப்படியே செய்தார்கள்.

செண்பகம் வீட்டுக்குப் போய் சேர்ந்த போது மணி பன்னிரண்டே கால் ஆகியிருந்தது. அவள் வாசல் நடையில் நின்று எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தாள். தூரத்தில் வரக் கண்டதுமே, அகமும் முகமும் மலர்ச்சியுற உள்ளே போய், தயாராகக் காத்து நின்றாள். அவர்கள் வீட்டுக்குள் அடி எடுத்து வைத்ததும் 'வாங்க வாங்க' என்று வரவேற்றாள்.

கால்களை அலம்பிக் கொள்ள வாளியில் தண்ணீரும் ஒரு சிறு செம்பும் இருந்தன.

அவர்கள் உள்ளே போனார்கள். பாய் விரிக்கப்பட்டிருந்தது. 'உட்காருங்க' என்று உபசரித்தாள் செண்பகம்.

மயிலு முன் வந்து பெரிய பிள்ளைமுன்னே, பெண்கள் கும்பிடும் முறையில், மண்டியிட்டு முகம் தரையில் படும்படி குனிந்து, வணங்கினாள்.

'நல்லாயிருக்கணும். தீர்க்காயுசா, தீர்க்க சுமங்கலியா இரு' என்று அவர் வாழ்த்தினார்.

அவள் எழுந்து ஒரு ஓரமாக ஒதுங்கி நின்றாள். சுந்தரம் அவளை நன்றாகப் பார்த்துக் கொண்டான்.

'இலை போடம்மா, மயிலு' என்று கூறிய செண்பகம், 'நேரமாச்சுல்லா. சாப்பிட்டுக்கிட்டே பேசலாம்' என்று பெரியவரிடம் அறிவித்தாள்.

இலைகள் போட்டு, நீர் தெளித்து, கறிவகைகள் பரிமாறப்பட்டன. 'ஒரு வகைக்கறி' வைத்திருந்தாள் செண் பகம். அவளே சோறு எடுத்து வந்து படைத்தாள்.

'முதல்லே இது யாருன்னு நான் சொல்லிடுறேன். மதுரையிலே என் கடையிலே வேலை பார்க்கிற கணக்குப் பிள்ளை. சுந்தரம்னு பேரு. சொந்த ஊரு தென்காசிப்பக்கம். ஒரு கிராமம். அப்பா அம்மா யாரும் இல்லே. நல்ல தங்க மான பையன். நீ மயிலை யாரு கையிலாவது புடிச்சிக் கொடுக் கணும்னு சொன்னதும் எனக்கு சுந்தரம் நெனைப்பு வந்தது. ஆனா அறிமுகப்படுத்திக்கிட்டே சொல்லாம்னுதான் நான் அன்னைக்கு உன்கிட்டே சொல்லலே. இப்ப சம்பளம் மாதம் 120 ரூபாதான். கல்யாணம் ஆனதும் 150 போட்டுக் கொடுக் கலாம். எனக்கு சொந்தமான சின்னவீடு மதுரையிலே ஒண்ணு இருக்கு. அதிலே நீங்க குடியிருக்கலாம். நீயும் அங்கேயே போயி ஒண்ணா இருக்கலாம். இங்கே இருந்து ஒண்டியா ஏன் கஷ்டப்படணும்? அங்கே போயும் உன் வழக் கமான இட்டிலி வடை முறுக்கு பிசினஸை நடத்தேன். யாரு வேண்டாமுங்கா? அதுமூலம் கிடைக்கிற பணம் குடும்பச் செலவுக்கு உதவுமே. பின்னே என்ன? இப்ப சுந்தரத்துக்கு முப்பத்துமூணு வயசு ஆகுது. வயசைப்பத்தி என்ன? ஆளை பாக்கையிலே அந்த வயசு தோணவா செய்யுது? எனக்கு கல்யாணம் நடக்கையிலே முப்பத்தஞ்சு வயசு. வயது வித்தி யாசம் ஒண்ணும் முக்கியம் இல்லே. மனம்தான் நல்லாயிருக் கணும். அம்மா மயிலு, சுந்தரத்தை நல்லப் பார்த்துக்கோ. உன் மனசிலே ஏதாவது இருந்தா அதையும் தைரியமா சொல்லிப்போடு. அப்புறம், எங்கேயோ இருந்து வந்த கிழவன் கெடுத்திட்டான் வச்சிட்டான்னு நீ கண்ணை கசக்கப் படாது...'

'இப்படி ஏன் நீங்க சொல்லுதீக?' என்று அவசரமாய் குறுக்கிட்டாள் செண்பகம். 'மயிலு உங்க குழந்தைமாதிரி. அவளுக்கு நல்லதைத்தான் நீங்க செய்வீங்கன்னு அவளுக்கே தெரியாதா?' என்றாள்.

'மயிலு, சுந்தரத்தைப்பாரு' என்று அவர் சொன்னதுமே, கண்களை சுழட்டி ஒரு பார்வை பார்த்துவிட்டு, வெட்கத்தோடு அடுக்களைக்குள் ஓடிவிட்டாள் அவள். அப்புறம் சாம்பார், ரசம் எல்லாம் செண்பகம்தான் பரிமாற வேண்டியதாயிற்று. நல்ல வார்த்தை சொல்லி, தாங்கி, பாயசம் படைக்கும்படி அவளை அனுப்பிவைத்தாள் அம்மா. அவள் நடந்து வந்து இரண்டு இலைகளுக்கும் பாயசம் பரிமாறுவதற்குள் அடைந்த வெட்கமும், திணறிய திணறலும் — ஐயோ பாவம்!

சாப்பாடு ரொம்ப திருப்திகரமாக நடந்து முடிந்தது.

செண்பகம் இலைகளை எடுத்துத் தெருவில் வீசிவிட்டு, இடத்தை சுத்தம் செய்தாள். வேறு இடத்தில் பாயை விரித்து, வெற்றிலைப் பாக்குத் தாம்பாளத்தையும் முன் வைத்தாள்.

இருவரும் மரியாதைக்காகக் கொஞ்சம் வெற்றிலை எடுத்துக்கொண்டார்களே தவிர, போட்டுக் கொள்ளவில்லை.

'செம்பகம்' அடுத்த முகூர்த்தத்திலேயே கல்யாணத்தை நடத்திவிடுவோம். நீ சொன்னபடி, கோயிலிலோ குத்து விளக்கு முன்னாலோ வச்சு தாலியை கட்டிப்போடலாம்தான். இதிலே எல்லாம் அவங்க அவங்க மன உறுதியும் நம்பிக்கையும்தான் முக்கியமே தவிர, சடங்கு சம்பிரதாயம் ஊர்ச்சாப் பாடுங்கிறதெல்லாம் அநாவசியமான, அதிகப்படியான, வெளிச்ச ஆடம்பர விஷயங்கள்தான். இருந்தாலும், மயிலு சுந்தரம் கல்யாணத்தை நம்ம வீட்டிலேயே வச்சு நடத்தணும்னு எனக்கு ஒரு ஆசை. அந்த வீட்டிலே இதுவரை ஒரு கல்யாணம்கூட நடைபெற்றதில்லை. என் கல்யாணம் அதில் நடக்கும்னு அம்மை ஆசைப்பட்டா. அது நிறை

வேறலே. என் மகன் கல்யாணம் அங்கே நடக்கணும்னு நான் ஆசைப்பட்டாலும் அது நிறைவேருது. சொக்கையா கல்யாணம் மதுரையிலேதான் நடக்கும். மீனுட்சியின் ஆசை, திட்டம், தீர்மானம் எல்லாம் அதுதான். அதனுலே, நீ அன்னைக்கு வந்து சொன்னதுமே, மயிலு கல்யாணத்தை இங்கே நடத்திப்போட வேண்டியதுதான்னு நான் தீர்மானிச்சிட்டேன்.'

'உங்க இஷ்டம். நான் என்ன மறுக்கவா போறேன்?' என்ருள் அவள்.

'சரி. என்கிட்டே நீ கேட்டபடி, ஆயிரம் ரூபா இந்தா இருக்கு' என்று வெற்றிலை மீது பண நோட்டுக்கட்டை அவர் வைத்தார்.

அவள் அவரைக் கும்பிட்டு அதை எடுத்துக்கொண்டாள்.

'எல்லா ஏற்பாடுகளும் நடக்கட்டும். சுந்தரம் சாயங் கால ரயிலுக்கு மதுரைக்குப் போயிட்டு அப்புறமா வந்து சேருவான். நீயும் மயிலும் சாப்பிடுங்க. நாங்க போயிட்டு வாரோம்' என்று சொல்லி அவர் எழுந்தார். சுந்தரமும் எழுந்தான்.

'இருங்க. மூனு மணிக்கு காப்பி சாப்பிட்டுவிட்டுப் போகலாம்' என்று அவள் உபசரித்தாள்.

'அருமையான விருந்துச் சாப்பாடுதான் போட்டாச்சே. இன்னும் காப்பி என்னத்துக்கு?' என்ருர் பிள்ளை. 'அம்மா மயிலு, போய் வாரோம்' என்று அவளை அழைத்தார்.

அவள் கொஞ்சம் முன்னுல் வந்து நின்ருள். சுந்தரத்தை இன்னுமொரு தடவை நன்ருகப் பார்த்துக்கொள்ளலாமே என்ற நினைப்பு. அவன் ஆள் மோசமில்லை. அவளுக்குத் திருப்திதான்.

அவனும் அவளை நன்ருக நோக்கினுன். மயிலு அழகி தான். அவனுக்கு மிக்க மகிழ்ச்சி. 'போய் வாறேன்' என்று விடை பெற்றுக்கொண்டு அவனும் புறப்பட்டான்.

# 25

— ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு தனித்தன்மை இருக்கிறது. சில வீடுகள் சிறுசாக இருந்தாலும், 'சதா சிரிச்ச முகமும் சீதேவியுமா' என்பார்களே, அதுமாதிரியான ஒரு தன்மையைக் கொண்டிருக்கும். அந்த வீட்டை பார்க்கையிலும், அதில் வசிக்கையிலும் மனசுக்கு ஒரு நிறைவு ஏற்படும்.

சில வீடுகள் பெரிசாக இருக்கும். ஆனாலும் அழுதுவடிகிற மாதிரி இருக்கும். உள்ளே போகிற நம்ம மனசையே இருளடிக்க வைக்கும். சில வீடுகளை எட்டிப் பார்த்ததுமே நம்முள் ஒருவித சோகம் வந்து கப்பிக்கொள்ளும். சில வீடுகளின் அமைப்பு அர்த்தமற்ற குழப்பத்தையும், இரவு நேரங்களில் ஒருவித அச்சத்தையும் தந்துகொண்டே இருக்கும். அதெல்லாம் 'வீட்டின் வாகு'. வீடு கட்டப்படுகிறபோதே சேர்ந்து அமைந்துவிடுகிற ஒரு தனித்தன்மை.

இந்த வீடு எப்பவும் ஒளி நிறைந்ததாய், மனசுக்கு அமைதி தருவதாய், புதிய புதிய சந்தோஷங்களை தர முடியாவிட்டாலும், இருக்கிற சந்தோஷத்தை சீர்குலைக்காததாய், அன்பு நிறைந்ததாய் இருக்கிறது.

ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு ஆத்மா உண்டு என்று சொல்லலாம்.. மனுஷங்களுக்கு உள்ள மாதிரி ஆத்மா என்றில்லை. அந்த வீட்டில் வசித்த-வசிக்கிற-மனிதர்களின் எண்ணங்கள், ஆசைகள், கனவுகள், நம்பிக்கைகள், செயல்கள் முதலியவை எல்லாம் அவர்கள் வசித்த-வசிக்கும் சூழலில் தனது சின்னங்களை, நிழல்களை, பாதிப்புகளை அருபமான முறையில் விட்டுச் செல்கின்றன. அவையே அந்த வீட்டுக்கு ஒரு ஜீவன்-உயிர்களை-உண்டாக்குகிறது. அதுதான் அந்த வீட்டின் ஆத்மா என்று நான் நினைக்கிறேன்.

இந்த வீட்டில் அப்பாவின் தாக்கங்களைவிட, அம்மையின் பாதிப்புகளே அதிகம் படிந்துள்ளன. என் எண்ணங்கள்,

கனவுகள், செயல்களின் சாயல்களும் கூட. கண்ணுக்குப் புலனாகாத அந்த சக்திகளினூடே நான் நிம்மதியாக, சந்தோஷமாக, மன நிறைவோடு நாளோட்ட முடிகிறது.

அம்மை ஆசைப்பட்டபடி இந்த வீட்டில் ஒரு கல்யா ணமும் நிறைவேறினால், அம்மையின் ஆத்மா சாந்தி அடையும். இந்த வீட்டின் ஆத்ம சக்தியின் ஜீவ ஒளியும் அதிகரிக்கும்.

மயிலேறும் பெருமாள்பிள்ளை இவ்வாறெல்லாம் எண்ணிப் பொழுது போக்கினார்.

'ஒரு வாரத்தில் கல்யாணம் நடைபெறும். ரொம்பப் பெருக்கமாகவும் வேண்டாம்; ரொம்பச் சுருக்கமாகவும் வேண்டாம். அதற்குத் தேவையானதை எல்லாம் செய்யும்' ன்று அவர் பிறவிப்பெருமாள் பிள்ளையிடம் தெரிவித்தார்.

'இந்த வீட்டிலே கல்யாணம்-கல்யாணம்' என்ற செய்தி ஊர் பூராவும் முழங்கியது. எனினும், யாருக்கும் யாருக்கும் கல்யாணம் என்பது ரொம்பப் பேருக்குப் புரியாமலே இருந்தது.

கல்யாணத்துக்கு முந்திய நாள் சுந்தரம் வந்து சேர்ந் தான்.

அவனோடு கொடிய சூறைக்காற்று போல, 'அடங்க ஒடுங்க இடித்துக்கொண்டு', ஸ்ரீமதி மயிலேறும் பெருமாள் ஆன மீனாட்சியும் மதுரையிலிருந்து வந்து சேந்தாள். வீட்டுக்குள் புகுந்ததுமே அலறினாள்:

'இதெல்லாம் நல்லாயிருக்கா? நல்லாயிருக்குதான்னு கேட்கேன்?'

'எது? நீ போட்டிருக்கிற நகைகள்; கட்டிஇருக்கிற பட்டு எல்லமா? நல்லாத்தான் இருக்கு!' என்று பெரியபிள்ளை அமைதியாகச் சொன்னார்.

அவளுக்கு என்ன பேசுவது என்றே ஓடவில்லை. 'இதை பார்த்திட்டு வக்கணை கொழியுங்க' என்று ஒரு கவரை தூக்கி அவர் முன்னால் வீசினாள்.

தபாலில் அவர் பெயருக்கு வந்திருந்தது. உள்ளே 'உண்மை விளம்பி' என்று கையெழுத்திட்டு எவனோ வீணன் எழுதியிருந்தான்.

மயிலேறும்பெருமாள் பிள்ளைக்கு பழைய மோகம் புது வேகத்தோடு செயல் புரிவதாகத் தெரியுது. அவருக்கு செம்பகம் என்றொரு காதலி இந்த ஊரில் முன்பு இருந்தாள். இப்போது பாளையங்கோட்டையில் இருக்கிறாள். பிள்ளைவாள் ஊருக்கு வந்ததும், அவளும் வந்துபோக ஆரம்பித்து விட்டாள். இதை வளரவிட்டால் ஆபத்து. — இதுதான் கடித விஷயம்.

பெரியபிள்ளை ரசித்துச் சிரித்தார். 'மீனாச்சி, இதுமாதிரி உண்மை விளம்பிகளினாலேதான் விபரீதங்களே நடக்கு. இதை எழுதினவன்கிட்டேயே கேட்டுப்போவோம்' என்றார். 'வே, சூரியன்பிள்ளையை கையோடு கூட்டிவாரும்' என்று பிறவியாபிள்ளையை அனுப்பினார்.

'நாய் வாலை மட்டை வச்சுக்கட்டினாலும் நிமிர்த்த முடியாது என்பாக. சில மனிதர்களுடைய குணங்களையும் அப்படித்தான். மொட்டைக் கடுதாசி எழுதுற தொழிலை அவன் இன்னும் விடலேன்னு தெரியுது' என்று அவர் முணு முணுத்தார்.

'முருகா உண்டு' என்று கூறிக்கொண்டே சூரியன்பிள்ளை வந்து சேர்ந்தார். 'என்ன அண்ணாச்சி, கூப்பிட்டீங்களாமே?' என்று அக்கறையாய் கேட்டார்.

'வாருமய்யா வாரும். இரியும்' என்ற பிள்ளை, 'செம்பகத்தைபத்தி சொல்லவேண்டியதை எல்லாம் சொல்லிப் போடும். ஆபத்து வளரக்கூடாது பாரும். உம்ம காயிதம் கிடைச்சதும் மதுரையிலேயிருந்து மீனாட்சி நேரே வந்திட்டா. இதுதான் மீனாட்சி. இவருதான் உண்மைவிளம்பி. வே, உண்மைவிளம்பி, செம்பராநல்லூர் ஆச்சியை வேணுமின்னாலும் துணைக்குச் சேர்த்துக்கிடும். அவளையும் வரவழைப் போமா? நீரு செம்பகத்துகிட்டே வாலாட்டினது, வாரியக்

கட்டைப் பூசைப்படாமல் தப்பினது; அதுக்குப் பழிவாங்க இப்படி எல்லாம் நாரதவேலை பண்ணிக்கிட்டிருப்பது—இதுகளை எந்த உண்மைவிளம்பி ஊராருக்கு எடுத்துச் சொல்வதாம்?'

பெரியபிள்ளை ஆத்திரமோ படபடப்போ இல்லாமல் நிதானமாகப் பேசி, ஏகத்தாளமாகக் கேட்டு நிறுத்தவும், உள்ளத்தில் கோழையான சூரியன்பிள்ளை வெலவெலத்துப் போனார். பேசாமல் தலையை குனிந்தபடி கொஞ்சநேரம் உட்கார்ந்திருந்தார். பிறகு எழுந்து நழுவலானார்.

'ஐயா சுகவாசி சூரியன்பிள்ளே! இந்தக் கேவலமான தொழிலை இன்றோடு விட்டுவிடுமய்யா. சாகிறவரை மொட்டை எழுதும் உண்மைவிளம்பியாக இருக்கவேண்டாம். நாளையக் கல்யாணத்துக்கும் தாம்பூலத்துக்கும் மத்தியானச் சாப்பாட்டுக்கும் வந்திரும் வேய்' என்று ஓங்கிய குரலில் மனு. பெனு. பேசியது அவரை துரத்திச் செல்வதுபோல் ஒலித்தது.

'இதை சாக்கிட்டாவது வந்தியே. கல்யாணத்தை நடத்தி வச்சிட்டுப்போ மீனுட்சி. நம்ம சுந்தரத்துக்கும் செம்பகம் மகள் மயிலுக்கும் கல்யாணம். இந்த வீட்டிலே நடக்கப்போகிற முதல் கல்யாணம் அதுதான்' என்று பிள்ளை மகிச்சியோடு தெரிவித்தார்.

'யாரு அந்தச் செம்பகம்?' என்று அவள் விசாரித்தாள்.

'இன்று ராத்திரி வந்துவிடுவா. நீயே பார்த்துக்கோ. நீ கேட்கவேண்டிய கேள்விகளை எல்லாம் அவளிடமே கேளு' என்று சொல்லிவிட்டு, அவர் வேறு அலுவல்களில் ஈடுபட்டார்.

செண்பகமும் மயிலும் இரவில் வந்து சேர்ந்தார்கள்.

அவர்கள் வந்த உடனேயே, 'செம்பகம், இததான் தான் மீனுட்சி. உண்மைவிளம்பி சூரியன்பிள்ளை என்னையும் உன்னையும் முடிச்சுப்போட்டு என்னவோ எழுதினுனும். உண்மையை கண்டுபிடிக்க மதுரையிலேயிருந்து வந்திருக்கா.

உன் கதையை பூரா நீயே இவகிட்டேச் சொல்லு. இன்னிக்கு ராத்திரி நேரம் பூராவும் இருக்கவே இருக்கு' என்ருர் பெரிய பிள்ளை.

'வாங்க அம்மா' என்று கும்பிட்டாள் செண்பகம்.

அவள் தோற்றமும் பணிவும், பார்த்தமாத்திரத்திலேயே, மீனுட்சிக்கு அவள்மீது ஒரு நல்லெண்ணத்தை உண்டாக்கின. அவள் கூறிய சோக வரலாறு மீனுட்சியின் உள்ளத்தை உலுக்கியது. செண்பகத்துக்காக அவள் கண்ணீர் வடித்தாள்.

மயிலுக்கும் சுந்தரத்துக்கும் திருமணம் இனிது நிறைவேறியது. ஊராருக்குத் திருப்திகரமான சாப்பாடு கிடைத்தது.

சுகவாசி சூரியன்பிள்ளை அன்று ஊரில் இல்லை. குற்றுலத்துக்கோ பாபநாசத்துக்கோ போயிருப்பதாகச் சிலர் சொன்ஞர்கள்.

'போகட்டும் போகட்டும். எந்த ஊரு அருவியிலே போய் குளிச்சாலும் அவன் பாவம் தீரப்போறதில்லே. லேசுப்பட்ட அநியாயங்களும் அக்கிரமங்களுமா செஞ்சிருக்கான் அவன்!' என்று பெரியபிள்ளை நினைத்துக்கொண்டார்.

மறுநாளே மீனுட்சி மதுரைக்குப் புறப்பட்டுவிட்டாள். 'உங்களுக்குத்தான் இந்த வீடும் இந்த ஊரும் பிடிக்கும். இந்தப் பட்டிக்காட்டிலே என்ஞலே இருக்கமுடியாது. உங்க மனசுக்கு திருப்தி ஏற்படுகிறவரை நீங்கே இங்கே இருந்துட்டு வாங்க. அங்கே சொக்கையா, பாவம், சாப்பாட்டுக்கு கஷ்டப்படுவான்!' என்று கூறிவிட்டுப் போஞள் அவள்.

— இப்படியும் மணிக்கொடிகள் இருப்பார்கள் என்பதை அன்று பாட்டு எழுதினவன் எண்ணியிருக்கமாட்டான், பாவம்!

என்ருெரு நினைப்பு வெடித்தது பெரியபிள்ளை உள்ளத்தில். கூடவே சிரிப்பும் சிலிர்த்தது.

செண்பகம் மகளோடும் மருமகனோடும் மதுரைக்குப் புறப்பட்ட அன்று, அவர்களை வழியனுப்ப ஜங்ஷனுக்குப் போனார் பெரியபிள்ளை.

'ஐயா, நீங்களும் எங்ககூட வாங்க. ஊரிலே தனி வீட்டிலே, ஒத்தையிலே இருந்து என்ன செய்யப்போறீங்க?' என்று செண்பகம் வேண்டினாள்.

'ஒத்தையா?' என்று கேட்டுச் சிரித்தார் பிள்ளை. 'அந்த வீடு எனக்கு வெறும் வீடு இல்லை, செம்பகம். அது எனக்கு உடன் பிறப்புமாதிரி. உற்ற சிநேகிதன்மாதிரி. எனக்குத் துணை அந்த வீடு. அந்த வீட்டுக்குத் துணை நான். என்னைப் பற்றி யாருமே கவலைப்படவேண்டாம்' என்றார்.

'சொக்கையாவுக்கு நான் எல்லாம் எழுதியிருக்கேன். அவன் உங்களுக்குத் தேவைப்படுகிற உதவிகள் எல்லாம் செய்வான். மீனாட்சியும் நல்லவதான். கொஞ்சம் படபடப்பா, கோபக்காரியா தென்படுவா. ஆனால், உள்ளத்திலே நல்ல குணம். சுந்தரம், மயிலையும் அவ அம்மையையும் கவனிச்சுக் காப்பாத்தவேண்டிய பொறுப்பு உனக்குத்தான்' என்று கூறினார்.

ரயில் நகர்ந்தது. வேகம் பெற்று ஓடியது.

சிவபுரம் வீட்டை நினைத்துக்கொண்டு ஸ்டேஷனைவிட்டு வெளியே வந்தார் மயிலேறும் பெருமாள்பிள்ளை.

( முற்றும் )

# அலைமோதும் கடலோரத்தில்....!

**வல்லிக்கண்ணன் எழுதியது**

அலையாடுகிற கடலையும், நடமாடுகிற மனிதர்களையும் வேடிக்கைப் பார்ப்பதைத் தவிர வேறு எதுவும் செய்யத் தெரியாத ஒரு அப்பாவி மனிதனைக் கதாநாயகனாக ஆக்கியிருக்கிறார் ஆசிரியர்.

வாழ்விக்க வகையற்றுப்போன—வாழ்க்கைக்குக் கும்பிடுபோட்டு விட்டு, அலைமோதும் கடலுக்குள் ஆழ்ந்து போவதற்காகக்கடலோரம் வந்த அப்பாவி, வேடிக்கைப் பார்த்தபடி பொழுது போக்கி எண்ணம் வளர்த்ததனால், ஒரு திருப்பத்தை ஏற்றுக்கொள்ள நேரிடுகிறது. அந்தத் திருப்பம் ஒரு அபலைப் பெண்ணின் உருவில் வந்து சேர்கிறது.

சாரமற்ற வாழ்வினால் சலித்துப்போன அவனும், சோகக் கொடுமையால் சாம்பிக்குமைந்த அவளும்—நாவலாகிறார்கள்.

**விலை ரூ 3-90**

பூம்புகார் வெளியீடு

# புதியயுகம் பிறக்கிறது !

**வாசவன் எழுதியது**

சத்தியமும் தர்மமும் கிராமப் புறங்களில் இன்னும் எப்படி நடை முறையில் புழங்குகிறது என்பதை இந் நாவலின் நெடுகிலும் விளக்குகிருர் ஆசிரியர்.

இப்போது நாம் பழைய யுகம் தாண்டி புதிய யுகத்திலே—சத்திய யுகத்தில் காலடி எடுத்து வைத்திருக்கிறோம். இரு வேறுபாடான தத்துவங்கள் முட்டி மோதிக்கொள்ளும் யுகசந்தியிலே நாம் வாழ்கிறோம். இந்தத் தத்துவப் பிரளயத்தின் முடிவிலே சத்திய யுகம் தோன்றத்தான் போகிறது.

ஆசிரியர் கூறுகிருர் :— " நான் ஆளடிமையாக்கப்பட்ட ஒரு கிராமத்தில் பிறந்தவன். அந்த மண்ணிலே வளர்ந்தவன். காற்றையும் விண்ணையும் சாடுகிற நிலப்பிரபுக்கள் அங்கே சாமர்த்திய சாகசம் புரிவதை நேரிலே கண்டவன். அவர்களின் சாணக்கியத் தனங்களால் ஏழை கிராவாசிகள் பலியாவதைக் கண்கூடாகக் கண்டவன். அதனுல் தான் அப்படி ஒரு கொடுமையால் பாதிக்கப்பட்ட ஒரு பிரஜையின் மனுவைப்போல இந்த நாவலை ஆக்கித் தந்திருக்கிறேன்.

**விலை ரூ 4-90**

பூம்புகார் வெளியீடு

## இரண்டாவது முகம்

**நீல. பத்மனுபன் எழுதியது**

புகழ்மிக்க இந்நூலாசிரியர் சமீபத்தில் எம்.ஏ.சி. அறக்கொடை நிறுவனத்தார் நடத்திய நாவல் போட்டியில் ரூ 10,000 பரிசு பெற்றவர்.

இத்தகு தகுதிவாய்ந்த ஆசிரியரின் 19 சிறு கதைகளை ஒரு தொகுதியாக வெளியிட்டிருக்கிறோம். ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு கோணத்தில் அமைந்தது; வழக்கத்துக்கு மாருனவை.

தமிழிலக்கிய மறுமலர்ச்சி யுகத்தில் சிறு கதைகள்—நாவல்கள் புனைவதில் ஒரு புதிய பாணியையும், நடையையும் திரு நீல. பத்மநாபன் அவர்கள் தமிழுக்கு அளித்திருக்கிருர்கள். மதி நுட்பமும், மனித வாழ்வினை ஊடுருவிப் பார்க்கும் திறனையும் ஒவ்வொரு கதையிலும் காணலாம்.

**விலை ரூ 4-90**

பூம்புகார் வெளியீடு



## வல்லிக்கண்ணன்

திருநெல்வேலி மாவட்டம் ராஜவல்லிபுரம் கிருஷ்ணஸ்வாமி வல்லிக்கண்ணனாக எழுத்துலகத்தில் இடம்பெற்று 40 வருஷங்கள் ஆகின்றன. தமிழ்நாட்டின் சகல பத்திரிகைகளிலும் சிறுகதைகள் எழுதியுள்ள இவர் நாவல்கள், இலக்கியக் கட்டுரைகள், கவிதைகள், விமர்சனம், நாடகம் முதலியனவும் நிறையவே எழுதியிருக்கிறார். 'சினிமா உலகம்', 'கிராம ஊழியன்' 'ஹனுமான்' ஆகிய பத்திரிகைகளில் ஆசிரியப் பணி புரிந்திருக்கிறார். ஐந்து சிறுகதைத் தொகுதிகள், ஐந்து நாவல்கள் மூன்று கட்டுரைத் தொகுதிகள் ஒரு கவிதைத் தொகுப்பு, ஒரு நாடகம் மற்றும் மொழி பெயர்ப்பு நூல்கள் இதுவரை வெளிவந்துள்ளன. இவருடைய 'புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்' என்ற நூல் சாகித்ய அகாடமியின் 1978-ம் வருடத்திய பரிசைப் பெற்றுள்ளது. வயது 58


# பூம்புகார் பிரசுரம்

15, மன்னார்சாமி கோயில் தெரு,

சென்னை-600 013.


